

COMPLIMENTS OF
THE UNITED STATES INFORMATION SERVICE
MADRAS

# பாடுபட்டால் சமாதானம் கிட்டுவது உறுதி

5759

பால் ஜி.ஹாப்மன்

# பாடுபட்டால் சமாதானம் கிட்டுவது உறுதி

*Copyright, 1951, by the Great Books Foundation*
*All Rights Reserved. Printed in the United States at*
*The Country Life Press, Garden City, N.Y.*

Published by Higginbothams Ltd. and Printed by A. Sendall at
The Associated Printers (Madras) Ltd., Madras.

# பாடுபட்டால் சமாதானம் கிட்டுவது உறுதி

இயற்றியவர் பால் ஜி. ஹொப்மன்

மொழிபெயர்ப்பு பிரசுரம்
சென்னை 2.

நெஞ்சில் சமாதான நினைப்புடையோர்
எல்லோருக்கும் சொல்லாலும் செயலாலும்
புத்துயிர் ஊட்டுபவரும், மிச்சிக்கன் ராஜ்யத்து
செனட்டர்களில் முதிர்ந்தவருமான
ஆர்தர் ஹெச். வாண்டன்பர்க்
அவர்களுக்கே.

**நன்றி.**

இந்நூலுக்கு ஆசிரியனாக என் பெயரைக் குறித்துள்ளது. ஆனால் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தில் (E. C. A.) என்னுடன் உழைத்தவர்களுடைய உதவி இதனை எழுதுவதற்கு எவ்வளவோ துணையாக இருந்ததாகையால், என் பெயரை விட்டு அந் நிர்வாகத்தின் பெயரைக் குறிப்பதே ஒரு வகையில் பொருத்தமாகும். முக்கியமாக, என்னுடன் பெரிதும் துணையாயிருந்து வேலை பார்த்த ஹார்ட் பிரெஸ்ட்டன் (Hart Preston), ஹெர்பர்ட் ஹாரிஸ் (Herbert Harris) ஆகியோர் இருவருக்கும் என் நன்றி சிறப்பாக உரியதாகும்.

இந் நூலில் எடுத்துரைக்கப்பட்ட யோசனைகளுக்கு—வகுத்துக்காட்டிய திட்டத்திற்கு—நானே முழுதும் பொறுப்புடையவன் என்பதையும் தெளிவாக்க விரும்புகிறேன்.

P. G. H.

## பொருளடக்கம்


1. சமாதானமோ சண்டையோ, நமது நோக்கம் சமாதானமே .. .. .. .. .. 11
2. சமாதான வாகை சூட, சமாதானப் போர் புரிய வேண்டும் .. .. .. .. .. .. 18
3. சுதந்தர உலகுக்குத் தலைமை தாங்கத் தயங்கும் அமெரிக்கா .. .. .. .. .. 38
4. தலைமை தாங்குவதற்குத் தண்டனை .. .. .. 50
5. படை வலிமை கொண்டு சமாதானம் புரிதல் .. 72
6. பொருளாதார முனையில் சமாதானம் புரிதல் .. 94
7. அரசியல் முனையில் சமாதானம் புரிதல் .. .. 126
8. செய்தியை அறிவித்துச் சமாதானம் எய்துவோம் .. 147
9. சமாதானம் புரிவதற்கு ஆகும் செலவு .. .. 177
10. சமாதானம் நமக்குக் கைகூடுமா ? .. .. 195

# ஹாப்மனின் நீண்ட காலப் பொதுநலப் பணி

A5759

பால் கிரே ஹாப்மன் அமெரிக்க வர்த்தகத் துறையிலும் சர்க்கார் நிர்வாகத்திலும் செயற்கரியன செய்தவர். ஸ்டுடிபேக்கர் கார்ப்பரேஷனின் முன்னுள் தலைவர் இவர். இரண்டு வருஷம் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் டைரக்டராக இருந்து இன்று அதற்கு ஆலோசகராகவும் இருக்கும் ஹாப்மன் போர்டு தர்ம ஸ்தாபனத்தின் டைரக்டருமாவார். இந்த ஸ்தாபனம் **23,80,00,000** டாலர் செலவிட்டு, சமாதானத்திற்குப் பாடுபடத் திட்டமொன்று வகுத்திருக்கிறது.

ஹாப்மன் **1891** ஏப்ரல் **26**-ம் தேதி சிக்காகோவில் பிறந்தவர். இல்லிஞய்ஸில் உயர்தரப் பாடசாலையில் பயின்ற பிறகு சிக்காகோ சர்வ கலாசாலையில் சேர்ந்து **1908-9** இவ் வாண்டுகளில் வாசித்தார்.

பிறகு மோட்டார் வியாபாரத்தில் ஈடுபட்டு அதிகக் கார்களை விற்றுத் தமது திறமையைக் காட்டினுர். **1915**-ல் அவர் லாஸ் ஏஞ்செல்ஸ் விற்பனைச் சாலையில் மானேஜராகப் பதவி பெற்ருர். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு ஹாப்மன் அந்த ஜில்லாவின் கிளை ஸ்தாபனத்தின் மானேஜராஞர்.

**1917**-ஆம் ஆண்டில் முதலாவது உலக யுத்தத்தில் ஹாப்மன் ஒரு போர் வீரனுகச் சேவை புரிந்தார். பீரங்கிப் படையின் முதல் லெப்டினன்ட் அந்தஸ்துடன் **1919**-ல் அவர் இராணுவத்திலிருந்து விலகி திரும்பவும் மோட்டார்த் தொழிலில் ஈடுபட்டு

தமது முப்பதாம் வயதில் கம்பெனியின் டைரக்டராக ஆனுர். அதன் பிறகு கம்பெனியின் நிர்வாகத் தலைவரானுர்.

"பால் ஹாப்மன் செயற்கரிய செய்து அமெரிக்காவுக்கும் அரும்பணி ஆற்றியிருக்கிருர்; அதன் மூலம் உலகம் முழுவதிலும் சுதந்தர லட்சியத்திற்கு சேவை புரிந்த பெருமைக்கும் பாத்திரமானவர்" என்று ஐஸன்ஹவர் இவரைப் புகழ்ந்து கூறுகிருர்.

# சமாதானமோ சண்டையோ S759

# நமது நோக்கம் சமாதானமே

## அத்தியாயம் 1

சென்ற ஆண்டு, இள வேனிற்காலம், நான் வாஷிங்டனில் இருந்தேன். ஒரு நாள் மாலைப் பொழுது பெர்னார்டு பரூக்கை (Bernard Baruch) எங்கள் வீட்டுக்கு விருந்தினராக அழைத்திருந்தோம். பல விஷயங்களைப் பற்றி அளவளாவிக் கொண்டிருக்கையில், நான் வெல்லெஸ்லி கல்லூரியில் பேசப்போகும் விஷய்த்தைப் பற்றிய பேச்சு எழுந்தது. நான் இந்தக் கல்லூரி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் விளக்கிச் சொல்லப் போவதை எங்கள் விருந்தினரிடம் எடுத்துச் சொன்னேன். நம் சுதந்தர உலகுக்கும் கிரெம்லினுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பெருத்த போராட்டம் எப்படிப்பட்டது ? இதைத்தான் எனது விரிவுரையில் மாணவர்களுக்கு எடுத்து' உணர்த்தப்போவதாக அவரிடம் சொன்னேன்.

இக்காலத்தில் முதன்மையாக எங்கும் அடிபடும் இந்தப் பிரச்சினையைத் தெள்ளத் தெளிய ஆராய்ந்தவர் என்று புகழப் படுபவர் எங்கள் விருந்தினர், பெர்னார்டு பரூக். விஷயத்தை, நான் விவாதிக்க, அவர் ஆர்வத்துடன் முன்னுக்குச் சாய்ந்து உட்கார்ந்து கேட்டுக்கொண்டு வந்தார்.

"மிரட்டல் போர் ஒரு நல்ல போர்." இதுதான் என்னுடைய சொற்பொழிவின் தலைப்பு என்று அவரிடம் சொன்

னேன். அதற்கு அவர் வெட்டெனப் பதில் சொன்னார்; வளைத்துச் சுற்றிப் பேசுவது அவரது வழக்கமன்று. "இந்தச் சண்டை உண்மையாகவே எப்படிப் பட்டது என்பதை மக்கள் புரிந்து கொள்ளும்படி செய்ய நினைத்தால், 'மிரட்டல் போரை'ப் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு, சமாதானத்துக்காகப் போராடுவதைப்பற்றிப் பேசு" என்றார் பரூக்.

நானும் அவர் அறிவுரையைத் தட்டவில்லை. வெல்லெஸ்லி கல்லூரியில், சமாதானத்துக்காகப் போர் வீரர்களைப் போலப் பாடுபட வேண்டிய அவசியத்தைப்பற்றியே பேசினேன். சில நாட்கள் சென்றன. அதற்குள் உலகத்தையே ஒரு குலுக்கு குலுக்கினாற்போன்ற காரியங்கள் மின்னல் வேகத்தில் நடந்துவிட்டன. சமாதானத்தைப் பற்றிப் பேசுபவனை விஷயம் தெரியாதவன் என்றுகூட நினைக்கும்படியாயிற்று. **1950** ஜூன் **25**-ல் வட கொரியர்கள் தென் கொரியக் குடியரசின்மீது தங்கள் ஆக்கிரமிப்பைத் தொடங்கி விட்டார்கள்; கம்யூனிஸ்டு வழக்கப்படி, "சமாதான அணி வகுப்பு முன்னேறுவதாகக்" கூறினார்கள். அவர்களுடைய டாங்கிப் படைகளும், பீரங்கிப் படைகளும் **38**-வது அட்சரேகையைக் கடந்து முன்னேறிக்கொண்டிருந்தன. இந்தத் தாக்குதலை ஐக்கிய நாடுகள் சபை நியாயமற்ற படையெடுப்பு என்று கூறி, "ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கு எல்லா அங்க நாடுகளும் எல்லா உதவியும் செய்ய" வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. இந்த வேண்டுகோளுக்கு இணங்கிக் கொரியாவுக்குச் சென்ற படைகளுக்கு வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தன. சிக்கலான இந்த உலக நிலைமையை இன்னும் படு மோசமாக்க, பல நூறாயிரக்கணக்கான புதிய படைகள்—சீனத் "தொண்டர் படைகள்"—வட கொரிய ராணுவத்துக்குப் பக்கபலமாக வந்து குவிந்தன.

அடுத்து என்ன விளையுமோ என்ற அச்சம் அதிகமாகிக் கொண்டே வந்ததால், ஜனாதிபதி ட்ரூமனும் **1950** டிசம்பர் **16**-ல் தேசிய நெருக்கடி என்று பிரகடனம் செய்தார். இரண்டாம் உலகப் போர் முடிந்து வெற்றி கொண்டாடி ஆறு ஆண்டு

கள் ஆகவில்லை ; மீண்டும், முழு மூச்சுடன் இல்லாவிட்டாலும், யுத்தத்துக்கு ஆள் சேர்க்கத் தொடங்கி விட்டோம். நம்முடைய பொருள் வளங்களும் இயந்திரங்களும் இராணுவ வலிமையை வளர்ப்பதற்கு ஈடுபடத் தொடங்கிவிட்டன. இதற்கிடையில், கிரெம்லினின் பேராசை வரவர வெளிப்படையாயிற்று ; அதன் பார்வை ஈரானிலும் சவுதி அரேபியாவிலுமுள்ள எண்ணெய் வயல்களின்மேல் விழுந்தது. கம்யூனிஸ்டுக் கிளர்ச்சியும், சூழ்ச்சியும், பிரசாரமும், நாச வேலைகளும் உலகமெங்கும் நாளுக்கு நாள் வேகமாகப் பரவி வருகின்றன. செஞ் சேனை அட்லாண்டிக் கடலை நோக்கி எந்நேரம் புறப்படுமோ என்ற நிலைமை மேற்கு ஐரோப்பாவை ஆபத்துக்குள்ளாக்கி யிருக்கிறது.

இவ்வளவும் உண்மையே. மறுக்கவில்லை. சுதந்தர உலகத்துக்கு இன்றுபோல் ஒரு நாளும் இவ்வகை ஆபத்து வந்ததில்லை என்பதை நன்கு அறிவேன். ஆனால், இதற்காக என்ன செய்ய வேண்டும் ? இதற்கு முன் என்றும் இவ்வுலகம் கண்டறியாத அளவுக்கு ஆபத்துச் சூழ்ந்திருப்பதால், நாமும் இதற்கு முன் என்றும் இவ்வுலகம் கண்டறியாத அளவுக்கு நமது சமாதான முயற்சிகளை முனைந்து செய்யவேண்டும். இதுதான் என்து முடிவு. சமாதானத்தைப் பற்றி எண்ணமிடுவது வீண் அல்ல என்பதும் எனது துணிவு.

இதற்கு மாறாக எண்ணுவதுதான் மனம்போன போக்கில் சிந்தனையைத் திரிய விடுவது என்று கூறுவேன். ஐக்கிய நாடுகளும் நமது ராஜ தந்திரிகளும் என்னதான் முயன்றாலும் பயனில்லாமல், மூன்றாவது உலக யுத்தமே வந்துவிடலாம் ; அதில் நாம் போரிடவும் நேரலாம். இவையெல்லாம் உண்மைதான். ஆயினும், அப்படி யுத்தம் வந்தாலும், சமாதான நோக்கமுடைய, தெளிவான, வரையறுத்த ஒரு திட்டத்துடன் அதில் போரிடவேண்டும். அந்தப் போரை முறையான வழியில் நடத்துவதற்கு நமக்கு இதுபோன்ற ஒரு திட்டம் உதவியாகவும் இருக்கும். போரில் வெற்றி பெறுவது நமது நோக்க

மாக இருக்கக் கூடாது; சமாதானத்தை அடைவதே நமது வெற்றியாக இருக்கவேண்டும்.

போர் என்ன, வந்துதான் தீருமா ? தைரியத்தோடும், எட்டி யோசிக்கும் திறமையோடும், தியாக புத்தியுடனும் சமாதானத்துக்காகப் பாடுபடத் தொடங்குவோமானால், யுத்தத்தை இன்னும் தவிர்க்கலாம் என்பது எனது வாதம். இவ்வாறு சமாதானத்துக்காக உடல் பொருள் ஆவி மூன்றையுங் கொடுத்துப் பாடுபடத் தவறுவோமானால் சமாதான தாகமுடைய மக்கள் என்ற நமது பெயருக்கே குறை ஏற்படும்; நாகரிகமும் பகுத்தறிவும் உடைய மக்கள் என்று வாழும் நமக்கு, இதுவரை உலகம் கண்டிராத வகையில் மக்கள் அழிந்தொழிவதைத் தடுக்கக் கடமையும் உண்டன்றோ ?

சமாதானத்துக்காக ஊக்கத்துடன் உழைப்பதென்றால், விவேகமான முறையில் பாடுபட வேண்டும். நம்மை எதிர்த்துள்ள எதிரி, போர் என்னும் ஆபத்து, எப்படிப்பட்டவன் என்பதை முதலில் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். கம்யூனிஸத்தைச் சேராத நாடுகளோடு சோவியத் யூனியன் புரிந்து வரும் போர் இதுவரை யாரும் புரியாத ஒரு புது வகையான போர். இதனை அட்மிரல் பெர்ன் ஆண்டர்சன் **(Rear-Admiral Bern Anderson)** போன்று எதனையும் நுணுக்கமாக அலசிப் பார்க்கும் அறிஞர்களே சொல்லியிருக்கிறார்கள். நம்முள் பலருக்கும் யுத்தம் என்றால், இரத்தமும் அழிவும் மோதுகின்ற படைகளும், சாலைகள் வழியே தப்பியோடும் அகதிகளும், தவிடு பொடியாகும் மாட மாளிகைகளும்தான் நினைவுக்கு வரும். போரின் முடிவு போர்க்களத்தில் வெற்றி ; அவ்வளவுதான் நம்முள் பலருக்கும் தெரிந்தது. ஆனால் கிரெம்லினின் சூது மிக ஆழமான சூது. அது சுதந்தர உலகோடு இடைவிடாமல் போர் புரிந்து வருகிறது ; இந்தப் போரில் இராணுவப் போர் முனை வெளிப்படையாகத் தோன்றி வீறுகொடுக்கும் ஓர் அம்சமே; இதைத்தான் நாம் கவனிக்க வேண்டும். புதியதும் புதுமையானதும் அநேகமாக மறைவாக இருப்பதுமான ஆபத்து இங்குதான் இருக்கிறது.

இந்த ஆபத்தை ஆயுதங்களால் அகற்றிவிட முடியாது. 'கிரெம்லினுக்கு யுத்த முனைகள் நான்கு. இவற்றில் ஒன்றுதான் இராணுவப் போர் முனை. சோவியத் யூனியன் பொருளாதாரத் துறையிலும் போர் நடத்துகிறது; அரசியல் துறையிலும் அதன் போர் முனை அமைந்திருக்கிறது; மக்கள் மனதை மயங்கவைக்கும் சூழ்ச்சிகளும் அதன் போர் முறைகளே. இந்த நான்கு விதத்திலும் சிறிதும் விட்டுக் கொடுக்காத போர் நடத்துகிறது கிரெம்லின். இதனை லெனினுடைய மொழிகளே வரையறுக்கின்றன.

"இரத்தம் சிந்தியும், சிந்தாமலும், பலாத்கார முறையிலும், அமைதியான முறையிலும், இராணுவ பலத்தாலும், பொருளாதார மூலமாகவும், கல்வி வழியாகவும், ஆட்சிமுறை வழியாகவும், பழைய சமூகத்தின் சக்திகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் எதிராகத் தயவு தாட்சண்யமின்றி நடக்கும் இடைவிடாத ஒரு போரில்" மேலே சொன்ன நான்குவிதப் போர் முனைகளும் ஒன்றுக்கொன்று பிணையலான அம்சங்களாகும் என்று லெனின் கூறுகிறார்.

இராணுவப் போர் முனையில், சோவியத் யூனியன் தனது போர் இயந்திரத்தை இராட்சச உருவத்தில் வளர்த்துத், தளவாடங்கள் தரித்து விட்டுள்ளது. கிழக்கு ஐரோப்பாவிலுள்ள தன் அடிமை நாடுகளின் இராணுவ மூல பலத்தையெல்லாம் தன்னுடைய பார்வையின் கீழ்க் கொண்டுவந்து ஒன்று திரட்டி வைத்துள்ளது. ஆசியாவிலும் இதேபோல் தன்னுடைய பொம்மைகளான பங்காளிகளைக் கொண்டு ஏற்பாடு செய்துள்ளது. இவற்றையெல்லாம் நாம் அறிவோம்.

பொருளாதாரப் போர் முனையில், சோவியத் யூனியன் தனது நாட்டிலும் தனது நிழல் விழுந்த நாடுகளிலும், விவசாயம் தொழிலியல் இரண்டிலுமே யுத்தத்தை முன்னிட்ட பொருளாதார முறையைக் கையாண்டு வருகிறது. தான் நேரடியாகக் கட்டுப் படுத்த முடியாத இடங்களிலெல்லாம் பொருளாதார நிலைமை உறுதியடைந்து முன்னேறவொட்டாமல் தடுப்

பதும் கெடுப்பதும் அதன் நோக்கங்களாக உள்ளன. வேலை நிறுத்தங்களையும், பாழ்படுத்தும் வேலைகளையும், உற்பத்தியை மந்தமாக்கும் தந்திரத்தையும் அது தூண்டிவிடுகிறது. குறைந்த கூலி பெற்று அதிருப்தி அடைந்துள்ள தொழிலாளியையும், அதிகக் குத்தகை கொடுக்க விரும்பாத விவசாயியையும், நில மில்லாது தவிக்கும் குடியானவனையும் சோவியத் யூனியன் தன் பக்கமாக வைத்துப் பேசுகிறது.

அரசியல் போர் முனையில், சோவியத் யூனியன் தன்னுடைய மக்களிடமிருந்தும் தான் அடிமைப்படுத்திய மக்களிடமிருந்தும், சுதந்தரமாகப் பேசவும் சுதந்தரமாக வாக்களிக்கவும் உள்ள உறிமைகளைப் பறித்து விட்டது. கிரெம்லின் ஆட்கள் சுதந்தர நாடுகளிலும் புகுந்து அந்நாடுகளின் மக்கள் தங்கள் தங்கள் அரசாங்கத்தின் கொள்கைகளைப் பற்றியும் செயல்களைப் பற்றியும், நேர்மையைப் பற்றியும் அவநம்பிக்கை கொள்ளும் படி வேலை செய்கிறார்கள். உலகில் நாட்டுக்கு நாடு எதிராகக் கிளம்பவும், சுதந்தர நாடுகளிடையே உள்ள ஒப்பந்தங்கள் உடன் படிக்கைகள் ஆகியவை முறிந்து போகவும், சோவியத் யூனியன் முயன்று வருகிறது. சர்வ தேச ஒத்துழைப்புக்கான முயற்சி எதுவும் ஈடேராத வகையில் அது தனது ஐக்கிய நாடுகள் பதவியையும் உபயோகித்து வருகிறது.

மக்கள் மனதைக் கவரும் போர் முனையில், சோவியத் யூனியன், சமூகத்தில் சச்சரவும் சந்தேகமும் அவநம்பிக்கையும் உண்டாகச் செய்கிறது; தொழிலாளி முதலாளி என்று பகையை எழுப்புகிறது; விவசாயிக்கும் மத்திய வகுப்பாருக்கும் போராட்டத்தைமூட்டுகிறது. அனைவருடனும் அனைவரும் பகைமை பாராட்டுவதே அதன் நோக்கம். அரசியல் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் ஒரு நாட்டில் சில வித்தியாசங்கள் ஏற்பட்டால் அவற்றைப் பெரிய தகராறுகள் போலப் பிரமாதப்படுத்துகிறது கிரெம்லின். பாதுகாப்பின்மையே அதன் கைங்கரியங்களுக்கான நடை முறை மூலதனம்; பகைமை விளைவிப்பதே அதன் முதலீடு.

வறுமையை அது வளர்த்துவிடுகிறது ; செல்வம் கொழிக்கும் எதிர் காலத்தைத் தருவதாக உறுதி கூறும் தனது வாய்ச்சொல்லை மக்கள் விரும்பி விரும்பிக் கேட்கும்படி அவர்களை வதைக்கிறது.

இந்த விதமான போர்தான் சோவியத் யூனியன் அமெரிக்காவின்மேலும் சுதந்தர உலகம் அனைத்தின்மேலும் தொடுத்திருக்கும் போர். உலகத்தை வென்று அடிமைபடுத்த அது திட்டமிட்டு இந்த நான்கு முனைகளிலும் போர் புரிந்து வருகிறது. இந்தத் திட்டத்தைக் கவிழ்க்க நாமும் இதே நான்கு முனைகளிலும் எதிர்த்து 'சமாதானம் புரிய' வேண்டும்—இராணுவம், பொருளாதாரம், அரசியல், கருத்து ஆகிய நான்கு துறைகளிலும் மாஸ்கோவை நாம் எதிர்க்க வேண்டும்.

குறித்த நோக்கத்துக்கு ஏற்பக் கையாளும் முறையும் வேறுபடும் என்பதை நாம் அறிவோம். ஒன்று சேர வொட்டாமல் பிரித்து, வென்று, அடிமைப் படுத்துவதே மாஸ்கோவின் நோக்கம். ஆகவே, கட்டாயப் படுத்துதல், துன்புறுத்தல், பயங்கரக் கொடுங்கோல் ஆட்சி நடத்துதல் ஆகிய எதேச்சாதிகார முறைகளைக் கையாளுவதை விட அதற்கு வேறு வழியில்லை. நாம் மக்களை ஒன்று சேர்க்கவும், அவர்களோடு ஒத்துழைக்கவும், அவர்கள் சுதந்தரம் அடைந்து சுதந்தரமாய் வாழ்வதற்கு உதவிபுரியவும் விரும்புகின்றோம். ஆகவே, யாதொன்றையும் சுதந்தரமாகத் தெரிந்து கொள்ளுதல், ஒளிவு மறைவில்லாத விவாதம், தாமாக முடிவு செய்ய மக்களை விட்டு விடுதல் ஆகிய இந்த ஜனநாயக ஆயுதங்களையே நாம் முன்போல் தொடர்ந்து பயன்படுத்துவோம்.

இனி, வருங்காலத்தில் நம்முள் ஒவ்வொருவரும் சமாதானத்துக்கான இந்தப் 'போரில்' இறங்க வேண்டும். அதற்காகவே பாடுபட வேண்டும். நாம் இன்று இருக்கும் நிலையையும் இனி விரும்பும் நிலையையும் இழந்து விடாமல் இருக்கவேண்டுமானால், நாம் ஒவ்வொருவரும் சுதந்தர வீரர்களாக உருவெடுக்கவேண்டும்.

# சமாதான வாகை சூட, சமாதானப் போர் புரிய வேண்டும்

## அத்தியாயம் 2

**போ**ரில் தயங்காமல் செய்யவேண்டிய காரியங்கள் உண்டு என்பது நமக்குத் தெரியும். அந்த நேரத்தில் கையைப் பிசைந்துகொண்டு நின்ருலும் நடவாது; காசை வாரி இறைக்க மனம் சோர்ந்தாலும் போச்சு. வெற்றியடைய, போர் முனைகள் யாவற்றையும் ஒன்ருக நோக்கி யுத்த தந்திரங்களை உருவாக்கித் தரவல்ல கற்பனைத் திறன் விளங்கும் தளபதிகள் வேண்டும்; அத்தந்திரங்களைச் செயல் முறையில் நடத்திவைக்க கோடானு கோடி டாலர்களும் வேண்டும்; முழு மூச்சுடன் உழைக்கும் ஆற்றலும் உறுதியும் வேண்டும் என்பதெல்லாம் நமக்குத் தெரியும். இரண்டாவது உலக யுத்தத்தின்போது நடந்தது தான் நமக்கு இன்னும் நினைவிருக்குமே. அப்போது திறமை சாலிகள் எத்தனை எத்தனை பேர் போர்ச் சேவை புரிய வாஷிங்டனுக்கு விழுந்தடித்துக்கொண்டு சென்ருர்கள்; யுத்தச் செலவுக்காகக் காங்கிரஸ் ஓர் ஆயிரம் கோடி அன்று, பல ஆயிரம் கோடி டாலர்வரை ஒதுக்கிவைத்தது. நம்முடைய முயற்சியெல்லாம் கூட்டி பீரங்கி, டாங்கி, விமானம், கப்பல் என்றெல்லாம் செய்து தள்ளினேம். செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்ந்து உழைத்தோம்; யுத்தக் கடன் பத்திரங்களை விற்ருேம்.

யுத்தமா? அது நமக்குப் புரிகிறது. அதில் முழக்கமுண்டு; அதிசயிக்கத் தக்க நிகழ்ச்சிகள் உண்டு. அதைக் கண்ணல் காணலாம், உணரலாம், ஆதரிக்கலாம்.

சமாதானமோ, அது சலசலப்பற்றது ; உணர்ச்சி ஊட்டுவதில்லை. அது எங்கே, காட்டுப் பார்க்கலாம் என்று கேட்பார்கள். பத்திரிகைகளில் சமாதானத்தைப் பற்றிக் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிப்பதும் இல்லையே. ஆயினும், நாம் சமாதானமே கண்ணுங் கருத்துமாக உழைப்போமானால், சமாதானமும் மெய்யாகவே கண்ணாரக் காண ஒரு காட்சியாக உருவெடுத்து முன் வந்து நிற்கும். இந்த உண்மையை, அதாவது இரவு பகலாக சமாதானத்துக்காக உழைக்க வேண்டும் என்ற உண்மையை, நாம் மறந்ததனால்தான், நமது உள் நாட்டுப் போருக்குப் பின்பும், முதலாவது, இரண்டாவது உலக யுத்தங்களுக்குப் பின்பும் நம்மை விடாமல் பற்றி வருத்தும் துன்பங்களெல்லாம் வந்தன.

உள்நாட்டுப் போருக்குப் பின்பு, அமெரிக்காவின் வட பாகம் லிங்கன் சொன்ன பொன் மொழியைக் கடைப் பிடித்து, "யாரிடத்தும் கெட்ட எண்ணம் இல்லாமல், எல்லோரிடத்தும் அன்பு பாராட்டி" நடந்திருக்குமானால், தென் பாக நிலைமை சீர்திருந்த உதவி புரிந்து சமாதான அறம் புரிந்திருக்குமானால், நல்லெண்ணம் உண்டாகியிருக்கும்; வெகு சீக்கிரம் நம்பிக்கை வளர்ந்திருக்கும் ; நாடு செழித்திருக்கும். வட பாகம் தென் பாகத்துக்குச் சில லட்சம் டாலர்களைக் கடன் கொடுத்து உதவியிருந்தால், தென்பாகப் பண்ணைகள் தேயிலைத் தோட்டங்கள் முதலியவற்றுக்கு வேண்டிய ஆடுமாடுகள் சாதனங்கள் ஆகியவற்றை வாங்க உதவியாக இருந்திருக்கும் ; அதனால் நாட்டின் செல்வம் பல ஆயிர லட்சம் மடங்கு பெருகியிருக்கும். தென் பாகத்தில், முப்பது ஆண்டுகள் ஆனதற்குப் பதிலாக, பத்தே ஆண்டுகளில் திருந்திய பொருளாதார நிலைமை குடி கொண்டிருக்கும். உண்மையாகவே அமெரிக்க ஐக்கிய ராஜ்யங்கள் ஐக்கியப் பட்டிருக்கும் ; "நேற்றுத்தான் சண்டையிட்டுக் கொண்டார்கள் ; இன்று அவர்களைப் பார்" என்று உலகம் வியந்து போயிருக்கும். இதற்கெல்லாம் மாறாக, வட பாகம் சுரண்டல் ஆசாமிகளைத் தென் பாகத்துக்கு அனுப்பியது. இந்

தச் சுரண்டலால், தென் பாகத்தில் ஏற்பட்ட மனக் கசப்பும் வெறுப்பும் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்பும் தணிந்ததில்லை என்பதை வட பாகத்தான் என்ற முறையில் தான் தென்பா ஃ இராணுவ முகாம் ஒன்றில் இருந்தபோது நேரில் கண்டிருக்கி றேன். சமாதானத்துக்காகப் பாடுபடாத அறியாமையினுல் வந்த வினை!

யோசனையோடும் ஊக்கத்தோடும் சமாதானத்துக்காக உழைத்திருந்தால் முதலாவது யுத்தம் முடிந்த உடனேயும் சமா தானம் எய்திருக்கலாம். ஸ்டாக்ஹோம், சியாட்டில் (Seattle), சாமர்க்கண்டு—உலகில் எல்லா இடத்திலும் மக்கள் விரும்பியது சமாதானமே. ஆனுல் அதற்காக நாம் வருந்தி உழைத் தோமா? இல்லை. அமெரிக்காவில் இருந்துகொண்டு சர்வ தேசச் சங்கத்தை நாம் காலால் எட்டி உதைத்தோம். தனித்து வாழ்வதே எங்கள் 'வழக்கம்' என்று திருப்தியடைந்தோம். பிரிட்டனும் பிரான்சும் ஒன்ருடொன்று அவ நம்பிக்கைக் கொள்ளும் தங்கள் பழைய வழக்கத்தை ஆரம்பித்தன. ஹிட் லரின் போர் அரக்கன் கிளம்புவதற்குக் கேட்பானேன்?

இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பின்பு, சமாதானத் துக்காக நாம் சிறிதளவேனும் உழைக்கவில்லை என்று சொல்ல முடியாது. முக்கியமாக, கடந்த மூன்று வருஷங்களிலும், சர்வ தேச ஒத்துழைப்புக்கான ட்ரூமன் கோட்பாடு என்ன, மார்ஷல் திட்டமென்ன, வட அட்லாண்டிக் உடன்படிக்கை ஸ்தாபனம் என்ன, பரஸ்பரப் பாதுகாப்பு உதவித் திட்டமென்ன, இன்னும் ஐக்கிய நாடுகள் பலனளிக்க வேண்டுமென்னும் நமது ஆர்வம் என்ன. இவையெல்லாம் நாம் விஷயங்களைப் புரிந்துகொண்டு சமாதானத்தை எட்டிப் பிடிக்க முன்னேறுகிருேம் என்பதற்குச் சான்ருகும். ஆனுல் இதுவரை நாம் வெற்றி பெறவில்லை. வெற்றி பெருததற்குக் காரணங்கள் இரண்டு. முதலாவது, இந்த உலகம் முழுவதையும் சோவியத் யூனியனே கட்டி ஆள வேண்டும் என்பதுதான் கிரெம்லினில் வீற்றிருக்கும் தலைவர்க ளின் உறுதி என்பதை நம்மில் பெரும்பாலோர் கண்டு பிடிக்க

வெகு காலம் பிடித்தது. கடுமையாகக் கண்முன்னுலிருந்த இந்த உண்மையை நம்புவதற்கு நமது. மனம் ஒப்பவில்லை ; நம்ப மறுக்கவும் செய்தோம். இந்த நமது மன நிலையைக் கிரெம்லின் ஆட்சியாளர்கள் திறமையாய்ப் பயன்படுத்திக் கொண்டனர். ஜப்பானுடன் யுத்தம் முடிந்து வெற்றி கொண்டாடிய தினத்திலிருந்து, நாம் " கஷ்ட நிலைமை சூழ விருப்பதைக் கவனியாமல் வாழலாம் " என்ற கொள்கைக்குத் தூபம் போட்டுக்கொண்டிருந்தோம். ஐரோப்பாவிலிருந்து நமது வீரர்களையெல்லாம் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வருவதில் முனைந்தோம். அதையேதான் மாஸ்கோவும் ஆவலுடன் எதிர்பார்த்தது. இங்கே டெலிவிஷன் கருவிகள் செய்வதில் முனைந்தோம். அங்கே அதே சமயம் சோவியத் யூனியன் உலகத்திலேயே வேறெங்கும் இல்லாத நுணுக்கம் வாய்ந்த " ராடார் " சாதனங்களை அமைத்தது. நாம் " வழக்கம்போல வணிகர்கள் " ஆனோம் ; சோவியத் யூனியன் ஆக்கிரமிப்புத் திட்டங்களையும் தனது ஆதிக்கத்தை வளர்க்கும் திட்டங்களையும் ஆழ்ந்து யோசித்து மிக நுட்பமாகத் தீட்டிக்கொண்டிருந்தது. பெரிய அரக்கனைப் போல நெருங்கி நின்றுகொண்டிருந்த செஞ்சேனைக்குப் பயந்து போலந்து, ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா போன்ற நாடுகள் சோவியத் யூனியனின் காலடியில் விழுந்து விட்டன.

செக்கோஸ்லோவாக்கியாவில் கம்யூனிஸ்டுத் துரோகிகள் சூழ்ச்சி செய்து ஆட்சியைக் கவிழ்த்துக் கைப்பற்றிக் கொண்டார்கள். மற்றும் உள்ள சுதந்தர நாடுகளிலெல்லாம், தொழிற் சங்கங்கள், பல்கலைக் கழகங்கள், எழுத்தாளர் உலகம், விவசாயத் துறை முதலியவற்றிலுள்ள வலுப்பெற்ற கம்யூனிஸ்டுகள் சோவியத் ஆணையைத் தலைமேற்கொண்டு வேலை செய்யத் தொடங்கினார்கள் ; உற்பத்தியைத் தடுக்கப் பாழ் செய்யும் வேலைகளில் இறங்கினார்கள் ; முறையான ஜனநாயக அரசாங்கத்தில் மக்களுக்கு நம்பிக்கை அற்றுப்போகும்படி முயன்றார்கள் ; மாஸ்கோவின் " பெரிய பொய் " யை மக்கள். செவிக

ளிலே ஊதிஞர்கள். சீனுவிலோ, மாஸே-துங் (Mao Tse-tung) மாஸ்கோ சொல்லிக்கொடுத்தபடியே கீழ்க்கோடி நாடுகளையெல்லாம் அடிமைப் படுத்தும் திட்டங்களை வரைந்துகொண்டிருந்தார்.

இரண்டாம் உலக யுத்தத்துக்குப்பின் நமக்கு சமாதானம் கிட்டாததற்கு இரண்டாவது காரணம், சமாதானத்துக்காக நாம் செய்ய வேண்டிய வேலை எவ்வளவு பெரிது என்பதை உணர்ந்து கொள்ளாத குறையாகும். ஐக்கிய நாடுகள் கூடுவதற்கு முதற் படியாக இருந்து வேலை செய்யத்தான் செய்தோம். உலகின் மற்ற மக்களுக்குத் தாராளமாகப் பொருள்கள் வழங்கிஞேம் என்பதும் உண்மைதான். கஷ்டப்படும் ஐரோப்பியர்களுக்காக உணவும் உடையும் ஏராளமாகக் கொடுக்கத்தான் செய்தோம். ஐரோப்பாவில் வெற்றியடைந்த ஒரு வருஷத்தில் பிரிட்டனுக்கு **37,50,000,000** டாலர் கடன் அளித்தோம். ஐக்கிய நாடுகள் நிவாரண புது வாழ்வு நிர்வாகத்துக்கு **250** கோடி டாலருக்கு மேல் கொடுத்தோம். ஐரோப்பாவுக்கு இடைக்கால உதவித் திட்டப்படி **55½** கோடி டாலருக்குமேல் அளித்தோம். சீனுவில் கோடி கோடியாய்க் கொட்டிஞேம். சீரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வ தேச பாங்கை ஆதரித்தோம். மொத்தமாகப் பார்த்தால், பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் ஆரம்பிக்கு முன்பே, ஐரோப்பாவுக்கு மட்டும் **1,200** கோடி டாலர் கொடுத்தோம். இவ்வளவெல்லாம் செய்தும் ஏன் பலன் கிடைக்கவில்லை ? ஏனென்ருல் இந்த உதவியெல்லாம் ஏதோ ஓர் அவசர உதவியாக, நெருக்கடிக்கால உதவியாக அளித்தோமே தவிர, எல்லா விஷயங்களையும் முற்றும் உணர்ந்து தயாரித்த திட்டப்படி உதவி செய்யவில்லை. கிரெம்லின் தயாரித்துள்ள திட்டத்தை முறியடிக்க நாம் செய்தது போதாது.

பின் எவ்வாறுதான் சமாதானப் போர் புரிவது ? இத்தகைய கேள்விக்குப் பதில் பலரிடமிருந்தும் பல விதமாகவே வரும். அவையனைத்தும் இரண்டு வகையான நேர்மாருன கருத்துக்களுள் அடங்கும். சிலர், சோவியத் யூனியனேடு பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலம் வேற்றுமைகளெல்லாம் தீர்ந்து

விடும் என்று கருதுகிறார்கள். "ஸ்டாலினுடன் நாம் பேரம் பேசலாம்" என்ற கருத்தை ஆதரிக்கும் இவர்கள் கூட்டம் வரவரக் குறைந்து வருகிறது. பலர், சோவியத் யூனியன் நம்மீது நிச்சயம் போர் தொடுக்கவே போகிறது ஆதலால், அதைத் திகைக்கவைக்க அதன்மீது நாமே முதலில் போர் தொடுக்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். முன்னதாக அணைகோறும் யுத்தம்—"தடுப்புப் போர்" என்ற கருத்தை ஆதரிக்கும் இக்கூட்டம் வரவரப் பெருகி வருகிறது.

இந்த இரண்டு கருத்துக்களையுமே ஆராய்ந்து கவனிக்க வேண்டியது அவசியம்.

செக்கோஸ்லோவாக்கியாவில் செய்தது போல, மேற்கத்திய நாடுகளில் உள்நாட்டுச் சூழ்ச்சிகள் செய்து ஆட்சியைக் கைப் பற்ற முனையும் சோவியத் யூனியன் தனது முயற்சியில் அங்கு வெற்றி பெறாதவாறு திணறடிக்கப்படுமானால், உலகத்தை அடக்கியாளும் ஆசையைத் துறந்து விட்டு கிரெம்லின் தனது மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக உழைக்க முற்படும் என இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பின் சில காலம்தான் நான் நினைத்தது உண்டு. சோவியத் யூனியன் இன்று செய் வதுபோல் அப்போதும் வெளி நாடுகளில் சண்டையிடவோ உள்நாட்டுக் குழப்பங்களை அடக்கவோ தனது மொத்த வரு வாயில் குறைந்தது 35 சத விகிதத்தைப் படை பலம் பெருக்குவ தற்கே செலவிட்டு வந்தது. இத்தகைய யுத்தப் பொருளா தாரத்தைக் கைவிட்டால், ரஷ்யா தனது ராணுவம் கடற்படை இவற்றுக்கு ஆகும் செலவை மூன்றில் ஒன்றாகக் குறைத்துக் கொண்டு, தனது நாட்டில் மேற்கே லெனின்கிராடு (Leningrad) முதல் கிழக்கே விளாடிவஸ்டாக் (Vladivostok) வரையிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தச் செலவிடக் கூடும் அன்றோ? இப்படிச் செய்தால் அது ஒரு நல்ல காரியமாகும் என்று எனக்குப்பட்டது; அப்படியே மாஸ்கோவும் நினைக்கு மென்று எண்ணினேன். சுருங்கச் சொன்னால், கிரெம்லின்

தானும் வாழ்ந்து பிறரையும் வாழவிடும் கொள்கையைக் கடைப் பிடிக்கும் என நம்பினேன்.

இதில் எத்தனையோ அமெரிக்கர்களைப் போல நானும் தவறுதலாகவே எண்ணிவிட்டேன். இவ்வாறு நம்பியது நாம் சகித்துப்போகும் தன்மையுடையவர்கள் என்று காட்டலாம்; ஆனால் நாம் உண்மையான அரசியல் ஞானமுடையவர்கள் என்று ஒருநாளும் கூறமுடியாது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் கைப் பற்றிக்கொண்டதற்கு கிரெம்லின் என்னதான் சமாதானம் கூறினாலும், சோவியத் யூனியன் தன்னை ஒருநாள் தாக்கக்கூடிய பகைவர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இடை நாடுகள் வேண்டுமென்று இந்தக் கடும் நடவடிக்கைகள் எல்லாம் எடுக்க வேண்டியிருக்கிறது என்று எவ்வளவுதான் சொன்னாலும், சோவியத் யூனியன் உலகத்தை அடக்கியாளக் கிழக்கு ஐரோப்பா வழியாகப் புறப்பட்டிருக்கிறது என்பது இன்று தெளிவு. அதை மறைக்கவே முடியாது.

கிரெம்லினுடைய இந்த நோக்கம் மார்ஷல் திட்டம் ஆரம்பமாகுமுன்பே, பாரிஸில் **1947**, ஜூலை மாதத்திலேயே உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாயிற்று. ஜெனரல் மார்ஷல் அப்பொழுதுதான் ஹார்வர்டில் தம்முடைய சிறந்த ஓர் சொற்பொழிவை நிகழ்த்தியிருந்தார் ; ஐரோப்பிய நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, ஒரு பெரிய கூட்டுறவு முயற்சியில் ஈடுபட்டுச் சிதைந்து கிடந்த தங்களுடைய பொருளாதார நிலையைச் சீர் திருத்திக்கொள்ளவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். அவர் கூறினார் : "உலகத்தின் பொருளாதார நிலைமை நல்ல நிலையில் இருந்தாலொழிய அரசியலும் உறுதிப்படாது ; சமாதானமும் நிலைத்திருக்க வழியில்லை. எனவே, அத்தகைய பொருளாதார நிலைமை ஏற்பட அமெரிக்கா எவ்வளவுக்கு உதவி புரிய இயலுமோ அவ்வளவும் செய்ய வேண்டும். இது நியாயமே. அமெரிக்கா எந்த நாட்டின்மீதும் எந்தக் கொள்கைகள்மீதும் பகை பாராட்டுவதில்லை ; வறுமை, பசி, ஏக்கம், குழப்பம் இவற்றின் மீதுதான் அமெரிக்காவுக்குப் பகை." இத்

தகைய உதவிக்கு கொள்கை பற்றிய நிபந்தனைகள் எதையும் அவர் விதிக்கவில்லை; ஆனால், "மக்கள் துன்பத்தை நிரந்தர மாக்கி அதை ஒரு கருவியாகக் கொண்டு அரசியலிலோ வேறு வகையிலோ பலனடையக் கருதும் அரசாங்கமும், அரசியல் கட்சியும், குழுவும் அமெரிக்காவின் எதிர்ப்புக்கு ஆளாகும்," என்று மட்டும் அவர் எச்சரித்தார். இது யாருக்கும் தவருகப் படுவதற்கு நியாயமே இல்லை. நல்ல நம்பிக்கையோடுதான் இந்த உதவி அளிக்க அமெரிக்கா முன் வந்தது; நல்லெண் ணத்தோடு அதில் பற்றுவைத்து நின்றது. சமாதானமும் சுதந்தரமும் பாதுகாப்பாய் இருக்கக் கூடிய செல்வ வளம் சிறந்து விளங்கும் ஓர் உலகம் உருவாக அடிப்படை அமைக்க வேண்டும் என்பது ஒன்றே அமெரிக்காவின் நோக்கமெல்லாம்.

இத்தகைய உதவி எவ்வளவு மேன்மை என்பதை உடனே உணர்ந்தார் பிரிட்டனுடைய அயல்நாட்டு மந்திரி எர்னஸ்டு பெவின் **(Ernest Bevin).** மார்ஷல் பேசி முடித்த சில மணி நேரத் திற்குள் பிரெஞ்சு அயல்நாட்டு மந்திரி ஜார்ஜஸ் பிடௌல்ட்டைப் **(Georges Bidault)** போய்க் கண்டார் அவர். இருவருமாகச் சேர்ந்து சோவியத் யூனியனின் அயல் நாட்டு மந்திரி வி. எம். மாலட்டோவைத் தம்முடன் கலந்து பேச அழைத்தனர். பத்து நாட்கள் கழித்து மூவரும் குவாய் டிஓர்ஸேயில் **(Quai d'orsay)** அழகான மகாநாட்டு அறையில் வட்டமேஜையைச் சுற்றி அமர்ந் தார்கள். இந்த மகா நாட்டில் கொஞ்ச காலத்துக்கு ஏதோ நம் பிக்கை இருந்தது; ஐரோப்பா முழுவதும் ஒத்துழைக்கும் கூட்டுறவு ஏதோ உருவாகப்போகிறது என்று நினைத்தோம். ஆனால் கூட்டம் ஆரம்பித்த ஆரும் நாள், மாலட்டோவ் வெளியேறிவிட்டார்; விளக்கஞ் சொல்லவும் இல்லை; போய் வருகிறேன் என்றும் கூற வில்லை; மாஸ்கோவுக்கு விமானம் ஏறிவிட்டார். அதைத் தொடர்ந்து நடந்த அகில ஐரோப்பிய மகாநாட்டுக்கு போலந்து, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா, அல்பேனியா, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகள் மாஸ்கோவின் ஆணைக்கு அஞ்சி வர மறுத்து விட்டன. செக்கோஸ்லோவாக்கியாவும் கடைசி நேரத்தில், கிரெம்

லினின் பேச்சைக் கேட்டு, மார்ஷல் திட்டத்தைப் பற்றி யோசிக்க மறுத்துவிட்டது.

ரஷ்யாதான் எந்தக் காரியத்துக்கும் ஒத்து வருவ தில்லையே ; அதைத்தானே மாலட்டோவின் வெளியேற்றமும் காட்டுகிறது என்று நினைக்கலாம். இல்லை ; மாலட்டோவ் அன்று பாரிஸில் வெளியேறியது, ரஷ்யா "மிரட்டல் போர்" தொடுத்து விட்டது என்ற அறிக்கையே. சோவியத் யூனியன் தனது இன்றைய ஆட்சியாளர்களின் கையில் இருக்கவேண்டு மானால், சுதந்தர உலகத்தில் நிலைமை சீர்திருந்துவதை ரஷ்யா எதிர்க்கவேண்டும், சுதந்தர உலகத்தையே அழித்துவிடவும் வேண்டும் என்ற முடிவு மாஸ்கோவில் ஏற்பட்டுவிட்டது. இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக, **1947** செப்டம்பரில் சோவியத் யூனியனின் ஆதரவில் "காமிண்பாரம்" **(Cominform)** எனப்படும் "கம்யூனிஸ்டு அகிலம்" அமைக்கப்பட்டது. "அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தை"க் கொண்டுவரும் மார்ஷல் திட்டத்தைக் கவிழ்ப்பதற்காக ஏற்பட்டுவிட்டது சோவியத்தின் "அகிலம்". மார்ஷல் திட்டம் உருவாகி மூன்று ஆண்டுகள் ஆகின்றன. இம்மூன்று ஆண்டுகளிலும் சுதந்தர உலகின் பொருளாதார நிலைமை சீர்திருந்த நாம் செய்யும் முயற்சி அத்தனையும் உருப்படாதபடி தடுப்பதில் ரஷ்யாவின் கபட நாடகம் முன்னிலும் மிகுந்த சூழ்ச்சியுடன் வேண்டுமென்றே வேலை செய்துள்ளது. அது ஒப்பந்தங்களைச் செல்லாதவை என்று தள்ளியிருக்கிறது. உடன்படிக்கைகளை மீறியிருக்கிறது ; மீண்டும் மீண்டும் பல தடவை நம்மையும் சுதந்தர உலகத்தில் பிறரையும் அது ஏமாற்றியிருக்கிறது.

அமெரிக்காவோடு கிரெம்லின் சில காலமாக நடந்து கொண்ட விதத்தைப் பாருங்கள். கிரெம்லின் முக்கியமான விஷயங்களில், தான் கொடுத்த வாக்குறுதிகளை எத்தனை தரம் மீறியிருக்கிறது என்று எண்ணிப் பார்க்கையில் என் நினைவுக்கு வருபவற்றைக் கீழே எழுதுகிறேன் :

(1) **1943**-ல் டெஹ்ரான் **(Teheran)** மகாநாடு நடந்தது. அதில் சோவியத் யூனியன் ஒரு முக்கிய வாக்குறுதியளித்தது. "தாங்கள் விரும்பும் வாழ்க்கை முறையைத் தாங்களே தெரிந்தெடுத்துக்கொள்ள எல்லா மக்களுக்கும் உள்ள உரிமையை", இன்று அடிமை நாடுகளாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட போலந்து முதலிய எல்லாத் தேசங்களும் அனுபவிக்கலாம் என்பதுதான் அன்று கிரெம்லின் அளித்த வாக்குறுதி. எங்காவது ஓரிடத்தில் இந்த வாக்குறுதியை அது நிறைவேற்றியிருக்கிறது என்று சொல்லுங்கள் ?

(2) **1945**-ல் பாட்ஸ்டாம் **(Potsdam)** மகாநாடு நடந்தது. அப்போது, ஜெர்மனி முழுவதிலும் ஜன நாயக அரசியல் கட்சிகளுக்கு ஊக்கங் கொடுக்கவேண்டும் என்று வாக்குறுதி அளித்தது சோவியத் யூனியன். நடந்தது என்ன ? ஜெர்மனி நாட்டின் ரஷ்யப் பகுதியில், கம்யூனிஸ்டுகள் நடத்தும் சோஷியலிஸ்டு ஐக்கியக் கட்சிக்கு மட்டுமே கிரெம்லின்னது ஆதரவு கிடைத்தது. மற்ற எல்லா அரசியல் கட்சிகளும் ஒடுக்கப்பட்டன ; அல்லது அவை தம் சுதந்தரத்தை முற்றும் பறிகொடுத்து மடிந்தன.

(3) பாட்ஸ்டாம் மகாநாட்டில் சோவியத் யூனியன் கொடுத்த இன்னொரு வாக்குறுதியும் என் நினைவுக்கு வருகிறது. ஜப்பானியப் படை வீரர்கள் நிராயுதபாணிகளானதும், மீண்டும் "அமைதியாக, உற்பத்தியைப் பெருக்கும் வாழ்க்கையைக் கைக்கொள்ள" தங்கள் நாடு செல்ல அனுமதிக்க வேண்டும் என்பதுதான் உறுதிமொழி. பிடித்து வைக்கப்பட்டிருந்த ஜப்பானியக் கைதிகளோ **3,77,000** பேர். இவர்களில் நாடு திரும்பும்படி விடப்பட்டவர்கள் **95,000** பேர்களே.

(4) **1945,** ஜூன் **7**-ம் தேதியும் என் நினைவுக்கு வருகிறது. அன்று, அமெரிக்கா, பிரிட்டன், சீனா, சோவியத் ரஷ்யா ஆகிய நான்கு வல்லரசுகளும் கூடி, ஐக்கிய நாடுகள் சபையில் தங்களுக்குள்ள ரத்து அதிகாரத்தை வேண்டுமென்று

பயன்படுத்துவதன் மூலம் அச் சபையின் வேலைகள் நடைபெருதவாறு செய்யக் கூடாது என்று ஒத்துக்கொண்டன. அன்று முதல் சோவியத் யூனியன் மொத்தம் **47** தடவைகளாகத் தனது தள்ளுபடி அதிகாரத்தைப் பிரயோகித்திருக்கிறது. இது என்ன ஒரு சிறு தொகையா ?

(5) பெர்லின் (**Berlin**) முற்றுகை மேற்கத்திய நாடுகளின் விமானப் போக்குவரத்து முறையால் எடுபட்டதை எண்ணிப் பார்த்தால் அது சோவியத் யூனியனுக்கு ஒரு தோல்வி என்பது விளங்கும். இத் தோல்வியடைந்ததும், சோவியத் யூனியன் **1949** ஜூன் **20**-ம் தேதி பாரிஸ் நகருக்கு வந்து செய்துகொண்ட உடன்பாடு ஒன்று ; நடந்ததோ வேறு. மேற்கத்திய நாடுகள் வசமும் ரஷ்யாவின் வசமுமுள்ள ஜெர்மன் பகுதிகளுக்கிடையே " வழக்கம்போல் போக்குவரத்து நடைபெற உறுதியளித்த " உடன்பாட்டையே குறிப்பிடுகிறேன். **1950**-ம் ஆண்டின் ஆரம்பத்திலேயே சோவியத் தளபதி போக்குவரத்துக்களை இடைக்கிடை நிறுத்தி வைக்கவும், ஜெர்மனியின் கிழக்கு மேற்குப் பகுதிகளிடையே வர்த்தகம் அனைத்தையும் ஒழுங்காக நடைபெருமல் தடை செய்யவும் தலைப்பட்டார்.

(6) கொரியாவும் " கிரமப்படி " விடுதலையடைந்து சுதந்தரமாக வாழும் என்று சோவியத் யூனியன் உறுதி அளித்தது. ஆனால், கொரியாவின் நிலைமையை ஆராய்ந்து சொல்லவந்த ஒரு ஐக்கிய நாடுகள் கமிஷனுக்கு சோவியத் யூனியன் **38**-வது எல்லைக் கோட்டுக்கு வடக்கே வழிவிட மறுத்துவிட்டது.

சோவியத் யூனியனுடைய உலக ஆட்சித் திட்டம் ஐரோப்பாவில் அம்பலமாகியதுபோலவே கொரியாவிலும் அது தெளிவாகி விட்டதால், ஸ்டாலினுடன் பேரம் பேசுவதில் பயனில்லை எனத் தோன்றும். அவர் அளவுக்கு மீறி ஆசைப்படுகிருர். மேற்கு ஐரோப்பா மீண்டும் ஆயுதம் தாங்கும்படி நாம் செய்து வருவதை விட்டொழித்துவிடவேண்டுமென்கிருர். கிழக்கு ஜெர்மனியை முற்றிலும் சோவியத் யூனியன் அதிகாரத்தின்

கீழ் விட்டுவிட்டு, மேற்கு ஜெர்மனியின் மேற்பார்வையை நாம் சோவியத் யூனியனுடன் பங்கிட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறார். பார்மோஸாவிலிருந்து நம்முடைய ஏழாம் கடற் படைப் பிரிவோடு விலகிக்கொள்ள வேண்டும் என்பதும், கொரி யாவிலிருந்தும் பொதுவாகத் தென் பசிபிக் பிரதேசத்திலி ருந்தே நமது படைகளோடு நாம் விலகிக் கொண்டு தென் கிழக்கு ஆசியாவை சோவியத் யூனியனிடமும் கம்யூனிஸ்டுச் சீனாவிடமும் கொடுத்துவிடவேண்டுமென்பதும் அவர் ஆசை. ஜப்பானுடைய எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் ஸ்டாலின் தமக்கு முழு அதிகாரம் வேண்டுமென்கிறார். ஐக்கிய நாடுகள் சங்கத் தில் சேர்ந்திருக்கும் உரிமையைத் தேசீயச் சீனாவிடமிருந்து பிடுங்கி, மாஸே-துங்கின் ஆட்சிக்குக் கொடுத்துவிட எண்ணுகிறார். இன்னும் எவ்வளவோ அவரது ஆசை. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் நோக்குவது, அமெரிக்காவைக் கம்யூனிஸ்டுக் கடல் சூழ்ந்த தன்னந் தனியான ஒரு தீவாக ஆக்கி விடுவதே. அப்போது, சுதந்தரத் தீவுகள் ஒன்றென்றாக மறைந்ததன் பின், கடைசித் தீவான அமெரிக்காவும், கம்யூனிஸ்டு அலைகள் ஓயாது மோதவே, மூழ்கி மறைந்துவிடலாம் அன்றோ ?

ஸ்டாலினுடைய சூழ்ச்சிகள் பலிக்காதபடி சுதந்தர உலகம் அவ்வளவு பலமாகவும் உறுதியாகவும் ஒற்றுமையாகவும் இருக் கிறதென்பதை அவருக்கும் அவரது ஊரிலும் வெளியிலு முள்ள அவருடைய கூட்டாளிகளுக்கும் எடுத்துக் காட்டத் தக்க அந்த நாள் வரும்போது, பேச்சு வார்த்தைகள் பலன் அளிக்க லாம் ; ஆனால் இன்று முடியாது ; இன்னும், சிறிது காலத் துக்கு முடியாது.

சரி, அப்படியானால் " ஆக்கிரமிப்பைத் தடுக்கும் போர் " தொடங்கலாமே என்று கேட்கலாம். இத்தகைய செய்கையை ஆதரிப்பவர்கள் மிகுந்த நியாயம்போலப் பேசுவார்கள். " இப் பொழுதே போய் நாம் குண்டு வீசுவோம். கிரெம்லினின் யுத்த நோக்கமும் ஆக்கிரமிப்பு எண்ணங்களும் கொரியாவைக் கம்யூ னிஸ்டுகள் தாக்கியதிலிருந்தே தெள்ளத் தெளிவாகி விட்டது.

நாம் ஏன் நியாயம் என்று கையைக் கட்டிக்கொண்டு, அவர்கள் புதியதொரு பெர்ல்ஹார்பரைப் பொறுக்கி எடுத்து நம்மைத் தாக்கி எழுப்ப நேரமும் இடமும் கண்டுபிடிக்கும் வரை சும்மா காத்திருக்கவேண்டும்?"

இவ்வாறு பலர் எண்ணுவதற்குக் காரணம் இல்லாமலில்லை. சமாதானத்தில் எனக்கு மிகுந்த நம்பிக்கையே; அதற்காக, என்ன கொடுத்தும் சமாதானம் பெற வேண்டும் என்பது அன்று என் கருத்து. "தாக்குபவனைத் திருப்தி செய்து அனுப்புவது, தவணை தவணையாகச் சரணடைவதாகும்" என்றார் செனட்டர் வாண்டன் பெர்க், தமக்கு வழக்கமான உள் உணர்வோடு. அது அத்தனையும் உண்மையென்று நான் ஒப்புக்கொள்வேன். இதையே ஜெனரல் மார்ஷலும் **1950**-ம் ஆண்டின் "நினைவு நாள்" அன்று பேசிய தமது சிறந்த பேச்சில் உறுதிப் படுத்தினார். அவர் சொல்வார்: "போர் வேண்டும் என்று சொல்வதற்கு ஒரு நியாயமும் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்லலாம்: இரண்டு தீமைகளில் அது குறைந்த தீமையாகும். ஏனெனில், ஆக்கிரமித்தவனைத் திருப்தி செய்வதைவிட யுத்தம் சிறந்ததே. ஆக்கிரமிப்பைத் தடுத்துத் தொலைய ஒழிய வேண்டுமென்று அதைத் திருப்தி செய்யப்போனால், நடப்பது என்ன? அதே ஆக்கிரமிப்பு இன்னும் ஊக்கமடைந்து விடுவதுதானே."

ஆகவே, உலகப் போரென்னும் பேரிருளில் மக்கள் எல்லோரையும் தள்ளியே தீரவேண்டும் என்ற முடிவுதானா? இன்றைய நிலைமை அவ்வளவு தூரம் முற்றிவிட்டதா? இல்லவே இல்லை என்பதுதான் எனது நம்பிக்கை. அணுக் குண்டுகளைப் பொழிந்து கம்யூனிஸத்தை அழிக்க முயல்வது குறி தவறிவிடும் என்றே நம்புகிறேன். சொன்னதை விட்டுச் சுரையைப் பிடுங்கிய கதையாக அது முடிந்துவிடும். கிரெம்லினுக்கு எதிராக "ஆக்கிரமிப்புத் தடுப்பு யுத்தம்" தொடங்கினால் நாம் அறிவுக்குப் பதிலாக உணர்ச்சியைக் கேட்டு நடக்கிறோம் என்றாகும்; யோசனையை விட்டுவிட்டுக் கலக்கத்திலே காரியங்கள் செய்கிறோம்

என்றுகும். ஒரு யுத்தத்தைத் தொடங்கிவிட்டு யுத்தத்தைத் தடுக்க முடியுமா ?

காலஞ்சென்ற வெண்டல் வில்கி (Wendell Willkie) 1942-ம் ஆண்டு வேனிற் பருவத்தில் உலகத்தை ஒரு சுற்றுச்சுற்றி வந்தார். வந்தவர் அமெரிக்காவின்பால் அயல் நாடுகளிலிருக்கும் " நல்லெண்ணக் களஞ்சிய"த்தைப்பற்றிப் பேசிக்கொண்டு வந்தார். தாராள மனப்பான்மை உள்ளதும், ஆக்கிரமிப்பு நோக்கம் அற்றதும் அமெரிக்கா தேசம் என்ற எண்ணம் அயல் நாடுகளில் பரவியிருப்பதே இந்த நல்லெண்ணத்திற்கெல்லாம் அடிப்படையாகும் என்று கண்டுபிடித்துக்கொண்டு வந்தார் வெண்டல் வில்கி. இரண்டாவது உலக யுத்தத்தில் நாம் முதலில் சில தோல்விகள் அடைந்தோம் ; அதனுல் சில நாடுகள் நமக்கு எதிரான வெற்றி கொண்டாடுவோராக மாறினர் என்பது உண்மையே. ஆயினும் நம்மை யாரும் தாக்குவதற்கு முன்பு நாம் போரில் இறங்குவதில்லை என்பதைக் கண்டு உலகில் பெரும்பாலான மக்கள் நம்மைப் பாராட்டினர் ; நமக்கு உதவி செய்யவும் மிகவும் ஆசைப்பட்டனர். " உலகம் ஒன்றே " என்ற கொள்கையை வலியுறுத்த வெண்டல் வில்கி அன்று செய்த உலகச் சுற்றுப் பிரயாணமும் முடிவடைந்ததன் பின், நாமும் ஓர் உலக யுத்தத்தை முடித்து விட்டு, ஒழுங்கு முறை நிலவும் வகை செய்து, மற்ற நாடுகளும் தத்தமக்கு வேண்டியவற்றைச் செய்து கொள்ள உதவி புரிந்திருக்கிறோம். நாம் ஏகாதிபத்தியப் பித்தும் யுத்த வெறியும் பிடித்தலைபவர்கள் என்று கிரெம்லின் தன் ஓயாத கண்டனங்களால் உலகை நிரப்பியிருக்கிறது. ஆயினும் சுதந்தரத்தோடு சமாதானம் வேண்டுமானுல் அமெரிக்காவைப் பார் என்றுதான் உலகில் பெரும்பாலோர் இன்னும் சொல்லுவார்கள். அதேபோல், ஆக்கிரமிப்புக்கு எதிரான சிறந்த நண்பனும் அமெரிக்காவே என்று இவர்கள் கருதுகிறுர்கள். இந் நிலையில் அமெரிக்கா ஓர் ஆக்கிரமிப்பைத் தொடங்குமானுல், அந்த ஆக்கிரமிப்பு எவ்வளவு யோக்கியமுள்ளதாக இருந்தாலும்கூட, நம்முடைய உயர்ந்த நிலை

யெல்லாம் பிறர் மனத்தில் பழுதாகி விழுந்துவிடாதோ? (உடைக்க முடியாத தற்காப்பு அரண் ஏற்படுத்த) இராணுவ முனையிலும், அரசியல் முனையிலும், பொருளாதார முனையிலும், மக்கள் மன நிலையாகிய முனையிலும் சமாதானத்தை உறுதிப் படுத்தி வளர்க்கும் பெரு முயற்சியாகிய சமாதான அறத்தை துணிவோடும் திறமையோடும் நடத்துவதற்கு நம்மிடம் அறிவாற்றலும் மனவாற்றலும் இல்லாமல் வறண்டு போய், முரட்டுத்தனமாக முதலில் நாமே பலாத்காரத்தில் இறங்கிவிட்டோம் என்றன்றோ நமது நடத்தை எடுத்துக்காட்டும்?

எவ்வளவுதான் பிறன் ஒருவன் தொந்தரவு கொடுத்து நம்மை வலியச் சண்டைக்கு இழுத்தாலும், ' தடுப்புப்போர் ' என்று கூறிச் சண்டையைத் தொடங்குவது ஆக்கிரமிப்புச் செய்கையே தவிர வேறல்ல. மற்ற எல்லோருக்கும் ஆக்கிரமிப்பு குற்றமானால், நமக்குந்தான் அது குற்றம். சமாதான காலத்திலும் சரி, சண்டைச் சமயத்திலும் சரி நமக்கு ஒரு நீதி பிறருக்கு ஒரு நீதி என்பது ஆகாது. நமது நீதி நிலைமையே நம்முடைய விலை மதிக்க வொண்ணாத சொத்து. அதை இழந்துவிட்டு நாம் என்ன செய்ய முடியும்? நாம் செய்வது நமது மனச் சாட்சிக்கும் மக்கள் குலத்து மனச் சாட்சிக்கும் ஒத்து இருக்கும் வரையில்தான் நீதியான சுய மதிப்பும் நமக்கு நிலைத்திருக்கும் என்பது என் நம்பிக்கை.

சரி, திட்டம் வகுக்கும் சபைகளிலே " தடுப்புப் போர் " கொள்கைக்கே பெரும்பாலோர் கைதூக்கி விட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்? ஒரு நள்ளிரவு மறைவான பல தளங்களிலிருந்து " பி-36 " விமானங்கள் அணுக்குண்டுகளை ஏற்றிக்கொண்டு ஆகாயத்தில் பாய்ந்து செல்லும். மாஸ்கோ, லெனின்கிராட், மாக்னிட்டோகார்ஸ்கிலுள்ள எஃகுத் தொழிற்சாலைகள், " ஆட்டம்கிராடி "லுள்ள அணுவைப் பிளக்க உதவும் ' சைக்ளோட்ரான் ' இயந்திரங்கள், இன்னும் பல தொழில் நிலையங்கள் இவற்றின்மீது குண்டுபோட ஏகும் அந்த விமானங்கள். போர் புரிய ரஷ்யாவுக்கு உள்ள சக்தியை இவ்

விமானங்கள் அழித்துவிடுமா? இதற்கு என்னுல் சரியான பதில்கூறமுடியாது; ஒருவரும் சொல்ல முடியாது என்றே கருது கிறேன். ஏனெனில் சோவியத் யூனியனில் யுத்தப் பொருள் கள் உற்பத்தி செய்யும் இயந்திர சாலைகளில் அநேகம் மறை வாகப் பூமிக்கடியில் அமைந்திருக்கின்றன. ஆனால், நம்மு டைய விமானங்கள் செல்வது மிகவும் ஆபத்தான சூது விளை யாட்டு என்பது மட்டும் நிச்சயம்; ஏனெனில், 'ராடார்' சாதனங்களும், விமானங்களை இடைமறிக்க வேண்டிய பலமும், விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் ரஷ்யர்களுக்குப் போதியமட்டும் இருக்கின்றன என்பதில் சந்தேகமே வேண்டாம்.

ரஷ்ய நகரங்களிலே பலவற்றை நாம் பாழாக்கிவிட்டாலும், அதன் தொழிற்சாலைகளில் சிலவற்றை அழித்தேவிட்டாலும், ரஷ்யா **175** டிவிஷன்கள் கொண்ட தனது பெரிய தரைப்படை யால் சண்டையை மேற்கொண்டும் நடத்த ஆற்றல் வாய்ந்திருக் கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். இந்தப் படைக்கு எதி ராக மேற்கு ஐரோப்பாவில் இப்பொழுது இருக்கும் படைகள் எம்மாத்திரம்? ஜெர்மனியில், அமெரிக்க, பிரிட்டிஷ், பிரஞ் சுப்படைகள் சில இருக்கின்றன; பிரான்சு, இத்தாலி, பெல்ஜி யம், நார்வே, டென்மார்க், ஹாலண்டு ஆகிய நாடுகளில் வட அட்லாண்டிக் உடன்படிக்கைச் சங்கத்தின்படி சில டிவிஷன்கள் இருக்கின்றன. இவை சோவியத் படைகளைத் தடுத்து நிறுத்த வல்லவை அல்ல. எனவே, சுதந்தர ஐரோப்பாவின் பெரும் பாகம் எளிதில் அடி பணிந்துவிடும். ஐரோப்பாக் கண்டம் முழுவதையும் விடுவிக்க வேண்டிய வேலை நமக்கு வந்து சேரும். முன் இரண்டாம் உலக யுத்தத்தில் செய்ததுபோலவே, நாம் நமது எதிரிகள் மீது மட்டுமின்றி நம் நண்பர்கள் மீதும் குண்டு வீசவேண்டிய சங்கடம் நேர்ந்துவிடும். படையெடுத்த வர்களை ஐரோப்பாவிலிருந்து விரட்ட வேறு வழியற்றுத் திகைப் போம். படையெடுப்பு நாள் ஒன்று குறிக்கவேண்டியவரா வோம்; முன்போல நார்மண்டிக் கடற்கரையில் இரத்த வெள் ளத்தைக் காண நேரும். வெற்றியடைய நமக்கு எவ்வளவு

நாளாகும் என்று ஒருவராலும் சொல்ல முடியாது. இறுதியில் நாமே வெல்வோம் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால் அவ்வெற்றி எளிதில் சீக்கிரமே வந்துவிடும் என்று. "தடுப்புப் போர்" வாதிகள் எதிர்பார்க்கிறார்களே, அதற்கு நேர்மாறாக கோரமான யுத்தம் நீண்ட காலம் நடந்து வெற்றி பெறுவதற்கு அரும்பாடுபட வேண்டியிருக்கும். இதுவும் எனக்கு ஐயமில்லை.

இதுதான், அவசரத்தில் குண்டை வீசிவிட்டு நாம் நமது பணத்துக்குப் பதிலாக அனுபவிக்கப் போகும் துயரம்.

மேலும், "ஆக்கிரமிப்புத் தடுப்பு யுத்தம்" வேண்டுமென்று அமெரிக்காவில் இயக்கம் நடத்துவது அயல் நாடுகளில் நமக்கு அளவிறந்த கேடு விளைவிக்கக் கூடும் என்றும் வற்புறுத்தி, வற்புறுத்திக் கூறுவேன்.

சோவியத் யூனியன் ஆக்கிரமிப்புப் போர் தொடுத்துவிடாமல் தடுப்பதற்காக, மேற்கு ஐரோப்பியர்கள் நம்முடன் கைகோத்து நிற்கிறார்கள். ஆனால் சோவியத் யூனியனுக்கு எதிராக ஓர் ஆக்கிரமிப்புப் போர்—அது எவ்வளவு நியாயமாக இருந்தாலும் கூட—தொடுக்க வேண்டும் என்று நாம் சொன்னால் அவர்கள் நம்முடன் சேர்ந்திருக்க மனம் இசைய்மாட்டார்கள். தடுப்புப் போர் என்ற பேச்சைக் கேட்டாலே ஐரோப்பியர்கள் நடுங்குகிறார்கள். போர் செய்து செய்து அவர்களுக்கு அலுத்துவிட்டது. ஒரே தலைமுறையில் தங்களுடைய சொந்த மண்ணிலே பாழ் செய்யும் இரு பெரும் போர்களைக் கண்டவர்கள் அவர்கள்; குடியானவர்கள் சொல்லுவதுபோல, பச்சைப் புல்லும் சிவந்து வளரும்படி நடந்த போர்கள் அவை. பாழடைந்த நிலைமை மாறி இப்பொழுதுதான் அவர்கள் மீண்டும் எழுந்து நம்பிக்கைக் கொள்ளத்தொடங்கியுள்ளனர். இன்னும் திரும்பவும் தங்கள் நிலம் போர்க்களமாக மாற வேண்டும் என்பது அவர்களுக்குப் பெருங்கலக்கத்தை உண்டு பண்ணும். சோவியத் யூனியன் தூண்டுதலால் ஆக்கிரமிப்பு

வராதபடித் தடுக்க சுதந்தர ஐரோப்பிய நாடுகள் இன்று துணிவுடன் ஒன்று சேர்ந்து உழைக்கின்றன. இனி, அமெரிக்காவே ஓர் எதிர் ஆக்கிரமிப்புப் போர் தொடுக்கப்போகிறது என்று அவர்கள் சந்தேகித்தாலும், அவர்களுடைய ஊக்கமெல்லாம் தளர்ந்துவிடுவது இயல்பே.

கடைசியாக இன்னொன்று : குண்டு வீசுவோம் என்று அமெரிக்காவில் பேசுவது, சோவியத் பிரசாரத்துக்கு உயிர் ஊட்டுவதாகும். யுத்தம் விரும்புவர்கள் நாமே என்று பிறருக்கு விளக்கிக் கூற இதை விடச் சிறந்த கருவி அவர்களுக்கு யார் கொடுப்பார்கள்?

உண்மையில் **நியூயார்க் டைம்ஸில்** இராணுவ விஷயங்களை அலசிப் பார்த்து விளக்கும் கட்டுறையாளர் ஹான்சன் பால்டுவின், **(Hanson Baldwin)** " தடுப்புப் போர் " கொள்கையை வர்ணித்த விதத்தை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அவர் எழுதினார் : " நமது அரசியல் ஞானம் வரண்டுபோயிற்று என்றும், நீதியை கடைப் பிடிக்கும் சக்தியை இழந்துவிட்டோம் என்றும் காட்டும் இந்த நடத்தை இராணுவ முறைப்படி பார்த்தாலும் பலனளிக்காது ; மேலும் அது, நாம் எவ்வெவற்றை மதித்துக் காப்பாற்றுவதற்காகப் போரிடுவோமோ அதே மதிப்புகளையெல்லாம் இழந்துவிடவும் வழியாகும்."

" ஸ்டாலினுடன் பேரம் பேசவும் " முடியாது ; " குண்டு வீசவும் " கூடாது. பின் என்ன செய்ய வேண்டும் ? இக் கேள்விக்கு எனது பதில் இன்னின்ன செய்யக் கூடாது என்னும் எதிர்மறை மட்டுமன்று ; ஆக்கிரமிப்பை நிறுத்திவைக்க வேண்டும் என்ற நோக்கத்தை மட்டும் கொண்டதன்று. அதற்கு மேலும் செல்வது அது ; அது, இன்னின்னவற்றைச் செய்ய வேண்டும் என்று கூறுவதாகும். சோவியத் யூனியனின் நடவடிக்கைகள் இன்னின்னபடி இருக்கும் என்று முன் கூட்டியே உணர்ந்து அவை நடைபெறுதவாறு தடுப்பது மட்டும் போதாது; அதைவிட முக்கியமான காரியம் நிறைவேற வேண்டும். அதா

வது, கம்யூனிஸம் தழைத்து வளரும் சமூக, அரசியல், பொருளாதாரச் சூழ் நிலைகளை அறவே ஒழிக்கவேண்டும். இம் முறையில், மார்ஷல் திட்டம் ஓர் ஆரம்ப முயற்சி. உறுதியான ஆக்கமான், எட்டிய பலனளிப்பதான அமெரிக்க அயல் நாட்டுக் கொள்கை முற்றிலும் சரியானதே என்பதைக் கண்டு தெளிந்து கொள்ள இந்த மார்ஷல் திட்டம் உதவியாகும். மார்க்ஸிய வாதத்துக்கு எதிராக, மார்ஷல் திட்டத்தின் நீர்வள மின்சார வேலைகளும், குடியிருப்பு வசதியளிக்கும் வேலைகளும், இயந்திரக் கலப்பைகளும், வித்தும் வந்திறங்கவே, உள்ளேயிருந்து குடையும் சோவியத் யூனியனின் தந்திரம் முதல் தடவையாகத் தோல்வியைக் கண்டது. மாஸ்கோவின் "பெருந்த பொய்" அளிக்காத உணவுப் பண்டத்துக்கு எதிராய், மார்ஷல் திட்டத்தின் உணவுப் பண்டங்கள் அடைந்த வெற்றி இது.

இன்று உலகம் இருக்கும் நிலையில், படைவலியும் இன்றியமையாதது. தற்காப்புப் படைகளை நாம் பெருக்க வேண்டும்; அவற்றின் அளவு கண்டு செஞ்சேனை மலைக்க வேண்டும்; செஞ்சேனை போரில் இறங்கி விடாமல் தடுக்க இதுவும் அவசியம். பொருளாதார முனையிலும், அரசியல் முனையிலும், மக்கள் மனநிலையென்னும் முனையிலும் நாம் தூங்காமல் முன்னேறி, சோவியத் யூனியனின் தந்திரங்களெல்லாம் திணறும்படி செய்யவேண்டும்.

இந்த எனது திட்டம், மூன்றும் உலக யுத்தம் ஒன்று மூளாமல் தடுக்கவும், மக்கள் சம்மதத்தின்மேல் ஆட்சி நடத்தும் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும், சுதந்தரத்தோடு சமாதானம் என்ற நிலைமை எற்பட அடிகோலவும் உதவும் என்பது என் நம்பிக்கை.

சுதந்தரத்தோடு சமாதானம் என்று சொல்வதில் என் கருத்து இதுவே. சண்டை இல்லாதிருந்தால் சமாதானம் இருக்கிறதென்று நான் கூறவில்லை; சண்டையற்ற நிலைமைக்கும்

அப்பால் செல்வது நான் குறிப்பிடும் சமாதானம். அதே போல், அடிமைத் தன்மை நீங்கிவிட்ட நிலைமைக்கும் அப்பால் சென்று குறிப்பிடுவது நான் கூறும் சுதந்தரம்.

அதாவது, நான் காண்பதுபோலக் கண்டால், " வாழ்க்கை, விடுதலை, இன்புற்றிருக்க நாடுதல் " என்பது எல்லா மக்களுக்கும் உயிரூட்டும் கோட்பாடாக விளங்கலாம். இதுவே நான் குறிப்பிடுவது.

# சுதந்தர உலகுக்குத் தலைமை தாங்கத் தயங்கும் அமெரிக்கா

## அத்தியாயம் 3

**உ**லகின் முன்னணியில் நின்று நடத்திச் செல்லவேண்டிய நமது கடைமையை நாம் உணர்ந்து ஏற்றுக்கொள்வோமானுல், நம்மால் 'சமாதான அறம்' புரிய முடியும், புரிந்து வெற்றியும் அடைய முடியும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. சமாதானத்துக்காகப் பாடுபடுவதற்கு வேண்டிய பொருள் வளமும், தொழிற் கலையின் தேர்ச்சியும், அனுகூலம் வாய்ந்த இடமும், பலவற்றையும் ஒன்று கூட்டி நடத்தும் திறமையும் நம்மிடமே உண்டு என்ற கொள்கையின்மேல்தான் எனது திட்டமெல்லாம் நிற்கிறது. நம்மீது சுமந்துள்ள இந்தப் பொறுப்பை ஏற்பதற்கு நாம் தயங்குகிறோம். ஆனுல் அதை ஏற்று முற்றிலும் நிறைவேற்றியே தீர வேண்டும்; இல்லையேல் எதேச்சாதிகாரத்தின் அடிமையிருளுக்கு இழுத்துச் செல்லும் குழப்ப நிலைமையே நம்மை விட்டு அகலாமல் சூழ்ந்துகொள்ளும்.

சுதந்தர உலகின் முன்னணியில் செல்லும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றுல், மற்றவர்களைக் காட்டிலும் நமக்கு ஆற்றல் அதிகம் என்பதற்காக, எல்லாப் பாரத்தையும் நாமே ஏற்க வேண்டும் என்பதில்லை. நியாயமான அளவுக்கு மேல் நாம் சிறிதும் பொறுக்கவேண்டியதில்லை.

உனக்கு எவ்வளவு எனக்கு எவ்வளவு என்று குறுகிய மனப் பான்மையில் தர்க்கம் செய்து தட்டிக் கழிக்கும் குணம் நமக் கில்லை. நமது பக்கத்திலிருக்கும் மற்ற நாடுகளின் பாதுகாப் புக்குப் பங்கம் வராமல் தடுப்பது நமக்கும் நல்லதுதானே. இது நாம் அறியாததல்ல. ஆயினும் மற்ற நாடுகளுக்குப் படையும், பொருளும், பொருளாதார உதவியும் அளித்துவிடுவ தால் மட்டும் நமது பொறுப்புத் தீர்ந்துவிடாது. எல்லா நாட் டுக்கும் பொதுவானது தற்காப்புக் கடமை ; அந்த அந்த நாட்டி னர் தத்தமக்கு எவ்வளவு நியாயமோ அவ்வளவையும் தயங் காமல் பெருமித உணர்ச்சியோடு தாமே தாங்கிக்கொள்ளும்படி செய்ய அவர்களுக்கு நாம் ஊக்கங்கொடுக்க முடியுமா ? இது தான், நாம் முன்னணியிலிருந்து நடத்துகிறோமா என்பதற்கு சரியான பதிலளிக்கக் கூடும்.

சுதந்தர உலகிலுள்ள மற்ற நாடுகளின் பாதுகாப்புத் தளர்ந்தால் அஃதுடன் நமது பாதுகாப்பும் தளர்ந்து விடும் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள எனக்கும் முதலில் சங்கட மாகத்தான் இருந்தது. பழைய சிக்காகோ டிரிபியூன் ஆபீஸிற் குச் சிறிது தூரத்திலுள்ள வீட்டில்தான் எனது தந்தை பிறந்தார். நானும் சிக்காகோப் பிரதேசத்தில்தான் பிறந்து வளர்ந்தேன். இரண்டு பெருங் கடல்களுக்கும் எனக்கும் எவ் வளவோ தூரம் ; ஐரோப்பா, ஆசியா இவற்றுக்கும் எனக்கும் அளவற்ற தூரம் ! இயல்பாகவும், பிறர் போதித்த கொள்கை மூலமாகவும், நான் அமெரிக்கா தனித்து வாழ்ந்தால்தான் என்ன என்று கருதுபவனாகவே இருந்தேன். ஆனால், நாம் எவ்வளவுதான் ஆசைப்பட்டாலும், உலகில் மற்றவர் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று கவலையற்றுத் தனித்திருக்க முடி யாது என்பதை உணர்ந்துகொள்ள எனக்கு உலக யுத்தங்கள் இரண்டு தேவையில்லை ; முதலாவது உலக யுத்தமே எனக்கு அறிவுறுத்திவிட்டது. **1920**-க்குப் பின் வியாபாரம் பணத்தை அள்ளி அள்ளித் தந்தது ; **1930**-க்குப் பின் படுமோசமாக மந்தமாயிற்று ; இதெல்லாம் உலக முழுவதற்கும் பொதுவாக

நடந்ததே தவிர தேசம் என்றும் கண்டம் என்றும் தயங்கி நிற்கவில்லை. கம்யூனிஸம், பாசிஸம், நாஸிஸம் என்ற புதிய எதேச்சாதிகார சக்திகள் இராட்சச உருவெடுப்பதையும் கண்டேன். உலகம் முழுவதையும் பாகுபாடின்றிப் பாதிக்கக்கூடிய இந்தச் சக்திகளிலிருந்து நாம் மட்டும் தனித்து விலகி வாழ்வது நடவாத காரியம் என்பதை உணர ஆரம்பித்தேன். உலகில் ஒருவர்க் கொருவர் சார்ந்தே இருக்கிறோம். இத்தகைய உலகில் அமெரிக்கா வின் நிலை என்ன என்பதை நான் தெளிவாகக் கண்டுகொள்ள உதவினார் வால்ட்டர் லிப்மன் (Walter Lippmann). 1938-ல் சிக்காகோ பல்கலைக் கழகத்தில் அவர் தொடர்ச்சியாக நிகழ்த்திய சொற்பொழிவுகள் பின் நடக்கப்போகும் செய்திகளை முன்னு லேயே உணர்ந்து சொன்னதுபோல் இருக்கின்றன.

லிப்மன் கூறினார் : "ரோமாபுரிக்கும் பிரிட்டனுக்கும் அடுத்த படியாக, சமாதானம் அளிக்கக்கூடிய சக்தி ஒன்று இப்பொழுது இருக்கிறது என்ற உண்மை நமது காலத்திலேயே புலனாகும். அந்த சக்தியின் கடமை தனது சமாதானக் குறிக்கோள் நிறை வேறும்படி நடந்துகொள்வதே என்பதும் புலனாகும். நான் குறிப்பிடுவது அமெரிக்க நாட்டைத்தான்". அன்று லிப்மன் சொன்ன அந்தப் பொறுப்பை நாம் இவ்வளவு சீக்கிரம் ஏற்றுக் கொள்ளவேண்டியவர்களாவோம் என்பதை அவர் அறிவாரோ என்னவோ ? ஆனால் அவர் சில சிறந்த புத்திமதிகளைக் கூறியது இன்னும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. "நமது பொறுப்பை உணர்ந்து ஏற்றுக்கொள்வது எப்பொழுதும் மேல் ; நடப்பது நடக்கட்டும் என்று திரிவது நல்லதன்று. அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதை அமெரிக்கர்கள் இன்று எவ்வளவுதான் வெறுத்தாலும், அதை வேண்டாம் என்று மறுக்க மட்டும் முடியாது. உலகத்து மக்களிடையே அவர்களுக்கிருக்கும் உயர் வும், நிலையும், ஆற்றலும், அந்தக் கடமையை அவர்கள் செய்தே ஆகவேண்டும் என்று வலியுறுத்தும். அதனால் வரும் பெரிய பாரத்தையும் பொறுப்புகளையும் அவர்கள் ஏற்றே தீரவேண்டும்" என்று கூறினார் லிப்மன்.

சர்வதேச விவகாரங்களில் ஒரு சிறிய அளவுக்கேனும் பொறுப்பேற்று நடக்க அமெரிக்கா அன்று 1938-ல் தயாராக வில்லை. அப்போதெல்லாம் நாம் விரும்பியதே நடக்கும் என்று கனவு கண்டுகொண்டிருந்தோம். உலக யுத்தம் வந்தால் அதிலிருந்து தப்பிக்க நாம் நமது "நடு நிலைமைச் சட்டங்களை" நம்பியிருந்தோம். இரண்டாவது உலக யுத்தம் வரவே செய்தது; 1940-ல் நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு நின்ற இருவரும் நமது வீரர்கள் வெளி நாடுகளுக்குச் செல்லமாட்டார்கள் என்று எவ்வளவோ பறையறைந்தனர்; பிற்பாடு, நான்கு ஆண்டுகளுக்கு அப்புறமே நாஜிகள், பாசிஸ்டுகள், ஜப்பானியர் ஆகியவருடன் பத்துப் பன்னிரண்டு முக்கிய போர் முனைகளிலே நமது வீரர்கள் போர் புரிந்துகொண்டிருந்தனர்.

குழப்பம், நாசம் என்ற கூக்குரல் நம்மைச் சுற்றி உலகத்திலே பல இடங்களிலும் உண்டாகும்போது, அமெரிக்காமட்டும் தனித்து நிற்கமுடியாது என்பதை அமெரிக்கர்கள் பலரும் உணர்ந்துகொள்வதற்கு, இரண்டு உலக யுத்தங்களில் அமெரிக்கா கலந்துகொள்ள நேரிட்டதும் ஒரு காரணம். ஆம், சில சமயங்களில் இம்மாதிரிக் காரணங்கள் தட்ட முடியாதவையாக இருக்கின்றன. வேலியருகே ஒருவன் நின்றுகொண்டிருக்கையில் துப்பாக்கிக் குண்டு அப்பக்கமாக இரைந்து சென்றால் ஏதும் முடிவுகட்ட முடியாதுதான். அதே வழியில் இன்னொரு குண்டும் வருமானால், ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று நினைக்க இடம் ஏற்படுகிறது. ஆனால் மூன்றாவது குண்டு ஒன்று அவன் தலைப்பாகையையே துளைத்துச் செல்லுமானால் என்னதான் முடிவு கட்டுவது?

ஆயினும் இரண்டு உலக யுத்தங்கள் வந்திருந்தாலும்கூட, மேலே சொன்ன உதாரணத்தைப்போலப் பல காரியங்கள் நடந்திருந்தாலும்கூட, இன்னும் அமெரிக்கா இப் பெரியத் தீவுக் கண்டத்திலே வழக்கம்போல வியாபாரம் செய்துகொண்டிருக்கலாம் என்று நினைப்பவர்களும் உள்ளர். ஐரோப்பாவையும் ஆசியாவையும் பற்றிக் கவலைப் படுவானேன் என்று

கேட்கிறார்கள் இவர்கள். நம்முடைய டாலர்கள் எல்லாம் நம்முடைய வீட்டிலே இருக்க வேண்டும் ; நம் நாட்டில் அரண் கள் அமைப்பதற்கே இப் பணமெல்லாம் செலவாக வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்துகிறார்கள். ஆனால் மேற்கு ஐரோப்பாவை சோவியத் யூனியன் அடிமைப்படுத்திய பின்பு, நாம் இப்படியெல்லாம் தளவாடங்களுடன் தனித்து நின்ற ஆம் நமக்குத் தக்க பாதுகாப்பு ஏற்படுமா என்று கேட்கிறேன். மற்ற உலகமெல்லாம் எப்படியும் போகட்டும் என்று விட்டுவிட்டு, கோட்டை அமெரிக்காவைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்க முயல்வது மகா அறிவீனமாக முடியும்.

அட்லாண்டிக் கடலும் பசிபிக் கடலும் நமக்குப் பாதுகாப்பாக அமைந்த அகழிகள் என்று நினைக்கிறார்களே, அவர்கள் நமக்குத் தேவையான அதி முக்கிய பொருள்களெல்லாம் வெளி நாடுகளி லிருந்தே கிடைத்து வருகின்றன என்பதை எண்ணிப் பார்த்தார் களா? எடுத்துக்காட்டவேண்டுமானால், எஃகு செய்வதற்கு இன்றியமையாத மாங்கனீயத்தில் (Manganese) நூற்றுக்குத் தொண்ணூறு வீதமும் நமக்கு இறக்குமதிதானே ; அலுமினிய உற்பத்திக்கு அவசியமான பாக்ஸைட் (bauxite) பொருளில் பெரும்பான்மையும் இறக்குமதிதானே ; நமக்கு வேண்டிய தகரமும், இயற்கை ரப்பரும் முழுவதும் வெளி நாடுகளி லிருந்துதானே வருகின்றன. தொழில் வளத்தில் வளரும் நமது சமூகத்துக்கு இன்றியமையாத இத்தகையப் பொருள் கள் இன்னும் எத்தனையோ உள ; அவை அத்தனையும் அயல் நாடுகளிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன. சரி. தனித்து நிற்கும் தளவாடக் கோட்டையைத்தான் எழுப்ப முடியும் என்று வைத்துக்கொள்வோம். இதனால் ஆகும் செல வென்ன ! இந்தத் தற்காப்பு அரணை மாதக் கணக்கிலுமல்ல, வருஷக் கணக்கிலுமல்ல, வியாழ வட்டங்கள் கணக்கில் வைத்துக் காப்பாற்றிக் கொண்டிருக்க நேரிடும். மேற்கு ஐரோப்பா நம் முடன் இருக்கும்போதே இன்றைக்கு நாம் பாதுகாப்பு இனத் துக்குச் செலவிடும் தொகை ஒரு பெரிய பாரமாகி விட்டது.

மேற்கு ஐரோப்பாவை இழந்த பின், அந்தத் தொகை இன்னும் பெரிய சுமையாக இருக்கும்.

இன்று நமக்கும் நம்முடைய நேச நாடுகளுக்குமாகச் சேர்த்து நாம் செலவு செய்வது 2,500 கோடி டாலர்; இனி நாம் மட்டும் தனித்து நின்ருல், இன்றைய டாலர் மதிப்பின்படி தற்காப்புச் செலவு 12,500 கோடி டாலராகும். இதுவும் அப்படியே நிலையாக இருக்காது; கிரெம்லினின் காலடியிலுள்ள ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் படை வலிமை பெருகப் பெருக நம்முடைய தற்காப்புச் செலவும் வளர்ந்துகொண்டே போகும். இப்படியே அளவுக்கு மீறி நாம் இராணுவத்துக்காகச் செலவு செய்து கொண்டுபோனுல், நமது வாழ்க்கைத் தரமும் மிகவும் குறைந்துவிடும். இதைவிட இன்னும் மோசமானது என்னவென்ருல், நினைத்தாலும் அஞ்சத் தக்க “ கண்ட்ரோல் ” கெடு பிடிகளாகும்; இந்தக் கட்டுப்பாட்டு முறைகளையெல்லாம் நாம் எதேச்சாதிகார ஆட்சிச் சின்னங்கள் என்றுதானே நம்பி வருகிருேம். அவையே நமது ஆட்சியிலும் அம்பலமாகி, நமது வளரும் இராணுவத்தின் பொருட்டு நீங்காமல் பற்றி நின்றுவிடும்—மாதக் கணக்கிலல்ல, வருஷக் கணக்கிலல்ல, வியாழ வட்டக் கணக்காக நீடித்துவிடும் என்று மீண்டும் கூறுகிறேன்.

நமக்கு மட்டும் போதும் என்ற நினைப்பில் நாம் கட்டுகின்ற கோட்டையெல்லாம், நம்மைப் படுகுழியில்தான் தள்ளும்; ஏனெனில், நாம் எந்தச் சுதந்தரங்களைக் காத்துக் கொள்ள இம்மாதிரி கோட்டைக் கட்டுகிருேமோ, அதே சுதந்தரங்களை அழிக்கவே இந்தக் கோட்டை உறுவாகிவிடும். பொருளாதாரச் சுதந்தரம் நாம் விரும்புவதொன்று. சிறிது காலத்துக்கு அவசர அடியை முன்னிட்டு அத்தகைய சுதந்தரத்தை அனுபவியாமல் விட்டுவிடுவது தவறன்று: ஆனுல் அவ்வாறே நீண்டதொரு காலத்துக்கு அச் சுதந்தரத்தை இழந்துவிட்டு வாழ்வது முடியுமா? நீண்ட காலமாக இப்படியே நம்முடைய சொந்த வாழ்க்கையையும் வியாபார முறைகளையும் கட்டுப்படுத்திப் பழக்கப்பட்டுப்போன அதிகார வர்க்கம், கஷ்ட காலம் நீங்கிய பின்

பும் அந்தப் பழக்கத்தை எளிதில் கைவிட்டுவிடும் என்று யார் நம்புவார்கள் ? எல்லாம் நன்மைக்கே என்று நம்புகிறவன் தான் நானும்; இவ்வாறு என்னைவிட அதிக நம்பிக்கை உள்ளவர்களும்கூட, அதிகார வர்க்கத்தைப் பற்றி இவ்வித நம்பிக்கை கொள்ளமுடியாதே. மேலும், இந்த அதிகார வர்க்கம் மக்களுடைய வாக்கைப் பெருவதற்கும் வசதி உடையதாகையால் அதை ஆட்சியினின்று கிளப்புவதும் ஆகாத காரியமாகிவிடும்.

"தளவாடந் தரித்து தனித்து நிற்க வேண்டும்" என்ற கொள்கை ஆபத்து நிறைந்தது என்று **ஹார்ட் போர்டு குராண்ட் 1950,** டிசம்பர் **21**-ம் தேதி எழுதிய தலையங்கத்தைக் கேளுங்கள்:

இந்தக் கொள்கையைக் கடைப் பிடிக்கும் முன்பு அதனால் என்னென்னவெல்லாம் விளையக்கூடும் என்பதைத் துருவி ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். இது நாட்டின் கடமை. இவ்வாறு ஆராய்ந்தால், அமெரிக்கா பயந்து நடுநடுங்கி ஓர் இராணுவ முகாமாகத் தளவாடந் தரித்து நிற்கிறது என்ற நிலைமைக்குத் தான் அக்கொள்கை நம்மை இழுத்துச் செல்லும் என்பது விளங்கும். இப்பொழுது 100,000,000,000 டாலர் வரவு செலவு கணக்குகள் அரசாங்கத்தில் வரப்போகின்றனவே ; இவையெல்லாம், நாம் தனித்து நிற்கும்போது வரப்போகும் வரவு செலவுத் திட்டங்களுக்கு எம்மாத்திரம் ! இன்று வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி இனிமேல் சர்வ சாதாரணமாகிவிடும். இன்று சிறிது காலத்துக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் இருக்கின்றனவே ; இனி இவை நிரந்தரமாகிவிடும். நமக்குத் துணையாக ஒருவரும் இருக்கமாட்டார்கள். அணுக்குண்டை நம் தலைமீது பொழிய முதலில் தருணம் பார்த்திருக்கும், கவலையற்ற கம்யூனிஸ்டுகளின் தயவு பார்த்துத்தான் நாம் வாழவேண்டியிருக்கும்.

உலகில் அமெரிக்கா முன்னணியில் நிற்கிறது என்னவோ உண்மைதான் என்று நம்மில் அநேகமாக எல்லோருமே தயக்கத்தோடு ஒப்புக் கொள்ளுகிறோம். எனினும் அமெரிக்கா தனது தேசிய நோக்கமும் எண்ணமும் துலங்கும் விதத்தில்

கருத்தாலும் செயலாலும் எவ்விதம் தன்னுடைய புதிய நிலைமையின் பொறுப்புகளைச் சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டும் என்று நாம் அறிந்துகொண்டதாகக் கூற முடியாது. நாம் தலைமை தாங்கி நடத்துவதில் பலன் ஏற்படவேண்டுமானுல் என்ன செய்ய வேண்டும்? சுதந்தர உலகிலுள்ள மற்ற எல்லோரும் நம்முடைய பங்காளிகள் என்பதையும் அவர்கள் நம்முடன் ஒன்றுபட்டிருப்பவர்கள் என்பதையும் மனத்தில் கொண்டு அதே அடிப்படையில் அவர்களுடன் சேர்ந்து உழைக்க வேண்டும்; நம்முடைய கருத்துக்களுக்கு வேறுபட்ட கருத்துக்களையும் மதிக்க வேண்டும்; பிறர் நலனையும் மதித்து நடக்க வேண்டும். இதுதான் வெற்றிக்கு அடிப்படை. பொது மக்களுக்கும் பொது மக்களை ஆளும் நாட்டின் தலைவர்களுக்கும் இது வெற்றிக்கு அவசியமான நடைமுறைக் கொள்கையாகும். மற்றச் சுதந்தர நாடுகளின் போக்கை நிர்ணயிப்பவர்கள் ஒருவர் விடாமல் அனைவருமே நம்முடன் சேர்ந்து உழைக்க ஆவலோடு இருக்கிருர்கள்; அவர்களுக்கு நாம் எதேச்சாதிகார முறையில் கட்டளைகள் பிறப்பித்தால் அதையும் அவர்களில் அநேகமாக ஒவ்வொருவருமே எதிர்ப்பார்கள். இவ்வுண்மையை நான் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தில் நிர்வாகியாக இருந்தபோது நன்கு கற்றுக்கொண்டேன்.

இவ் வேலையிலிருந்து நான் விலகியதும், பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் சார்பில் **1950** அக்டோபர் மாதம், ஐரோப்பாவின் நிலைமை எவ்வளவு திருந்தியிருக்கிறது என்பதைக் கவனித்து வருவதற்காகச் சுற்றுப் பிரயாணம் செய்தேன். சிறந்த பலன் எங்கு ஏற்பட்டிருக்கிறது தெரியுமா? பிற நாட்டினரையும் நம்முடன் ஒன்ருகப் பாவித்து எங்கு பிரச்சினைகளை ஆராய்ந்திருக்கிருேமோ, அங்கேதான் சிறந்த பலன் கிடைத்திருக்கிறது. இதற்குத் துருக்கி ஒரு சிறந்த உதாரணம்.

முதலாவது உலக யுத்தம் நடந்தபோது துருக்கி நமக்கு எதிரி. இரண்டாவது உலக யுத்தத்தில் நடு நிலைமை வகித்த நாடு, இன்று நாம் மிகவும் நம்பத்தக்க பங்காளியாக இருக்

கிறது. துருக்கிக்கும் அமெரிக்காவுக்குமிடையே நட்புறவு வளர் வதற்கு அடிப்படை, இருவருக்கும் இவ்வுறவால் நன்மை விளை கிறது என்பதுதான். ஆயினும், ஒருவரையொருவர் மதித்து நடந்து கொண்டதால் இந்த நட்பு மிகவும் ஓங்கி வளர்ந்திருக் கிறது என்பது உண்மை. துருக்கியின் தலை நகரில் துருக்கி ஜனாதி பதி செலால் பாயருடன் (Celal Bayar) பேசியது என் நினைவுக்கு வருகிறது. அச்சமயம் இனிய மதுவும் காப்பியும் அருந்தியபடியே நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். சுதந்தர உலகின் பாதுகாப்பை வளர்ப்பதில் துருக்கி எவ்வளவு ஆவலுடன் தனது பங்கைச் செய்யக் காத்திருக்கிறது என்று அவர் என்னிடம் சொன்னார். அது முற்றிலும் உண்மை. துருக்கியின் ஜனத்தொகை 2 கோடிதான்; ஆயினும் அதனிடம் நன்றாகப் பயிற்சி பெற்ற ராணுவ டிவிஷன்கள் 22 முதல் 25 வரை இருக்கின்றன. அது தவிற, மக்கள் அனைவருக்கும் ராணுவப் பயிற்சி அளிக்கப் படுகிறது. யுத்த தந்திரம் வாய்ந்த நிலைமையிலுள்ள டார்டனெல்ஸில் (Dardanelles) ஆதிக்கம் பெற விரும்பும் ரஷ்யாவின் எல்லையில் இருக்கும் துருக்கி, ரஷ்யாவின் மிரட்டல்களுக்குப் பணிய மறுத்து வருகிறது. ஆயினும், (ட்ரைவருக்குப் பின்னால் இருந்து கொண்டு கார் ஓட்ட நினைப்பவர்களைப் போல) நான் போய், அறிவும் பெருமிதமும் நிறைந்த இந்த துருக்கியர் தலைவரிடம் அவர் இராணுவத் துறையில் இன்னின்னவாறு செய்தால் தான் அமெரிக்கா மார்ஷல் திட்ட உதவி அளிக்கும் என்று சொன்னேனானால், அவர் என்ன செய்திருப்பார் என்று நினைக்க வும் அஞ்சுகிறேன். உறுதியாக இருக்க வேண்டுமானால், ஏன் கடுமையாக இருக்க வேண்டுமானாலும் கூட, எதேச்சாதிகாரக் கட்டளைகள் பிறப்பிக்க வேண்டும் என்பதில்லையே. உண்மை யான தலைவர்களுக்கு இருக்க வேண்டிய பண்பு என்ன தெரி யுமா? பிறரோடு தமது ஆற்றலைப் பங்கிட்டுக்கொள்வதே தவிர, பிறர் மீது தமது ஆற்றலைக் காட்டுவது அன்றே.

சுதந்தர உலகத்துக்குத் தலைமை தாங்கி நடத்துவதுபற்றி எர்னஸ்ட் பெவினோடு பேசினேன். ஆறாம் நூற்றாண்டின்

இறுதியில் ஸ்பானிஷ் ஆர்மடாவைத் தோற்கடித்த பிரிட்டன் முதலாவது உலக யுத்தம் நடந்தது வரைக்கும் உலகில் முதன் மையான வல்லரசாக விளங்கியது. பெவின் சோஷியலிஸப் பற்று உடையவர்; இருந்தாலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் செய்துள்ளவற்றையெல்லாம் மிகப் பெருமையாக எடுத்துரைப் பவர். பெவின், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இத்தனை காலமாக நீடித்திருந்ததற்கு என்ன காரணம் என்பதை அலசிப் பார்த் துப் பேசினுர். "எங்களுடைய ஆற்றலுக்கு அடிப்படை எங்கள் கடற்படைத் தளபதிகள், வீரர்கள் ஆகியவர்களின் துணிவே என்று சிலர் பேசுகிருர்கள். ஆனல் எங்கள் ஏகாதிபத்தியத் தின் சக்தியெல்லாம், பிரிட்டனின் நேர்மை, பிரிட்டனின் பண் பாடு, ஊழலுக்கு இடங்கொடாத எங்கள் நீதி மன்றங்கள், எங்கள் நீதி ஆகிய இவற்றுக்கு உலகம் வைத்திருந்த மதிப்பே தான்" என்று கூறினுர் பெவின்.

பிரிட்டன் உலக முன்னணியில் உயர்ந்து விளங்கியது; அதன் உயர்வுக்கு அதன் உழைப்பே காரணம். தலைமை தாங்கி நடத்துவதற்கு ஒரு சிறந்த முறையையும் வகுத்து வைத்தது பிரிட்டன். முதலில் ஏகாதிபத்தியம் என்றும் பின்பு காமன்வெல்த் என்றும் அழைக்கப்படும் மக்கள் சங் கத்தை பிரிட்டன் உண்டு பண்ணியிருக்கிறது. ஏகாதிபத்தியம் அமெரிக்கர்களுக்கு அருவருப்பான வார்த்தையே. ஆயினும், தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளவும், பொது நலனுக்காக உழைக்கவும் மக்கள் கூடி வாழும் முறைதான் இனி வருங் காலத்துக்குத் தகுந்த முறையாகும் என்று நம்ப இடமிருக் கிறது. காமன்வெல்த்திலிருக்கும் நாடுகளில் ஒன்றுக் கொன்று உயர்வு தாழ்வில்லை; ஆயினும் அவற்றுள் பிரிட்டன் முதலாவதாகும். அதேபோல் இன்றையச் சுதந்தர உலகில் சம்மான நாடுகளுக்குள்ளே முதலாவதாக நிற்க அமெரிக்கா வுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, சுதந்தர உலகின் ஆற்றல் குறையாதபடி காத்து நிற்கும் சர்வதேச ஸ்தாபனங்களெல்லாம் முனைந்து வேலை

செய்யும்படி நாம் ஊக்கங்கொடுத்து உழைக்க வேண்டும். மற்ற நாட்டு மக்களுடன் ஒற்றுமையை வளர்ப்பதற்கு முக்கிய சாதனம் ஐக்கிய நாடுகளே. ஆகவே ஐக்கிய நாடுகளை நாம் தளராமல் ஆதரிக்க வேண்டும். அஃதோடு, (ஐரோப்பியப் பார்லிமெண்டுக்கு விதை ஊன்றுவதாக இருக்கும்) ஐரோப்பாக் கௌன்சிலையும், (ஐரோப்பாவின் பொருளாதாரத்தை ஒன்று படுத்த நமது பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்துடன் ஒத்துழைத்து) ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுறவுக்கான ஸ்தாபனத்தையும், (வட அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே இராணுவ இணைப்புக்கான) வட அட்லாண்டிக் உடன்படிக்கை ஸ்தாபனத்தையும், அகில அமெரிக்க யூனியனையும் நாம் முன் போல் இனியும் ஆதரிக்கவேண்டும். (எல்லா நாடுகளிடையும் வியாபார வசதிகளைச் சீர்ப்படுத்தும் சாதனமாகிய) சர்வதேசத் தொழில் ஸ்தாபனத்தில் சேர இன்னும் அமெரிக்கச் சட்டசபை அங்கீகாரம் அளிக்கவில்லை ; ஆயினும் எல்லாவற்றையும் கவனித்தால், அந்த ஸ்தாபனத்திலும் நாம் சேரவேண்டும் என்பதே என் துணிவு. இந்த ஸ்தாபனம், இன்று இருப்பது இருக்கட்டும் என்ற முறையில் பல விதிகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளது எனக்குப் பிடித்தமில்லைதான் ; ஆயினும் ஒன்றுமே இல்லாமல் இருப்பதைவிடச் சில குறைபாடுகளுடைய ஒரு சர்வதேசத் தொழில் ஸ்தாபனம் மேல் என்பது என் எண்ணம். நாம் அதில் சேர்ந்து உழைத்தால் நமது கருத்துக்களை அது ஏற்றுக்கொள்ளும்படி வலியுறுத்தவும் இடங் கிடைக்கும்.

ஆனால் சுதந்தர உலக மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கும் பொறுப்பு அரசாங்கங்களை மட்டும் சார்ந்ததல்ல. பொய்யை எதிர்க்கும் இந்தப் போரில் ஒவ்வொருவனும் சொந்த முயற்சி கொண்டு ஈடுபட முடியும், ஈடுபடவும் வேண்டும். சுதந்தர உலக மக்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் கேட்கும் கதைகளில் மோசமானதை விட்டுவிட்டு நல்லதையே நம்பும் நிலைமை ஏற்படவேண்டும் ; இல்லையானால், இவர்கள் பங்காளிகளாகச் சேர்ந்து பாடுபடுவது எப்படி ?

மற்றச் சுதந்தர நாடுகளைத் தூற்றிப் பேசலாமா? அவற்றுக்கு எதிரான பிரசாரத்தைப் பரப்பலாமா? ஆயினும் நம்மை அறியாமலே நாம் இவ்வாறு எவ்வளவோ செய்து வருகிறோம். இவ்வாறு செய்யும்போது, நமக்குள் பிளவு ஏற்பட விரும்பும் சோவியத் ஆட்சிக்கே நாம் உதவி புரிகிறோம். சுதந்தர நாடுகளிடையே தீப்போர் பற்றி வளர்வதற்கென்றே கம்யூனிஸ்டுப் பிரசாரம் சில வதந்திகளைத் தினமும் தெறித்து விட்டுப் போகிறது. உதாரணமாக, அண்மையில் ஒரு மாதத்தில் நடந்த கதையைக் கேளுங்கள்: ரஷ்யாவுக்காகப் பிரிட்டன் ஜெட் விமானங்கள் செய்து அனுப்புவதற்குத் தனது விமான உற்பத்திச் சாலைகளில் பெரும்பாலானவற்றை உபயோகிக்கிறது என்ற வதந்தி அமெரிக்காவில் அவிழ்த்துவிடப்பட்டது. லட்சக் கணக்கான ஜெர்மனியரை இரகசியமாக அமெரிக்கா ஆயுதபாணிகளாக்குகிறது என்ற வதந்தி பிரான்சில் கிளம்பியது. ஜெர்மனியின் பொருளாதாரம் படுகுழியில் இறங்கும் அளவுக்கு ரூர் முதலிய தொழிற் பிரதேசங்களிலுள்ள தொழிற்சாலைகளை முடக்க வேண்டும் என்று பிரான்சு வற்புறுத்தும் என்ற வதந்தி ஜெர்மனி நெடுகப் பரவியது.

பெஞ்சமின் ப்ராங்ளின் (Benjamin Franklin) அன்றைக்குச் சொன்னது இன்றைக்கும் அப்படியே உண்மையாக இருக்கிறது. "நாம் எல்லோரும் ஒன்றாகத் தொங்க வேண்டும்; இல்லையானால், நிச்சயமாக நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தொங்குவோம்."

# தலைமை தாங்குவதற்குத் தண்டனை

## அத்தியாயம் 4

"தலைமை தாங்குவதற்குத் தண்டனை" என்ற தலைப்பின் கீழ் 1915-ல் கேடிலாக் (Cadillac) மோட்டார் கம்பெனியார் ஒரு விளம்பரத்தை வெளியிட்டார்கள். அமெரிக்காவில் விளம்பரம் செய்பவர்கள் இன்னும் இதை நினைவில் வைத்திருக்கிறார்கள். தலைமை தாங்குவதால் வெகுமதியும் உண்டு, தண்டனையும் உண்டு என்பதுதான் அந்த விளம்பரம் எடுத்து கூறியது. தலைமை தாங்குவதால் பெரும் பாரத்தைத் தாங்க வேண்டியிருக்கும் என்பதை அறியாதவர் யார்? ஒரு கம்பெனியும் அது விற்பனை செய்யும் பண்டமும் மற்றவைகளைவிட முதன்மையானவையாய் விட்டால், பண்டத்தின் தரம் குறையாமலும் உயர்ந்த நீதி முறைப்படியும் வியாபாரம் செய்யவேண்டிய கட்டுப்பாடு சூழ்ந்துவிடுவது ஒவ்வொரு வர்த்தகரும் அறிந்ததே. வியாபாரத் துறையிலேயே இப்படியென்றால், சுதந்தர உலகுக்கே தலைமை தாங்க வேண்டிய ஒரு நாட்டுக்கு இன்னும் எவ்வளவோ பெரிய பெரிய பொறுப்புகள் எல்லா வழியாலும் ஏற்பட்டிருக்குமல்லவா?

இந்த நாட்டின் முதல் கடமை தன்னைத் தானே பலங்குன்றாதபடி பார்த்துக் கொள்ளல். இந்த அடிப்படையின் மேல்தான் நம்முடைய மற்றப் பொறுப்புகளையெல்லாம் நிறைவேற்ற முடியும். எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நிற்கும் சுதந்தரத்துக்கு வேண்டிய சக்தியை உண்டுபண்ணும்

" டைனமோ " அமெரிக்காவே. " டைனமோ " நின்று போனால், அல்லது தளர்ந்தாலும் கூட, உலகம் முழுவதும் விளக்குகள் அவிந்துபோம். " டைனமோ "-வின் சக்திக்கு மீறி அதன்மீது வேலைகளைச் சுமத்தவும் செய்யலாம் ; அப்படிச் சுமத்தினால், " டைனமோ "வே கெட்டுப்போம். அதனால்தான் நம்மால் கொண்டு செலுத்த முடியாத பொறுப்புகளை நாம் ஏற்கக் கூடாது என்பது. மின்சாரக் கம்பிகள் ஒன்றோடொன்று உராய்ந்து கொள்வதுபோல, நமக்குள்ளேயே பிணங்கிக்கொண்டாலும், " டைனமோ "-வின் வேலை பழுதாகிவிடும்.

இது ஒரு நெருக்கடியான காலம் ; இக்காலத்தில் நமது ஒற்றுமை குலையக் கூடாது. இன்று நமக்கு வந்திருக்கும் துன்பங்களுக்கு ஒரு கட்சியையோ ஒரு வகுப்பினரையோ குறை கூறும் வழக்கத்தை விட்டொழித்து விடவேண்டும். இது, யார் மேல் பழியைப் போடலாம் என்று மனம் திரியாத வண்ணம் நாம் சுறுசுறுப்பாக இருக்க வேண்டிய காலம். இவ்வாறு மனந் திரிந்தால், கடந்த காலக் கதையை நினைத்துக்கொண்டு எதிர்கால வாழ்வை இழந்துவிடுவோம். நாம் எல்லோருமே பொதுவாகத் தவறு செய்துவிட்டோம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும் ; யுத்தத்துக்குப் பின்பு ரஷ்யாவின் நிலைமையை நாம் சரிவர உணர்ந்துகொள்ளாததால்தான் நாம் இன்று பலங்குன்றியிருக்கிறோம் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இரண்டாவது உலக யுத்தம் முடிந்ததும், ரஷ்யாவும் நம்மோடு சேர்ந்து சமாதானத்தை நாடும் என்று நம்மில் பெரும்பாலோர் எண்ணினர். நானும் அப்படித்தான் எண்ணினேன். ஜப்பானைத் தோற்கடித்த பின்பு அவசர அவசரமாக நமது படையைக் கலைத்தோம் ; படைகளிலெல்லாம் மிக அருமையாகச் சேர்த்த படையை இவ்வாறு கலைத்தது நாம் செய்த ஒரு பெரிய தப்பிதம். இதைச் செய்தது காங்கிரஸ் (சட்ட சபை)தானே என்று நாம் பழியைக் காங்கிரஸின்மீது போட எண்ணுகிறோம். என்றால் அப்படிக் காங்கிரஸைத் தூற்றமுடியாது ; தூற்றினால் அது என் மனச் சாட்சிக்கு மாறாகும்.



5759

எங்கள் மக்கள் ஐவரும் இராணுவத்தில் இருந்தனர் ; ஜப்பான் போர் முடிந்தவுடன், எங்கள் பிள்ளைகள் தாமதமின்றி உடனே வீடு வந்து சேர வேண்டுமென்று என் மனைவியும் நானும் விடாமல் வற்புறுத்தினோம் என்பதை நான் ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். எங்களைப்போல் எத்தனை தாய் தந்தையர் ! மற்றவர்களைக் குறை கூறமுடியாதபடி நமக்கு எல்லோருக்குமே குறைகள் உண்டு என்று கூறி விடலாம்.

நம்முடைய அயல் நாட்டுக் கொள்கை நமது இரு முக்கிய கட்சிகளின் சம்மதம் பெற்றதாக இருந்தாலொழிய, உலக விவகாரங்களில் நமது கடமைகளைச் செய்ய எள்ளளவும் இயலாது. பெயரளவில் இரு கட்சி சம்மதம் என்று சொல்லிக்கொண்டால் போதாது. ஒரே நோக்கத்துக்கு உழைக்க வேண்டுமென்ற உண்மையான ஒற்றுமை உணர்ச்சியுடன் குடியரசுக் கட்சியும் ஜன நாயகக் கட்சியும் ஒத்துழைக்காவிட்டால், நமது வெளி நாட்டுக் கொள்கையால் பயன் உண்டாகாது. நாம் உலகத்தோடு பேசும் போது, ஒருதேசம் என்ற முறையில் பேச வேண்டுமேயொழிய, ஒரு தனிக் கட்சி என்ற முறையில் பேசலாகாது. அதற்காக, நம் வெளி நாட்டுக் கொள்கையைப் பற்றி நம்மிடையே விவாதமும் பேச்சும் இருக்கவேண்டியதில்லை என்பதன்று. ஆனால் ஒவ்வொரு செனட்டரும் பிரதிநிதியும் தாம் ஓர் அமெரிக்கர் என்ற முறை யில் தம்முடைய சொந்த மனத்து முடிவுக்கு ஒப்பத் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டுமே தவிர, தாம் ஒரு குடியரசுக் கட்சியினர் அல்லது ஜனநாயகக் கட்சியினர் என்ப தற்காக வாக்களிக்கக் கூடாது. இதுதான் நான் வேண்டுவது. குடியரசுக் கட்சியின் வெளி நாட்டுக் கொள்கை, ஜனநாயகக் கட்சியின் வெளி நாட்டுக் கொள்கை என்பதாக இன்று எக் காரியமும் நடக்க முடியாது. அமெரிக்காவின் அயல் நாட்டுக் கொள்கை என்னும் ஒரே கொள்கைக்குத்தான் இன்று இட முண்டு. இதுதான் நமது முதல் கடமை.

கட்சி அரசியல் ஒரு நிலையானதன்று. ஆட்சி புரியும் கட்சி நிர்வாகத்தையும் சட்ட சபைகளையும் ஆட்டிவைக்கக்கூடிய சம

யத்தில் கட்சி அரசியலுக்குக் கண் மூக்கு கிடையாது என்பது நன்ருக விளங்கும். நமது அயல் நாட்டுக் கொள்கையை நாம் அனைவரும் ஒரு முகமாய் ஆதரிப்பதற்குக் கட்சியரசியலின் நிலையற்ற தன்மை இடைஞ்சலாக இருக்கிறது. நிர்வாகத்தில் ஜனுதிபதியும் காங்கிரஸில் ஒரு கட்சியுமாகச் செல்வாக்குப் பெற்றிருக்கும்போது கூட நான் குறிப்பிட்ட இடைஞ்சல் இருக்கவே இருக்கிறது. முதலாவது உலக யுத்தம் முடிந்தவுடன் சர்வதேசச் சங்கம் சக்தி இழந்துபோனது எவ்விதம் என்பது நம்மில் பலருக்கு இன்னும் நினைவிருக்கும். அன்று ஜனுதிபதி வில்சனின் அயல் நாட்டுக் கொள்கைக்கு செனட்டர் ஹென்ரி காபட் லாட்ஜ் (Henry Cabot Lodge) தலைமையில் கட்சி எதிர்ப்பு உருவாயிற்று. அதனுல் சர்வ தேசச் சங்கத்தில் அமெரிக்கா சேர முடியாமல் போயிற்று; சர்வதேசச் சங்கமும் வளர்ந்து நடைபெறுவதற்கு முன்பே அழிந்தொழிந்தது. ஆனுல், இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு, நமது அயல்நாட்டுக் கொள்கைக்குக் கட்சி ஆதரவு ஏராளமாக இருப்பதால் நமது அரசாங்கத்தின் ஆற்றலும் மதிப்பும் உலகத்தில் ஓங்கி வளர்ந்திருக்கின்றன என்பதைக் காணும்போது எனக்குப் பெருமிதமே. குடியரசுக் கட்சியின் 80-வது காங்கிரஸ் இரு கட்சிகளின் பெருவாரியான ஆதரவைப் பெற்றுப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தை உருவாக்கியது. இந்த இடத்தில், இன்று மாசச்சூசெட்ஸ் (Massachusetts) ராஜ்ஜியத்திற்கு செனட்டராக இருக்கும் ஹென்ரி காபட் லாட்ஜ் என்பவரைப் புகழாமல் விடுக்க முடியாது. கடந்த சில ஆண்டுகளாக இவர், ஒன்றுபட்ட அயல் நாட்டுக் கொள்கைக்காகப் பாடுபட்டு வருகிருர். தமது பாட்டனுர் அன்று எவ்வளவு கடுமையாக ஒன்றுபட்ட அயல் நாட்டுக் கொள்கைக்கு மாருக உழைத்தாரோ அவ்வளவு கடுமையாக இவர் இன்று அதற்கு ஆதரவாக உழைத்து வருகிருர். செனட்டர் டாம் கானல்லியும் (Tom Connally) மிகவும் பாராட்டுதற்குரியவர்; 80-வது காங்கிரஸின் வெளி உறவுக் கமிட்டியில் சிறுபான்மைக் கட்சியின் தலைவர் என்ற முறையிலும் 79-வது, 81-வது காங்கிரஸ்களில் அக்கமிட்டியின் தலைவர் என்ற முறையிலும், டாம் கானல்லி

இரு கட்சி சம்மதம் பெற்ற அயல் நாட்டுக் கொள்கைக்காகப் பாடுபட்டவர். இவரைப்போலவே, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த சார்ல்ஸ் ஈட்டன் என்பவரும், பிரதிநிதி சபையின் வெளி விவகாரக் கமிட்டியிலுள்ளவரும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவருமான கீ (Kee) என்பவரும் ஒருமுகமான அயல் நாட்டுக் கொள்கையை ஆதரித்த புகழுக் குரியவர்கள்.

இத்துறையில் இவர்கள் யாவரையும் விடச் சிறந்து விளங்குபவர் செனட்டர் ஆர்தர் ஹெச். வாண்டன்பர்க். இருகட்சி சம்மதம் பெற்ற அயல்நாட்டுக் கொள்கை என்பதைவிடக், கட்சிச் சார்பற்ற அயல் நாட்டுக் கொள்கை என்று கூறுவதே இவருக்கு விருப்பம். இவர் செனட் அயல்நாட்டு உறவுக் கமிட்டியில் தலைவராக இருந்த காலத்தில் அயல் நாட்டுக் கொள்கை பற்றிய ஒவ்வொரு பெரிய விவாதத்திலும், முடிவு ஒருமனமாகவே இருக்கும். ஒட்டி 13 பேர் வாக்களிப்பார்கள் ; வெட்டி ஒருவர்கூட வாக்களிப்பதில்லை.

1950-ல் மார்ச்சு மாதத்தில் செனட்டர் வாண்டன்பர்க் (Vandenberg) செய்த சேவையை மறக்க முடியாது. அப்போது நமது அயல்நாட்டுக் கொள்கைக்குப் பேராபத்து சூழ்ந்திருந்தது. 1948-ம் ஆண்டுத் தேர்தலிலிருந்தே இருகட்சி ஒற்றுமை வரவரக் குறைந்துவிட்டது. இதற்கு ஒரு காரணம், ஆட்சி புரிந்த ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் செனட் சபையிலும் பிரதிநிதி சபையிலிருந்த குடியரசுக் கட்சித் தலைவர்களைக் கலந்து கொள்ளாத குறையாகும். இன்னொரு காரணம் இரண்டு கட்சிகளிலும் உள்ள சிலர் அமெரிக்கா உலக விவகாரங்களில் தலையிடாமல் தனித்திருக்க வேண்டும் என்று நமது அயல் நாட்டுக் கொள்கையைத் தாக்கியதாகும். இந்த நிலையைக் கண்டு நான் கவலைப் பட்டேன். அவ்வாண்டு பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்துக்குப் பணம் பெரிதும் தேவையாயிருந்தது. இரண்டு கட்சிகளும் ஆதரித்தாலொழிய அந் நிர்வாகத்துக்குப் போதுமான நிதி கிடைப்பது அரிது என்று தோன்றிற்று. இரு கட்சிகளிடையும் ஒற்றுமையை

வளர்க்க மிகுந்த செல்வாக்குடைய செனட்டர் வாண்டன்பர்க்கை அணுகினேன். அவர் அடுத்த நாள், உடல் நலக் குறைவால் தாம் படுத்த படுக்கையிலிருந்த வண்ணம் எனக்கு எழுதிய கடிதத்திலிருந்து எடுத்து எழுதுகிறேன், கேளுங்கள் :

பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் கட்சிச் சார்பற்ற முறையில் உருவானது—ஜனநாயகக் கட்சியாட்சியாளர்கள் தம் முழு ஆதரவை அளிக்க, குடியரசுக் காங்கிரஸ் அந்நிர் வாகத்தை நிறுவியது. இவ்வாறு உதவிய ஒற்றுமையே நமது சிறந்த பண்புகளை எடுத்துக் காட்டியது ; கட்சியென்று கருதாமல் அமெரிக்கர் அனைவருக்கும் வெளி நாடுகளிலிருந்து வரக்கூடிய ஆபத்தைத் தடுப்பதற்குச் சிறந்த பாதுகாப்பும் அந்த ஒற்றுமையே. பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தை நடத்தும் தாங்களும், இவ்விதமான கட்சிச் சார்பற்ற கருத்தை விடாமல் பாதுகாத்து வந்திருக்கிறீர்கள். அதற்கு எனது மன மார்ந்த நன்றி. ஒன்றுபட்டால், வாழ்வோம், பிளவு பட்டால் வீழ்வோம். அமெரிக்கா விழாமல் நிற்க வேண்டுமென்பதே எனது அவா.

வாண்டன்பர்க்கினுடைய வார்த்தைகள் வாஷிங்டனிலிருந்த ஒவ்வொருவரையும் சிந்தனையில் ஆழ்த்தின. பத்திரிகையாளர் கள் அவற்றைப் பல இடங்களிலும் எடுத்தாண்டனர். ஜனாதிபதி ட்ரூமன் மீண்டும் குடியரசுத் தலைவர்களோடு பொதுவாகக் கலந் தாலோசிக்கலானார். வெளிநாட்டு மந்திரி அச்சீஸனும், தலைமை யான ஆலோசகர்களாக, முன்னாள் நியூயார்க் ராஜ்யத்துக்கு குடி யரசுக் கட்சி செனட்டரும் குடியரசுக் கொள்கை வகுப்பவர்களில் சிறந்தவருமான ஜான் பாஸ்ற்றர் டல்லெஸ் (John Foster Dulles) என்பவரையும் முன்னாள் கெண்டக்கி (Kentucky) ராஜ்யத்துக்குக் குடியரசுக் கட்சி செனட்டரான ஜான் ஷெர்மான் கூப்பர் என்பவரை யும் நியமித்தார். இரண்டு கட்சிகளையும் சேர்ந்த செனட்டர் களையும் பிரதிநிதிகளையும் சேர்த்துத் தொடர்ந்தாற்போலப் பல மகாநாடுகளையும் கூட்டுவித்தார் வெளிநாட்டு மந்திரி அச்சீஸன். செனட்டர் வாண்டன்பர்க்கின் கடிதம் எல்லோரையும் தட்டி

யெழுப்பியது; அதனால், வெளி நாட்டுக் கொள்கை சம்பந்தமான பொருளாதார கூட்டுறவு நிர்வாகம் முதலிய முயற்சிகளுக் கெல்லாம் இரு கட்சி ஆதரவு முற்றிலும் கிடைத்தது.

இரு கட்சி சம்மதம் பெற்ற ஆக்கமான வெளிநாட்டுக் கொள்கை மட்டும் போதாது. இங்கே உள்நாட்டில் விலைவாசி இன்னும் அதிகமாக ஏறிக்கொண்டே போகாமல் தடுக்கவும் வேண்டும். இது நமக்கும் நல்லது; பிறருக்கும் நல்லது. இது நமது இரண்டாவது கடமை.

அமெரிக்காவில் விலைவாசி அதிகமாக உயர்ந்தால், அதன் விளைவு உலகம் முழுவதுமே பரவி விடும். ஐரோப்பாவில் பண வீக்கத்தைத் தவிர்க்க வேண்டும் என்பது பொருளா தாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் ஒரு பெரு நோக்கமும் ஆக்கமு மாகும்; இந்த வெற்றியின் பயனை ஒன்றுமில்லாமல் செய்து விடும் அமெரிக்காவின் அதிக விலைவாசி உயர்வு. **1948**-ல் ஐரோப்பாவில் அநேக நாடுகளில் பண விஷயத்தில் ஒரே குழப் படிதான் நிலவியிருந்தது. இன்று அந்நாடுகளில் நிதி நிலைமை சீராக இருக்கிறது. இச் சமயம் அமெரிக்காவில் விலைவாசிகள் உயர்ந்து ஐரோப்பாவின் நிலைமை திருந்தியதன் பயனையும் கெடுத்து, படை வலிமை பெருக்கும் அதன் திட்டங் களையும் கவிழ்த்து விடுமானால், இன்று சீராக இருக்கும் ஐரோப் பிய நிதிநிலைமை பாழாகிவிடும். ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள், 'பென்ஷன்' வாங்குபவர்கள், வருஷந்தோரும் கிடைக்கும் குறிப்பிட்ட தொகைகளைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் இவர்களுடைய வருவாய் நிலையானது; விலை வாசியும் கூலியும் நாட்டில் கூடினால் கஷ்ட நஷ்டமடைபவர்கள் இவர்களே. இதை நாம் பல ஆண்டுகளாக நம் நாட்டில் கண்ணாரக் கண்டுணர்ந்திருக்கிறோம். ஆனால் இச் சமயம் கவலைக் கிடமாகப் பண வீக்கம் உண்டானால் முன்னால் குறிப் பிட்ட அவர்கள் மட்டுமன்று, நாம் ஒவ்வொருவருமே பெருத்த நஷ்டமடைவோம்; ஏனெனில் அத்தகைய பண வீக்கம் நம்முடைய பாதுகாப்புச் செலவை பெரிதும் பெருக்கியும்

அதோடு, நம்முடைய பொருளாதாரம் ஒழுங்கான நிலைமையில் இராதபடியும் செய்யும்; இக் காலமோ, நமது பொருளாதாரம் அதிகப்படியான திறமையுடன் வேலை செய்ய வேண்டிய காலம்.

ஆம், பணவீக்கத்தைத் தடுத்துத்தான் ஆகவேண்டும். ஆனால் எப்படித் தடுப்பது ? பொருள்கள் கிடைக்கக் கூடிய அளவுக்கு மேற்பட்டு அவற்றுக்கு மக்களிடை விருப்பம் இருப்பதனால்தான் பணவீக்கம் ஏற்படுகிறது; மூல காரணம் இதுதான். எனவே, பணவீக்கத்தைத் தவிர்ப்பதற்குப், பொருள்கள் அதிகமாகக் கிடைக்கும்படி செய்யவேண்டும்; அல்லது விருப்பத்தைக் குறைக்க வேண்டும்; அல்லது இவ்விரண்டையுமே செய்ய வேண்டும்.

கச்சாப் பொருள்களும், அப்படியே உபயோகிக்கக்கூடியவாறு தயாரித்து வெளிவரும் பண்டங்களும் உண்மையாகவே பற்றாக் குறையாகிவிடுவதால் உண்டாகும் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கச் சிறந்த வழி பொருள்கள் அதிக அளவில் கிடைக்கக்கூடியவாறு செய்வதே. கச்சாப் பொருள்கள் கிடையாத நிலைமை ஏற்பட்டிருந்தால் செய்ய வேண்டுவது என்ன ? முக்கியமாக செம்பு, கோபால்ட், குரோம், ரப்பர், மாங்கனியம் முதலிய யுத்த முக்கிய பொருள்களின் உற்பத்தி உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் அதிகமாகும்படி நாம் வகை செய்ய வேண்டும். இருப்பு வைத்துக் கொள்வதற்காகப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் இந்த முறையையே நெடு நாளாகக் கடைப்பிடித்து வருகிறது.

உள் நாட்டில், தொழிற்சாலையின் உற்பத்தி அளவைப் பெருக்கிக் கொள்வதற்கு எல்லாத் தொழில் துறைகளிலும் ஊக்கமளிக்க வேண்டும். தொழிற்சாலைக் கட்டடங்களை அதிகம் அதிகமாக விரைவில் கட்ட வழி ஒன்று உண்டு; அதனால் நஷ்டம் எதும் வராது. புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு வேண்டிய எஃகு முதலிய பொருள்கள் இராணுவப் பாதுகாப்புத் தேவைகளுக்கே முதன் முதலாகச் செல்ல வேண்டும் என்பதை

அறிவேன். ஆனால் இராணுவத் துறையிலும் மற்றத் துறையிலும் அவசியமான பொருள்களை நீண்டகாலத் தேவைக்கும் உடனடியான தேவைக்கும் என்று நியாயமான வகையில் பிரித்துப் பகுந்து கொள்வது நம்முடைய சுரங்கம், ஆலை, தொழிற்சாலை முதலியவற்றின் உற்பத்தி அளவைப் பெருக்கும்; எல்லாவிதமான பொருள்களும் அதிகமாகக் கிடைப்பதற்குரிய வழி கிடைக்கும். ஆனால், இவ் வகையில் நாம் எவ்வளவுதான் செய்தாலும் மேலும் பண வீக்கம் உண்டாவதை இந்த ஒரு முறையினாலேயே குறைத்துவிட முடியும் என்று சொல்வதற்கில்லை.

பின் என்ன செய்யலாம்? முதலில் கட்டுப்பாடுகள், முக்கியமாக விலைக் கட்டுப்பாடுகள் என்பவையே மனத்தில் தோன்றுகின்றன. ஆனால் விலைக்கட்டுப்பாடு பண வீக்கத்தை தடுப்பதில்லை, மட்டுப்படுத்துவதுமில்லை. விலைகள் கட்டுப்படுத்தப்படுவதால், மக்கள் அதிகமாக வாங்க விரும்புவார்களே ஒழிய, வாங்குவதைக் குறைத்துக்கொள்ள எண்ணமாட்டார்கள். ஆகவே, பங்கீடு என்னும் முறை ஏற்படுகிறது. விலைவாசிக் கட்டுப்பாடும் பங்கீடும் சேர்ந்து ஒருவர் வாங்கக்கூடிய அளவையும் அவர் கொடுக்க வேண்டிய விலையையும் கட்டுப்படுத்தி, பங்கீடு செய்யப்படும் பண்டங்களுக்குள்ள விருப்பத்தை மட்டுப்படுத்துகின்றன. இதனால் பங்கீடு செய்யப்படாத பொருள்களுக்கு விருப்பம் அதிகமாகிறது. ஆகவே, மேலும் மேலும் பற்பல பொருள்கள் விலைவாசிக் கட்டுப்பாட்டுக்கும் பங்கீட்டுக்கும் உட்படும்படி ஆகின்றன. இன்னும், விலைக் கட்டுப்பாடும் பங்கீடும் பலனளிக்க வேண்டுமானால் கூலிக் கட்டுப்பாடும் ஏற்பட வேண்டும்; இல்லையானால் மக்களின் வாங்குந் திறனைக் கட்டுப்படுத்த முடியாது.

விலைக் கட்டுப்பாடு, பங்கீடு, கூலிக் கட்டுப்பாடு ஆகிய இம் மூன்றும் நடைபெறுவதால் தீமைகள் பல விளைகின்றன. விலை, கூலி, செலவு ஆகிய இனங்களில் எத்தனை எத்தனையோ வகைகள் இருக்கின்றன; இவற்றுள் எல்லாம் சீரான ஒரு

நடு நிலைமை ஏற்படும்படி செய்வது சுதந்தரமான பொருளாதாரமே; சுதந்தரமே அதற்குக் காரணம். மக்கள் சளைக்காமல் பேரம் பேசி விலைவாசிகளை முடிவுசெய்வதற்குப் பதிலாக அரசாங்க அதிகாரிகள் தம்முடைய தீர்மானங்களைப் புகுத்தி விலைவாசிகளில் கட்டுத் திட்டம் செய்யும்போது, அந்தப் பொருளாதார நிலைமையிலுள்ள சீரும் ஒழுங்கும் கெடும். 'விலைவாசி நிர்வாக இலாகா' இறுதியில் கண்ட பலன் யாது? நம்முடைய பொருளாதார முறையில் பெரிய தடுமாற்றமும் சீர்கேடும் விளைந்திருந்ததுதான். கட்டுப்பாடுகள் நடைபெறுகையில் உற்பத்தியைப் பெருக்குவதென்பது நடவாத காரியம். கட்டுப்பாட்டின் தீமை இதுதான். எல்லாவற்றுக்கும் மேலிடத்து உத்தரவை எதிர் நோக்கி வேலை செய்ய வேண்டியிருப்பதால் காலம் வீணாகிறது; பொருளாதாரம் உயிரற்றுப் போகிறது. அதிகாரம் ஒரே இடத்தில் மண்டிக் கிடக்காமல் பல இடங்களிலும் பரவி நிலை பெறுவதே நம்முடைய சுதந்தரப் பொருளாதாரத்தின் தன்மை; அதன் ஆற்றலும் அதுவே. முடிவு கட்ட வேண்டிய உரிமை வியாபாரிகளிடமிருந்து பறிக்கப்பட்ட நாடுகளில், வியாபாரிகள் உற்சாகங் குன்றிப் பொருளாதாரமும் வளர்ச்சியின்றி வாடிவிடுகிறதென நான் கண்டறிந்துள்ளேன்.

ஆயினும் நேரடியான கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு இத்தகைய அடிப்படையான தடைகள் இருந்தாலும்கூட, இன்றைக்கு இருப்பது போன்ற நெருக்கடியான காலங்களில் கட்டுப்பாடுகள் அவசியம், அவசியமே.

மக்கள் ஒவ்வொருவருடைய சொந்த வாழ்க்கையையும் நேரடியாகக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாடுகளை எவ்வளவு தூரம் குறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் குறைத்து, நேரடியாகச் சொந்த வாழ்க்கையைப் பாதிக்காத மறைமுகமான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும் என்பதே என் முடிவு. கடன் கொடுப்பதைக் கட்டுப்படுத்த வேண்டுவது முதலாவதாகச் செய்யவேண்டிய முக்கிய காரியம். 'பெடரெல் ரிசர்வ் போர்டு' ஏற்கனவே இவ்வுண்மையை உணர்ந்து கடன் கொடுக்கும் விஷயத்தில்

தவணைக் காலத்தைச் சுருக்கியும், கட்டணத்தைக் கூடுதலாக்கியும் வருகிறது. குடித்தனத்துக்குப் புதிதாக வீடுகட்ட அடைமானம் வைத்துப் பணம் பெறுவது முன்னுலிருந்ததைவிட கடுமையான நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கிறது ; சில கட்டடங்களைக் கட்டுவதற்கே தடை விதித்திருக்கிருர்கள். இவ்விரு துறைகளிலும் இன்னும் எவ்வளவோ செய்யவேண்டும். வியாபாரப் பாங்குகள் இருப்பு (ரிசர்வ்) வைக்கவேண்டிய அளவை அதிகப் படுத்தியும் வேறு வழிகளிலும், கடன் கொடுப்பதைக் குறைத்துக் கொள்ளலாம். இவ்வாறு கடன் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதனுல் விளையும் நன்மை என்னவென்ருல், ஒருவரை அல்லது ஒரு வியாபாரியைப் பணம் செலவழிக்கவிடாமல் கட்டுப்படுத்துவதும் தடுத்துவிடுவதும் மட்டுமின்றி, அவர்களுடைய செலவு வேறு துறையில் செல்லவும் வழியில்லாமல் ஆவது தான். கட்டுப்பாடுகள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்று கண்காணிக்கும் வேலையும் அதிகமில்லை. இதனுல் மற்றக் கட்டுப்பாடுகளைப்போல அன்றி யாருக்கும் அதிக வருத்தமும் ஏற்படுவதில்லை. மேலும், அக் கட்டுப்பாட்டின் நன்மை நமது பொருளாதாரம் முழுவதிலும் ஏற்படும் ; ஆனுல் அது நேரடியாக நம்மைத் தாக்காது ; சொந்தக் காரியங்களில் தலையிடுவதாகவும் ஆகாது.

வியாபாரிகளும் மற்றவர்களும் பொருள்களின்மேல் கொள்ளும் விருப்பத்தைக் குறைப்பதற்குக் கட்டுப்பாடுகள் விதிப்பது ஒன்றே வழி என்று எண்ணவேண்டாம். அரசாங்கமும் தன் செலவுகளைக் குறைத்துக் கொள்ளலாம். முக்கியமாகப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக நாட்டு, நகர ஆட்சியாளர்கள் ஏராளமான பணத்தை முடக்கிப் போடுவதைக் குறைத்துக் கொள்ளலாம். ஏன், சேமிப்பு இயக்கத்தில் நாடு முழுவதுமே ஒத்துழைக்கலாம். யுத்தம் முடிந்த பிறகு, நமது பொக்கிஷ இலாகா சேமிப்புப் பத்திரங்கள் விற்றுப் பலன் கண்டுள்ளது. சொந்தமாக நடக்கும் நிதி நிலையங்களும் பணத்தைச் சேர்த்து வைக்கும் பழக்கத்தை மக்களிடையே வளர்த்திருக்கின்றன.

இவ்வகை முயற்சிகள் இன்று இன்னும் அதிகம் வேண்டும். ஆயினும், இன்றைய நெருக்கடி நிலைமையில் பணவீக்கத்தைத் தடுப்பதற்கு ஒரே ஒரு சிறந்த வழிதான் உண்டு. அதாவது, மறைமுகமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதேயன்றி வரிகளையும் விதிக்கவேண்டும். இன்னும் அதிக வரி கொடுக்க ஒவ்வோர் அமெரிக்கனும் மனமிசைவானுல், அமெரிக்காவின் பாது காப்புத் திட்டங்கள் நல்ல நிலைமையில் இருக்கும்; நிதி நிலைமை உறுதியாகும்; உலகமனைத்திலும் டாலர்ப் பொரு ளாதாரத்தைப் போல் உண்டா என்று ஆச்சரியமடையும்படி நமது பொருளாதார நிலைமை தடுமாற்றமின்றிச் சீரான முறை யில் விளங்கும்.

தலைமை தாங்குவதனுல் ஏற்படும் மூன்றுவது கடமை: அரிதாக அகப்படும் பொருள்கள் பல நாடுகளுக்கும் கிடைக்கும் முறையில் ஒரு சர்வ தேசத் திட்டத்தை உருவாக்க வேண்டும். மிக மிக இன்றியமையாத பொருள்களின் விலைகள் சமயத்தில் எட்டிப் பிடிக்க முடியாதபடி உயர்ந்துவிடுவதைத் தடுக்க இதுவே வழி. சர்வ தேச ஏற்பாடுகள் எப்பொழுதும் எளிதில் அமை வன அல்ல. ஆயினும், தகரம், செம்பு, கம்பளி, ரப்பர் ஆகிய பொருள்களைப் பொறுத்த வரையில் நாடுகளிடையே வியா பாரப் போட்டா போட்டி ஏற்படாதிருக்க வேண்டுமானுல் எழுத்து முறைப்படியோ வேறு விதமாகவோ ஒரு சர்வ தேச உடன்பாடு இருந்தே ஆகவேண்டும்.

சுதந்தர உலகின் முன்னணியில் நிற்கும் நாட்டுக்கு இன் னெரு கடமையும் உண்டு. அமெரிக்கா தனது வெளிநாட்டு வியாபாரக் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். சமா தானம் செய்யும் நாடாக விளங்கிய பிரிட்டன் 19-வது நூற் ருண்டில் எல்லோருக்கும் நன்மை செய்த உலக வியாபார முறை ஒன்றை உருவாக்கி வைத்தது. அதனுல் சர்வதேச ஒற்றுமையும் வளரலாயிற்று. இதே நோக்கத்தோடுதான் அமெரிக்காவும் இன்று தன் வியாபாரக் கொள்கைகளை வகுத் துக்கொள்ளவேண்டும்.

நாம் அயல் நாட்டுச் சரக்கு இறக்குமதியைத் தடை செய்யும் வரிகள் விதித்தோம்; "தவழும் பருவத்திலுள்ள" நமது தொழில்களைக் காப்பாற்றவே இக் கொள்கை என்று கூறினோம். வற்றாத வளம் நிறைந்த நமது நாட்டில் இவ்வாறு தனித்து வளரலானோம். சென்ற ஒரு நூற்றாண்டளவாக நமது கொள்கை இதுவே. உலகத்துக்கு நாம் நமது பண்டங்களை விற்றிருக்கிறோமே தவிர, வெளிநாடுகளிலிருந்து வாங்குவதற்கோ நமது கை ஓடவில்லை. இதனால் உலக வியாபாரம் முன்னிலையடைய முடியாமலே போயிருக்கிறது. இப்பொழுதும் நமது தேசத்திலிருந்து வெளியே செல்லும் சரக்குகளின் அளவுக்கு ஏற்றபடி நாம் இறக்குமதி செய்துகொள்ளவில்லையாதலால் உலக வியாபாரத்தில் இந்த ஏற்றத் தாழ்வான நிலைமை இன்னும் உறுதியாகியுள்ளது. **1929**-க்கும் **1948-49**-க்கும் இடையில் இந்நாட்டின் இறக்குமதியின் அளவு நூற்றுக்கு ஐந்து மேனியே கூடியது; நமது பண்ணைகளிலும் தொழிற்சாலைகளிலும் உற்பத்தியான பண்டங்களின் ஏற்றுமதி அளவோ அதே காலத்தில் நூற்றுக்கு அறுபது வீதம் கூடியது. இதே நிலைமை நீடித்தால், பிற நாடுகள் நம்மிடமிருந்து இன்னும் எத்தனை நாளைக்கு வாங்கிக் கொண்டிருக்க முடியும்? வாங்குவதற்கு அவர்களுக்கு நாம் பணம் கொடுத்தும் உதவ வேண்டியதாகுமே. இதையே தான் நாமும் இன்று பற்பல கடன் திட்டங்கள் வழியாயும், நன்கொடைத் திட்டங்கள் வழியாயும் செய்து வருகிறோம். முதலாவது உலக யுத்தத்திற்குப் பிறகு தொடங்கிய இவ் வுதவித் திட்டங்கள் இன்று பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் வரைக்கும் வளர்ந்திருக்கின்றன. மேற்கு ஐரோப்பாவுக்கு அமெரிக்கா கடந்த **35** ஆண்டுகளாகக் கொடுத்திருக்கும் உதவி, நேரடியான யுத்த தளவாட உதவிகள் நீங்கலாக, சுமார் **2,200** கோடி டாலர். பிற மக்களுக்கு உதவி புரியவேண்டும் என்று உண்மையாகவே எண்ணி அளித்த உதவிதான் இது என்பது உண்மையே. ஆயினும், இது நமது ஏற்றுமதி வியாபாரம் நடப்பதற்குச் செய்த ஓர் உபகாரமாகவே போயிற்று; ஏனெனில், வெளி நாடுகளுக்குச் சென்ற அமெரிக்

கப் பணம் ஏறக்குறைய அனைத்துமே அங்கு தங்காமல் அமெரிக்கச்சாமான்களை வாங்குவதற்காக அமெரிக்காவுக்கே திரும்பி வந்து சேர்ந்து விட்டது.

உலக வியாபாரம் ஒழுங்காக நடைபெற வேண்டுமானால் பின் என்ன கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்? வெளி நாடுகளுக்கு நாம் நமது சாமான்களை விற்று அவற்றுக்கு அந் நாடுகள் டாலரிலேயே பணம் தரவேண்டும் என்று கருதுவோமானால், இந்த டாலர்களை அவர்கள் சம்பாதித்துக்கொள்வதற்கும் நாம் வழி செய்ய வேண்டும் அன்றோ? உலகத்திலேயே நமது நாடுதான் அதிகமாகக் கடன் கொடுக்கும் நாடு; ஆகவே, இந்நாட்டின் இறக்குமதி பெருக இடங்கொடுக்க வேண்டுவது தான் முறை. எனவே, நம்முடைய சுங்க முறைகளையும், இறக்குமதி வரிகளையும் மிகக் கடுமையாகக் குறை கூறவேண்டியிருக்கிறது. **1934** முதல் இவ்விரு துறைகளிலுமே நாம் சிறிது முன்னேற்றமடைந்திருக்கிறோம் என்பது உண்மையே. மற்ற நாடுகளோடு நாம் தனித்தனி வியாபார ஒப்பந்தங்கள் செய்து கொண்டதனால் இறக்குமதி வரிகள் மிகவும் குறைந்திருக்கின்றன. உயர்ந்த இறக்குமதி வரி விதிக்கும் பேர்போன **(Smoot-Hawley)** ஸ்மூட்—ஹாலிச் சட்டம் செய்து வந்த தீமைகள் எவ்வளவோ நீங்கியிருக்கின்றன. ஆயினும் இன்னும் எத்தனையோ பொருள்களுக்கு **110** சத விகிதமாக நாம் சுங்கம் விதிக்கத்தான் செய்கிறோம். சுங்கத்தை நிர்ணயிக்க இன்று நாம் கடைப் பிடிக்கும் முறையே ஓர் உதவாக்கரை முறையாகும். சுங்க விதிகளில் பல ஒழுங்கு முறையற்றவை. உதாரணமாக இறக்குமதியாகும் பருத்தித் துணிப் போர்வைகளுக்கு **10** சத விகிதம் சுங்கம் விதிக்கலாம் என்றிருக்கிறது; ஆனால் அப் போர்வைகளின் ஓரம் பின்னலாக இருந்தால் அவற்றுக்கு **40** சத விகிதம் சுங்கம் விதிக்கலாமாம்! இந்நாட்டில் இறக்குமதி செய்வோர் பல சமயங்களில் என்ன சுங்கம் கட்ட வேண்டும் என்பதையே அறியார்; ஏனெனில் இங்கு அவர்களுடைய சரக்கு விற்று முதலான பிறகுதான் அவர்கள் கொடுக்க

வேண்டிய சுங்கமும் இவ்வளவு என்று சுங்க அதிகாரிகளால் முடிவு செய்யப்படும்; இது சுங்க அதிகாரிகளுக்கு நமது சுங்கச் சட்டம் வழங்கியுள்ள உரிமை!

சுங்க வழி முறைகளை எளிதாக்கும் சட்டம் இன்று காங்கிரஸில் இருக்கிறது; இதைக் காலந்தாழ்த்தாமல் நிறைவேற்ற வேண்டியது நமது காங்கிரஸின் கடன். இதனால் மட்டும் சிக்கல்கள் எல்லாம் தீர்ந்து விடா. சில இடங்களில் சுங்க வழிமுறைகளை வேண்டியபடியெல்லாம் மாற்றிக்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமும் அளிக்க வேண்டும். இதுவும் காங்கிரஸ் உடனே செய்ய வேண்டிய கடமையாகும். ஏற்கனவே பணவீக்கம்; இந்நிலையில், அரிதாகக் கிடைக்கும் பொருள்களின்மேல் அதிகச் சுங்கம் விதிப்பதைத் தடுக்கவோ குறைக்கவோ ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்க வேண்டும். இருந்தால் விலைவாசிகள் குறைய வழி உண்டாகும். இதனால், எந்த அமெரிக்கத் தொழிலுக்கும் சரி, எந்தப் பொருளாதாரக்கூட்டத்துக்கும் சரி, கெடுதல் ஒன்றும் வந்துவிடாது.

வெளி நாட்டுச் சாமான்களை வாங்கக்கூடாது, அமெரிக்கச் சாமான்களையே வாங்க வேண்டும் என்று நமது அரசாங்க ஸ்தாபனங்களுக்கெல்லாம் உத்திரவிடும் இன்றையச் சட்டங்களை உடனே சட்டப் புத்தகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். இதுபோன்ற சட்டங்கள் நமது பாதுகாப்புத் திட்டத்தின் செலவில் கோடிக் கணக்கான டாலர்களைக் கூட்டுகின்றன என்பது என் கருத்து. வெளி நாட்டுச் சரக்குகளை விலக்காதீர்கள் என்று நாம் உலகுக்கெல்லாம் கூறிவரும்போது நாம் மட்டும் வெளி நாட்டுச் சரக்குகளை விலக்கிவைப்பது பொருத்தமில்லை.

அமெரிக்கச் சாமான்களையே வாங்கவேண்டுமென்று சொல்லுவது எவ்வளவு கெடுதலோ அவ்வளவு கெடுதலுடைய இன்னொரு சட்டமும் நம்மிடையே இருக்கிறது. அமெரிக்கப் பணத்தினால் செய்த பொருள்களில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் சரக்குகளில் குறைந்தது பாதி அளவாவது அமெரிக்கக்

கப்பல்களிலேயே ஏற்றிச் செல்லவேண்டும் என்று கூறும் சட்ட ஒழுங்கைத்தான் குறிப்பிடுகிறேன். இச் சட்டம் இல்லையானால் நம்முடைய பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் செலவு எத்தனையோ லட்சம் டாலர் குறைந்திருக்கும். பொருளா தாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் உதவியைப் பெறும் நாடுகள் தங்களுடைய சொந்தக் கப்பல்களில் சரக்கேற்றிச் செல்ல வழி விட்டிருப்போமானல், அவற்றுக்கு நாம் இன்னும் அதிக உதவி அளித்திருக்கக்கூடும்.

அமெரிக்கா தனது வாணிபக் கப்பல்களை அதிகமாகவும் ஆதாயத்துடன் போற்றி வைத்திருக்கவேண்டும் என்பதும் அதன் கடமைதான். அத்தகைய நிலைமைக்கு நான் எவ்வளவு பண உதவி செய்ய வேண்டுமோ, அவ்வளவும் செய்யத் தயார். ஆயினும், நார்வே, பெல்ஜியம், ஹாலந்து, பிரிட்டன் ஆகிய நாடுகள் அட்லாண்டிக் பாதுகாப்புக்கு எவ்வளவு தூரம் தாங்க ளாக உதவக்கூடும் என்பதை முடிவாகத் தெரிந்துகொண் டன்றே நாம் நமது வாணிகக் கடற்படை எவ்வளவு பெரிதாக இருக்கவேண்டும் என்பதை முடிவு செய்ய முடியும்? இந்த முறையாக முடிவு செய்யப்பட்டு, நிறுவப்படும் நமது வர்த்தக கடற்படைக்கு எவ்வளவு பண உதவி செய்யவேண்டுமோ, அவ் வளவும் செய்வோம்; ஆனல் அது மறைமுகமாக இல்லாமல் வெளிப்படையாக இருக்கட்டும்.

நமது வெளிநாட்டு வியாபாரத்திற்கெல்லாம் ஊனம் விளை விக்கும் புண் வேளாண்மை பற்றிய நமது கொள்கைதான் என்று சொல்லலாம். கடந்த முப்பது ஆண்டுகளாக இந்தக் கொள்கை சற்றும் யோசனையின்றித் தானகப் பற்றி வளர்ந் திருக்கிறது. இக் கொள்கை மற்ற நாடுகளை எவ்வாறு பாதிக் கும், நமது பொருளாதாரந்தான் முடிவாக என்ன கதி அடை யும் என்பதை எல்லாம் கவனியாமல் வளர்ந்து கிடக்கிறது நமது வேளாண்மைக் கொள்கை. ஆயினும் உலகப் பொரு ளாதாரம் எல்லாம் விவசாயத்தை வைத்துத்தானே வாழ வேண்டும்?

விவசாயி விளைவிக்கும் பொருளுக்குக் குறைந்தது இவ்வளவு கிடைக்கும் என்று அரசாங்கம் உறுதி செய்துவிடுகிறது. இதுதான் நமது வேளாண்மைக் கொள்கையின் முக்கியமான கருத்து. இக் கருத்து உதித்ததற்குக் காரணம் என்ன? பருத்தி, கோதுமை முதலிய முக்கிய பொருள்களை விளைவித்தவர்கள் நஷ்டமடையக் கூடாது என்பதற்காக அவ்விதக் கொள்கை முதன் முதல் உருவாயிற்று. ஆனல் வரவர இக் கொள்கை முக்கிய சாகுபடிகளுக்கு மட்டுமல்லாமல் மற்ற விளைச்சல்களுக்கும் பரவி, இன்று விவசாயப் பண்ணைகளில் விளையும் பொருள்களில் மொத்தம் **51** சத விகிதத்துக்குக், குறைந்த பட்ச விலை குறிக்கப்பட்டுள்ளது. இவ்விதக் குறைந்தபட்ச விலைப் பாதுகாப்பு உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லை.

•

விவசாயப் பண்ணைகளில் விளையும் பொருள்களுக்கு இவ்வாறு அதிக விலை கொடுக்கவேண்டியிருப்பதால், உள் நாட்டிலும் சரி வெளி நாடுகளிலும் சரி அவற்றுக்கு ஏற்ற விற்பனை இல்லை. கிடைக்கக் கூடிய சரக்கு அத்தனையும் வாங்கப் பொது மக்களால் முடியவில்லை; விலை யுயர்வே காரணம். ஆகவே இருப்பு வைக்கும் இடங்களிலே சரக்குகள் குவிந்து கிடக்கின்றன. வெளிநாட்டிலுள்ளவர்களும் அமெரிக்கக் கோதுமையும் பருத்தியையும் மிக அதிக விலை கொடுத்து வாங்க முடியாமல் அவற்றைத் தாங்களே விளைவிக்க முற்படுகிருர்கள். இதனல் அவர்களுக்கும் லாபமில்லை; அமெரிக்காவுக்கும் லாபமில்லை. ஏனெனில் கோதுமையும் பருத்தியும் விளைவித்தால் அவர்கள் பொருளாதாரம் உயர்நிலையடையப் போவதில்லை; அமெரிக்காவும் தன்னுடைய விளைச்சலை விற்க வழியற்றுப் போகிறது. ஏற்றுமதி இவ்வாறு குறைந்து போவதைக் கண்டு, கருத்துடையவர் எவரும் கவலைப் படாமல் இருக்க முடியாது. கடந்த இருபது ஆண்டுகளில் அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதியான விளைச்சல் சரக்குகள் மொத்த ஏற்றுமதியான எல்லாச் சரக்குகளிலும் **24** சத விகிதத்துக்குச் சிறிதே கூடுதலானது. தென் மேற்குப் பாகத்தில் முக்கியமாக விளைவது பருத்தி; இவற்றுக்கு

ஏற்றுமதியில்லாமல் முடியாது. இதேபோல் கோதுமை விளை விக்கும் கான்சாஸ், வாஷிங்டன் ஆகிய ராஜ்யங்களும் வெளிநாட்டு வியாபாரத்தையே நம்பி இருக்கின்றன.

குறைந்த செலவில் ஏராளமாக ஏற்றுமதி செய்ய வேண்டும்; இதுதான் சுதந்தர வியாபார முயற்சிகள் வளர வகை செய்யும் என்பது என் துணிவு. அதனால்தான், இதற்கு நேர்மாறான முறையைக் கையாண்டதன் பயனாக அமெரிக்க வேளாண்மைக்கு ஏற்பட்டிருக்கும் ஆகாத பலனைக் கண்டு நான் அஞ்சுகிறேன். தனது பொருளாதாரத்துக்கு அரசாங்கத்தையே நம்பி வாழ அமெரிக்க விவசாயி ஒரு நாளும் விரும்பமாட்டான் என்பது திண்ணம். கிடைககும் அளவுக்கும் வேண்டும் தேவைக்கும் ஏற்றபடி சுதந்தரப் பொருளாதாரம் அமையும். மாற்ற முடியாதபடி அரசாங்கம் நிர்ணயிக்கும் குறித்த விலைகள் இந்த நிலைமையைக் கெடுக்கின்றன; கெடுப்பது மட்டுமல்ல, மேலும் மேலும் அரசாங்கம் குறுக்கிட்டு வேண்டாத ஒழுங்கு முறைகள் வகுக்கவும், கட்டுப்பாடு செய்யவும் இடங் கொடுக் கின்றன. இதனால், விளைச்சலைக் குறைத்துக் கொள்ளும்படி விவசாயிக்கு அவன் விளைவிக்கவேண்டிய நிலம் அளந்துவிடப் படுகிறது; இவ்வளவுதான் விற்கலாம் என்றும் குறிப்பிடப்படு கிறது; அல்லது குறித்த விலைக்கு போகாது மீந்துப்போன பொருள்களையெல்லாம் வாங்கிக் களஞ்சியத்தில் அடைத்து வைக்கவேண்டியதாகிறது. இதைத்தான் விவசாய இலாகா, காங்கிரஸின் உத்தரவின் கீழ், செய்து வருகிறது.

குறித்த விலைக்குக் குறைவாகப் போகக்கூடாது என்ற கொள்கையால் 1950-ம் ஆண்டின் மத்தியிலேயே விவசாய இலாகாவிடம் 450 கோடி டாலர் பெறுமான மீந்துபோன தானிய வகைகள், முட்டைகள், வெண்ணெய், சோயாபீன் முதலிய பலவிதமான பண்டங்கள் இருந்தன; இவற்றில் சில இருப்பில் இருந்தன; மற்றவைகளை ஈடாக வைத்துக் கடன் வாங்கியிருந்தது. இவ்வாறு மீந்துபோன சரக்குகளை என்ன செய்வது? வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள்;

ஆனால் எப்படி? வெளிநாடுகளில் அவற்றைக்கொண்டு "குப்பையில் தள்ளுவதுபோலத்" தள்ளுவதாகத்தான் கூற வேண்டும். இதனால் வெளிநாட்டு விவசாயி கோபமடைகிறான். வெளிநாட்டு அரசாங்கத்தினர் பதிலுக்குப் பதில் செய்யத் துடி துடிக்கிறார்கள். நமது நாட்டு விவசாயி நவீன சாதனங்களைக்கொண்டு அதிகம் அதிகமாக உருளைக் கிழங்குகள் விளைவிக்கிறான்; குறைந்தது இவ்வளவுதான் விலை என்று அரசாங்கம் உறுதி கூறியிருப்பதுதான் அவனது ஊக்கத்திற்குக் காரணம். ஆனால் அவனிடமிருந்து வாங்கும் உருளைக் கிழங்குகளில் ஒரு பாகத்தை அரசாங்கம் அழித்துத்தான் ஒழிக்கிறது. எத்தனையோ விதமான சாகுபடிகளில் உருளைக் கிழங்கு ஒன்றை மட்டும் எடுத்து அரசாங்கத்தின் செய்கைக்கு அதை ஓர் உதாரணமாகக் காட்டியது முழு உண்மையையும் நியாயமாகக் காட்டுவதாகாதுதான். ஆயினும் இந்த உதாரணம், நமது பண்ணை விவசாயத்தின் பல துறைகளிலும் உண்டாகியிருக்கும் சீர்கேடான நிலையை எடுத்துக்காட்ட நன்கு உதவும். இது தவறன்றே.

இவ்விதம் செய்வதில் நாம் தனித்து நிற்கவில்லை. அளவுக்கு மீறிய தேசிய வாதம் நம்மைப்போல வேறு சிலராலும் கையாளப்படுவதையும் அழுத்திக் கூறவே வேண்டும். பொருளாதாரச் சீர் குலைவுக்கு வழி செய்யும் வகையில் விளைச்சலைப் பெருக்கி விட்டு, அதன்பின் விவசாயிக்கு உடனடியான உதவியளிக்கும் முறையில் இறங்கும் நாடுகள் பின்னால் இந்த உதவிகள் எல்லாம் கேடு விளைவிப்பதை உணரும்.

இவ்வாறு உள் நாட்டு வேளாண்மையில் நாம் கடைப்பிடிக்கும் கொள்கைக்கும் அயல் நாடுகளைப் பொறுத்த நமது பொருளாதாரக் கொள்கைக்கும் முரண்பாடு ஏற்படுவதை விளக்கினேனே என்று தவருக எண்ணவேண்டாம். வேலையில்லாமல் போனால் தொழிலாளி கஷ்டப்படுவான்; அதனால் அவனுக்குப் பாதுகாப்பு இருக்கவேண்டும். அதேபோல், பொருளாதாரத் துறையில் ஏற்படும் பற்பல மாறுதல்களுக்கும் பொறுப்பாளியாகாத விவசாயி தன் விளைச்சலால் நஷ்டமே

அடைவதும் பொருந்தாது. ஆகவே, அவனுக்கும் பாதுகாப்பு இருக்கவே வேண்டும். விவசாயிக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றியதன்று என் வழக்கு. விளைச்சல் பொருள்களுக்கு உள் நாட்டிலும் வெளி நாடுகளிலும் விருப்பம் அதிகமான வண்ணம் இருக்கிறது. இந் நிலையில் விவசாயியின் நலனை எவ்வகையில் காப்பாற்றினால் யாவருடைய நலனும் வளரும் என்பதுதான் நான் இங்கு கவனிப்பதெல்லாம். நான் விவசாயப் பொருளாதார நிபுணன் அல்லேன். ஆயினும், வியாபாரத் துறையில் யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய கொள்கைப்படி பார்த்தால் எனக்குத் தோன்றுவது இதுதான்: அதாவது, இப்பொழுது இருப்பதுபோல் குறைந்தபட்ச விலைகள் மாற்ற முடியாதபடி இவ்வளவு தூரத்துக்குக் கடுமையாக இருக்க வேண்டியதில்லை. குறைந்த பட்ச விலை என்ற உதவி விவசாயிக்கு இருக்கவேண்டியதுதான்; ஆயினும் அந்த விலை மற்றத் தேவைகளை முன்னிட்டு வளைந்து கொடுத்து ஏறவும் இறங்கவும் கூடியதாக இருக்க வேண்டும். விவசாயப் பொருள்களுக்கு மக்களிடையேயிருக்கும் விருப்பத்துக்கு ஏற்றபடி விளைச்சலும் இருக்க வேண்டும். இது எவ்வளவு தூரம் மேலிடத்து உத்தரவின்றி நடைபெறுமோ, அவ்வளவுக்கு நம்மிடையே பொருளாதாரம் சரிவர அமைந்து நடக்கும்.

இதே முறையில்தான் நாம் சர்வதேச விவகாரத்தையும் கவனிக்க வேண்டும். உள்நாட்டு வேளாண்மைத் திட்டங்களை எவ்வெவ்வாறு திருத்திக்கொண்டால், உலகில் வியாபாரம் வளர்ச்சியடைவதற்கு உதவியாகும் என்பதையெல்லாம் சுதந்தர உலக நாடுகளின் விவசாயப் பிரதிநிதிகள் கூடியிருந்து விவாதித்து முடிவுக்கு வர வகை செய்யவேண்டும்.

இந்த முறையில் சிறந்த பலன்கள் எளிதில் கிடைக்கும் என்பது என் நம்பிக்கை. கோதுமையைப் பற்றிய சர்வ தேச உடன்பாடுபோன்ற உடன்பாடுகள் பலன் தருவதைவிட நான் குறிப்பிட்ட முறை சிறந்ததென்பேன். ஏனெனில்

அத்தகைய உடன்பாடுகள் வெளிநாட்டு வியாபாரத்தை எப்படி நடத்துவது என்றுதான் கவனிக்கின்றனவேயொழிய, அவை சுதந்தர நாடுகளின் உள்நாட்டு விவசாயத் திட்டங்கள் தேசிய மயமாவதைத் தடுப்பதில்லை.

நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு அரசாங்கம் குறைந்த பட்ச விலை குறித்துவைப்பதும், சுங்க வழி முறைகளை வளர்ப்பதும், இறக்குமதியின் அளவைச் சுருங்க அளந்து விடுவதும், உள்நாட்டுத் தொழில் துறைகளுக்கு ஆகாத பாது காப்பு அளிக்கின்றன ; வெளி நாடுகளில் கஷ்டங்களும் வெறுப் பும் உண்டாகி, அதிகார முறைமையும் சர்வாதிகாரமும் ஆக்கிர மிப்பும் கிளம்புவதற்கு மிகவும் உடந்தையாயிருக்கின்றன ; இது வரவர நன்ருகத் தெரிந்து விட்டது. இவ்வாறு ஏற்படும் போர்களால் நமக்கு உண்டாகும் செலவு எத்தனை கோடி ? நம்முடைய வேளாண்மைத் தொழிலோருக்கு நாம் இன்றைக்கு நன்மை செய்வதாகத் தோன்றலாம் ; ஆனுல் இது நெடுநாள் நீடிக்காத அற்ப நன்மையாகும்.

ஆனுல் நமக்கு நல்ல காலம், நம்முடைய விவசாய ஸ்தாப னங்களில் இருக்கும் தலைவர்களை விட முதிர்ந்த அறிவுடைய தலைவர்கள் வேறு இல்லை. கடந்த இரண்டரை ஆண்டுகளில் நான் இவர்களுடன் கலந்து பேசி, ஐரோப்பாவுக்கான மார்ஷல் உதவித் திட்டத்தைப் பற்றியும், அங்கு வேளாண்மை முறையைப் புதுப்பிக் கும் திட்டங்களைப் பற்றியும் அவர்களுடைய அறிவுரைகளைக் கேட் டிருக்கிறேன். விளைச்சல் பொருள்களிலும், வேறு பண்டங்களி லும் வியாபாரம் வளர வேண்டும் என்பதற்கும், சுதந்தர நாடுகள் ஒவ்வொன்றிலுமே பொருளாதாரம் சீர் பெற்று உறுதியடைய வேண்டும் என்பதற்கும் என்னென்ன செய்யலாம் என அந்த விவசாயத் தலைவர்கள் எடுத்துக்கூறி விளக்கிய விதம் எனக்கு ஆறுதலளிக்கிறது. அவர்கள் எடுத்துப் பேசிய கொள்கைகள் முதலில் அமெரிக்க விவசாயிகளின் இன்றைய நலனுக்கு உதவா தவைபோலத் தோன்றும். ஆனுல் நீடித்து நின்று பலன் தரத் தக்கவை அவையே.

ஆகவே, நம்முடைய விளைச்சல் பொருள்களுக்கு விலை குறிப்பது பற்றிய கொள்கையை மாற்றவேண்டும் என்பதை இந்நாட்டின் விவசாயச் சங்கங்கள் உணர்ந்து நடக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையே. விவசாயி தன் தொழிலில் நஷ்டமடைந்துவிடாதபடி பார்த்துக்கொள்வதேயன்றி, சுதந்தர நாடுகளிடையே வியாபாரம் இன்றிருப்பதைவிடத் தாராளமாக நடைபெறுவதற்கான வழிகளை அவர்கள் ஏற்படுத்துவார்கள் என்பது என் திண்ணமான நம்பிக்கை.

சுதந்தர உலகின் முன்னணியில் விளங்கும் நாடு என்ற முறையில் எவ்வளவு பெரிய பொறுப்பு ஏற்படுகிறது என்பதை நான் குறித்த இந்தச் சிற்சில கடைமைகளே நன்கு எடுத்துக் காட்டும்.

முதலாவது உலக யுத்தத்திற்கும் இரண்டாவது உலக யுத்தத்திற்குமிடையில் "சுகமாகத்" தனித்திருந்தோமே, அதேபோல் வாழ்வதற்கு ஏதாவது ஒரு வழி அகப்படாதா என்று எத்தனையோ முறை நானும் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் நிர்வாகியாக இருந்த சமயம் நினைத்ததுண்டு. ஆனால் அவ் விருப்பம் ஈடேராது. பின் நோக்கிச் செல்ல வழியில்லை. தயங்கினால், சமாதானப் போராட்டத்தை நடத்தி வெற்றி பெறும் தருணத்தை இழந்து விடுவோம்.

# படை வலிமை கொண்டு சமாதானம் புரிதல்

## அத்தியாயம் 5

ரஷ்யாவின் படை வலிமையை அமெரிக்கன் தனக்கு ஆபத்தில்லாமல் சற்றே உணர்ந்துகொள்ள வேண்டுமானால், அதற்கு ஒரு வழி எனக்குத் தோன்றுகிறது. ரஷ்யர்கள் அமைத்திருக்கும் யுத்த ஞாபகச்சின்னம் பெர்லின் நகரில் பிரிட்டனின் வட்டாரத்தில் இருக்கிறது : அதைப் போய்ப் பாருங்கள்.

பாழடைந்து கிடக்கும் ரீச்ஸ்டாக் (Reichstag) அருகே, ப்ராண்டன்பர்க் ( Brandenburg ) வாசலுக்கு மேற்கே, அஞ்சத்தக்க முகத்துடன் இரவு பகல் இடைவிடாமல் ரஷ்ய வீரர்கள் காவல் காக்க, வெண்ணிறத்தோற்றத்துடன் அந்த யுத்த ஞாபகச் சின்னம் நிற்பதைக்காணலாம்.

அதை அணுகும்போது பக்கத்தில் ஒரு பெரிய " டாங்கி " நிற்கும் ; இதில், நீண்ட குழாய்ப் பீரங்கி ஒன்றும் இருக்கும். யுத்த ஞாபகச் சின்னமென்றால் இவையெல்லாம் இருக்கத்தான் செய்யும்—என்று ஒப்புக் கொள்ளலாம். ஆயினும் இவை குறிப்பாக உணர்த்தும் இன்னொரு பொருளும் உண்டு.

நான் கடைசித் தடவை இந்த யுத்தச் சின்னங்களைக் கண்ட சமயம், கொரியாவில் போர் நடந்துகொண்டிருந்தது. எனக்கு முன்னால் இருந்த டாங்கியையும் பீரங்கியையும் போன்ற பல்லாயிரக் கணக்கான ரஷ்ய டாங்கிகளையும் பீரங்கிகளையும் அசைவற்று நிற்குமாறு செய்யக்கூடிய படை வலிமை—சமாதானத்துக்காக—நம்மிடம் உண்டாகும் வரையில், நிலையான சமா

தானம் எதுவும் ஏற்படாது என்ற உறுதி அன்று என் மனத்தில் ஆழப் பதிந்தது—இன்னும் நன்ருக நினைவிருக்கிறது.

சமாதானமே எனது ஆவல். சமாதானத்தாகமே என் கருத்தெல்லாம். பொருளாதார வழி, அரசியல் வழி முதலிய அஹிம்சை வழிகளிலேயே சென்று சமாதானமடைய முடியாதா என என் முழு இருதயத்தோடும் விழைகின்றேன். ஆனுல், பின் வாசற் கதவை திறந்துவிட்டு முன் வாசற் கதவை இறுகத் தாளிட்டு என்ன பயன் என்பதை இன்றைக்கு நாம் அனைவரும் கண்டுகொண்டோம். எந்தெந்த வகையில் ஆக்கிரமிப்பு வந்தாலும் அதற்கு இடங்கொடாதபடி தடுத்துத் தற்காத்துக்கொள்ளச் சுதந்தர உலகுக்கு இயலாமல்போனுல், அதன் சுதந்தரம் நிலைக்காது.

இராணுவத் துறையிலும் தலைமை தாங்கும் பொறுப்பு அமெரிக்காவுக்கே. நம்மைத் தாக்கலாம் என்று கிரெம்லின் எண்ணவுங் கூடாத அளவுக்கு நாம் நமது பாதுகாப்பு அரணை வளர்த்துக்கொள்ளவேண்டும். அதேபோல், மேற்கு ஐரோப்பா மீதோ ஆசியா மீதோ படையெடுப்பது தற்கொலையாகுமென்று கிரெம்லின் உணர்ந்து அஞ்சும்படி சுதந்தர நாடுகளின் பாதுகாப்பு வன்மையும் வளரவேண்டும் ; இதற்காக நாம் சுதந்தர நாடுகளுக்கு உதவவேண்டியதும் நமது கடமையாகும். நான் ஒரு இராணுவ நிபுணன் அல்லேன் ; ஆயினும் இராணுவ நிபுணர்களுடன் கலந்து பேசிய அனுபவம் எனக்கு உண்டு. அவர்களுடைய வேலை எவ்வளவு சிக்கலானது என்பதை அறிவேன். பாதுகாப்பு வலுவடையும்படி செய்வதும் அதே சமயம் பொருளாதாரம் சீர்குலைந்துபோகாமல் காப்பதும் எவ்வளவு கடினம் என்பதையும் அறிவேன்.

அமெரிக்காவையும் அதன் உடைமைகளையும் பாதுகாப்பது தான் நமது தரை, கடல், விமானப் படைகளின் முதல் காரியம். அமெரிக்க எல்லையை விட்டு அகலாமல் இக் காரியத்தை நிறைவேற்றுவது, இன்றைக்கு உலகம் இருக்கும் நிலைமையில், இய

லாததாகும். நம்மைத் தற்காத்துக்கொள்ளச் சிறந்த வழி நமது எல்லைகளைக் காத்து நிற்பதே என்று கூறுவது தவறு. நமது நகரங்களைத் தற்காத்துக் கொள்வதற்கு அவற்றில் "ராடார்"க் கருவிகளையும் விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும் வைத்து வானமெல்லாம் காவல் செய்யவேண்டும்; இந்த முறையில் செலவாகும் பணம் வேறு எந்தத் தற்காப்பு முறையாலும் செலவாகாது; இந்த ஏற்பாட்டைப் போல நோய்ந்த பாதுகாப்பு ஏற்பாடு வேறொன்று இருக்கவும் முடியாது. அதிகத் தொலை தூரம் சென்று அடி கொடுக்கும் விமானங்களும் அணுக்குண்டுகளும் ஏற்கனவே உள்ளன; ஆளில்லாத சாதனங்களை ஏவித் தாக்குகின்ற காலமும் தோன்றிவிட்டது. இந்த நவ யுகத்தில் அமெரிக்காவின் மத்திய பகுதியைப் காப்பாற்ற வேண்டுமானால், அதற்கு பெர்லின், டோக்கியோ, ஸ்பிட்ஸ் பெர்கன் ஆகிய இடங்களைக் காப்பாற்றுவதே சிறந்த முறையாகலாம்.

நம்முடைய நேச நாடுகளைத் தாக்கினால் அது நம்மைத் தாக்கியதுதான். நம்மோடு நமது நேச நாடுகளையும் தளவாடங்களால் பலப்படுத்த வேண்டும். நம்மை மட்டும் கவனித்துக் கொண்டால் போதாது. ஏனெனில், சுதந்தர உலகம் அனைத்துக்கும் பொதுவான ஒரே ஒரு எல்லைதான் உண்டு.

நம்முடைய பாதுகாப்பும் பிறருடைய பாதுகாப்பைப் பொறுத்ததே. இந்த உண்மையை ஜனாதிபதி ஜேம்ஸ் மன்ரோ உணர்ந்தார். உணர்ந்துதான், அமெரிக்காக் கண்டத்தில் பழைய உலக நாடுகள் தலையிடுமானால் அதைப் பார்த்துக் கொண்டு இந்த நாடு சும்மா இராது என எச்சரித்தார். நமது நாட்டுக் கொள்கையில் முதன்மையான இடம் பெற்று விளங்குகின்றது இந்த உண்மை. அன்று தென் அமெரிக்க நாடுகளுடன் நாம் சேர்ந்து பேசும் சாதனமில்லாததால், அமெரிக்கா தனியாக எச்சரிக்கை செய்யவேண்டியிருந்தது. இன்று "அகில அமெரிக்கச் சங்கம்" என்பது இருக்கிறது; அமெரிக்கக் கண்டத்து நாடுகளிடையே உடன்பாடு ஏற்பட இச் சங்கம்

பெரியதோர் கருவியாகும். அதேபோல் **1947**-ல் ரியோடி-ஜெனீரோ நகரில் கூடிய மகா நாட்டில், அமெரிக்கக் குடியரசுக ளெல்லாம் ஒன்று சேர்ந்து கூட்டுப் பாதுகாப்பு என்ற கொள் கைக்கு உடன்பட்டு, எது ஒன்று தாக்குதலுக்குள்ளானாலும் எல்லாம் சேர்ந்து பகைவனை எதிர்க்க வேண்டும் என ஒப் பந்தம் செய்துகொண்டன.

பிறர்க்கும் பாதுகாப்பு நமக்கும் பாதுகாப்பு என்ற அடிப் படையில் பாதுகாப்பு உதவி அளிக்கும் திட்டத்தின் மூலமாய், கீழ்க்கோடியில் பிலிப்பைன், கொரியா, "பொதுப்படையாகச் சீனாவின் இடம்" ஆகியவற்றுடனும் மத்திய கிழக்கில் ஈரான், கிரீஸ், துருக்கி ஆகியவற்றுடனும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொண்டோம். வட அட்லாண்டிக் உடன்படிக்கைச் சங்கத்தால் பிரிட்டன், நார்வே, டென்மார்க், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க், பிரான்ஸ், போர்ச்சுகல், இத்தாலி, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளுடனெல்லாம் நாமும் கனடாவும் சேர்ந்து ஆக்கிர மிப்பை எதிர்த்து கைகோத்து நிற்கிறோம். மேலும் ஐக்கிய நாடு கள்சபையில் அங்கம் வகிக்கும் நாடென்ற முறையில், "உலகில் நாடுகளிடையே சமாதானமும் பாதுகாப்பும் நிலை நிற்கும்படி செய்யவும், அவற்றைத் திரும்ப நிலைநிறுத்தவும் விமானம், கடல், தரைப் படைகளை எவ்வெவ்வாறு பயன்படுத்தவேண்டுமோ அவ் வவ்வாறெல்லாம் பயன்படுத்த" நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

எங்காவது சண்டை மூளுமானால், ஐ.நா. பாதுகாப்புச் சபை அதைத் தடுக்க ஆலோசிக்கையில் ஏதாவது ஒரு நாடு தனது தள்ளுபடி அதிகாரத்தை உபயோகித்துக் காரியத்தைக் கெடுத்து விடுமானால், ஐ. நா. பொதுச் சபை இன்று அவசரக் கூட்டம் கூடுவதற்கு அதிகாரம் இருக்கிறது. அவ்வித அவசரக் கூட்டம் தேவையென்று பாதுகாப்புச் சபையிலிருந்து ஏழு நாடுகள் கேட்க வேண்டியதுதான் தாமதம், அல்லது அவ்விதம் வேண்டு மென்று ஐ.நா.வில் பெரும்பான்மையினர் வாக்களிக்கவேண் டியதுதான் தாமதம், உடனே இருபத்துநான்கு மணி நேரத் திற்குள் பொதுச் சபையின் அவசரக் கூட்டம் கூடிவிடும்.

(எல்லாம் சோவியத் ரத்து அதிகாரத்தைத் தாண்டியன்றோ நடக்க வேண்டுமென்ற நிலைமை இதனால் அற்றுப்போகிறது.) இன்னும் ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் நாடுகளின் படை வீரர் கள்கொண்ட ஐ. நா. படை ஒன்றும் நாளடைவில் உண்மை யாகலாம். அதற்கான திட்டத்தை அமெரிக்கா கொண்டுவந் திருக்கிறது ; ஐ. நா. நிறைவேற்றிவைக்க வேண்டியதுதான் தாமதம். இதனால் ஆக்கிரமிப்பை முளையிலேயே கிள்ளியெறிய ஐ.நா.வுக்கு சக்தி இருக்கும்.

இன்று என்ன நிலைமையில் இருக்கிறோம் ? ஆக்கிர மிப்பு தலை தூக்கக் கூடிய இடத்திலெல்லாம் போதுமான பாதுகாப்பு அரண் ஏற்படுத்தத் தேவையான துருப்புகள் நம்மி டம் இன்று இல்லை ; இனி இன்ன நாளில் இருக்கும் என்று சொல்வதற்குமில்லை. சோவியத் எல்லையருகே இந்தோ-சீனா, பர்மா, ஆப்கானிஸ்தான், ஈரான் முதலிய நாடுகள் ஆக்கிரமிப்பு கையோங்கக்கூடிய நிலையில் இருக்கின்றன. பாதுகாப்பு ஆபத் துக்குள்ளாகும் ஒவ்வொரு தேசத்திலும் பாதுகாப்பு ஏற்பாடு களைச் செய்ய நாம் தலைக் கொடுத்து உலக யுத்தத்தையே சம்பாதித்துக்கொள்ளவேண்டும் என்பதும் நம்முடையகொள்கை அன்று. உலகம் முழுவதுமாக நம்முடைய ஏற்பாடுகளைச் சிதறி விட்டுத், தள்ளாடும் அரணமைத்துத் தளர்ந்து நிற்க நாம் விரும்பவில்லை.

நம்முடைய சொந்த இராணுவ ஆற்றலும், வட அட் லாண்டிக் உடன்படிக்கை நாடுகளின் ஆற்றலும், ஐ. நா. படை களின் ஆற்றலும், இன்னும் நமக்கு நண்பர்களாக வரக் கூடியவர்களின் ஆற்றலும் சேர்ந்து கிரெம்லினை அச்சுறுத்தக் கூடும் ; கிரெம்லின் ஒரு பெரிய போரைத் தொடங்கினால் சோவியத்துக்கே நாசம் விளையும் என்பதை, ஒன்றுபட்ட நமது ஆற்றல் அதற்கு உணர்த்தாமற் போகாது.

சுதந்தர உலகத்தின் பாதுகாப்பில் முக்கிய இடம் பெற்று விளங்குவது வட அட்லாண்டிக் உடன்படிக்கை ஸ்தாபனமாகும்.

ஐரோப்பாவில் தேசிய வாதம் உச்சநிலையடைந்து, இப்பொழுது வீழ்ச்சியுற்றிருக்கிறது. இனி அந்த உச்ச நிலை வராது. இன்று ஐரோப்பியர்கள் போரிட்டால், ஒன்றுபட்டு மேற்கு ஐரோப்பாவுக்காகப் போரிடுவார்களே ஒழிய, தங்கள் தங்கள் தேசியக் கொடியின் கீழ் போருக்குக் கிளம்ப மாட்டார்கள். தனித் தனியே நின்றால் தோல்விதான் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். பொதுவான நோக்கத்தோடு, பொதுப்பட்ட ஒரு தலைமையின் கீழ் சேர்ந்து நின்றாலொழிய தங்கள் தங்கள் நாட்டுப் பாதுகாப்பெல்லாம் நிலைபெறாது என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். இத்தகைய ஐரோப்பாவுக்கு வட அட்லாண்டிக் உடன்படிக்கை ஸ்தாபனம் தக்கதோர் வரமாகும்.

மேற்கு ஜெர்மனியின் ஆள் பலத்தையும் உற்பத்தி ஆற்றலையும் எப்படிப் பயன்படுத்தலாம் என்ற கேள்விக்கும் வட அட்லாண்டிக் உடன்படிக்கை ஸ்தாபனமே தக்க பதில்.

வட அட்லாண்டிக் உடன்படிக்கை ஸ்தாபனம் ஆரம்பித்த முதல் வருஷத்தில் அதன் ஸ்தாபன நடபடிகளே ஓர் ஒழுங்குக்கு வராமல் இருந்தன. "கமிட்டி" களும் "போர்டு"களுமாகப் பல நடந்தன; அவற்றின் வேலை என்னென்ன என்பதைத் தெளிவாக வரையறுத்து விடாததால் ஒரே விஷயத்தை இரண்டு மூன்று கழகங்கள் ஆராயத் தொடங்கின. அதற்குத் தலைமை அதிகாரியாக ஒரு தலைமை தளபதி இல்லாமல் இருந்ததே அதன் பெரிய குறைபாடாக இருந்தது. ஆனால் நமக்கு எல்லோருக்கும் நல்ல காலம், அத்தகைய அதிகாரி நியமனமாகிவிட்டார். அதற்குச் சரியான ஆளாகிய ஜெனரல் ஐஸன்ஹவர் **(General Eisenhower)** மீண்டும் வீரனுடை தரித்துப் பணி புரிய உடன்பட்டிருக்கிறார். ஊக்கமூட்டும் திறமையும், பிறரை உடன்படுத்தும் ராஜதந்திரமும், காரியங்களை நடைபெறச் செய்யும் கடுமையும் உடையவர் இவர்; ஐரோப்பியப் படை வளரவும், அது தற்காத்து நிற்கும் தைரியம் பெறவும் செய்ய வல்ல தலைவர் இவர். இருக்கட்டும். இங்கே சற்று

நிதானித்து, நம்முடைய பலமும் சோவியத்தின் பலமும் என்ன என்பதை ஒப்பிட்டுப் பார்ப்பது நலம் என எண்ணுகிறேன்.

ஆள் எண்ணிக்கையில் பார்த்தால், நமது ஆற்றல் அற்பமாகத் தோன்றும். ஆனால் முக்கியமான பல அம்சங்களில், நாம் கிரெம்லினையும் அதன் அடிமை நாடுகளையும் மிஞ்சியிருக்கிறோம். 1951-ல் அமெரிக்காவில் வருஷத்துக்கு மொத்தம் 9,50,00,000 மெட்ரிக் டன் எஃகு உற்பத்தி செய்யும் திறன் இருக்கும் (ஒரு மெட்ரிக் டன் — 2,204.6 பவுண்டு.) ; அதே போல் மேற்கு ஐரோப்பாவில் 5,50,00,000 மெட்ரிக் டன்கள் உற்பத்தியாக முடியும். சோவியத் நாடுகளிலெல்லாம் சுமார் 3,30,00,000 மெட்ரிக் டன்களே உற்பத்தியாகும். நிலக்கரியில், வேண்டுமானால் அமெரிக்கா அறுபது, எழுபது கோடி மெட்ரிக் டன்கள் உற்பத்தி செய்ய முடியும் ; ஐரோப்பா 45 முதல் 50 கோடி உற்பத்தி செய்ய முடியும் ; சோவியத்திலும் அதன் அடிமை நாடுகளிலும் வருஷத்துக்கு 40 கோடிக்கும் குறைவாகவே உற்பத்தியாகும். சிமண்ட் உற்பத்தியைப் பார்த்தால் அமெரிக்காவில் $4\frac{1}{2}$ கோடி மெட்ரிக் டன்கள் உற்பத்தியாக இடமுண்டு ; மேற்கு ஐரோப்பாவில் 5 கோடி ; சோவியத் வளாகத்தில் ஒரு கோடி 30 லட்சம்தான்.

இயந்திரங்களுக்கு வேண்டிய எண்ணெய் வகைகளில், அமெரிக்கா 230 கோடி பீப்பாய்கள் உற்பத்தி செய்ய முடியும். மேற்கு ஐரோப்பாவில் $2\frac{1}{2}$ கோடி உற்பத்தியாகும். மேலும் மற்றுமுள்ள சுதந்தர நாடுகளில், தென் அமெரிக்கா சமீபக் கிழக்கு, தூரக் கிழக்கு நாடுகள் இன்னும் 200 கோடி உற்பத்தி செய்ய முடியும். 1951-ல் சோவியத் யூனியனும் அதன் அடிமை நாடுகளும் சேர்ந்து சுமார் 35 கோடி பீப்பாய்களே எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும். 1951-ல் அமெரிக்காவில் சுமார் 40,000 கோடி 'யூனிட்டு'கள் மின்சாரம் உற்பத்தியாகும் ; மேற்கு ஐரோப்பாவில் 25,000 கோடி 'யூனிட்டு' கள் ; சோவியத்திலும் அதன் அடிமை நாடுகளிலும்

சுமார் **14,000** கோடி 'யூனிட்டு'கள். ரயில் எஞ்சின்கள் முதல் இயந்திர கலப்பைகள் ஈருக மேற்கத்திய நாடுகள் செய்து தரக் கூடிய ஆற்றல் சோவியத்தின் உற்பத்தி ஆற்றலைவிட பெரிதும் ஓங்கியிருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்களைப்பார்ப்பவர்கள் நமது பாதுகாப்பு அரணுக்கு மேற்கு ஐரோப்பா எவ்வளவு முக்கியம் என்பதைக் கவனியாமல் விட்டுவிட வேண்டாம். மேற்கு ஐரோப்பா எக்கேடும் கெட்டுப்போகட்டும் எனப் பேசுகிருர்களே அவர்கள் கவனிக்க வேண்டும்; உண்மை நிலையை உணர்ந்தவர்கள் என்று கூறிக்கொள்ளும் அவர்கள் உணர வேண்டும். மேற்கு ஐரோப்பாவை சோவியத் யூனியன் அப்படியே கைப்பற்றிக்கொள்ளுமானல், இரண்டும் சேர்ந்து உற்பத்தி செய்யும் திறன் அநேக இனங்களில் நம்முடைய உற்பத்தித் திறனுக்கு நிகராகிவிடும் என்பதை இந்த "உண்மை விளம்பி"கள் அறிய வேண்டும். நாம் தனித்து நின்று சமாதானம் புரிய முடியாது என்பதற்கு இதைவிட வேறு என்ன காரணம் வேண்டும்?

நமது தொழில் வலிமைதான் இப்படி, படை வலிமை எப்படியோ என்று வீணக நடுங்குபவர்களும் சிலர் நம்மிடையே உளர். நம்முடைய படை வலிமை எவ்வளவு என்று இவர்கள் அறியமாட்டார்கள். அணுசக்தி ஆயுதங்கள், குண்டு பொழியும் தளவாடங்கள் ஆகியவற்றில் நம்மை மிஞ்சியவர்கள் இன்று இல்லை என்பதை நினைவுறுத்துகிறேன். நம்முடைய பலம் நமக்கே தெரியவில்லை. இச்சமயத்தில் படைகளில் சேர்ந்திருக்கும் ஆள் பலம் சோவியத் வட்டாரத்தில்தான் அதிகம்; மிகவும் அதிகம்; என்ன கேடு விளையுமோ என்று நினைக்கக் கூடிய அளவுக்கு அதிகம், உண்மைதான். நல்ல பயிற்சி பெற்றவர்கள், வேண்டிய ஆயுதங்கள் தரித்தவர்கள், நம்பத் தக்கவர்கள் **64,00,000** வீரர்கள், கிரெம்லின் நினைத்தால் அணி வகுத்து அமர் புரிய வந்துவிடலாம். இவர்களுக்கு எதிராக இன்று போரிடக் கூடிய படையெல்லாம் அரை குறையாகப் பயிற்சி பெற்றவர்கள், போதிய ஆயுதம் இல்லாதவர்கள்,

ஆனல் நம்பத்தக்கவர்கள் **31,75,000** வீரர்களே. ஆனால் கடற் படையில் கம்யூனிஸ்டுகளுக்கு இருக்கும் கப்பல்களின் மொத்த எடையெல்லாம் **5,00,000** டன்தான். இவற்றுக்கு எதிராகச் செல்லக்கூடிய சுதந்தர உலகக் கப்பல்களின் மொத்த எடை **60,00,000** டன். கப்பல் படை எவ்வளவு முக்கியம் என்பது மீண்டும் கொரியாவில் தெளிவாகி விட்டது. கம்யூனிஸ்டு அல் லாத உலகில் உள்ள விமானப் படையில் மொத்தம் **38,000** விமானங்கள் உள்ளன. அதாவது சோவியத் யூனியன் உப யோகிக்கக் கூடிய விமானங்களைவிட நம்மிடம் **9,000** விமானங் கள் அதிகம்.

ஆனல் மேற்கு ஐரோப்பாவை மட்டும் கவனித்தால், அது படை வலிமை மிகவும் குன்றி யிருப்பது உண்மைதான். பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஹாலந்து, மற்றுமுள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகள் எல்லாம் இன்றுதான் மீண்டும் ஆயுதந் தாங்கத் தொடங்குகின்றன. இந்நாடுகளில் இன்று அணிவகுத்து நிற்கக்கூடியவர்கள் **1,00,000** வீரர்களே ; சோவி யத் யூனியன் இன்று நினைத்தால் இவர்கள் மீது **10,00,000** வீரர்களைத் தாக்க விடலாம். மேற்கு ஐரோப்பாவிடம் **5,000** டாங்கிகள் இருக்கின்றன ; சோவியத் யூனியனிடமோ **45,000** டாங்கிகள், சோவியத் யூனியனோடு மேற்கு ஐரோப்பா போர்க் களத்தில் நிற்குமானல், பிரான்சிலும் இத்தாலியிலும் தொழிற் சாலைகளும் செய்திப் போக்கு வரத்தும் வாகனப் போக்குவரத் தும் சீர்குலைந்து வேலை கெடும்படியாகக் கம்யூனிஸ்டு ஐந் தாம் படைகள் சதி செய்ய இடமிருக்கிறது.

பின் ஏன் இதுவரை ரஷ்யர்கள் மேற்கு ஐரோப்பாமீது படையெடுக்கவில்லை என்று கேட்கலாம். அல்லது நம்முடைய படை வலிமை இன்று மிகவும் குன்றியிருப்பதால் இப்பொழுதே படையெடுக்க அவர்கள் திட்டமிடுகிருர்களா என்றும் வினவலாம். ஐரோப்பா முழுவதிலும் நான் இக் கேள்விகளுக்கு விடை என்ன என்று காண முயன்றேன். சர்ச்சிலைக் கேட்டேன் ; பெவினையும் கேட்டேன். ஹாலந்து நாட்டின் டர்க்ஸ்டிக்கரைக்

(Dirk Stikker) கேட்டேன்; இத்தாலி நாட்டின் கைசெப்பெல்லா (Giuseppe Pella) வைக் கேட்டேன்; பெல்ஜியத்தில் பால் வான்ஸீலண்டைக் (Paul Van Zeeland) கேட்டேன். இன்னும் சில காலத்துக்கு செஞ்சேனை படையெடுத்து வராது என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்கள் கூறும் காரணங்கள் பலவிதமானவை.

முதலாவது காரணமாக யாவரும் எண்ணுவது—சர்ச்சில் முக்கியமாகக் கூறியதும் இதுதான்—நம்முடைய அணுக் குண்டுகளும், நாம் ஜலவாயுக் குண்டு கண்டுபிடிப்பதில் அடைந்து வரும் பெரிய முன்னேற்றமுமாகும். கொரியாவில் ஆக்கிரமிப்பு தலை தூக்கியதும் ஐ. நா. உடனே அங்கு அதை எதிர்த்து நின்றதை, நான் கண்டு கேட்ட எல்லோரும் தக்க காரியம் என்று வரவேற்றனர். மேற்கு ஐரோப்பாவுக்குள் நுழைந்தால் உலக யுத்தமே வந்து விடும் என்பதை நன்றாக உணர்ந்திருக்கிறது கிரெம்லின்.

கிரெம்லின் மேற்கு நோக்கி அசையாமல் இருப்பதற்கு நமது ஆயுதங்கள் மட்டும் காரணம் அல்ல. நம்மைவிட ஐரோப்பியர்களுக்கு ரஷ்யரின் மனம் நன்றாகத் தெரியும். அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். உலக மக்களின் அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாதிருப்பதற்குக் கிரெம்லின் அஞ்சுகிறது என்று இந்த ஐரோப்பியர்கள் உணர்த்துகிறார்கள். மேற்கு ஐரோப்பாமீது படையெடுத்தால் சுதந்தர உலகம் எல்லாம் ஒன்று சேர்ந்து விடாதா என்று கிரெம்லின் உணர்ந்திருக்கிறது. இவ்வாறு ஒன்றுபட்ட சுதந்தர உலகைப் பின்னால் பிளவுபடுத்த முடியவே முடியாது என்பதும் கிரெம்லினுக்கு நன்கு தெரியும். இப்பொழுது ஆசியாவில் விடுதலையளிப்பவர்களாகவும் தேசியவாதிகளாகவும் திரியும் கம்யூனிஸ்டுகளை, சோவியத் யூனியன் மேற்கு ஐரோப்பாவில் 'பச்சை வெட்டான' ஆக்கிரமிப்பில் இறங்கியிருக்கும்போது, யார் செவி கொடுத்துக் கேட்பார்கள்? சோவியத்தின் ஏகாதிபத்திய வெறி மேற்கு ஐரோப்பியப் போர்க்களத்தில் விளங்கிவிட்ட பிறகு, இந்தியர்களும் பாக்கிஸ்

தாண்யர்களும் பர்மியர்களுமான பலர் கம்யூனிஸ்டுச் சூழ்ச்சி களை முன்போல் சகித்துக்கொண்டிருப்பார்களா ?

தற்சமயத்துக்கு ஒரு பெரிய யுத்தம் தேவையில்லை என்பதும் சோவியத் ஆட்சியாளர்களின் கருத்து என்று ஐரோப்பியர்கள் சொல்லுகிறார்கள். முதலாளித்துவ உலகில் அடிப்படையான போராட்டங்களும் முரண்பாடுகளும் உள்ளன ; அதனால் அவ் உலகம் தானே அழிந்து விழுந்துவிடும் என்று தானே மார்க்ஸ் எழுதிவைத்திருக்கிறார் ; அதையே தான் இன்னும் கிரெம்லின் தலைவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்களாம்.

நமது பொருளாதாரம் **1946**-ல்—இல்லை. **1948**-ல், இல்லை **1949**-ல் நிச்சயம் சீரழிந்து குடி முழுகப்போகிறது என்று ரஷ் யாவில் சில அரசியல் வாதிகள் சோதிடம் கூறினார்கள். அவர் கள் ஒரு வேளை இன்று சிறையில் இருக்கலாம். அவர்கள் கூறியது ஒன்றும் பலிக்கவில்லை. ஆனாலும் பொறுத்திருந் தால் நிச்சயம் முதலாளித்துவ உலகம் நொறுங்கி வீழ்வதைக் காணலாம் என்று மாஸ்கோ நம்புகிறது. இறுதியில் தங்க ளுக்கே வெற்றி ஏற்படும் என்பது அவர்களுக்கு உறுதியாகி விட்டதாம். ஆனால் சோவியத்தின் சேனை மேற்கு ஐரோப் பாவைப் பாழ் செய்து போகும்போது அதன் பின்னே எதிர்ப் புக் கிளர்ச்சிகள் பல முனைந்தெழுந்து தொந்தரவு கொடுக்குமே, அவற்றையெல்லாம் அடக்கி ஒடுக்கிவிடத் தன்னிடம் போதிய பயிற்சி பெற்ற ஆள் பலம் இருக்கிறதா என்பதில் கிரெம்லி னுக்கு உறுதியில்லை. மேலும், மேற்கத்திய வாழ்க்கையின் இன்னலங்களை சோவியத் வீரர்கள் தெரிந்துகொள்ளும்படி மீண்டுமொரு முறை விட்டு வைக்கக் கிரெம்லினுக்கு அப்படிப் பட்ட ஆசை ஒன்றும் வந்துவிடவில்லையே !

இரண்டாவது உலக யுத்தம் நடந்துகொண்டிருந்தது. சோவியத் எல்லைக்கு மேற்கேயுள்ள நாடுகளில், அவை யுத்தத் தால் அழிவுற்றுக் கிடந்தபோதும்கூட, வாழ்க்கைத் தரம் எவ்வ ளவு உயர்வாக இருந்தது என்பதை சோவியத் வீரர்கள்

கொஞ்ச காலத்துக்குத்தான் கவனிக்க முடிந்தது; ஆனால் மேற்கத்திய நாடுகளின் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அவர்கள் நன்ருக உணர்ந்துகொண்டார்கள். தங்களுடன் சேர்ந்து நின்று போர் புரிந்த அமெரிக்க வீரர்களிடம் இருந்த கைக் கடிகாரங்களும், உணவும், உடையும், "சாக்கலெட்டு"களும், "சிகரெட்டு"களும், சம்பளச் "செக்"கும் பார்த்துப் பார்த்து சோவியத் வீரர்களுக்குத் தங்கள் கண்களேயே நம்ப முடியவில்லே.

மேலும் ஹிட்லரும் முஸோலினியும் அழிந்ததற்குக் காரணம் என்ன? சுதந்தர நாடுகளின்மேல் படையெடுத்துப் பெரிய யுத்தத்தைத் தொடங்கிவைத்தே தங்கள் முடிவை அவர்கள் வரவழைத்துக் கொண்டார்கள் என்பதை ஸ்டாலின் நன்ருக அறிவார். முன்னல் அவ்வாறு அழிவு ஏற்பட்டிருக்கும் போது, இனி அவ்விதம் வராது என்று யார் சொல்ல முடியும்? இப்பொழுதே எதுர்ப்பு வராது என்று சொல்வதற்கும் இல்லேயே. ஆகவே ஸ்டாலின் இதுவரை செய்துவரும் சூழ்ச்சிகளே கவனித்தால், பெரிய யுத்தத்தைத் தாமே கிளப்பி விடுவார் என்று கருத வழியில்லே. யுத்தத்திற்குப் பிறகு தமது ஸ்தானிகராக ரஷ்யாவிலிருந்த ஏவரில் ஹாரிமனிடம் (Averell Harriman) "ஒரு நீண்ட போரில் சிக்கிக் கொண்டதே ஹிட்லர் செய்த பெரிய தப்பிதமாகும்" என்று ஸ்டாலினே கூறியிருக்கிருர்.

இவ்வாறு நாம் எண்ணிக்கொண்டே போகலாம். அதனல் மூன்ரும் உலகப் போரை ரஷ்யர்கள் தொடங்கவே மாட்டார்கள் என்று உறுதி கூறிவிட முடியாது. அந்தக் காரணங்களே வைத்துக்கொண்டு நாம் கவலேயற்றுச் சும்மா இருக்கவும் முடியாது. ஆனல் அக் காரணங்கள் நம்பிக்கை ஊட்டுகின்றன; இனிச் சில ஆண்டுகளுக்கு நமது பாதுகாப்புப் படை வலிமையைப் பெருக்கி வைத்துக் கொள்ள இடமிருக்கிறது என்ற நம்பிக்கைதான் அது. இவ்வாறு படை வலிமை பெருகி நிற்குமானல், செஞ்சேனே போரில் இறங்கத் துணியாது. 1953-க்குள்

அமெரிக்காவிடம் முப்பது முதல் நாற்பது லட்சம் வீரர்கள் ஆயுதம் தாங்கித் தயாராக நிற்க வேண்டும் என்பது சிறந்த ராணுவத் தலைவர்களின் கருத்து. இந்தப் படைக்குப் பின்னால் மூலபலமாக ஏராளமான படைகளும், ஆயிரமாயிரம் கப்பல்களும், நூற்றுக் கணக்கான விமானப் படைகளும் ஆதர வாக இருக்க வேண்டும். யுத்தம் மூண்டால் ரைன் நதிக்குக் கிழக்கே குறைந்தது மூன்று மாதத்துக்காவது செஞ்சேனையைத் தடுத்து நிறுத்தி வைக்கக்கூடிய பலம் ஐரோப்பாவுக்கு இருக்க வேண்டும்; அப்படியானால்தான் பெரியதோர் அமெரிக் கப் படை அங்கு வந்து குவிந்து சோவியத் சேனையை முறியடிக்க வகை கிடைக்கும். இதற்கு ஐரோப்பாவுக்குக் குறைந்தது 50 'டிவிஷன்' களாவது இருக்கவேண்டும். இதற்கு நம் உதவி அவசியம். ஐ.நா.வின் பாதுகாப்புப் படையும் 5 டிவிஷன் அளவாகப் பெருகுவதற்கும், அப்படையை வேண்டிய சமயம் வேண்டிய இடத்துக்குக் கொண்டுபோகத் தக்க வசதி இருப்ப தற்கும் நாம் அடுத்து முயலக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதற்கெல்லாம் பணம் வேண்டும். குறைந்தது அடுத்த மூன்று ஆண்டுகளுக்காயினும் ஆண்டுதோறும் 5,000 கோடி டாலர் செலவு செய்ய வேண்டியதிருக்கும். ஐரோப்பாவுக்குப் பரஸ்பரப் பாதுகாப்பு உதவித் திட்டத்தின்படி 400 முதல் 600 கோடி டாலர் வரை செலவாகும்; ஆசியாவுக்கும் 100 கோடி டாலரோ அதற்கும் மேலாகவோ உதவியளிக்க வேண்டியிருக்கும். இந்தச் செலவுகளையும் மேலே சொன்ன 5,000 கோடி டாலர் கணக்கில் சேர்த்திருக்கிறேன். ஜார்ஜ் வாஷிங்டன் அன்று "தற் காப்பு நிலை" என்று கூறினார்; அந்த நிலையை நாம் இன்று மேற்கொள்ள வேண்டுமானால் மேலே நான் குறிப்பிட்டபடி பணத்தைச் செலவழித்துத்தான் ஆகவேண்டும். ஒன்று, எதிரி நம்மைத் தாக்கவே துணியக் கூடாது; அப்படியே துணிந் தாலும் அவனை வெற்றி பெற விடக்கூடாது. இந்தக் கருத் தோடுதான் அவர் "தற்காப்பு நிலை" என்று சொன்னது. இந்த ஐயாயிரம் கோடி டாலரில், பெருகிய நமது படைகளுக்கு

வேண்டிய புதுத் தளவாடங்களைக் கொடுப்பதற்கே 1,500 கோடி டாலர் செலவாகிவிடும். ஆனால் இந்தத் தளவாடங்களில் பெரும் பகுதியை அடிக்கடி மாற்ற வேண்டியது இராது; நெடு நாளைக்கு அவை பயன்படும். ஆகவே, மூன்று ஆண்டுகள் வரைக்கும்தான் ஆண்டுதோறும் 5,000 கோடி டாலர் செலவழிக்க வேண்டியதிருக்கும். அதன் பிறகு " தற்காப்பு நிலை " ஏற்பட்டவுடன், ஆண்டுதோறும் 2,000 அல்லது 2,500 கோடி டாலர்வரை செலவழித்தால் போதும்; நிலை நிற்கக்கூடிய சமாதானம் நிலவும்வரை இவ்வாறு செலவழித்துக்கொண்டேபோக வேண்டியதிருக்கும்.

நாம் தற்காப்புக்காக இவ்வளவு பெரிய தொகையைச் செலவிட்டால், அதை நமது பொருளாதாரம் தாங்குமா? நமது நாட்டின் மொத்த உற்பத்தி என்ன? நாட்டின் மொத்த உற்பத்தி 1950-ல் 27,900 கோடி டாலர். இதில் நாம் தற்காப்புக்காகச் செலவிடும் தொகை அளவு கடந்ததாக இருக்கக் கூடாது. ராணுவத்துக்காக அளவு கடந்து செலவு செய்து கொண்டே போனால் நாளடைவில் நமது பொருளாதாரம் சீர் குலைந்துவிடும். அதனால் மிகுந்த பணவீக்கமும் எல்லாவிதமான கட்டுப்பாடுகளும் ஏற்படும் என்பதை முன்பே உணர்த்தியிருக்கிறேன். ஆகவே அமெரிக்காவின் பொருளாதாரம் சுதந்தரம் அளிக்கும் பொருளாதாரமாக இருக்க வேண்டுமானால் தற்காப்புச் செலவுகளை மட்டோடு வைத்துக்கொள்வது இன்றியமையாதது. அப்பொழுதுதான் முன்போல் நமது பொருளாதாரத்தின் உற்பத்தி வளம் குன்றாமல் வளர முடியும். சுதந்தரமானதும், விரிவடைவதுமான பொருளாதார முறையே நமது உற்பத்திப் பெருக்கத்திற்குக் காரணம்.

நான் குறிப்பிட்டிருக்கும் அளவுக்கு தற்காப்புச் செலவுகளை மட்டுப் படுத்திக்கொண்டு, மூன்று ஆண்டுகளுக்கு அப்புறம் அதையும் குறைத்துக்கொண்டால், நமது பொருளாதாரத்துக்கு கேடு வராது என்பது என் கருத்து. ஆனால் இவ்வாறு மட்டோடு செலவழிக்க வேண்டுமானால், படைத் தொழிலைப் பற்றிய

நமது எண்ணங்கள் சற்று மாறவேண்டும். இன்றைக்கு நமது நாட்டில் ஒரு சாதாரணப் படை வீரனுக்கு நாளொன்றுக்கு மூன்று டாலர் கிடைக்கிறது; மேற்கொண்டு வைத்திய உதவி முதலியவைகளுக்காகப் படியும் உண்டு. அவனுக்கு அவையெல்லாம் தேவைதான்; இல்லையென்று கூறவில்லை. ஏனெனில், இன்று படைகளில் இருப்பவர்களில் பலர் தாங்களே தான் தங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும் பொருள் தேடிக்கொள்ள வேண்டியவர்களாகியுள்ளனர். ஆனால் கம்யூனிஸ்டு ஆக்கிரமிப்பு வராத வண்ணம் தடுத்து நிற்கவேண்டுமானால் நம்மிடம் தரைப் படை வீரர்களும், கடற்படை வீரர்களும், விமானிகளுமாக 30 லட்சம் வீரர்கள் சண்டைக்குத் தயாராக இருக்க வேண்டுமே. அவர்கள் எல்லோருக்கும் தலைக்கு மூன்று டாலராகக் கொடுக்க முடியும் என்று நினைக்கவே வேண்டாம். அதிலும் கர்னல்களுக்கு வருஷத்துக்கு எண்ணாயிரம் டாலர் கொடுத்து வருவது முடியவே முடியாது. இவ்வாறு கொடுத்துக்கொண்டே வந்தால் வருஷத்துக்கு 2,000 அல்லது 2,500 கோடி டாலர் என்ற அளவோடு நிற்பது முடியாத காரியமாகிவிடும். இந்த அளவுக்கு மீறிச் செலவழித்தால் நாடு தாங்காது. பின், இதற்கு வழி என்ன? எல்லோருக்கும் படைப் பயிற்சி என்ற முறையைத்தான் நாம் கைக்கொள்ள வேண்டும்; அது ஒன்றே வழி. அமெரிக்காவில் 18 வயது வந்த ஆடவர் எல்லோரும் குடும்பப் பாரம் தாங்குவதற்கு முன்பாக இரண்டு ஆண்டுகளுக்கு இராணுவ முகாம்களில் போயிருந்து பயிற்சி பெற வேண்டும். அவர்களை அங்கே நன்றாகக் கவனித்து, நல்ல உணவும் உடையும் அன்றாடச் சில்லரைச் செலவுக்கும் போதிய பணமும் (ஒரு நாளைக்கு ஒரு டாலர் என்று வைத்துக் கொள்ளுங்களேன்) கொடுக்க வேண்டும். (துருக்கியில் ஒரு படை வீரனுக்கு மாதத்துக்கு ஒரு டாலர் கிடைக்கிறது; கலியாணமாகாத பிரெஞ்சுக் கர்னலுக்கு மாதம் 200 டாலர்தான்.) இருபதாவது வயதில் வீட்டுக்குப் போக உத்தரவு கொடுத்ததும் இந்த இளைஞர்கள் முன்போல் தங்கள் வேலைகளைப் பார்க்கவோ கல்லூரிகளுக்கோ போவார்கள்.

ஆனால் எந்நேரமும் நமது படைகளுக்குப் பின்னால் இவர்கள் ஒரு பெரும் மூல பலமாக இருப்பார்கள் அன்றோ ? மேலும், இத்தகைய இராணுவப் பயிற்சி பெற்றவர்கள் நாட்டில் இருக்கும்போது, இராணுவ உடையில் இருக்கும் வீரர்களின் எண்ணிக்கையும் நாளடைவில் குறைத்துக்கொள்ள வழி கிடைக்கும். பட்டாளத்தை வைத்துச் செலவு செய்ய வேண்டியது குறையும்.

படையென்றால் வெறுப்புக் கொள்ளும் அமெரிக்கர்களுக்கு அமைதிக் காலத்தில் போருக்காக இவ்வளவு ஆர்ப்பாட்டம் ஏனென்று தோன்றும். ஆனால் நமக்கு வரக் காத்திருக்கும் கேடு எப்படிப்பட்டது என்று உணர்வோமானால், தயங்க மாட்டோம். சுகமும் போகமும் துறந்து வாழ இணங்காவிட்டால் நாமும் பிழைக்க மாட்டோம் ; நமது சுதந்தர நோக்கமும் பிழைக்காது.

நாட்டின் வருமானத்தில் ஒரு பெரும் பகுதியை நாம் மட்டும்தான் படைகளுக்காகச் செலவிடுவோம் என்றும் எண்ண வேண்டாம்.

சமாதானத்துக்காகத் தோள் கொடுத்து நிற்க வேண்டுமானால் மேற்கு ஐரோப்பியர்களும் ஏராளமாகச் செலவு செய்ய வேண்டியதிருக்கும். அவர்கள் போதுமான தற்காப்பு வலிமை பெற வேண்டுமானால், தங்கள் சொந்தப் பணத்திலிருந்தே **1951-52**-ல் சுமார் **1,200** அல்லது **1,300** கோடி டாலர் செலவழிக்க வேண்டும்.

ஐரோப்பாவும் நன்னிலையடைந்து வருகிறது. முன் போல் அதன் தொழிற்சாலைகளில் தொழிலொளி கேட்கத் தொடங்கி விட்டது. ராணுவத் தளவாடங்கள் அவற்றில் உற்பத்தியாகும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. மார்ஷல் திட்டம் இல்லாதிருந்தால், மேற்கு ஐரோப்பாவிலுள்ள நமது நண்பர்கள் பலனளிக்கக் கூடிய வரையில் படை உடை தரிப்பது அரிதிலும் அரிதாகியிருக்கும். ஐரோப்பாவின் பொருளாதார நிலைமை முற்றிலும் நல்லபடியாவதற்கு என்னென்ன உதவி வேண்

டுமோ அவற்றை முன் போல் தொடர்ந்து செய்ய நாம் கடமைப் பட்டிருக்கிறோம் என்பது இதனாலும் விளங்கும். பொருளாதாரம் சீர்குலையாமல் இருப்பதற்கும் அதைப் பற்றிப் பயம் ஏற்படாமல் இருப்பதற்கும் நாம் மேற்கு ஐரோப்பாவுக்கு உதவி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்துகொள்வது நலம். நமது உதவி தளர்ந்தால் அவர்களுடைய திட்டங்களும் பாதியில் நிற்கும்; தொழிற்சாலைகள் பாதி முடிந்தும் முடியாமலும் நிற்கும்; அவர்களுடைய படை பலமும் வளர்ச்சியின்றிப் பாதியில் நிற்கும். பொருளாதார ஆற்றல் இருந்தாலொழிய படையாற்றல் இல்லை என்பதை ஏன் சிலர் கண்டு பிடிப்பதில்லை என்பது எனக்கு பெரிதும் வியப்பாகவே இருக்கிறது. மற்றப்படி புத்திக் கூர்மையுள்ளவர்களும், டாங்கிகள் விமானங்கள் பீரங்கிகள் எல்லாம் மந்திரத்தால் மாங்காய் விழுவது போலக் கிடைத்து வருகின்றன என்று எண்ணுகிறார்கள்! போர் முனைக்கு ஆதரவு தொழில்முனை என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் ஸ்டாலினுக்கு அவ்வாறு தெரியாமல் போகவில்லையே. "போரை வெல்வது உற்பத்தி" என்பது அவருடைய பொன் வாக்குகளில் ஒன்றன்றோ?

ஐரோப்பா ஆயுதங்களை உற்பத்தி செய்து கொள்ளவா மார்ஷல் திட்ட உதவி ஏற்பட்டது என்று கேட்கலாம். இல்லை. உலகில் பொருளாதாரம் நிலையாகிச் செழித்து வளரவேண்டும்; அதற்கு முதற்படியாக, ஐரோப்பா முழுவதினுடைய பொருளாதாரமும் நிலையாகிச் செழித்து வளரவேண்டும்; இதற்கான வகை செய்ய வேண்டும்—என்ற இந்த நோக்கத்துடன்தான் மார்ஷல் திட்டம் உருவாயிற்று. ஆனால் மார்ஷல் திட்டத்தோடு ஒத்துழைக்க சோவியத் மறுத்ததிலிருந்து, மார்ஷல் திட்ட உதவி மேற்கு ஐரோப்பாவுக்கும் கம்யூனிஸ்டு அல்லாத இடங்களுக்கும் மட்டுமே கிடைத்துவரலாயிற்று. அண்மையில், சோவியத்தினுடைய போர்க்கோலம் தெள்ளத் தெளிய வெளியாகிவிட்டதால், தற்காத்துக் கொள்ள வேண்டுமே என்ற ஒரே எண்ணத்தோடு மற்றச் சுதந்தர நாடுகளைப்போலவே மேற்கு

ஐரோப்பிய நாடுகளும் தற்காப்புத் தளவாடங்களை உற்பத்தி செய்யத் தொடங்கி விட்டன. வேறு வழியில்லை. இவ்வாறு தக்க • பாதுகாப்புடைய இராணுவ அரணை வளர்த்துக்கொள்வ தற்கு மார்ஷல் திட்டம் எவ்வளவு உதவியாக இருக்கிறது என்பதைக் கண்டு கொள்ளவேண்டுமா ? அண்மையில் பிரஞ்சு நாடு புதிதாகக் கண்டு பிடித்திருக்கும் ஒருவகை பீரங்கி யிருக் கிறது. அதைக் கேளுங்கள். தானே இயங்கக் கூடிய இப் பீரங்கியைச் செய்ய எஃகும், ஈயமும், பெட்ரோலும், "பால் பேரிங்கு"களும் தேவை ; இவை கிடைப்பதற்குப் பலவிதத் தொழிற்சாலைகளும், நிலக்கரிச் சுரங்கங்களும், ரயில் பாதைக ளும், வண்டிகளும் இன்னும் பற்பல சாமான்களும் தேவை. அவை கிடைக்க மார்ஷல் திட்டம் தேவை.

எஃகை வைத்துப் பேசுவோமே. 1945-ல் பிரான்சிலும் சார் (Saar) பிரதேசத்திலும் எஃகு உற்பத்தி 15,00,000 டன்களாக குறைந்து விட்டது ; இன்று மார்ஷல் திட்ட உதவி காரணமாக, எஃகு உற்பத்தி அங்கு 1,00,00,000 அல்லது 85,00,000 டன் அதிகமாகக் கூடியிருக்கிறது ; மற்றச் சாமான்களோடு பீரங்கி கள் செய்யவும் பிரான்சுக்கு அது அதிகமாகக் கிடைக்கிறது. இதேபோல், 1950-ல் பிரான்ஸ் மோட்டார் கார்களும் லாரிகளுமாக ஏறக்குறைய 3,50,000 வண்டிகள் செய்தது ; யுத்தத்திற்கு முன்பு இதிலும் பாதியே பிரான்ஸ் உற்பத்தி செய்ய முடிந்தது என்பதை நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். இவ்வாறு கூடுதலான கார்கள் செய்யக்கூடிய தொழிற்சாலை களை பீரங்கிக்கு வேண்டிய பொறிகளையும் வண்டிகளையும் செய் யும்படி மாற்றி விடலாம். அதே போல், மார்ஷல் திட்ட உதவி யுடன் ஹாட்சவாய் (Haute-Savoie) என்ற இடத்தில் அமைக்கப் பட்ட புதிய தொழிற்சாலை அந்த பீரங்கிக்கு வேண்டிய "பால் பேரிங்கு"களையும் செய்ய முடிகிறது. மேலும் மார்ஷல் திட்ட உதவியுடன் பிரான்ஸில் "டயர்" உற்பத்தியும் இரு மடங்காகி யுள்ளதால் அந்த பீரங்கிக்கு வேண்டிய பெருத்த "டயர்" களையும் செய்ய முடிகிறது. மார்ஷல் திட்ட உதவியால்

மொராக்கோவில் பிரான்ஸ் கனி வளத்தை விருத்தி செய்து வருஷந்தோறும் **85,000** டன் ஈயமும், **1,20,000** டன் துத்தநாகமும் உற்பத்தி செய்ய முடிவதும் அந்த பீரங்கி செய்வதற்கு உதவியே. இதேபோல் தானே இயங்கும் அந்தப் புதுவித பிரெஞ்சு பீரங்கி செய்வதற்கு மார்ஷல் திட்டம் ஒவ்வொரு துறையிலும் பேருதவி செய்திருப்பதைக் காணலாம்.

மேற்கு ஐரோப்பாவின் மற்ற நாடுகளைப் போலவே பிரான்சும் புதிய படை வலிமை சிறந்து விளங்குவது மார்ஷல் திட்டத்தின் நினையாத ஒரு நற்பலன் என்று கூறுவதில் தடையில்லை.

படை வலிமை சிறந்தது சரிதான்; போர் புரிவதற்கு ஐரோப்பியர்களுக்கு உறுதியிருக்கிறதா என்று கேட்கலாம். இதைப்பற்றிப் பெரும்பாலான அமெரிக்கர்கள் கவலைப்படுகின்றனர். எனக்கும் கவலையே. ஒரே தலைமுறையில் இரண்டு போர்கள் வந்து அந்த உறுதியைத் தின்றுவிடவில்லையா? **1919**-இருந்து உள்நாட்டுக் குழப்பமும், நாஜியாட்சியும், பாஸிஸ ஆட்சியும், கம்யூனிஸமும், எல்லாவற்றுக்கும் மேலாக எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின்மையும் ஐரோப்பியர்களது உறுதியையெல்லாம் அரித்துத் தின்றிருக்கின்றனவே.

அமெரிக்கா, சோவியத் யூனியன் என்ற அரக்கர்கள் இருவரிடையே தாங்கள் அகப்பட்டுக்கொண்டதாகப், பல்லாயிரக்கணக்கான மேற்கு ஐரோப்பியர்கள் எண்ணுகின்றனர். தங்கள் பூமி போர்க்களமாகவா போக வேண்டும் என அவர்கள் மாள்கின்றனர். ஆகவே தலை நிமிர்ந்து நிற்க உதவாத "நடு நிலைமைக்" கொள்கையைத் தழுவுவதே சிறந்தது என்று பிரான்சிலும் மற்ற இடங்களிலும் அவர்கள் நிலைக்கமாட்டார்களா என்று கேட்கலாம்.

இதை நினைக்க நினைக்கக் கவலைதான் ஏற்படும். இத்தகையக் கேள்விகளுக்கு விடை காண நான் நார்வே முதல் துருக்கி வரையில் அலசிப் பார்த்தேன். முடிவான விடை எதுவும் கண்

டேன் இல்லை. ஆனால் ஒன்றுமட்டும் உறுதி: புது ஆக்கிர மிப்பைத் தொடங்குவதற்கு ஐரோப்பியர்கள் ஒருவர் கூட—ஜெர்மனியின் பிரஷியப் பிரபுக்கள் கூட—விரும்பவேயில்லை; ஆக்கிரமிப்பைத் தொடங்க அவர்கள் அனைவருக்கும் அருவருப்பே. ஆறு ஆண்டுகளாகப் பெரும் போர் நடந்து அதன் இறுதியில் **1945**-ல் ஐரோப்பா சீரழிந்து கிடந்த நிலைமையை அறிந்தவர்களுக்குத் தெரியும் அவர்களுடைய மனநிலை.

ஆக்கிரமிப்பை எதிர்ப்பதென்றாலோ, அது வேறு காரியம். சோவியத் வட்டாரத்துக்கு அருகிலேயே இருக்கும் ஐரோப்பியர் களில் மிகக் கூடுதலான பெரும்பான்மையோர் தங்கள் தாய் நாட்டுக்காகப் போர் புரிந்து உயிர் விடவும் தயார் என்பதை நான் உங்களுக்கு அறுதியிட்டுக் கூற முடியும். அவர்களுக்கு இதைப் பற்றி மயக்கம் எதுவும் கிடையாது. கிரெம்லின் தங் கள் நாட்டைக் கைப்பற்றுமானால், தாங்கள் அடிமைகளாகி, வாழ்வும் அலங்கோலமாகிவிடும் என்பதை அவர்கள் அறி வார்கள். அதை விட உயிர் துறப்பதே மேல் என அவர்கள் எண்ணுகின்றனர். தளராத இந்த உறுதி கிரீஸிலும், துருக் கியிலும், மேற்கு பெர்லினிலும், நார்வேயிலும் நிலவுவதை நான் கண்டேன். அவ்வாறே பின்லாந்து மக்களும் உறுதி பூண்டு நிற்கிறார்கள் என்பதை, நம்பக் கூடியவர்களிடமிருந்து நான் கேட்டறிந்தேன். ரஷ்யக் கரடியின் தோலில் தொல்லைக் கொடுத்துக்கொண்டே யிருக்கும் உண்ணி பின்லாந்துதான். "கம்யூனிஸத்தை வெறுக்கிறார்கள்; வெறுக்கிறதாகவும் காட் டிக்கொள்ளுகிறார்கள்; சோவியத் வல்லரசின் பக்கத்திலேயே இருக்கிறார்கள்; கம்யூனிஸ்டு மந்திரிகளைப் பதவியிலிருந்து துணிந்து நீக்கியிருக்கிறார்கள்: எப்படி இந்த பின்லாந்துக் காரர்கள் தங்கள் சுதந்தரத்தை இழந்து விடாமல் காப்பாற்ற முடிகிறது?" என்று ஒரு நார்வே மந்திரியிடம் கேட்டேன்.

"ரஷ்யர்கள் பின்லாந்தை விழுங்கி விடலாம்; விழுங்கி விட்டால் வயற்றில் அஜீரணம் உண்டாகாமல் இருக்கவேண் டுமே. அதுதான் முடியாது. இதை ரஷ்யர்கள் அறிந்திருக்கி

ருர்கள் ; அதனுல்தான் பின்லாந்தை அவர்கள் தொடுவதில்லை " என்ருர் அவர்.

பின்லாந்தைப்போலத் தொடமுடியாதபடி அவ்வளவு கடினமான நாடு ஐரோப்பாவில் வேறே இல்லை என்னலாம். ஆனுல் அடிமைகளாக வாழ்வதிலும் குண்டு பாய்ந்து இறப்பதே மேல் என்று எண்ணும் மக்கள் ஐரோப்பா நெடுகிலும் கோடிக் கணக்கானவர் உளர். யுத்தத்தைத் தடுக்க யுத்தம் தொடங்குவது என்ற பெரும் பிழையை அமெரிக்கா செய்து விடாது என்றும், ஒன்றுபட்ட மேற்கத்திய நாடுகளைக் கண்டு கிரெம்லின் ஓர் ஆக்கிரமிப்புப் போரில் இறங்காது என்றும் அவர்கள் அனைவரும் திண்ணமாக நம்புகிருர்கள ; அந்த நம்பிக்கையை நாம் காப்பாற்றவேண்டும்.

●

நம்பிக்கை கொள்ளவும் இடமுண்டு. படை வலிமையைப் பெருக்க வேண்டும், போரைத் தடுப்பதற்கே அதைப் பயன்படுத்த வேண்டும் என்று நாம் கூறுவதில் உண்மை இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளுவதற்கு ஜார்ஜ் மார்ஷல் நமது பாதுகாப்பு மந்திரியாக நியமனமானதே ஒரு பெருந் துணையாகும். இரண்டாவது உலக யுத்தத்தில் அவர் தலைமை தாங்கி விளங்கியது அவர்களுக்கு நன்ருக மனத்தில் பதிந்துள்ளது. பொதுப்பட ஒரு பெரிய தற்காப்புப் படையை வளர்த்து நிலைநிறுத்துவதற்கு வேண்டிய இராணுவத் திறமை அவருக்கு உண்டு என்பதை அவர்கள் நன்கு உணர்வார்கள். அதேபோல், சமாதானத் திட்டமாகிய மார்ஷல் திட்டத்தை உருவாக்கியவர் இவர் என்ற பெருமதிப்பும் அவர்களுக்கு அவர்பால் உண்டு. உள்நாட்டில் கம்யூனிஸ்டு ஆக்கிரமிப்பு தலை தூக்கி விடாதபடி தடுக்கப் பொருளாதார ஆற்றல் வளரும்படி மார்ஷல் திட்டத்தை உருவாக்கிய இவர், நாட்டுக்கு வெளியிலிருந்து வரும் கம்யூனிஸ்டு ஆக்கிரமிப்பையும் தடுத்து நிறுத்த வல்ல படை வலிமையையும் உருவாக்க வல்லவர் என்று அவர்கள் மதிக்கின்றனர்.

நமது படை வலிமையையும் வளர்த்து, பொருளாதாரத் துறையிலும் இராணுவத் துறையிலும் ஐரோப்பாவுக்குத் தொடர்ந்து உதவியளித்து, ஒவ்வொரு சமயமும் ஜனாதிபதி ட்ரூமன் தவருமல் சொல்லி வருவதுபோல், நமது நோக்கம் சமாதானமே என்று தெளிவுபட அறிவித்து வருவோமாஞல், ஐரோப்பியர்கள் நம்முடன் தோள் கோத்து நிற்பார்கள்; அவசியமாஞல் போரிட்டு வெற்றியும் பெறுவார்கள். இதில் சந்தேகமே வேண்டாம். என்னுடைய ஆழ்ந்த கருத்து இது.

# பொருளாதார முனையில் சமாதானம் புரிதல்

## அத்தியாயம் 6

இன்று சுதந்தரமும் எதேச்சாதிகாரமும் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கின்றன : எது வெல்லும்? சுதந்தரத்துக்கும் எதேச்சாதிகாரத்துக்கும் ஏற்பட்டுள்ள போராட்டம் உண்மையாகவே கம்யூனிஸ்டுக் கட்சி ஒற்றுமைக்கும் அமெரிக்கத் தொழில் உற்பத்திக்கும் ஏற்பட்டுள்ள போராட்டமே என்று உணர்ந்தால் வெற்றியும் தோல்வியும் எதில் அடங்கியிருக்கின்றன என்பது விளங்கும்.

இந்தப் போர் முனையில் அமெரிக்கா வகுத்துள்ள மாபெரும் வியூகம் இ. ஸி. ஏ. எனப்படும் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகமாகும். செய்துதான் பார்க்கலாமே என்று துணிந்து இறங்கிய காரியங்களில் இது மிகச் சிறந்த ஒரு நற்காரியம். இதனை நிறைவேற்றி வைக்க ஐரோப்பாவுக்காக **1,200** கோடி டாலரும் கொரியாவுக்காக **23** கோடி டாலரும், ஆசியாவில் மற்ற இடங்களுக்காக **27¼** கோடி டாலரும் என்று அமெரிக்க மக்கள் தங்கள் சட்ட சபை வழியாக ஏற்கனவே நிதி ஒதுக்கிவைத்துள்ளனர்.

எனது வாழ்க்கையில் இரண்டரை ஆண்டுகள் இந்தப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தில் இருந்தேன். அவை எனக்கு மிகவும் பயனுள்ள இரண்டரை ஆண்டுகளாயின. **1948**-ல் ஏப்ரல் மாதம் ஒரு நாள் வாஷிங்டனில் ஹோட்டல் ஸ்டாட்லர் என்ற இடத்தில் டபுள்யூ **900** என்ற அறையில்

பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் காரியாலயம் வேலை செய்ய ஆரம்பித்தது. அந்நாள் என் வாழ்க்கையிலேயே பொருள் செறிந்த ஒரு பகுதியின் ஆரம்பமாகும். நன்மை செய்வதற்கான ஊக்கம் பிறந்தது. கடக்க முடியுமோ என்று அறை கூவி அழைத்தன அநேக பிரச்சினைகள். இந்த மன உறுதியும் உணர்வும் எந்நாளும் என்னைவிட்டு அகலவில்லை. முதன் முதலில் திறமை மிகுந்தவர்களைத் தேடிப் பிடிக்க நாடு முழுவதையும் அலசினோம். பிறகு நெருக்கடியான கட்டங்கள் பல பட்ட காலிலே படும் என்றாற்போலத் தொடர்ந்து வந்தன. அதன் பின்பு எடுத்த காரியம் கனிந்து பழமாகப் பலன் தந்த நாட்களும் வந்தன. ஆனால் ஆரம்பத்தில் தோன்றிய ஊக்கமும் உணர்வும் நான் ஐரோப்பாவுக்குப் போய் விட்டுக் கடைசித் தடவையாக **1950** அக்டோபர் இறுதியில் காரியாலயத்துக்குள் நுழைந்தது வரைக்கும் என்னைத் தூண்டி கொண்டேயிருந்தன.

பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் கதை முழுவதையும் சொல்லலாம் என்று விரும்புகிறேன். எனக்கும் என்னுடன் பெருமிதத்தோடு வேலை செய்த அதிகாரிகளுக்கும், அமெரிக்க உதவியால் உறுதியும், உயிரும்கூட அடைந்த கோடிக் கணக்கான ஐரோப்பியர்களுக்கும் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் வரலாறு கேட்கக் கேட்க இனிமை தரும் கதையாகும். ஆனால் அவ்வளவையும் இங்கு எடுத்து எழுத முடியாது; வெளி நாடுகளுக்கு உதவி செய்து சமாதானத்தை எவ்வாறு நிலைநாட்டுவது என்பதற்கான சில பொதுப்பட்ட கொள்கைகளை விளக்கிக் கூறுவதற்கு மட்டுமே அந்தப் பெரிய கதையிலிருந்து சில எடுத்து உரைப்பேன்.

பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் நமக்குப் படிப்பிப்பது என்ன என்று அறிந்துகொள்ளும் முன்பு அன்றைக்கு **1948**-ல் நம்மை எதிர் நோக்கி நின்ற பிரச்னைகள் யாவை என்பதை நினைவுப்படுத்திக்கொள்வது நலம்.

**1948**-ம் ஆண்டு மேற்கு ஐரோப்பாவின் கதி அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்தது. கிரெம்லின் சூழ்ச்சிகள் காத்துக் கொண்டிருந்தன. மேற்கு ஐரோப்பா நொறுங்கி வீழ்ந்துவிட்டது என்று பிரிட்டனது அயல்நாட்டு மந்திரி எர்னஸ்ட் பெவினே கூறினார். விஷயமறிந்த பத்திரிகை நிருபர்கள் இதோ இன்னும் சில மாதங்களில் ஐரோப்பாவை சோவியத் ரீஷ்யாவின் காலடிக் கீழ் காண்பீர்கள் என்று இள வேனிற்காலம் முழுவதும் எழுதிவந்தார்கள்.

இவ்வாறு நினைப்பதற்கு எத்தனையோ உண்மையான காரணங்கள் இருந்தன. அச்சமயம் சோவியத் ஆதிக்கம் மேற்கு நோக்கி வந்து செக்கோஸ்லாவாக்கியா, போலந்து, ஹங்கேரி, ருமேனியா, ஆகிய நாடுகளை இறுகத் தழுவிக்கொள்ளவில்லையா? பிரான்சிலும், இத்தாலியிலும் ஜெர்மனியிலும் ஐந்தாம் படைக் கம்யூனிஸ்டுகள் அல்லும் பகலும் அயராது உழைக்கவில்லையா? இந் நாடுகளிலெல்லாம் கம்யூனிஸ்டுகள் வரவர வலுப்பெற்று அவர்கள் கை ஓங்கிக்கொண்டேயிருந்தது. கோடிக் கணக்கான மக்கள் வயிற்றுக்கு இல்லாமல் வேலையும் இல்லாமல் வாடியிருந்தனர். இவையெல்லாம் கம்யூனிஸ்டுகளுக்குப் பெருத்த சகாயம் அல்லவா? தொழிற்சாலைகள் உடைப் பட்டுக்கிடந்தன; முழு நேர வேலை கிடையாது. கச்சாப் பொருள்களும், இயந்திரங்களில் பழுதான பாகங்களை மாற்ற வேறு சாமான்களும் கிடைப்பது அரிதாகிப் பல சமயங்களில் தொழிற்சாலை தூங்க வேண்டியும் இருந்தது. விவசாயிகள் தங்கள் தேவைகளை மட்டுமே கவனித்துக்கொண்டனர். போக்கு வரவு சாதனங்கள் "ஓட்டை உடைச்சல்"களாக இருந்தன; பற்றுக்குறை பற்றியிருந்த பட்டண வாசிகளுக்குச் செழிப்பான இடங்களிலிருந்து உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வது இயலாத காரியமாகிவிட்டது. நாட்டில் பண வீக்கம். ஆகவே விவசாயிகள் தங்கள் தங்கள் விளைச்சலைக் கொடுத்துவிட்டு மதிப்புக் குறைந்த வெறும் " தாள் "களை வாங்கிக்கொள்ள விரும்பவில்லை. கெட்ட குடியே கெடும் என்பதற் கிணங்க கிழக்கு ஐரோப்பாவில் கிரெம்

லினைக்கண்டு அஞ்சித் தப்பியோடி வந்து அகதிகள் வேறு மேற்கு ஐரோப்பாவில் மொய்த்தனர்.

1948-ல் மேற்கு ஐரோப்பா இருந்த நிலைமை இது.

இன்று இன்னும் 3 ஆண்டுகள் ஆகவில்லை. ஆனால் மேற்கு ஐரோப்பாவின் தொழில் வளம் பெருகியிருக்கிறது. அது, போர் வரும் முன்பு இருந்ததைவிட இன்று ஏறக்குறைய ஒன்றரை மடங்கு அதிகமாயுள்ளது. எஃகு உற்பத்தி 25 சத விகிதமும், கார் உற்பத்தி 87 சத விகிதமும், நூல் உற்பத்தி மூன்றிலொரு பாகமும் அதிகம். 1950-ல் விளைச்சல் ஏராளம். ஆடு மாடு முதலியவை யுத்தத்துக்கு முன்பு இருந்ததைப் போன்று செழித்து வளரலாயின. மார்ஷல் திட்டம் வருவதற்கு முன்பு விளைந்ததைவிட 1950—51-ல் விளையக் கூடிய தானியம் நூற்றுக்கு ஒன்பது மேனி அதிகமாக இருக்கும் என்று எண்ண இடமுண்டு. மின்சார உற்பத்தியோ 95 சத விகிதம் அதிகமாயுள்ளது. பழையபடி ரயில்கள் ஓடுகின்றன. நாணய மதிப்பு மாறுமல் நிலையாக இருக்கிறது. வேலைக்கு வேளை உணவும் கிடைக்கிறது. மக்கள் தளராமல் உழைக்கின்றனர் ; அவர்கள் மெய் வருந்தி வேலை செய்வதில்லை என்று எவர் சொன்னாலும் நம்பவேண்டாம். இழந்த உறுதியை மக்கள் இவ்வாறு திரும்பவும் பெருவார்கள் என்று யாரும் நினைக்கவில்லை. சரித்திரத்தில் அவ்விதம் இதுவரை நடந்ததுமில்லை. ஆனால் அது இன்று உண்மையாகி மறு மலர்ச்சி நிகழ்ந்திருக்கிறது.

இனி வருங்காலத்துக்கு வழிகாட்டிகளாக நிற்கவேண்டிய நான்கு படிப்பினைகளை இந்த மறு மலர்ச்சியிலிருந்துதான் கண்டு உணர்ந்து எழுதுகிறேன்.

நாம் யாருக்கு உதவி செய்ய வேண்டுமென்றால், தங்களைத் தாங்களே யார் கவனித்துக்கொள்ளுகிறார்களோ அவர்களுக்கே உதவி செய்யவேண்டும். பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தைத் தொடங்கிய நாட்களிலே, திட்டங்கள் வகுக்கவும் அவற்றை

மற்றவர்களுக்கு எடுத்து விளக்கவுமாக எவ்வளவோ நெருக்கடியான வேலையிருந்தது. அந்தச் சமயத்திலும் நாம் செய்ய எடுத்துக் கொண்ட காரியம் என்ன என்பதைப்பற்றி எங்களிடையே எள்ளளவும் வேற்றுமை கிடையாது. “ஐரோப்பாவில் பொருளாதாரம் சீர்திருந்தி, அவர்கள் பிறர் கையை எதிர்ப் பாராமல் வாழ்வதற்கு வேண்டிய திட்டத்தை நமது அரசாங்கம் தானுகவே தயாரிக்க முற்படுவது பொருத்தமுமில்லை. அதனுல் பலனுமில்லை, ஏனெனில் இக் காரியத்தைச் செய்யவேண்டியவர்கள் ஐரோப்பியர்களே. ஐரோப்பாவுக்கான திட்டம் வரைவதில் ஒத்துழைக்கலாம். நமக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம் அத் திட்டத்தை நிறைவேற்ற ஆதரவளிக்கலாம். இவ்வளவே நாம் செய்யவேண்டியதெல்லாம்” என்று ஏற்கனவே ஜெனரல் மார்ஷல் ஹார்வர்டில் பேசியிருந்தார். அந்த மொழிகள் எங்களுக்கு மேல்வரிச் சட்டமாக அமைந்தன; ஐரோப்பாவைக் காப்பாற்ற வேண்டியவர்கள் ஐரோப்பியர்களே.

உதவி பெருபவர்கள்தான் அந்த உதவி பலன் கொடுக்குமாறு செய்யும் பொறுப்புமுடையவர்கள். அந்த உதவியைக் கொண்டு எப்படியெல்லாம் முன்னேற முடியுமோ அப்படி எல்லாம் பலனடையவும் அவர்களே கடமைப் பட்டவர்கள். இந்தக் கருத்துக்கு மாருகப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் ஒரு நாளும் சென்றதில்லை.

இந்தக் கருத்து காரியத்தில் நடைபெருவதற்கு ஒரு சிறந்த துணை எங்களுக்குக் கிடைத்தது. பிற நாடுகளுக்குக் கொடுக்கும் நிதி எவ்வளவோ அதற்கு நிகரான நிதியை உதவிபெரும் நாடுகளும் ஒதுக்கி வைத்து ஒத்துழைக்க வேண்டும் என்று காங்கிரஸ் சட்டமியற்றியது. பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தைச் சட்டமியற்றி இயங்கச் செய்கையில் இவ்வாறு காங்கிரஸ் ஒரு விதியையும் அதில் சேர்த்தது எவ்வளவு நன்மையாகப் போயிற்று என்பது காங்கிரசுக்கே ஒரு வேளை தெரியாமலிருக்கலாம். நம்முடைய டாலர்களைக் கவலையில்லாமல் அள்ளி வீசிவிட வேண்டாம் என்பதற்காக அவர்கள் அந்த விதியைச் சட்டத்தில்

ஏற்றிஞர்களோ அல்லது அது செய்யக்கூடிய நன்மையை உணர்ந்துதான் செய்தார்களோ எனக்குத் தெரியாது. ஆனல் அந்தச் சட்டம் இல்லாவிட்டால் நிலையில்லாத அரசாங்கம் வீற்றிருந்த ஒவ்வொரு நாட்டிலும் மார்ஷல் திட்டம் ஒரு சிறிதேனும் வெற்றி பெற்றிருக்காது என்பது திண்ணம். உறுதியான சர்க்கார் ஆட்சி புரிந்த நாடுகளிலும் அந்தச் சட்டம் பெரிதும் துணையாயிருந்தது என்பதையும் ஐயமற அறிவேன். அச் சட்டத்தின் கருத்து அதிக முக்கியமாயிற்று.

இச் சட்டம் வேண்டுவதெல்லாம் இதுதான். டாலர் உதவி பெறும் நாடுகள் தங்களுக்கு எத்தனை டாலர் கிடைக்கிறதோ அத்தனைக்கு நிகரான தங்கள் நாணயங்களையும் சேர்த்து ஒதுக்கி வைக்கவேண்டும். இந்தத் "துணை நிகர்" நிதியில் 5 சதவிகிதத்தை அமெரிக்காவுக்குக் கொடுத்துவிடவேண்டும். இச் சிறு தொகை பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தை பிற நாடுகளில் நடத்துவதற்கு ஆகும் செலவுக்கும் அதி முக்கிய பொருள்களை அமெரிக்கா சேர்த்து வைப்பதற்கும் செலவிடப்படும். மீதியுள்ள 95 சத விகிதப் பணத்தையும் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் சரியென்று கூறிய சீரமைப்புத் திட்டங்களுக்காக உதவி பெறும் நாடுகள் உபயோகித்துக் கொள்ள வேண்டும். இந்த ஏற்பாட்டினல் என்ன விளைகிறதென்றல், மார்ஷல் திட்ட உதவியினல் டாலர் கிடைப்பது மட்டுமல்லாமல் தங்கள் நாணயங்களிலேயே இருக்கும் நிதியைத் தங்கள் பொருளாதாரம் சீர்திருந்துவதற்காகப் பயன்படுத்தவும் வழி கிடைக்கிறது.

இது ஏதோ ஒரு இந்திர ஜாலம் என்று தோன்றினல் உண்மையாகவே என்ன நடக்கிறது என்பதை உற்றுக் கவனித்து விளங்க அறிந்துகொள்வோம். பிரான்சில் பஞ்சாலைத் தொழில் படுத்துவிட்டது. கச்சாப் பொருள்கள் கிடைக்க வில்லை. பருத்தியில்லை. ஆலைகளை மூடிவிட எண்ணியிருந்தனர் பிரெஞ்சு ஆலை முதலாளிகள். பிரான்சில் பருத்தி விளைவதில்லை. பிரெஞ்சு முதலாளிகளிடம் ஏராளமாகப் பணம் இருந்தது.

அவ்வளவும் பிரெஞ்சு நாணயம்—'பிராங்கு'; அமெரிக்கா வில் பருத்தி விளைவிப்பவன் 'பிராங்கு' களைத் தீண்ட மாட்டான். அவனுக்கு அவை பயன்படாதவை. அமெரிக்கப் பருத்தி பிரெஞ்சுப் பஞ்சாலைகளுக்குப் போவது எப்படி? இங்கேதான் மார்ஷல் திட்டம் எப்படி வேலை செய்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். பிரெஞ்சுச் செலவாணி அதிகாரியிடம் பிரெஞ்சு ஆலை முதலாளிகள் தங்கள் 'பிராங்கு' களை எடுத்துச் சென்றனர். தங்கள் தொழில் திட்டத்தை விவரித்தனர்: பிரெஞ்சு சர்க்காரும் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகமும் அத் திட்டத்தை ஆராய்ந்து சரி சொன்ன பிறகு, அந்தப் பிராங்குகளுக்குப் புதிலாக டாலர்கள் கிடைத்தன. இந்த டாலர்களைக் கொடுத்துப் பருத்தியை வாங்கினார்கள். ஆலைகள் வேலைசெய்யத் தொடங்கின. சரி, ஆலை முதலாளிகள் கொடுத்த பிராங்குகள் என்ன ஆயின? சீரமைப்புக்கான நிதியில் போய்ச் சேர்ந்தன. அவை டாலர் உதவிக்குள்ளத் "துணை நிகர்" நிதியில் சேர்ந்தன. இந்த நிதியைக் கொண்டுதான் சாலைகளை அமைத்தல், தண்ணீரை வடித்து நிலத்தைத் திருத்தி விவசாயப் பண்ணை அமைத்தல் முதலிய இத்தகைய உதவும் திட்டங்களை வகுத்து நடத்தினார்கள்.

இதனால் விளைந்த நன்மைகள் என்னென்ன என்று பார்ப்போம். டாலர்கள் கிடைத்ததால் பிரெஞ்சு ஆலைகள் வேலை தொடங்கின; ஆயிரக் கணக்கான பிரெஞ்சுத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்தது. நாட்டு வளத்தை மீண்டும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவரத் திட்டங்கள் வகுத்து நடத்துவதற்கு வேண்டிய "பிராங்கு"களும் சாக்குசாக்காகக் கிடைத்தன, பிரெஞ்சு சர்க்காருக்கு. வேலையின்றிச் சும்மா விருக்கும் தொழிலாளியை பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகள் தங்கள் பக்கம் வைத்துப் பேசும் வாய்ப்பும் இல்லாமல் தொலைந்தது. இதைவிட முக்கியமான இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். தானங் கொடுக்கும் தர்மநிதித் திட்டங்களிலெல்லாம் கவனக் குறைவால் வீண் செலவு இருக்கும்.

இங்கேயோ பிரெஞ்சு ஆலை முதலாளிகள் தங்கள் பணத்தைக் கொடுத்துப் பருத்தியை வாங்கியதால், தேவைப்பட்டதற்கு மேலாகப் பருத்தி வாங்கியிருக்க மாட்டார்கள். அதனால் வீணாகப் பருத்தி சீரழியவும் இடமில்லாமற் போயிற்று.

இவ்விதமாக மற்றவர்கள் தங்களுக்குத் தேவையான முக்கிய பண்டங்களை வாங்கிக் கொள்வதற்கு வேண்டிய அயல் நாட்டுச் செலவாணியும் பெறுகிறார்கள்; அவர்களுடைய உள் நாட்டில் பொருளாதார நிலைமை உறுதியாகவும் அவர்களுடைய சர்க்காருக்கு வேண்டிய பணமும் கிடைக்கிறது.

எதற்கு என்று குறித்துக்கொண்டு கொடுக்க வேண்டும். பின்னால், கொடுத்த டாலர் ஒழுங்காகப் பயனாகிறதா எனப் பார்க்க வேண்டும். முதலாவது உலக யுத்தம் முடிந்த நாள் முதலாகவே நாம் ஐரோப்பாவுக்கு ஏராளமாக உதவி செய்து கொண்டுதான் இருக்கிறோம்.

**1947**-ல் ஐரோப்பாவுக்கு இன்னும் உதவி தேவை என்ற நிலைமை எழுந்தது. என்ன செய்வது என்று காங்கிரஸ் யோசித்தது. உதவி செய்யத்தான் வேண்டும்; ஆனால் இதற்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது கொடுக்கும் டாலர் உருப்படியாக அதிக உறுதியுடன் நிச்சயம் உதவி செய்வதாக இருக்க வேண்டும். எனவே மார்ஷல் திட்டத்துக்கான சட்டமியற்றுகையில் காங்கிரஸ் இக் கருத்தோடு வேலை செய்தது. அது தனது வேலையில்வெற்றியும் அடைந்தது என்று சொல்வேன். வெற்றிக்குக் காரணம் இல்லாமலில்லை. காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஐரோப்பிய விவகாரங்களிலுள்ள சிக்கல் என்ன என்று நன்றாக அலசிக் கரை கண்டிருந்தனர். (மாசச்சுசெட்ஸ் (Massachusetts) ராஜ்யத்தைச் சேர்ந்தவரான கிறிஸ்டியன் எ. ஹெர்ட்டர் (Christian A. Herter) என்பவர் தலைமையில் ஐரோப்பாவுக்குச் சென்ற கமிட்டி செய்த அரிய ஆராய்ச்சிகள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்). மேலும் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தையும் காங்கிரஸ்



5759

எளிதில் ஏற்றுக்கொள்ளவில்லையே. இதற்குக் காங்கிரஸ் சபை கூடி விவாதித்துக் கேட்டறிந்த விஷயங்கள் ஏராளம். காங்கிரஸின் வரலாற்றிலேயே இவ்வளவு தூரம் எந்த விவாதமும் நடந்ததில்லை. காங்கிரஸின் முன் சாட்சியங் கூறியவர்களின் வார்த்தைகளெல்லாம் சேர்ந்து மொத்தம் 6,584 பக்கங்கள் கொண்ட ஐந்து பெரும் புத்தகங்களாயின. இவ்வளவும் சலிப்பு தரும் உழைப்பு; ஆனால் வீண் வேலை அன்று. (1) ஐரோப்பிய நாடுகள் தங்கள் தேவை என்னென்ன என்று விவரமாக அறிவிக்க வேண்டும். (2) தாங்கள் வியாபாரத்திலும் நிதி விஷயத்திலும் என்னென்ன கொள்கைகளைக் கடைப்பிடிப்பார்கள் என்பதைப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தோடு கலந்து பேசிக்கொள்ள வேண்டும். (3) ஒத்துக்கொண்டதற்கிணங்க அமெரிக்காவின் டாலர்கள் உபயோகமாகின்றனவா என்று கண்டுகொள்வதற்கு பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்துக்கு இடங்கொடுக்க வேண்டும். இம் மூன்று விதிகளையும் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகச் சட்டத்தில் காங்கிரஸ் வகுத்து வைக்க முடிந்ததற்குக் காரணம் நீண்ட காலமாக நடந்த அந்தக் கூட்டங்களே.

உதவியளிப்பதில் நாம் இதற்கு முன் இவ்வாறு செய்ததில்லை. இது என்ன முறை? இது அன்பா? என்று கேட்கலாம். ஆயினும் கடன் கொடுப்பவர்கள் கடன் பெறுபவர்களின் நிலையென்ன, திட்டமென்ன என்று அறிந்து கொண்டு கொடுப்பதில்லையோ? நீங்கள் உங்கள் ஊரில் பாங்குகளில் கடன் வாங்குவது எவ்வாறு? (கடன் கொடுப்பவர்கள் எப்போதும் அன்பாக நடக்கிறார்கள் என்று கூறவில்லை.) ஒருவர் தமது நண்பரிடம் கடன் கேட்கிறார். கடன் கொடுக்க நண்பர் தயார். ஆனால் கடன் வாங்குவது எதற்கு? நோக்கம் பலன் தரக் கூடியதுதானா? போட்ட திட்டப்படி வேலை நடக்குமா? இவ்வாறெல்லாம் விஷயத்தையறிந்துகொண்டு கடன் கொடுக்க விரும்புகிறார் அந் நண்பர். அதில் என்ன தவறு? அவரை நல்ல நண்பர் என்பேன். இதே முறையைத்தான்

சர்வதேச அரங்கிலும் கையாளவேண்டுமென்று கூறுகிறேன். அதையே தான் முன் சொன்ன பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் சட்டம் விதித்திருக்கிறது.

இந்த முறையில் எவ்வளவு பலன் ஏற்படும் என்பதற்கு இத்தாலி நாட்டுக்கு நாம் அளித்த உதவி ஒரு சிறந்த உதாரணமாகும். சுருங்கக் கூறுகிறேன்.

யுத்தத்தின் முடிவில் இத்தாலியின் தொல்லைகள் அளவு கடந்துவிட்டன. ஆனால் மார்ஷல் திட்டம் வருவதற்கு முன்பே நல்ல காலமாக ஓர் இடைக்காலத் திட்டத்தின்படி அமெரிக்காவின் உதவி இத்தாலிக்குக் கிடைத்து வந்தது. திறமை வாய்ந்த தூதர் ஜேம்ஸ்டன் இத்தாலியில் இருந்தார். அவருடைய கருத்துக்கு இணங்க **1948** ஆரம்பத்தில் இத்தாலிக்கு அமெரிக்க உதவி கிடைத்து வந்தது. அவ் வருஷம் ஏப்ரல் மாதம் தேர்தல் நடந்தபோது நாடு கம்யூனிஸ்டுக் கட்சியாக மாறுமல் இருந்ததற்கு இந்த உதவி ஒரு பெரிய உபகாரமாயிற்று. அதன்பின் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் தூதுவர் தலைவர் ஜேம்ஸ் ஸெல்லர்பாக் (James Zellarbach) இத்தாலிக்குச் சென்றுர். இனியும் இத்தாலிக்குத் தொடர்ந்து உதவி செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். இதற்கு மகா நாடுகள் கூட்டிப் பேசி அறிய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. புதிய ரோம சாம்ராஜ்யத்தின் ஏகச் சக்கராதிபதியாக விளங்கவேண்டுமென்று முசோலினி பைத்தியக்காரத்தனமாகக் கனவு கண்டு கொண்டிருந்தார். அந்தக் கனவை நனவாக்க இருபது ஆண்டுகளாக முயன்று நாடு அலுத்து விட்டது. பிறகு அச்சு நாடுகளில் ஒன்றுன இத்தாலி யுத்தத்தில் இறங்கியது ; ஆப்பிரிக்காவில் நல்ல அடி பட்டது ; நாட்டிலே உறுதி தளர்ந்தது ; ஜெர்மனியர் கைக்குள் வந்தது நாடு ; பின்னர் நேச நாடுகள் படையெடுப்புக்கு உள்ளாயிற்று. நகரங்களும் தொழிற்சாலைகளும் குண்டுகளுக்கு இறையாயின. பலன் ? இத்தாலியர் முகத்தைப் பார்த்தால் நன்றுகத் தெரியுமே. அலுத்துப்போ

யிருந்தனர். வீட்டில் குளிரைப் போக்க வழியில்லை ; சமைய லறை வெறும் அறையாகக் கிடந்தது.

உணவும் வீட்டில் குளிர் நடுக்காமல் இருக்க வெப்பமும் அவர்களுக்குத் தேவை. கோதுமையும் நிலக்கரியும் கொடுத்து உதவினோம். ஓடாமல் நின்ற அவர்கள் தொழிற்சாலைகளுக் குக் கச்சாப் பொருள்கள் தேவை. பருத்தியும், எஃகும் செம் பும் நாம் கப்பலேற்றி அனுப்பினோம்.

இவை உடனடித் தேவைகளைப் போக்கும் உதவிகள். நீண்ட காலத் தேவைகளையும் மறந்துவிடவில்லை. நாடு நன் நிலையடைந்து பிறர் கையை எதிர்ப்பார்க்காமல் வாழக் கூடிய வகையில் இருப்பதற்கு வேண்டிய திட்டங்களும் உருவாயின. பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தாரும் இத்தாலிய அர சாங்கத்தினரும் கூடிப் பேசி விஷயங்களை அலசிப் பார்த்தனர். அதன் பலனாக நாட்டின் சீரமைப்புக்கு வேண்டிய ஒரு திட்டத் துக்கு வந்தனர். இத்திட்டப்படி (1) உடைபட்டுக் கிடந்த தொழிற்சாலைகளுக்கு இயந்திரங்களும் (2) இயந்திரங்களை இயக்குவதற்கு மின்சாரம் முதலிய சக்திகளும் (3) அதிக நிலமும் திருந்திய விவசாய முறையும் முக்கியம் என்பது தெளிவாயிற்று.

தொழிற்சாலைக்கு இயந்திரங்கள் இல்லாமல் முடியாது; இது தெளிவு. உணவு உடை போக்குவரத்து எல்லாம் தொழிற் சாலைகள் வேலை செய்யாவிட்டால் கிடைப்பது அரிதாகிவிடும்.

இந்நிலையில் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் என்ன உதவி செய்தது என்பதற்கு டூரின் ' பியட் ' கார்த் தொழிற்சாலை ஒரு நல்ல உதாரணம். யுத்தத்தில் இத் தொழிற்சாலையில் முக்கால்வாசி நாசமாகிவிட்டது. 2 கோடியே 30 லட்சம் டாலர் உதவி கிடைத்ததும் அமெரிக்க இயந்திரங்கள் வந்து சேர்ந்தன. இன்று வருஷத்துக்கு லட்சம் கார்களுக்கு மேலும் உற்பத்தி யாகின்றன. டிரக்குகளும் பஸ்ஸுகளும் ஏராளமாகச் செய்து தள்ளுகிறது ' பியட் ' தொழிற்சாலை.

இயந்திரங்களை இயக்குவதற்கு வேண்டிய சக்தி தடையின்றி கிடைப்பதற்கும் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் உதவியது. எஞ்சினியர்த் திறமை மட்டும் அன்று; நிதியும் வேண்டியிருந்தது. இத்தாலியில் நிலக்கரி அதிகம் கிடைப்பதில்லை. வெளி நாட்டிலிருந்து நிலக்கரி வாங்குவதென்றால் இருக்கும் அயல் நாட்டுச் செலாவணி குறையும். வடக்கே ஆல்ப்ஸ் மலைகளில் அருவிகள் ஏராளம் திடும் என வீழ்கின்றனவே. அவற்றைப் பயன் படுத்தி மின்சாரம் எடுப்பதுதானே என்று ஆராய்ந்தனர். இது நல்ல யோசனை. ஆகவே மின்சார உற்பத்தி இயந்திரங்களைப் புதிதாக வரவழைத்தார்கள். ஆனால் ஆல்ப்ஸ் மலையில் பனி உறையாமல் தண்ணீர் வற்றிப்போகும் காலமும் உண்டு; இது எத்தனையோ ஆண்டுகளுக்கு ஒரு முறையாக ஏற்படுவதானாலும் மின்சார உற்பத்தி ஒருபோதும் தடைப்படக்கூடாது என்று இத்தாலிய எஞ்சினியர்கள் விரும்பினர். ஆகவே வெப்பத்தைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டங்கள் முக்கியம் என்று எண்ணலாயினர்.

டஸ்கனி மாகாணத்தில் ஒரு மூலையில் ப்ளாரன்ஸ் நகரிலிருந்து 40 மைல் தொலைவில் அவர்கள் விரும்பியது அகப்பட்டது. அங்கே பல ஆண்டுகளாகப் பெரிய பெரிய நீராவி ஊற்றுக்கள் வானுயரக் கிளம்பி வந்துகொண்டிருந்தன. மண்ணுக்கடியில் மிக்க ஆழத்திலிருந்து தண்ணீர் இறுக்கமில்லாத பாறைகள் வழியாக மேலே கிளம்பி எரிமலைக் குழம்பு நிறைந்த பகுதிக்கு வருவதால் இந்த நீராவி உண்டாகி மண்ணைத் துளைத்துக்கொண்டு வான் நோக்கிய அருவியாக வெளி வருகிறது. ஆகவே அவ்விடங்களில் தரைக்கடியில் உள்ள இந் "நீராவிக்கொப்பரை"களிலிருந்து குழாய்கள் மூலம் நீராவியை வேண்டிய அளவில் வேண்டிய இடங்களுக்கு எடுத்துச் சென்று அந்த நீராவி வேகத்தால் இயந்திரங்களை ஓட்டி மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இதை இத்தாலிய விஞ்ஞானிகள் ஏற்கனவே யுத்தத்துக்கு முன்பே செய்து வந்தனர். ஜெர்மனியர்கள் பின்வாங்கிப்போகும்போது, இந்த எஞ்சினியர்க

ளுடைய வேலைகளையெல்லாம் தூள் தூளாக நொறுக்கிவிட்டுச் சென்றனர். பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் தோன்றிய சமயம் இத்தாலிய எஞ்சினியர்கள் பழையபடி நீராவியை மடக்கி மின்சார உற்பத்தி இயந்திரங்களை இயக்க வகை செய்து கொண்டிருந்தனர். ஆனால் அவர்களுக்குக் குழாய்களும் நீராவியால் இயங்கக் கூடிய ‘டர்பைன்’ இயந்திரங்களும் கிடைக்கும் வழியாயில்லை. இவை கிடைப்பதற்குப் பொருளா தாரக் கூட்டுறவு நிர்வாகம் உதவி செய்தது; இன்னும் பல இடங்களிலும் நிலவறை நீராவியைப் பயன்படுத்தும் வழி துறை களுக்கு வேண்டிய வழி செய்து கொடுத்தது. இன்று இவ் வாறு பூமியிலிருந்து தோன்றும் நீராவியால் உற்பத்தியாகும் மின்சாரம் தேசத்தின் மின்சார உற்பத்தியில் பன்னிரண்டில் ஒரு பாகமாகும்; அதாவது வருஷத்துக்கு 200 கோடி யூனிட்டுகள்.

நிலம்? அது மிகச் சிக்கலான விஷயம். பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தால் சாகுபடி பெருக முடிந்தது. இயந் திர விவசாயத்துக்கு நாட்டில் ஊக்கம் பிறந்தது. இக்காலத் திய உர வகைகள் இத்தாலிய விவசாயிக்குப் பழக்கமாயின. பூச்சி பற்றைகளை நீக்குவது எப்படி என்று நிபுணர்கள் போய் விவசாயிக்குக் கற்றுக்கொடுத்துள்ளனர்.

ஆனால் இத்தாலியில் சாகுபடி பெருகினால் மட்டும் போதாது. அங்கே நிலம் என்பது சமூக அமைப்பிலும், அரசியல் துறையி லும் கணக்கு வழக்கிலும் ஒன்றும் புரியாத ஒரு விடுகதை போலக் கிடக்கிறது. நிலத்தை உழுது பயிரிடுவதை அறியாது வாழும் நிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பெரிய நிலங்களைப் பங்கு போட்டு, உழைக்கும் விவசாயிகளுக்கு விற்றுக் கொடுக்கலாம், விற்றுக் கொடுக்கவும் வேண்டும். இரண்டு, மூன்று ஏக்கர்களுக்கும் குறைவாக வைத்து உழுது பயிரிட்டு எப்படியோ காலத்தைத் தள்ளப் பார்க்கும் கணக்கற்ற விவசாயிகளும் இருக்கின்றனர். இந்த நிலமும் சேர்ந்தாற்போல் இருப்பதில்லை. போதிய பலன் தரக்கூடிய அளவில் இல்லாமல்

சிறு சிறு துண்டுகளாகப் பற்பல இடங்களிலே அவை சிதறிக் கிடக்கின்றன. ஆகவே பெரிய பெரிய நிலங்களைப் பங்கு போடுவது மட்டும் போதாது. சிறு சிறு நிலங்களைச் சேர்த்துத் தக்க அளவில் பெரிதாக்கவும் வேண்டும். எப்படிச் செய்வது என்று தோன்றலாம். அணுக முடியாத சிக்கல்கள் நிறைந்ததாகத் தோன்றினாலும், இந்த வேலையைச் செய்யாமல் விட முடியாது ; இத்தாலிய விவசாயி தானும் சமூகத்தில் பொறுப்புள்ளவன் என்பதை உணர வேண்டுமானால் வேறு வழி எதுவும் இல்லை.

குடியானவர்களுக்கு நிலம் கிடைத்துவிட்டால் மட்டும் போதாது. கிடைத்த நிலம் நெடுங்காலமாகப் பயிராகாத நிலமாகவும் இருக்கும். ஆகவே வந்த நிலத்தால் வரவும் அதிகமாயிற்று என்று சொல்லும் வண்ணம் உருப்படியாக உழுது பயிரிட்டு விளைவிக்கும் நிலைமைக்கு அதைத் திருத்தவும் வேண்டும். இதற்கு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும், வடிகால்களும், நிலமீட்சித் திட்டங்களும், சாலைகளும் உண்டாக வேண்டும். பயிர் செய்வதற்கான ஆயுதங்களும் கடன் வசதியும் கிடைத்து, விவசாயி தனது நிலத்தைத் திருத்தி வளம் பெருக்கிக் கொள்ளவும் வேண்டும். ஆகவே நிலச் சீர்திருத்தம் மட்டுமன்று, பயிர் செய்யும் முறையில் திருத்தமும் தேவை. பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் என்ன செய்கிறது ? உதவியாக வரும் டாலருக்கு ஒத்தாற்போல் உதவி பெறும் நாடுகள் தாங்களும் "துணை நிகர்" நிதியொன்று திரட்டி வைக்க வேண்டுமென்று பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தில் ஒரு விதி இருக்கிறதன்றோ ? அந்த விதியைத்தான் இங்கு பயன்படுத்தினார்கள்.

நிகரான இந்த நிதியைக் கொண்டு இத்தாலிய அரசாங்கம் விவசாயத் திட்டங்களை வகுத்து நடத்துகிறது. சார்டினியாவில் மலேரியா பல நூற்றாண்டுகளாகக் குடியிருந்து வருவது ; அதை ஒழிக்கப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகமும் ராக்பெல்லர் தர்ம நிதி நிலையமும் சேர்ந்து உழைக்கின்றன. இது போன்று பற்பல விதமான திட்டங்கள் மொத்தம் இருநூறு,

நாடு முழுவதும் நடைபெறுகின்றன. இத்தலியின் தென் மூலை பகுதியில் நீர்ப்பாசனத் திட்டங்களும் நிலமீட்சித் திட்டங் களும் நடைபெறுகின்றன. இத்தாலிய அரசாங்கம் முதன் முதலாக நிலத்தைப் பங்கு போட்டுக் கொடுத்த இடமும் இதுவே. இது நடந்தது 1950-ம் ஆண்டு. நிலம் தேவையான குடியான வர்கள் பலருடைய பெயர்களைச் சீட்டில் எழுதி ஒரு பெட்டியில் போட்டுக் குலுக்கி எடுத்ததில், 396 குடியானவர்களுக்கு ஒவ் வொருவருக்கும் 9 ஏக்கர் சேர்ந்தாற்போல் நிலம் கிடைத்தது. அவர்களில் பலருக்கு அதுவரை சொந்த நிலமே இருந்த தில்லை. "உலகம் தோன்றியநாள் முதலாய் இன்று போல் ஒரு நாள் வரும் என நாங்கள் நினைக்கவேயில்லை" என்று நன்றி யறிதலோடு கண்களில் நீர் ததும்ப அக்குடியானவர்கள் தலைவன் சொன்னான்.

இது ஒரு தொடக்கமே. இன்னும் பல இடங்களில் இது போலக் குடியானவர்கள் பலபேருக்கு நிலம் கிடைக்குமாறு செய்ய வேண்டும். சிக்கல் நிறைந்த விஷயம்தான். ஆனாலும் மக் கள் பெருத்த நாட்டில், வருஷத்துக்கு 4 லட்சம்பேர் புதிதாய்ச் சேரும் இத்தாலியில் இதுபோன்ற நிலச் சீர்திருத்தம் செய்தே தீரவேண்டும்.

எண்ணிச் செலவு செய்யவேண்டும்: உதவி அளிக்கும் நிர்வாகம் உறுதியாக இருக்கவேண்டும். உதவி அளிப்பதை மிகுந்த கருத்தோடு மேற்பார்த்துவருவது அவசியம். செலவும் வீணாய் வளர்ந்துவிடாமல் கவனித்து, கொடுத்த டாலர்கள் குறித்த பலனைக் கொடுக்கின்றனவா என்பதையும் பார்த்துக் கொள்ள உறுதியான நிர்வாகம் வேண்டும். கவனக் குறை வால் வீண் செலவு ஏற்படும் திட்டங்களைச் சரிவரக் கவனித்து நடத்தா விட்டால், உதவி பெறும் நாடு உரம் பெருவதற்குப் பதிலாக ஊனமடையும். மார்ஷல் திட்டம் வெற்றியடைந்த தற்கெல்லாம் காரணம் என்ன? கோடி கோடியாகக் கொடுத் தாலும் ஒவ்வொரு டாலரையும் எண்ணியே கொடுத்தோம். இதுதான் பலன் கிடைத்ததற்குக் காரணம். மொத்தம் 1,700

கோடி டாலர் கொடுக்க வேண்டியிருக்கும் என்று மதித்தோம். ஆனால் உண்மையில் **1,300** டாலருக்கு மேல் செலவு செய்ய வேண்டியிருக்காது. பல நாடுகளில் பொருளாதாரம் ஏற்கெனவே மிகவும் திருந்திவிட்டது. **1951** ஜனவரி முதல் தேதியோடு பிரிட்டனுக்கு உதவி செய்வதை நிறுத்தி விட்டார்கள்; ஆனால் வகுத்த திட்டப்படி இன்னும் ஒன்றரை வருஷத்திற்கு நிதி உதவி செய்திருக்கவேண்டும்.

டாலரை மட்டும் கொடுத்தால் போதாது, நமக்குத் தெரிந்த தொழில் நுட்ப வித்தைகளையும் தெரிவிக்க வேண்டும். திறமையும் சக்தியும் வாய்ந்த நம்முடைய இயந்திரங்களே நமது தொழில் வளம் இவ்வளவு தூரம் பெருகுவதற்கு ஒரு முக்கிய காரணம் என ஒப்புக்கொள்ளுகிறேன். ஆயினும் அந்த இயந்திரங்களை எவ்வகையில் கையாண்டால் சிறந்த பலன் கிட்டும் என்று அறிந்து தொழில் செய்த நமது கைத்திறனும் அற்புதமான வேலை செய்திருக்கின்றது என்பதையும் எவரும் மறுக்க முடியாது. வருந்தி உழைத்து நமது தொழிலாளர்களும் தொழில் நுட்ப வல்லவர்களும் கண்டுகொண்ட எளிய வழிகளும் வித்தைகளும் பிற நாட்டுத் தொழிலுலகுக்கும் தெரிய வேண்டும். பிற நாடுகளில் அவர்கள் கண்டு பிடித்துள்ள வித்தைகளையும் நாம் அறியவேண்டும். பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் நடத்தும் தொழில் நுட்ப உதவித் திட்டம் இதுவே.

ஒரு மணிக்கு ஒருவன் செய்யக் கூடிய வேலையின் அளவைக் கூட்டவேண்டும். அப்பொழுதுதான் ஐரோப்பாவில் செழிப்பு ஏற்படும் என்பது என் நெடு நாளைய எண்ணம். **1928**-ல் நடந்த ஒரு கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஸ்டுடிபேக்கர் கார்ப்பரேஷன் லண்டனில் ஒரு விற்பனை இடமும் பழுது பார்க்கும் சாலையும் வைத்து நடத்தி வந்தது. அப்பொழுது அதனால் நஷ்டமே உண்டாயிற்று. கார்ப்பரேஷன் தலைவர் ஆல்பெர்ட் ரசல் எர்ஸ்கின் (Albert Russel

Erskine) என்னை லண்டனுக்குப் போய் விஷயம் என்ன என்று அறிந்துவரும்படி அனுப்பினர். சென்றேன். இங்கிலாந்தில் தொழிலாளருக்குக் கொடுக்கும் கூலி, அமெரிக்காவில் [இண்டியானு ராஜ்யத்தில் சௌத்பெண்ட் என்ற இடத்தில் கொடுப்பதிலும் ஏறக்குறைய ஒரு பாதிதான். ஆயினும் பழுது பார்ப்பதற்கு ஆகும் செலவோ இரண்டு மடங்காக இருந்தது. உதாரணமாக, சௌத் பெண்ட் நகரில் 'வால்வ்' பழுது பார்ப்பதற்கு 10 டாலர் செலவாகும். இந்தப் பத்து டாலரும் பழுது பார்க்க வரும் கார்க்காரர் கொடுப்பார். இதில் கருவிகளைக் கொண்டு வேலை செய்த தொழிலாளிக்கு நான்கு டாலர் கிடைக்கும்; அதாவது ஒரு மணி நேரத்துக்கு 80 சதம் வீதம். மீதியிருக்கும் 6 டாலரில் செலவு தொகையெல்லாம் போகக் கம்பெனிக்கு லாபமாக வருவது ஒரு டாலர். லண்டனில் எப்படியென்ருல் ஒரு வேலைக்கு மூன்றுபேர் ஈடுபடுவார்கள். தொழில் கற்க வந்தவன் ஒருவன் (அவனே அநேகமாக முழு வேலையையும் செய்வான்); ஒரு 'மெக்கானிக்கு' (கடைசியாக 'வால்'வைப் பொருத்தி வைப்பவன் இவன்) இவர்களை மேற் பார்ப்பதற்கு ஓர் ஆள். ஆக இவர்கள் மூவருக்கும் கூலியாக எட்டு டாலருக்குமேல் போய்விடும்; பழுது பார்க்கக் காரைக் கொண்டுவிட்டவருக்கு 18 டாலர் செலவு. ஸ்டுடிபேக்கர் கம்பெனிக்கு எல்லாச் செலவு தொகையும் போனல் இரண்டு டாலர் நஷ்டம்.

மின்சாரக் கருவிகளைப் பயன்படுத்தினுல் இவ்வளவு செலவு பிடிக்காது என்று நான் யோசனை கூறினேன். கடையை நடத்தும் முறைகளையும் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதும் என் கருத்து—பழுது பார்ப்பதற்குக் குறைவாகப் பணம் வாங்க வேண்டும், கூலியும் அதிகம் கொடுக்க வேண்டும் என்பதையும் கூறினேன். இது அங்கேயுள்ள ஸ்டுடிபேக்கர் உத்தியோகஸ்தர்களுக்கும் இங்கிலாந்திலிருந்த மற்றவர்களுக்கும் விநோதமாகப்பட்டது; எல்லாவற்றையும் மொட்டையாக்கி விட எண்ணுகின்றேன் என்பதாகக் கூறினர்கள். நெடு நெடுங்

காலமாகக் கடைப்பிடித்து வரும் வழி முறைகளை நேற்று வந்த அமெரிக்கன் ஒருவன் மாற்றி விடுவதா? எல்லாம் குட்டிச் சுவராகப் போய்விடும் என்று என் யோசனைகளைத் தள்ளி விட்டார்கள். அதன் மேல் எனக்குப் பேச வழியேது? தலைவர் ஏர்ஸ்கினிடம் வந்து லண்டன் கடையை மூடிவிட்டால்தான் நலம் என்றேன்; அவரும் அதை உடனே செய்தார்.

ஆனால் லண்டனில் நாம் கண்டறிந்த விஷயங்கள் மட்டும் என் மனத்தை விட்டு அகலவேயில்லை. தொழில் செய்யும் முறையிலும் தொழிலை நடத்தும் முறையிலும் அமெரிக்க வழி வகைகளைப் பின்பற்றினால் ஐரோப்பாவில் தொழிலாளர்களுக்கும் நலம், நிர்வாகத்தாருக்கும் நலம், விலை கொடுத்து வாங்கும் மக்களுக்கும் நலம், எல்லோருக்கும் பெரிய வரமாக இருக்கும் என்ற திண்ணமான எண்ணம் என்னை விட்டு நீங்கவேயில்லை.

A·5759

எண்ணியதைக் காரியத்தில் நிறைவேற்றச் சமயமும் கிடைத்தது. **1948**-ம் ஆண்டு இளவெயில் எரித்த வேனிற் காலத்தில் பாரிஸ் நகரத்தில் ஒரு நாள் துறவி போல வாழும் பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸும் (Sir Stafford Cripps) நானும் பேசிக்கொண்டிருந்தோம். பொருளாதார நிலைமை முன்போல் நல்ல நிலைமை அடைவதற்குத் தடையாக இருப்பது என்ன என்பதைப் பற்றியதுதான் எங்கள் பேச்சு. "பிரிட்டனில் வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமானால், அதற்கு உற்பத்திப் பெருக்கம் இல்லாமல் முடியாது" என்றார் கிரிப்ஸ். எனக்கு உள்ளூரப் பெரு மகிழ்வு; ஐரோப்பியர் ஒருவர் இவ்வாறு பேசவேண்டும் என்பதுதானே என் பேரவா, "இவ்விஷயத்தில் அமெரிக்காவிடமிருந்து பிரிட்டன் கற்றுக்கொள்ளவேண்டியது எவ்வளவோ இருக்கிறது" என்று சொல்லி நிறுத்தினார் அவர். பின் "சுமார் ஒரு தலைமுறையாக நாங்களும் உங்களிடமிருந்து மறைத்து வைத்திருக்கிறோம் சில உற்பத்தி வித்தைகளை. இவற்றை அறிந்துகொள்ள நீங்கள் விரும்பலாம். என் நாம் ஒரு

வர்க்கொருவர் கற்றுக் கொடுத்துக் கற்றுக்கொள்ளவும் கூடாது?'' என்முர் கிரிப்ஸ்.

இத்தருணத்தை விட்டுக் கொடுப்பேனு நான்? "அட்லாண் டிக் கடலின் இரு கரையில் இருப்பவர்களும் அக்கரைக்கும் இக்கரைக்கும் போய் வந்து அறிந்து கொள்ள ஒர் ஏற்பாடு செய் வோம்'' என்று உடனே கூறலானேன். "பிரிட்டனின் தொழி லாளர்களையும் பிரிட்டனின் நிர்வாகத்தாரையும் அமெரிக்கா வுக்குக் கொண்டுபோய் அமெரிக்கத் தொழிற் சாலைகளைக் காட்டு வோம்; அமெரிக்கர்களைக் கொண்டு வந்து உங்களுடைய வர்த் தக முறைகளைக் காட்டுவோம்'' என்றேன். அந்த இடத்தி லேயே சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இக் கருத்தை ஏற்றுக்கொண்டார். காய்கறிகள் அல்லாமல் வேமுென்றையும் தொடாத இவரு டைய அபூர்வ ஆற்றல் அன்று வெளிப்பட்டது. உற்பத்திக் கான ஆங்கிலோ-அமெரிக்கச் சங்கம் சில வாரங்களில் உருவா யிற்று. ஜெனரல் எலெக்ட்ரிக் கம்பெனியைச் சேர்ந்த பிலிப் ரீட் (Philip Reed) கைத் தொழிற் சங்கங்களின் காங்கிரசைச் சேர்ந்த விக்டர் ரூத்தர் (Victor Reuther) முதலியவர்கள் அமெரிக்க நிர்வாகத்திற்கும் தொழிலாளருக்கும் பிரதிநிதி களாக நியமனமாயினர். 'இம்பீரியல் ரசாயனத் தொழில்கள் கழகத்தின்' துணைத் தலைவர் காலஞ்சென்ற சர் பிரெடெரிக் பெயின், (Sir Frederick Bain) இரும்பு எஃகு வர்த்தகக் கூட்டுச் சம்மேளத்தின் தலைமைக் காரியதரிசியான லிங்கன் எவ்ான்ஸ் (Lincoln Evans) ஆகியோர் பிரிட்டனின் சார்பில் நிய மனமாயினர். கருத்துக்கள் கடல் கடந்து செல்லப் பாலமமைப் பதில் எந்தெந்தத் தொழில் துறைகள் மிகுந்த பலனடையும் என் பதை இவர்கள் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர். அதன் பின்னர் திட்டம் வகுத்தனர்; கால அட்டவணைகள் வரைந்த னர்.

இதன்படி முதன் முதல் அமெரிக்காவுக்கு வந்த பிரிட்ட னின் குழுவினர் எஃகுத் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழி லாளரும் நிர்வாகத்தாருமாவர். இவர்கள் இங்கு ஆறு

வாரம் தங்கியிருந்து பகலில் தொழிற்சாலைகளைப் போய்ப் பார்த்தும், கண்ட விஷயங்களைக் கையேட்டில் குறித்து வைத்தும், பொழுது சாய்ந்தபின் அவற்றைப் பற்றி ஆராய்ந்து தெளிவதுமாக அயராது கற்றறிந்தனர். இவர்கள் சும்மா ஊர் சுற்றிப் பார்க்க இங்கு வரவில்லை. புது விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற உறுதியோடு வந்தவர்கள். அவர்கள் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றதும், ஒன்று சேர்ந்து ஓர் அறிக்கை எழுதி வெளியிட்டனர். புதிய ஓர் உலகத்தைக் கண்டது போன்ற விஷயங்கள் அதில் பொதிந்து இருந்ததால், இரண்டு கிழமைகளில் அது இருபத்தையாயிரம் பிரதிகள் வரை விற்றது. மூன்று தரம் பதிப்பிக்கப் பெற்றது. அமெரிக்காவின் உருக்குச்சாலைகளில் இருக்கும் உற்பத்தி பிரிட்டனின் உருக்குச்சாலைகளில் இருக்கும் உற்பத்தியைக் காட்டிலும் 50 முதல் 90 சத விகிதம் வரை அதிகம்; பிரிட்டனின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டுமானால் அதன் உருக்குச் சாலைகளில் கருவிகள் உபயோகம் அதிகமாகவேண்டும்; உற்பத்தி பெருக வேண்டும். இதுதான் அவர்கள் வெளியிட்ட அறிக்கையின் சாரம்.

இவ்வளவு நல்ல முறையில் பிரிட்டன் தொடங்கி வைத்த காரியம் எளிதில் மற்ற நாடுகளுக்குப் பரவி, எல்லா நாடுகளும் நம்முடன் தொழில் நுட்பத்தில் கொள்வினை கொடுப்பினை செய்து கொள்ளும் என மிகவும் எதிர்ப்பார்த்தேன். ஆனால் நான் நினைத்தது முற்றிலும் நிறைவேறவில்லை. நாம் பேசுவது ஆங்கிலம்; பிரிட்டன் தவிர மற்ற ஐரோப்பிய நாடுகளில்பேசப்படும் மொழிகள் வெவ்வேறு. ஆகவே தொழில் நுட்பக் கொள்வினை கொடுப்பனையால் இயந்திரத் தொழிலில் எவ்வளவு தூரம் பயனடையலாம் என்பதை முற்றும் அவர்கள் உணர்ந்துகொள்ள வழியற்றுப் போயிற்று என்று சொல்லலாம். தொழில் நுட்ப உதவித் திட்டம் எவ்வளவோ செய்யக் கூடியதாயிற்றே என்று பார்க்கும்போது, அது இதுவரை செய்திருப்பது போதாது என்றுதான் சொல்ல வேண்டும். இருந்தாலும், கூட்டமாகவோ, இருவர் மூவராகவோ ஏறக்குறைய மூவாயிரம்

ஐரோப்பியர்கள் அமெரிக்காவுக்கு வந்து அமெரிக்கத் தொழில் நுட்ப வித்தைகளை நன்ருகப் புரிந்து கற்றுக்கொள்ளும்படி அவர்களுக்குப், பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் தொழில் நுட்ப உதவித் திட்டம் பெரிய உதவி செய்துதான் இருக்கிறது. தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்குத் தான் இப்படிப்பட்ட பயிற்சி என்பதில்லை. அயோவா (Iova) ராஜ் யத்தில் விவசாயப் பண்ணைகளைப் பார்வையிட்டு அங்கே தானி யம் விளைவிக்கும் முறைகளைப் படித்துச் சென்ருர்கள் சில டச்சு விவசாயிகள். நார்வேயிலுள்ள சுரங்கத் தொழிலாளர் கள் வந்து, நமது சுரங்க வேலை முறைகளைக் கற்றறிந்து போயி னர். ஒட்டுச் சோளம் உற்பத்தி செய்யும் விதத்தைக் கண்டு சென்றனர் இத்தாலியர்கள். பொது மக்களுக்கு விமானம் ஓட்டி வர்த்தகம் செய்யும் வழித் துறைகளையும் சாலைகளை அமைப்பதையும் ஆராய்ந்து சென்றனர் துருக்கியர்.

இவ்வாறு இவர்கள் இங்கு கற்றறிந்த வித்தைகளைத்தங்கள் நாடுகளில் தங்கள் சொந்தத் துறைகளிலும் சர்க்கார் துறைகளி லும் புகுத்தப் பெரிதும் முயல்கிருர்கள். மாமூலாக வந்த வழக்கத்தை மாற்ற வேண்டியவர்களாகிருர்கள்—எளிதல்ல. ஆயினும் நல்லது செய்ய வேண்டுமென்ற அவர்களது ஆர்வம் வீண் போகவில்லை ; வளர வேண்டும், பெருக வேண்டும் என்ற புத்துணர்ச்சி ஐரோப்பாவில் இன்று நில்வுவதற்கு அவர்கள் நன் முயற்சியே காரணம்.

ஐரோப்பியர்கள் இங்கு வந்து ஏர்களையும் இயந்திரங்களையும் பற்றித்தான் படித்தார்கள் என்று நினைக்க வேண்டாம். அமெ ரிக்காவைப் பற்றியும் அவர்கள் தெரிந்து சென்ருர்கள். செழிப்பு நிறைந்தது அமெரிக்கா நாடு, இங்குள்ள கடைகளில் பண்டங்கள் நிரம்பி வழியும் ; இதற்குக் காரணம் உற்பத்திப் பெருக்கமும், நல்ல கூலி கொடுப்பதும்—இவற்றைக் கண்டார் கள் அவர்கள். அமெரிக்காவைப் பின் பற்றிஞல், மற்ற இடங் களிலும் மக்கள் இவ்வளவு செழிப்பாக வாழ முடியும் என்ப

தையும் அறிந்து கொண்டார்கள் : நோக்கத்துக்கு ஏற்ற வழியில் பாடுபட்டால் போதும், வெற்றி கைகூடும்.

இதையும்விட முக்கியமாக அவர்கள் இங்கு கற்றறிந்ததொன்று உண்டு. அமெரிக்காவில் எவன் ஒருவனுக்கும் மதிப்பு உண்டு ; ஒவ்வொரு மனிதனும் உயர்ந்தவன் என்பது இங்கு யாவரும் காணக்கூடிய உண்மை ; மனிதனை வைதததுத தான் மற்றவை என்பது இங்கு நிலவும் கொள்கை. ஆயினும் மக்கள் பிரிந்து பிரிந்து வாழ்வதில்லை. ஒருவரோடொருவர் சேர்ந்து ஒத்துழைக்கிறார்கள். பலர் கூடிச் சேர்ந்து இயங்கும் சமுதாயத்தில் தனி ஒருவனுக்குள்ள தலைசிறந்த மதிப்பும் விளங்குகிறது என்ற உண்மையை அமெரிக்காவில் கண்டு சென்றார்கள், வந்த ஐரோப்பியர்கள்.

“ நிர்வாகத்தாரும் தொழிலாளர்களும் நண்பர்கள்போல் இருக்கிறார்கள் ; களங்கமில்லாமல் உண்மையாகவே இரு சாரரும் ஒத்துழைக்கக் காண்கிறேன் ” என்றார்கள் “ ரேயான் ” நெசவு பற்றி அறிய வந்த பிரிட்டன் குழுவினர் சிலர்.

“ நாங்கள் போய்ப் பார்த்த ஆலைகளில் மிகவும் பெரும்பாலானவற்றில் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தாருக்கும் இருந்த நல்லுறவை வேறெங்கும் கண்டதில்லை. ஒருவரையொருவர் அவர்கள் மதித்து நடக்கிறார்கள் ; தோழமை உணர்ச்சி தோன்றுகிறது. இதை அடிக்கடி கண்டோம் ” என்றார்கள் வேறு சில ஆங்கிலேயர்கள், நெசவாலைத் தொழில் பற்றி அறிய வந்தவர்கள்.

“ மனிதரோடு மனிதர் பழகுவது எவ்வாறு என்பதைப் பற்றி அமெரிக்க முதலாளிகள் மிகுந்த கவனஞ் செலுத்தி அதை முக்கியமாகக் கருதுவது எனக்கு ஒரு பெரிய ஆச்சரியமாக இருந்தது. அமெரிக்க முதலாளிகள் தங்கள் தொழிலாளர்கள் நன்றாக இருந்தால்தான் தாங்களும் நன்றாக இருக்கலாம் என்று மன நூல் வல்லவர்களைப்போல அறிந்திருக்கிறார்கள் ” என்றார் ஒரு தொழிற் சங்கத்துப் பிரெஞ்சுக்காரர்.

“ நிர்வாகத்தாரும் தொழிலாளர்களும் முன்னிலும் அதிகத் திறமையோடு வேலை செய்து உற்பத்தியைப் பெருக்குவதென்றும், முன்னிலும் மிகுந்த பரிவுணர்ச்சியுடன் ஒருவரோடொருவர் பழகுவதென்றும் உறுதியுடன் உழைக்கிறார்கள் ” எனக் குறிப்பிட்டனர் நிலக்கரிச் சுரங்கத் தொழில் பற்றிய சில பெல்ஜியர்கள்.

நாமும், தொழில் நுட்ப உதவியால் நன்மையடைந்தோம். பிரிட்டிஷ்காரரிடமிருந்து சில சாமான்களைச் செய்யும் திறமையை அமெரிக்கர்களும் கற்றுக்கொள்ளக் கூடும் என அன்று சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் கூறியது உண்மை என்று கண்டோம். அட்லாண்டிக் கடலின் இரு கரையிலும் உள்ளவர்கள் ஒருவரையொருவர் முன்னிலும் அதிகமாக உண்மையாக அறிந்து கொண்டனர். “ நான் சொல்லுகிறேன் கேளு தம்பீ ” என்று பெருமையடிப்பவர்கள்தான் பிரிட்டிஷ்காரர்கள் என்ற பேச்சு ஒழிய இடமாயிற்று ; சினிமாவில் வருகின்ற கொள்ளைக் கூட்டத்தவனைப் போலவும் ஒரு நாகரிகமுமறியாத பட்டிக் காட்டானைப் போலவும் இருப்பவனே அமெரிக்கன் என்ற எண்ணமும் அக்கரை நாட்டை விட்டு ஒழிந்தது ; அமெரிக்கனும் ஒரு மனிதன்தான் என்ற எண்ணம் வளர்ந்தது. இதுபோல் ஒருவரைப்பற்றி இன்னொருவருக்குள்ள தவறான எண்ணங்கள் நீங்கி, சரியான நிலைமையைத் தெரிந்து தெளிவதால்தான் சுதந்தர உலக மக்கள் பாடுபட்டுச் சமாதானத்தை வளர்க்க முடியும்.

இவ்வாறு தொழில் நுட்ப உதவித் திட்டத்தின் வழியாக ஐரோப்பாவின் உற்பத்தி பெருக முயன்று உழைத்த அதே காலத்தில் சீனாவில் இதுபோன்ற இன்னொரு திட்டத்தை நடத்திப்பார்த்துக் கொண்டிருந்தோம். நாட்டுப்புறச் சீரமைப்புக்கு ஒரு கூட்டுக் கழகம் (Joint Commission on Rural Reconstruction) அமைத்து வேலை செய்ததையே குறிப்பிடுகிறேன். 1948-ல் நிறைவேறிய சீனச் சட்டமே இக் கமிஷனைத் தோற்று

வித்தது. இக்கமிஷனில் அங்கத்தினர் ஐந்து பேர். நாட்டுப் புறங்களிலே கம்யூனிஸ்டு செல்வாக்கு வளர இடங்கொடுத்த நிலைமை மேலும் நிலைத்திருக்கக்கூடாது என்பதற்காக இக் கமிஷன் தொடங்கப்பட்டது. (தென் கிழக்கு ஆசியாவிலும்) சீனுவிலும் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருந்தது.

விவசாயத் துறையில் சீன நிபுணர்களும் அமெரிக்க நிபுணர்களும் நாட்டின் நிலவரத்தைத் தெளிவாக ஆராய்ந்து எங்கெங்கே நாட்டுப்புறங்களில் சீர்திருத்தம் அவசியம் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தனர். உழுது பயிரிடும் விவசாயிடமிருந்து வரிகளாக விளைச்சலில் சராசரி பாதி போய்விடும்; சில இடங்களில் விளைச்சலில் எண்பது சத விகிதமும் இவ்விதமே போய்விடும். குடியானவனிடம் ஒப்பந்தம் செய்வதெல்லாம் உண்மையான ஒப்பந்தமன்று. நிலச்சுவான்தார் நினைத்தால் இந்த 'ஒப்பந்தங்களை' மாற்றிவிடலாம். அவற்றை அழித்தும் விடலாம். விவசாயியின் வருமானத்தில் இடைத் தரகர்கள் பிடுங்கித் தின்பார்கள். வட்டியும் வரியுமாக வானளாவ நிற்கும்; ஆகவே மீதியும் பெரும் பாகம் இப்படியே மறைந்து போகும். இப்படிச் சீனுவின் நாட்டுப்புறங்களில் நிலைமை சிக்கலாகிக் கிடந்தது. மாஸ்கோவில் பயிற்சி பெற்று உரமேறிய கம்யூனிஸ்டுகள் 1948-ல் சீனுவின் நாட்டுப்புறப் பிரச்சினைகளைத் தந்திரமாகத் திரித்துப் பேசி, அவற்றைத் தங்கள் அரசியல் சொக்கட்டானில் அமைத்து, மாயங்கள் புரியலாயினர். விவசாயிகளிடையே ஏற்பட்ட மனக் கசப்பு இவ்வளவு அவ்வளவு என்று சொல்லித் தீராது. (சீனுவிலுள்ள 46 கோடி மக்களையும் சேர்த்து) மொத்தம் ஆசியாவிலிருப்பவர்கள் 125 கோடி. இவர்களில் அநேகமாக நூற்றுக்கு எண்பது பேர்களுக்கு விவசாயச் சீர்திருத்தம் வேண்டுமென்ற விழிப்பு ஏற்பட்டிருந்தது; "விவசாயச் சீர்திருத்த வாதிகள்" என்று சொல்லிக் கொண்டு கிளம்பிய கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு அவர்களிடையே வளரவும் இடமேற்பட்டது. இவர்கள் பேசுவதெல்லாம் "விவசாயச் சீர்திருத்தம்," அவர்கள் கண்ணெல்லாம் அரசி

யல் ஆதிக்கம். இத்தகைய இவர்கள் பேச்சுக்கு இடங்கொடுத்தது ஆசிய விவசாயிகளின் நிலைமை.

சீனாவில் கம்யூனிஸ்டுகளின் கை ஓங்கிவிடாமல் தடுப்பதற்கு நாடு முழுவதிலுமே பொருளாதார நிலைமை உறுதியாகவேண்டும். அதற்கு முதற் படியாக விவசாயத் துறையில் அடிப்படையான மாறுதல்கள் ஏற்பட்டு நிலைமை சீர்திருந்தி அமைய வேண்டும்.

நாட்டுப்புறச் சீரமைப்புக்கான கூட்டுக் கமிஷனும் இதே கருத்தைக் கொண்டுதான் தன் காரியத்தில் இறங்கியது. நாட்டுப்புற மக்களது உடல் நலம் திருந்த வேண்டும்; வரி முதலியன நியாயமாக இருக்க வேண்டும்; உற்பத்தி பெருகவும் வகை செய்ய வேண்டும். ஆக இம் மூன்று குறிக் கோள்களையும் அடைவதற்காக " சமூக நீதி "த் திட்டமொன்று வகுத்து வேலை தொடங்கியது அக் கமிஷன்.

கமிஷன் ஒரு தூதுக்குழு அன்று; தூதுக் குழுவினர் அலுவலங்களில் அமர்ந்து வேலை செய்வர். இக்கமிஷனுடைய அலுவலகமோ பரந்த நிலப்பரப்புத்தான். மலை நாடுகளுக்கும் சென்று மக்களுடன் பழகியது கமிஷன். குடியானவர்களோடு வாழ்ந்து, அவர்கள் என்ன வேண்டும் என்று எண்ணுகிறார்கள் எனக் கண்டுபிடிக்க முயன்றனர் கமிஷன் அங்கத்தவர்கள். அரேபியாவில் லாரன்ஸ் என்பவர் குடியிருந்து அங்குள்ள மக்களை அறிந்துகொள்ள முயன்றார் என்று கேட்டிருக்கிறோம். அதுமுதல் இக் கமிஷன் அங்கத்தவர்கள் தவிர வேறு எந்த மேற்கத்தியரும் சமீப கிழக்கிலோ கீழ்க்கோடி நாடுகளிலோ இவ்வளவு தூரம் முயன்று உணர்ந்து வெற்றியடைந்தது இல்லை, இல்லை.

அக்கமிஷனில் அமெரிக்க அங்கத்தினராக இருந்தவர் டாக்டர் ரேமண்ட் டி. மோயர் (Dr. Raymond T. Moyar) பார்மோசாவுக்குப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் தலைவராக இருந்தவரும் இவரே. வாரம், கட்டுக் குத்தகை

முதலிய வகைகளில் நிலச் சீர்த்திருத்தச் சட்டங்களை நிறைவேற்றவேண்டுமென மாகாண கவர்னர்கள் அக்கரை கொள்ளும்படி கமிஷனில் வேலை செய்தார் இவர். இதனால் பல மாகாணங்களில் குடியானவர்கள் வரிகளாகத் தம் விளைவில் அளந்து கொடுக்க வேண்டியது, விளைச்சலில் $37\frac{1}{2}$ சத விகிதத்திற்குமேல் போகக்கூடாது என்று ஏற்பட்டது. இதற்கு முன் இந்த விகிதத்தைவிட $12\frac{1}{2}$, $30\frac{1}{2}$ சத விகிதமும் அதிகமாக இருந்தது.

இவ்வகையான சீர்திருத்தம் விவசாயிக்கு உடனே ஓர் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. அவன் மனநிலையே திருந்தியது. விளைவித்ததில் தன் பங்கு கூடுவது கண்டு, உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற ஊக்கம் பிறந்தது அவனுக்கு. அவன் தான் வாழும் இடத்து ஆட்சி முறையிலும் அக்கரை காட்டலானான்; ஆட்சி நடப்பதற்குத் தானும் பொறுப்பாளி என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றலாயிற்று.

நாட்டுப்புறச் சீரமைப்புக்கான இக் கூட்டுக் கமிஷனின் திட்டம் ஷெச்வான் (Szechwan), குவாங்ஸி (Kwangsi), பூக்கியென் (Fukien) ஆகிய மாகாணங்களில் நடைபெறலாயிற்று. பின்னர் கம்யூனிஸ்டுகள் படை யெடுத்தபோது அவர்களை விடாப் பிடியாக முழு ஆற்றலுடன் எதிர்த்த மக்கள் இம் மாகாண மக்களே.

கம்யூனிஸ்டுச் சூழ்ச்சிகளை முறியடிக்கக் கூடிய இத் திட்டங்களை முன்கூட்டியே செய்திருந்தால் சீனாவின் வரலாறே வேறாக விருக்கும்.

நன்றாக உண்டு உடுத்தி வாழ வழி செய்தால், மக்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து நடந்துகொள்ள நம்பிக்கையும் உறுதியும் பெறுவர். பொருளாதாரத் துறையில் புது வாழ்வு ஏற்பட்டால், மனத் திடமும் புத்துயிர் பெறும். இதுதான் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் அடிப்படைக் கொள்கை. ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் இந் நிர்வாகம் வேலை செய்த இடங்கள் இந்த அடிப்படை சரியென்று காட்டிவிட்டன.

இதற்கு இன்னும் ஒரு சான்று கூறுகிறேன். ஐரோப்பாவில் பொருளாதார நலங்களுக்கும் தேர்தல் முடிவுக்கும் ஏற்பட்ட தொடர்பைத்தான் குறிப்பிடுகிறேன். கம்யூனிஸத்தை முறியடிக்க வேறு காரணங்களே இல்லை எனக் கூறவில்லை. ஜனநாயகத்தை ஆதரித்த அரசியல் வாதிகளின் செல்வாக்கு இருந்தது ; கம்யூனிஸத்தை எதிர்த்துத் திருச்சபையும் அறப்போர் புரிந்தது. கம்யூனிஸம் தேனொழுகப் பேசும், ஆனால் இரத்தம் ஓட அநாகரிகச் செயலில் இறங்கும் என்ற உண்மையை மக்களில் பல திறப்பட்டவர்களும் மென்மேலும் உணர்ந்துவரலாயினர் : இவையெல்லாம் உண்மைதான். ஆயினும் பொருளாதாரம் சீர்ப்படுவதற்கும் கம்யூனிஸத்தை எதிர்த்த “ஓட்டு”கள் அதிகரிப்பதற்கும் உள்ள தொடர்பு உள்ளங்கை நெல்லிக் கனிபோல விளங்குவதை மார்ஷல் திட்டத்துக்கு முன்னும் பின்னும் நடந்த தேர்தல்களிலிருந்து கண்டுகொள்ளலாம்.

உதாரணமாக, பெல்ஜியத்தில் தொழில் வளம் 12 சதவிகிதம் உயர்ந்ததும், அங்கு பார்லிமெண்டில் 17 கம்யூனிஸ்டுகள் இருந்ததுபோக 10 கம்யூனிஸ்டுகளாகக் குறைந்தனர்.

நார்வேயில், உற்பத்தி 23 சதவீதம் உயர்ந்ததும் அங்கு பார்லிமெண்டில் கம்யூனிஸ்டுகள் தங்கள் பதினொரு இடங்களையும் இழந்து மறைந்தனர்.

நெதர்லாந்தில், தொழில் உற்பத்தி 51 சதவீதம் கூடிற்று ; மாகாணச் சட்ட சபைகளில் 1946-ல் 10 சதவிகிதம் கம்யூனிஸ்டுகள் இடம் பெற்றிருந்தவர்கள், 1950-ல் 5 சதவிகிதம்தான் இடம் பெற முடிந்தது.

டென்மார்க் நாட்டில், உற்பத்தி 31 சதவிகிதம் உயர்ந்தது : அங்கு தேசியத் தேர்தல்களில் 1945-ல் கம்யூனிஸ்டுகளுக்கு 12 சதவிகிதம் இடம் கிடைத்திருந்தது : 1950-ல் அது 4 சதவிகிதமாகக் குறைந்தது.

ஆஸ்திரியாவில், உற்பத்தி ஏறக்குறைய 140 சதவிகிதமாகக் கூடிற்று ; 5 ஆண்டுகளுக்கு முன் 30 நகரங்களில் மேயர்களாக வந்த கம்யூனிஸ்டுகள் அனைவரும் 1950-ல் தங்கள் பதவியை யிழந்து வீழ்ச்சியுற்றனர்.

ஸ்விட்சர்லாந்து, பிரிட்டன் ஆகியவற்றில் கம்யூனிஸத்தை எப்போதும் யாரும் ஒரு பெரிதாகக் கவனிப்பதில்லை. கிரீஸ், துருக்கி, போர்ச்சுகல் ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சி சட்ட விரோதமான கட்சியாகும்.

கம்யூனிஸத்துக்கும் ஜனநாயகத்துக்குமிடையே இத்தாலி யிலும் பிரான்சிலும்தான் இழுபறி. முடிவு இன்னும் துலக்க மாகத் தெரியவில்லையானாலும், நாம் பலமடைகிறோம் என்பதில் ஐயமில்லை. மார்ஷல் திட்ட உதவி வருகிறது என்று சொன் னதுதான் தாமதம், இத்தாலிய அரசாங்கத்தில் கம்யூனிஸ்டு பிரதிநிதிகள் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. தொழில் உற்பத்தியில் 27 சதவிகிதம் கூடியது, தொழிலாளர்களிடையே கம்யூனிஸ்டு செல்வாக்கு குன்றியது. பிரான்சில் கம்யூனிஸ்டு சர்க்கார் தோன்றிவிடாமல் தடுத்தது மார்ஷல் திட்டமே எனக் கூறலாம். அது முதல் தொழில் உற்பத்தி 29 சதவிகிதம் உயர்ந்துள்ளது, கம்யூனிஸ்டு செல்வாக்கும் பரவாமல் தடைப் பட்டுள்ளது. பிரான்சில் பொருளாதாரம் உரம் பெற்று வளர நாம் இனியும் உதவியளிப்போமானால், எதேச்சாதிகாரத்தை ஜனநாயகம் தோற்கடிக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

நிர்வாகம் திறமையாக நடப்பதற்கு உயர்ந்த சம்பளம் கொடுத்துச் சிறந்த அதிகாரிகளை நியமிக்கவேண்டும் என்பதை நான் படித்தறியாமலே உணர்ந்திருந்தேன். பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்து அதிகாரிகளை நியமிக்க, வருஷம் 15,000 டாலர் தரும் 25 பதவிகளும், வருஷம் 10,000 டாலர் தரும் 75 பதவிகளும் ஏற்படுத்திக்கொள்ளலாமென்று காங்கிரஸ் சட்டமியற்றியிருந்தது. அரசாங்கத்தில் இவ்வளவு

தூரம் சம்பளம் கொடுப்பதில்லை, உண்மைதான். ஆனல் இதைவிடப் பன்மடங்கு சம்பாதிக்கக்கூடிய திறமை வாய்ந்த வர்கள் ஒரு நூறு பேர் எங்கள் வேலைக்குத் தேவையாக இருந் தது. திறமை மிகுந்தவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு எனக்கு என் சொந்த "அட்டார்னி"யான எம். டி. மூர் உதவியாயிருந் தார். நாங்கள் நீண்ட நேரம் நெடுந்தொலைவுக்கு "டெலி போன்" பேசினேம். யாராவது ஒருவர் வேலையை ஒப்புக் கொள்வார் என்று தோன்றினல் அவரைப் போய்க் கண்டு முடிவு செய்துவிட எங்களில் ஒருவர் சில சமயம் விமானமேறி மிகத் தொலைவு சென்றதுண்டு. நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாகவே எங்களுக்கு வெற்றி கிடைத்தது. என்னைவிடச் சிறந்தவர்களைத் தெரிந்த வேலைக்கு அமர்த்தியதாகவே பொரு ளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் வெற்றிகள் பெறிதும் கைக் கூடியிருக்கின்றன என்று சொல்லுவேனனல் அது அடக்கத் தால் சொல்லுவதன்று, உண்மையே சொல்லுவதாகும்.

இவ்வாறு திறமைசாலிகளுக்கு நாங்கள் ஓடியாடிய சம யம், முதன் முதலாகக் கிடைத்தவர் எவெரல் ஹாரிமன். அவர் அச்சமயம் வர்த்தக மந்திரியாக இருந்தார். பொருளா தாரக் கூட்டுறவு நிர்வாகத்தில் ஐரோப்பியத் திட்டங்களை நடத்த அவரை இணங்கச் செய்தோம். பிரிட்டனிலும் ரஷ்யாவிலும் இவர் நம் தூதராக இருந்தவர்; மற்றும் பல முக்கிய பதவி களில் இருந்தவர். ஆகவே ஐரோப்பாவைப் பற்றி இவர் நன்கு அறிந்தவர். எனவே ஐரோப்பிய திட்டங்களை நடத்த இவரே சரியானவர். இவருக்குத் துணைவராக, வர்த்தக உதவி மந் திரியாக இருந்த வில்லியம் சி. பாஸ்ட்டரைப் பிடித்தோம். வாஷிங்டனிலிருந்த நிர்வாகிகளுள் தலைசிறந்த திறமையுள்ள வர்களில் இவர் ஒருவர். பல விஷயங்கள் அறிந்து நிரம்பிய ஹாவர்டு புரூஸ், ஓய்வு பெற்றிருந்ததை விட்டுவிட்டு எனக்கு உதவியாக வந்தார். ஆறு மாதம் கூட இருந்து துணை செய்வதாக உறுதி கூறி வந்த இவர் பெருந்தன்மையாய் 18 மாத காலம் தங்கினர். ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் சட்டப்

பேராசிரியராக விளங்கிய மில்ட்டன் காட்ஸ் எங்கள் ஐரோப்பியத் திட்டங்களுக்குப் பொது ஆலோசகராக அமர்ந்தார்.

திறமை மிகுந்தவர்களைத் தேடிப் பிடித்தது மட்டுமன்று. அமெரிக்காவின் பொது வாழ்க்கையிலும் தனி வாழ்க்கையிலும் உள்ள பல அம்சங்களையும் துலக்குகின்ற முறையில் பலதிறப் பட்டவர்களையும் சேர்த்து நமது காரியாலயத்தை அமைக்க வேண்டும் என்பதும் எங்கள் நோக்கம். வர்த்தக ' பாங்கர் ' ராபர்ட் ஹேஸ்ஸ் ; தொழிலாளர்களுக்கு உண்மையான பிரதி நிதிகளில் ஒருவரான கிளிண்டன் எஸ். கோல்டன் ; மத்திய மேற்கு அமெரிக்கத் தொழிலதிபர் ஏ. இ. ஸ்டேலி ; மாசச்சூ செட்ஸ் தொழில் நுட்பக் கல்லூரிப் பொருளாதார நிபுணர் எம். பிஸ்ஸெல் ஜூனியர் ; முன்னாள் வால் ஸ்டிரீட் தரகர் கர்னல் கி. டெய்லர் வுட் ; விவசாய இலாகாவில் உணவு விஷயங்கள் பற்றிய நிபுணர் என்று நாடறிந்த டாக்டர் டென்னிஸ் பிட்ஸ்ஜெரால்ட் என்றிவ்வாறாகப் பல திறப்பட்டவர்களைச் சேர்த்தோம். அரசாங்கத்திலும், தொழிலுலகிலும், வியாபாரத்திலும், விவசாயத்திலும், பல்கலைக் கழகங்களிலுமிருந்து திறமை வாய்ந்தவர்களைத் தெரிந்தெடுத்து அமைத்த எங்கள் காரியாலயம் போல் வேறெங்கும் கண்டதில்லை எனப் பெருமை பாராட்டிக்கொண்டோம். இவர்கள் அமெரிக்கர்களின் நலன் மட்டுமன்று ஐரோப்பியர்கள் நலனும் அபிவிருத்தியடையும் விதத்தில் உழைத்தார்கள்.

வெளி நாடுகளில் செலவிடும் டாலர்கள் முழுதும் பலனளிக்கவேண்டுமானால், எல்லாவிதமான நிதிகளையும் ஒதுக்கி வைக்கும் பொறுப்பு ஒரே ஒரு அரசாங்க ஸ்தாபனத்திடமே இருக்க வேண்டும். பொருளாதார நிலைமை சீர் திருந்துவதற்கானாலும் சரி, இராணுவ பலத்தை வளர்ப்பதானாலும் சரி, சீரமைப்புக்கானாலும் சரி, நிதிகளை எவ்வெவ்விதம் ஒதுக்கி வைத்துத் திட்டத்தை நடத்த வேண்டும் என்பதை ஒரு ஸ்தாபனத்திடம் விட்டுவிடுவதே முழுப்பயன் அடைய வழி. இதுவே பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் நடத்திய நாங்கள்

அனைவரும் கற்றுக் கொண்ட முக்கிய விஷயங்களில் முதன்மை யானது என நம்புகிறேன். அவ்விதம் ஒரே ஒரு ஸ்தாபனம் பொறுப்பேற்றால்தான்,

(1) உதவி வேண்டும் நாடுகளை ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுத்தாமல் எல்லாவற்றிற்கும் சரியான முறையில் நிதியைப் பிரித்து வழங்க முடியும். (வெளி நாடுகளுக்கு நிதி உதவி செய்யும் வேலையைப் பற்பல ஸ்தாபனங்களிடையே விட்டால், சில நாடுகளுக்கு அதிகமாகவும் வேறு சில நாடுகளுக்குக் குறைவாகவும் நிதி கிடைக்கும்படியாகும்).

(2) உதவி பெற்ற நாட்டில் நிதி வீணாகாமல் பயன்படும். (இரண்டு மூன்று ஸ்தாபனங்கள் இருந்தால் ஒரே வேலைக்குப் பல வகையாக நிதி கிடைக்கும்படி செய்து வீண் செலவாகும்.)

(3) நிதி உதவி பெறும் நாட்டின் பொருளாதாரம் நமது நிதி உதவியால் கெடாமல் இருக்க எப்போதும் கவனமாய் இருக்க முடியும். (பிரிட்டனைப்போல வேலையில்லாத் தொல்லை இல்லாத ஒரு நாட்டை படைப் பலம் பெருக்கவேண்டுமென்று மிகவும் வற்புறுத்தினால் அங்கு வாழ்க்கைத் தரம் குறைந்து விடும்; ஆனால் ஜெர்மனியைப்போல வேலையில்லாத் திண்டாட்டம் உள்ள ஒரு நாட்டைப் படைப் பலம் பெருக்கும்படி தூண்டினால் அங்கு வாழ்க்கைத் தரம் உயரும்.)

சீரழிந்துபோன தொழில்கள் மீண்டும் தலைதூக்கவும் தொழில் வளம் இன்னும் வளர்ச்சியடையவும், படை வலிமை வளரவும் ஆகிய மூன்று நோக்கங்களும் ஈடேற ஒரு சீரான திட்டம் வகுத்து நடத்த ஒரே ஒரு ஸ்தாபனம் அவசியம் என்பதைப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் எடுத்துக் காட்டி விட்டது. இந் நிர்வாகம் ஓர் ஆரம்ப முயற்சியே. மேற்சொன்ன மூன்று நோக்கங்களையும் ஈடேற்றும் வகையில் நடப்பதற்குப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்துக்கு அதிகாரம் இருந்த இடங்களிலெல்லாம் அதன் செயல்கள் பலனளித்துள்ளன. அவ் வகை அதிகாரம் இல்லாத இடங்களில் அதன் திட்டங்களும் வேலைகளும் முழுப்பலன் கொடுக்கவில்லை.

ஆகவே அமெரிக்க மக்களுக்கும் அமெரிக்கக் காங்கிரஸிற்கும் நான் மிக மிக வற்புறுத்திக் கூறுவது இதுதான் :

**அயல் நாட்டுப் பொருளாதார நிர்வாகம் என ஒரு அரசாங்க ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டும் ; வெளி நாடுகளுக்குச் செய்யும் எல்லா உதவிகளும் தொழில் நுட்ப உதவித் திட்டங்களும் இதன்மூலமே நடைபெற வேண்டும் ; ஏற்றுமதி இறக்குமதி பாங்கி போன்று கடன் கொடுக்கும் ஸ்தாபனங்களின் கொள்கைகளை வகைப் படுத்தவும் இந்த அயல் நாட்டுப் பொருளாதார நிர்வாகத்துக்கு அதிகாரம் இருக்கவேண்டும் ; சர்வ தேசப் பொருளாதார ஸ்தாபனங்களில் அமெரிக்காவின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் அந்த அயல் நாட்டுப் பொருளாதார நிர்வாகத்துக்குக் கட்டுப் பட்டிருக்கவேண்டும் ; இந்த அயல் நாட்டுப் பொருளாதார நிர்வாகம் வெளிநாட்டு இலாகா, உள்நாட்டு இலாகா ஆகியவற்றைப்போல ஒரு அரசாங்க இலாகாவின் மதிப்புடன் இருக்கவேண்டும் ; நிர்வாகத்தின் தலைவரும் ஒரு மந்திரி என்ற மதிப்புடன் இருக்கவேண்டும்.**

அதாவது; இத்தகைய அயல்நாட்டுப் பொருளாதார நிர்வாகம் ஏற்பட்டு இன்றுள்ள பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் வேலைகளை அப்படியே தானேற்றுக்கொள்ளவேண்டும். இன்று வெளி நாட்டு இலாகா நடத்தும் நாலாம் அம்சத் திட்டத்தையும் அது ஏற்று நடத்தவேண்டும் ; பரஸ்பரப் பாதுகாப்பு உதவித் திட்டப்படி ஐரோப்பாவின் படை வலிமையைப் பெருக்கும் விஷயத்தில் பொருளாதாரத் துறை சம்பந்தப்பட்டமட்டிலாவது நான் குறிப்பிட்ட பொருளாதார நிர்வாகத்துக்கு மேற் பார்க்கும் அதிகாரம் இருக்க வேண்டும். இன்னும், உலக பாங்கி சர்வ தேசச் செலாவணி நிதி, சர்வ தேசத் தொழில் ஸ்தாபனத்தில் நாம் சேரும்போது இந்த ஸ்தாபனம் ஆகியவற்றில் அமெரிக்காவின் பிரதிநிதிகளாக உள்ளவர்களுக்கெல்லாம் அவர்கள் வேலையில் என்ன கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை, நான் குறித்த அயல்நாட்டுப் பொருளாதார நிர்வாகமே நிர்ணயித்துச் சொல்லவேண்டும்.

# அரசியல் முனையில் சமாதானம் புரிதல்

## அத்தியாயம் 7

அரசியல் என்றால் குடியரசுக் கட்சி, ஜனநாயகக் கட்சி, தேர்தல்கள்—அவ்வளவுதான் என்று நான் எண்ணியிருந்தேன். இந்த எண்ணம் என்னை விட்டு ஒழிந்து சிறிது காலம் தான் ஆகின்றது. ஜார்ஜ் வாஷிங்டன் சொன்னதுபோல, பிற நாடுகளோடு நிலையான எந்த உறவு ஒப்பந்தமும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று சிறுபிள்ளைப் பருவத்திலிருந்தே கேட்டுக் கேட்டு என் செவிகளும் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. ஆனால் ஜார்ஜ் வாஷிங்டன் காலத்தில் அட்லாண்டிக் கடலைக் கடக்க ஐந்து கிழமைகள் ஆகும், உலகத்தைச் சுற்றிவர ஒன்றரை வருஷம் பிடிக்கும் என்று ஒருவரும் சொல்லக் கேட்டேன் இல்லை. இன்று கடல்கள் அளவில் குறுகிவிடவில்லை. அவற்றைக் கடக்கும் கால அளவுகள் குறுகிவிட்டன. நியூயார்க்கில் உச்சி வேளையில் உண்டு, காலையில் உணவருந்த லண்டனோ பாரிசோ போய்ச் சேர்ந்திருக்கிறேன். ஒரு தரம் பதினான்கு நாட்களில் உலகத்தைச் சுற்றி வந்திருக்கிறேன்; இவற்றில் உண்மையாகவே விமானத்தில் இருந்தவை ஆறு நாட்களுக்கும் குறைவே.

நிலைமையை உள்ளபடி உணரவேண்டும். **1790**-ம் ஆண்டு இருந்த உலகுக்கு ஏற்ற ஒரு கொள்கை முறை **1951**-ம் ஆண்டுக்கு ஒத்து வராது. உண்மை நிலையை உள்ளபடி உணர அஞ்சாத ஜார்ஜ் வாஷிங்டன் இந்த முடிவை உடனே ஒப்புக்கொள்வார் என்பதில் சந்தேகமே இல்லை. "(சீனாவின்) யாங்ட்ஸி (Yangtze) ஆறு இப்போது (நியூயார்க்கின்) நடுத் தெருவில் ஓடுகிறது"

என்று வின்ஸெண்ட் ஷீன் கூறினார். அதை ஜார்ஜ் வாஷிங்டன் முற்றிலும் சரியென்று ஒப்புக்கொள்வார் என்பதில் எனக்கு ஐயம் இல்லை. "அயல்நாட்டுக் கொள்கையே நமது முக்கிய உள் நாட்டு விஷயமாகி விட்டது" என, காலஞ் சென்ற ஹென்ரி எல். ஸ்டிம்சன் கூறியதையும் வாஷிங்டன் ஒப்புக்கொள்ளுவார்; கடந்த 160 ஆண்டுகளில் அவ்வளவு தூரம் மாறுதல்கள் விளைந்திருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்கிறோம். இன்று உலகம் பல பாகங்களாகச் சிதறிக் கிடக்கவில்லை. இந்தக் காலத்தில் ஒரு நாடும் "தன்னந்தனியாய் நின்று வாழ்தல்" முடியாது. சமாதானத்தை அடைய நாம் செய்யும் முயற்சிகளுக்கும், அதற்கான நமது மன உறுதிக்கும் ஊற்றாக இருப்பது எல்லோம் ஒரு குலத்தவர் என்ற உலக நோக்குடன் வாழ்ந்து முயல்வதேயாகும்.

பல்வேறு மக்களும் இவ்வாறு ஒருவர்க்கொருவர் தாங்கலாகவே வாழ்கின்றனர் என்ற உண்மையை உணர்ந்த பின்பு தான் அரசியல் என்பதற்கு எனது அகராதியில் புதியதொரு பொருள் பிறந்தது. படைகளை வைத்துப் பயமுறுத்தி ஆளும் நாடுகளில் ஒரே கட்சியும், தேர்தலுக்கு ஒரே அபேட்சகரும் இருக்கக் காண்கிறோம். அத்தகைய நிலைமை இங்கும் வந்து விடாமல் குடியரசுக் கட்சியென்றும், ஜனநாயகக் கட்சியென்றும், நிர்ப்பந்தமில்லாத தேர்தல்கள் என்றும் இவையெல்லாம் நமக்கு நிலைத்திருக்க வேண்டுமானால் கட்சியரசியலுக்கு மேலாக உலக அரசியலை வைத்தே நாம் இனி நடக்கவேண்டும். இதில் நமக்கு இன்னும் அதிகமான முயற்சி வேண்டும். உண்மையில் நம்முடைய வாழ்க்கையை, நமது உள்நாட்டு அரசியலை விட உலக அரசியலே அதிகமாகப் பாதிக்கிறது. பிரேஜிலில் காப்பி விளைவுக்கு மோசம், இந்தியாவில் ஒரு பஞ்சம். பிரிட்டனில் செலாவணியின் மதிப்பு குறைதல், பிரான்சில் ஏறக்குறைய நிலைபெற்றுவிட்ட வழக்கமாகிய மந்திரி சபை நெருக்கடி, ஆப்பிரிக்காவில் யுரேனியம் இருப்பதைக் கண்டுபிடித்தல்,

லெபனுனில் ஓர் அரசியல் படுகொலே. இவையெல்லாம் நம்மைத் தனித்தனியாகவும் பொதுவாகவும் பாதிக்கக் கூடிய முடிவுகளே விளேவிக்கின்றன. "வெளிநாட்டு விவகாரம் உள்நாட்டு விவகாரத்தைவிட அதிக முக்கியம் என்பதை உலகின் இதற்கு முன் இருந்த தேசங்களும், இன்றுள்ள தேசங்களும் எப்போதாவது ஒரு தடவை உணரும்படியாயிருக்கிறது. உள்நாட்டு விவகாரம் மிகவும்.......சமீபத்தில் நடப்பது, இதை நேரில் கண்டறிகிறேம், இது உடனடியாக நம்மைப் பாதிக்கிறது. அதனுல் பொது மக்கள் கருத்தெல்லாம் உள்நாட்டு விவகாரங்களிலேயே மிகுதியும் செல்கிறது. ஆயினும் உண்மையாகவே கடக்கரிய காரியங்கள்,..............மற்ற நாடுகளுடன் வைத்திருக்கும் தொடர்புகளேயாகும். சரித்திரம் உண்டாவது வெளிநாட்டுக் கொள்கையால்தான்" எனக் கூறுகிறது '**பாரன்**' **(Barron)** என்னும் பத்திரிகை. அது சொல்வது சரிதான் என நாம் அனைவரும் ஒப்புக்கொள்ளவே வேண்டும்.

இவ்வளவையும் எழுதுவதன் கருத்து என்னவென்ருல், சமாதானத்தை அடைய உலக அரசியல் ஒரு முக்கிய ஆயுதமாகும் என்பதே. யுத்தம் நடத்திஞல் அச்சமயம் நமது வெளிநாட்டுக்கொள்கை எவ்வளவு திட்ட வட்டமாக இருக்குமோ, அவ்வளவு உறுதியும் திட்டவட்டமுமான தன்மையும் பொருந்திய ஒரு வெளிநாட்டுக் கொள்கை, சண்டையில்லாத காலத்திலும் அவசியம். ஆனுல் நமது வெளிநாட்டுக் கொள்கை இது செய்ய மாட்டோம், அதைத் தொட மாட்டோம் என்ற எதிர்மறையான நிலேயில்தான் பன்னெடுங் காலமாக இருந்தது ; இந்த நிலேயை விட்டுவிட்டு இப்பொழுது ஒரு பத்து ஆண்டுகளாகத்தான் ஓர் உறுதியான நிலேக்கு நகர்ந்து கொண்டிருக்கிறது. என்ன நடந்தது என்பதைக்காணு முன்பு நாம் வெளிநாட்டுக் கொள்கையை யார் உருவாக்குகிருர்கள், யார் அதைச் செயலாக்குகிருர்கள் என்பதைக் கவனிப்போம்.

ஜனுதிபதியே வெளிநாட்டுக் கொள்கையை வகுப்பவர் ; அதை நடத்திவைக்க வேண்டியது வெளிநாட்டிலாகாவின்

பொறுப்பு. இதுதான் நமது அரசியல் திட்டம் வகுத்துள்ள முறை. ஆனால், உண்மையில் காங்கிரஸின் ஒத்துழைப்பு இல்லாமல் அதிகம் செய்துவிட முடியாது. பிறநாடுகளோடு செய்யும் உடன்படிக்கைகளை செனட் சபை சரி சொல்லவேண்டும்; வெளிநாட்டுக் கொள்கையின் கருத்து ஒன்று நிறைவேறப் பணம் வேண்டியிருந்தால் அதை செனட் சபையும் பிரதிநிதி சபையும் அனுமதிக்கவேண்டும். இவை நினைத்தால் பணம் இடைக்காதவாறும் செய்துவிடலாம். வெளிநாட்டு விவகாரமாக நமது அரசாங்க அலுவலகங்கள் செய்யும் காரியங்கள் நாட்டுப் பொது அபிப்பிராயங்களைத் தழுவியதாகவே இருக்கும். அதிலும் முக்கியமாகத் தனித்தனி வகுப்பார்கள் தங்கள் தங்கள் நலனுக்கேற்ற வண்ணம் கூறும் கருத்துக்களுக்கும், அவர்கள் கொண்டுவரும் செல்வாக்குக்கும் தக்கபடி அரசாங்க இலாக்காக்கள் வேலை செய்யும். வியாபாரிகள் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள் இவையெல்லாம் நமது வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதில் உடந்தையாய் இருப்பவைகளே. அதே போல் பத்திரிகை விமர்சகர்களும், வானொலி விமர்சகர்களும், கல்வியாளர்களும், மதத் தலைவர்களும் நமது வெளிநாட்டுக் கொள்கையை வகுப்பதில் பொறுப்புள்ளவர்களே. உண்மை என்னவென்றால் வெளிநாட்டுக் கொள்கையை அறிந்தோ அறியாமலோ, பயந்தோ, துணிந்தோ நாம் ஒவ்வொருவருமே உருவாக்குகிறோம் என்பதுதான்.

நம்முடைய குறிக்கோள்கள் என்ன? அதற்கு நம்மிடம் எவ்வளவு சக்தி இருக்கிறது? இவற்றைத் தெளிவாக உணர்ந்து சீர்தூக்கி ஆக்கமான ஒரு கொள்கையை வகுக்கவேண்டும். இதுவே நம் அனைவருக்கும் கருத்தாக வேண்டும். நம்முடைய சக்திக்கு மிஞ்சித் தலைக்கொடுத்தால் குழப்பம் மிகுந்து நம்முடைய செயல்கள் ஒன்றுக்கும் உதவாமல் முடியும்.

வெளிநாட்டுக் கொள்கையை நாம் எல்லோருமாகச் சேர்ந்து தான் உருவாக்குகிறோம் என்றாலும் அதைத் தெளிவாக வரையறுத்து வடித்தெடுக்கும் பொறுப்பு பெரும்பான்மையும் நமது

வெளிநாட்டிலாகாவையே சாரும். இது எளிதன்று. மற்ற உலகத்தோடு சேராமல் தனித்து வாழலாம் என்ற கொள்கை நமது வெளிநாட்டிலாகாவில் தலைமுறை தலைமுறையாக ஊறிப்போயிருக்கிறது. அந்த இலாகாவில் வேலை செய்பவர்களைப் பற்றி நாட்டில் பொதுவாக ஒரு சந்தேகம் ஊன்றி வளர்ந்திருக்கிறது. வெளிநாட்டில்லாகாவைப் பற்றித் தவருக எல்லோரும் எண்ணியதுபோலவே நானும் எண்ணியிருந்தேன். இந்த இலாகாவில் வேலை செய்பவர்கள் யாரும் அணுகி அறியவொண்ணுத விதத்தில் பரம ரகசியமான காரியத்தை நடத்து வைககும் ஒரு தனி உயர் வகுப்பார் என்று தான் நானும் எண்ணினேன். அவர்கள் பரம்பரையாகச் செல்வத்தில் புரளும் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் என்றும், தகுதி, திறமை என்பவையின்றிப் பணமும் செல்வாக்கும் பெரிதாக எண்ணித் திரிபவர்கள் என்றும் எண்ணியிருந்தேன். விருந்துகள் நடக்கையில் முதல் வரிசையில் தங்களுக்கு இடங் கிடைக்க வேண்டுமென்பதில் இவர்களுக்கு இருக்கும் அக்கரை புதிதாகச் சுதந்தரம் பெற்ற ஒரு நாட்டின் அரசியல் மாறுதல்களில் இருப்பதே இல்லை. இதுபோன்ற எண்ணங்களுடன்தான் நான் வாஷிங்டனுக்கு வந்து சேர்ந்தேன்.

ஆனல் இது முற்றிலும் பொய் என்பதைக் கண்டுகொண்டேன். வெளிநாட்டிலாகாவில் வேலை பார்ப்பவர்கள் மிக மிக வருந்தி உழைப்பவர்கள் என்பதையும் திறமை மிகுந்தவர்கள் என்பதையும், கடமை மறவாத உள்ளம் படைத்தவர்கள் என்பதையும் நான் இரண்டரை வருஷங்களாகப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகியாக இருந்த சமயம் அறிந்தேன். அவர்கள் அனைவரும் ஒரு வகுப்பாரல்லர். நமது சமுதாயத்தின் பல வகுப்புகளிலிருந்தும் வந்தவர்கள் அவர்கள். 1939-ல் அந்த இலாகாவில் 5,400 பேர்களே வேலை பார்த்தனர். இன்று ஏறக்குறைய 24,000 பேர்கள் வேலை பார்க்கின்றனர். உலகில் முன்னணியில் நின்று தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பை அமெரிக்கா

எவ்வளவு தூரம் உணர்ந்து செயலாற்றுகிறது என்பதற்கும் வெளிநாட்டு இலாகாவில் வேலை பார்ப்பவர்கள் எல்லோரும் பரம்பரையாகச் செல்வத்தில் வாழ்ந்தவர்கள் அல்லர் என்ப தற்கும் அந்த இலாகாவின் வளர்ச்சியே தக்க சான்றாகும்.

வெளிநாட்டிலாகா என்னென்ன செய்து முடித்துள்ளது என்பதை வாஷிங்டனிலும் மற்ற இடங்களிலும் பொது மக்கள் மென்மேலும் அதிகமாய்த் தெரிந்துகொள்கிறார்கள் எனக் காண மகிழ்ச்சி யடைகிறேன். இன்று சமாதானத்தைக் கொண்டுவரக் கூடிய சர்வ தேச ஸ்தாபனங்கள் இருப்பதற்கு நமது வெளி நாட்டிலாகாவின் முயற்சிகளையும் பாராட்டவே வேண்டும். இந்த ஸ்தாபனங்கள் முளைத்தெழ ஆதரவளித்து, அவை வளர்ச்சி யடைய வழி செய்து, அவற்றில் சில உண்டாவதற்கே ஊற்றாக இருந்து துணை செய்த பெருமை நமது வெளிநாட்டிலாகாவைச் சாரும். ஐக்கிய நாடுகள் சபை உருவாவதற்கும் அது சமா தானத்தை வளர்த்து உறுதிப்படுத்தும் ஒரு சங்கமாக நிலை பெறுவதற்கும் நம் வெளிநாட்டிலாகா பெரிதும் உதவி செய் துள்ளது. உலக நாடுகள் நமது நாட்டைப் பற்றிய நல்லெண் ணத்துடன் நமது குறிக்கோள்களை உணர்ந்துகொண்டு ஒத்து ழைக்கும்படி ஐக்கிய நாடுகளின் கிளைச் சங்கங்கள் வழியாக நம் வெளிநாட்டிலாகா மிகவும் பாடுபட்டிருக்கிறது. மண் வளத்தை அதிகமாக்கவும், சிறந்த பயிர் விதைகளை உற்பத்தி செய்யவும், கன்றுகாலிகளை நன்றாக வளர்க்கவும் அமெரிக்க வழி முறைகள் என்னென்ன உண்டோ அவற்றை வெளி நாட்டு மக்களும் அறிந்துகொள்ள நம் வெளிநாட்டிலாகா ஐக்கிய நாடுகளின் உணவு விவசாயச் சங்கத்தின் வழியாக முயன்று உழைத்திருக்கிறது ; உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழியாக முயன்று, நமது வைத்திய முறைகளையும் கவனிப்பை யும் பிறர் அறிந்துகொள்ளச் செய்திருக்கிறது ; அறிவுத் துறை யிலும், ஆன்ம நெறியிலும் அமெரிக்கா அடைந்துள்ள நலம் பிறருங் கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனத்தின் வழியாக வேண்டும் முயற்சி செய்

துள்ளது. உலக சமாதானத்துக்காக ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனங்களில் ஒன்ருக சர்வ தேச வியாபார ஸ்தாபனம் என்பது உருவாவதற்கு நம் வெளிநாட்டிலாகா, அரசாங்கத் தின் மற்ற இலாகாக்களுடன் சேர்ந்து தானும் அறிவுறித்தி யுள்ளது; உலகில் பல இடங்களுக்கும் பற்பலவகையான பண்டங் கள் எளிதில் போய் வந்து உலக வியாபாரம் பெருகுவதே இதன் நோக்கம்.

இதைவிட முக்கியம் என்று சொல்லும்படியாக வெளிநாட் டிலாகா மிகவும் முயன்று உழைத்து ட்ருமன் கோட்பாடு, மார் ஷல் திட்டம், பரஸ்பரப் பாதுகாப்பு உதவித் திட்டம், வட அட் லாண்டிக் உடன்படிக்கை ஆகியவற்றைத் தோற்றுவித்தது. இந்த ஏற்பாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையில் நாம் சேர்ந்திருப்பதும், சமாதானக் காலத்தில் நாம் உறுதியான திட்டவட்டமான ஒரு வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப் பிடிக்கின்றேம் என்பதைக் காட்டுகின்றன. மேற்கு ஐரோப்பாவில் நாம் வெற்றியடைந்த தற்கும், நமது கொள்கை நிச்சயமில்லாதிருந்த ஆசியாவில் நாம் வெற்றி காணமலிருப்பதற்கும் உள்ள வேற்றுமையி லிருந்து உறுதியும், தெளிவும் வாய்ந்த வெளிநாட்டுக்கொள் கையின் நன்மையை உணர்ந்துகொள்ளலாம். இன்று உலகில் எந்த இடத்திலும் அமெரிக்கா நிச்சயமில்லாத எதிர்மறையான ஒரு கொள்கையைக் கடைப் பிடிக்க முடியாது. அத்தகைய காலம் மலையேறிவிட்டது. எதிர்மறைக் கொள்கைகளைக் கடைப் பிடித்துத்தான், முதலாவது உலக யுத்தத்திற்குப் பின் சர்வ தேசச் சங்கத்தை உதறித் தள்ளினேம்; விரிவான நோக்கம் எது வும் இல்லாமல் ஐரோப்பாவுக்கு நன் கொடைகளும் கடன்களும் கொடுக்கத் தலைப்பட்டோம்; கெல்லாக்-பிரையண்ட் (Kellogg-Briand) ஒப்பந்தப்படி யுத்தத்தை வெறுத்து வாழ்வோம் என்ற உதவாக் கரையான பொன் மொழிகளைப் போற்றிப் போற்றி நம்பியிருக்கலானேம்.

உலகிலுள்ள மக்கள் அனைவருடனும் நம்முடைய உறவு என்ன என்பதை வரையறுத்துத் தெளிவாக உணர்த்தும்

ஒரு வெளிநாட்டுக் கொள்கை இன்று நமக்கு மிகமிக இன்றி யமையாதது. ஆகவே, நமது வெளிநாட்டிலாகா தனது தூது வர் காரியாலய அலுவல்களைத் தவிர மற்ற எல்லா வேலைகளை யும் விட்டுவிட்டு இத்தகைய ஒரு வெளி நாட்டுக் கொள்கையை வகுப்பதிலேயே கவனமெல்லாம் செலுத்தி உழைக்கவேண்டும். இது என் திண்ணமான கருத்து.

அரசியல் துறையில் நமது பொதுவான குறிக்கோள்கள் ஈடேற வேண்டும் என்பதை மனத்தில் கொண்டு, பொருளாதார உதவி எந்தெந்த இடத்துக்குத் தேவை என்றும் பிரசாரம் எந்த இடத்தில் தேவை என்றும் நமது வெளிநாட்டிலாகா பிற அரசாங்க இலாக்காக்களுடன் ஒத்துழைத்து வரையறுக்க வேண்டும். இதுபோலக் கொள்கைகளை வரையறுப்பதே இலா காவின் முக்கிய கடமையாக இருக்க வேண்டும். இதையே முழுவதும் கவனிக்க வேண்டும். நாலாம் அம்ச உதவி திட்ட மென்றோ, (வானொலியாகிய) "அமெரிக்காவின் குரல்" என்றோ திட்டங்களை ஏற்று நடத்தும் பொறுப்பை வெவ்வேறு காரியா லயங்களுக்கு விட்டுவிட வேண்டும். விட்டுவிடாமல் அவற்றையும் வெளிநாட்டிலாகாவின் காரியாலயமே நடத்திவருமானால் இந்த இலாகாவின் முக்கிய வேலை முடங்கும்; ஆற்றல் சிதறும்.

காரியங்களை வகைப்படுத்தித் திட்டம் வகுத்துக் கொடுக்கும் அலுவலகமும் அவற்றைச் செயல் நடத்தும் அலுவலகமும் வெவ்வேறாக இருப்பதே நலம். இதைப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் எண்பித்துக் காட்டிவிட்டது. பொருளா தாரக் கூட்டுறவு நிர்வாகம் நமது அரசியல் கொள்கையின் ஒரு நோக்கத்தைப் பொருளாதாரத் திட்டம் ஒன்றால் நிறை வேற்றுவதற்கென்று தனியாக அமைக்கப்பட்ட ஒரு நிர்வாகம். வெளிநாட்டிலாகாவும் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாக மும் ஒரே காரியத்தில் தலையிட்டு முரண்பாடு ஏற்படுமோ என்ற அச்சம் முதன் முதலில் இருந்தது. பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தை அமைக்கச் சட்டம் இயற்றிய காங்கிரஸ் இந்த

அச்சத்தால், தான் செய்த சட்டத்தில், முரண்பாட்டைத் தவிர்க்க ஒரு விதியை எழுதி வைத்தது. 1948-ல் இயற்றப்பட்ட அச் சட்டத்தில் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் நிர்வாகியும் வெளிநாட்டு மந்திரியும் "அப்போதைக்கப்போது நடப்பவற்றை ஒருவர்க்கொருவர் முற்றிலும் தெரியப்படுத்த வேண்டும்" என்றும், இருவரும் தமக்குள் வேறுபாடின்றி முடிவு செய்து கொள்ளவேண்டுமென்றும் எழுதப்பட்டது. இருவரும் உடன்பட்டு ஒத்துழைக்க முடியாத இடத்து நேரே ஜனாதிபதியிடம் தெரிவிக்க வேண்டுமென்பது சட்டம். நாளது வரை அத்தகைய முரண்பாடு எதும் தொன்றவில்லே. இனிமேலும் தோன்ருது என்பது என் நம்பிக்கை.

உண்மையாகவே, பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்துக்கு வெளிநாட்டிலாகாவின் ஒத்துழைப்பு தங்கு தடையின்றிக் கிடைத்தது. கிடைத்திராவிட்டால் நிர்வாகத்தின் வேலேகள் தங்கு தடையின்றி நிறைவேறி இரா. பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்திஞல் வெளிநாட்டிலாகாவின் முக்கிய குறிக்கோள் ஒன்றும் நிறைவேற வழியேற்பட்டது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பிரச்சினேகள், வாய்ப்புக்கள், அவற்றைச் சூழ்ந்திருக்கும் கேடுகள் யாவும், அவற்றுக்குப் பொதுவானவை : தனித்தனியாக எந்த நாட்டையும் பிரித்துவைத்துப் பார்க்க முடியாது. இந்த உண்மையை மேற்கு ஐரோப்பியர்கள் உணர வேண்டுமென்பது வெளிநாட்டிலாகாவின் குறிக்கோள்களுள் முக்கியமான ஒன்று. இது நிறைவேறப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் துணே செய்தது. அக்குறிகோள் நிறைவேறுவதில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதற்கொரு காரணம், மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரங்கள் பிரிந்து பிரிந்து நிற்பதைத் தடுத்து ஒருமைப்படுத்தியதாகும். இதைச் செய்த பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகமே ஒற்றுமை என்பதன் நல்ல குணம் என்ன தெரியுமா? அது ஒன்று பலவாகக் கிளே விட்டு ஓங்கி வளர்வதுதான். பொருளாதாரத் துறையில் ஒற்றுமை ஏற்பட்டால், அது சீக்கிரமே அரசியல் துறையிலும்

பரவும்; அவசியம் ஏற்பட்டால் இராணுவத் துறையிலும் வளரும்.

இவ்வாறு ஒற்றுமை உண்டாக இடமேற்பட்டிருக்கிறது என்பதை நான் நேரில் அறிந்தவன். 1948-ம் ஆண்டு ஜூலை மாதம் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் நிர்வாகி என்ற முறையில் முதன் முதலாக ஐரோப்பாவுக்கு நான் போயிருந்த சமயம் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் ஒற்றுமையின்றிச் சிந்திச் சிதறிக் கிடந்தது. உள் நாட்டு உற்பத்தியைக் கொண்டே தன்தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதென்று ஒவ்வொரு நாடும் அரும்பாடு பட்டது. இந்த எண்ணம் இருக்கும் வரையில், ஐரோப்பாக் கண்டத்தின் வளங்களை அங்கு எந்த ஒரு நாடும் நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியாது; ஐரோப்பாவின் 16 நாடுகள் சேர்ந்தாலும் முடியாது. தன் தேசம், தன் தேசத்துப் பொருளாதாரம் என்று தனித்து இருக்கவே ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றின் மக்களும் கடந்த ஐம்பது ஆண்டுகளாக முயன்றனர். ஐரோப்பிய நாடுகள், பிற நாடுகளுடன் வியாபாரம் செய்வதைத் தடைபடுத்துவதில் ஒன்றையொன்று மிஞ்சினர். சுங்க வரிகளை வளர்த்தன; உள் நாட்டில் சிக்கனமற்ற பத்தாம் பசலித் தொழில்களைக் காப்பாற்றுவதற்காக இறக்குமதிக் கட்டுப்பாடும் ஏற்படுத்தின. வியாபாரத்துக்கு இவ்வாறு தடை ஏற்பட்டதோடு போகவில்லை. குறைந்த செலவில் ஏராளமாக செய்து தள்ளும் நவீன உற்பத்தி முறைகள் அமெரிக்காவில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஏற்பட்டு உற்பத்தி பெருகி அமெரிக்க மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தியதுபோல, ஐரோப்பாவிலும் செய்ய வழியற்றுப் போயிற்று. காரணம் இதுதான்—செய்யும் பண்டங்களை வாங்கும் மக்களுக்கு எளிதில் தங்கு தடையின்றிக் கொண்டு சென்று எங்கும் ஒரே மாதிரி விற்கக் கூடிய வசதிகளுடைய ஒரு பரந்த இடத்தில் தான் குறைந்த செலவில் ஏராளமாகப் பண்டங்களை உற்பத்தி செய்து தொழில் நடத்திப் பலன் அடைய முடியும்.

வியாபாரத்துக்கு ஐரோப்பிய நாடுகள் பல வழிகளில் தடை விதித்திருந்ததால் ஏற்பட்ட தீமை, ஐரோப்பாவின் உற்பத்தியையும் அமெரிக்காவின் உற்பத்தியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நன்கு விளங்கும். 1900-ல் ஐரோப்பாவில் தொழிலாளிகள் தலைக்கு எவ்வளவு உற்பத்தி செய்தார்களோ, அதே அளவுதான் அமெரிக்கத் தொழிலாளி ஒருவன் உற்பத்தியும் இருந்தது என்னலாம், வித்தியாசம் மிகச் சொற்பம். அன்று ஐரோப்பியத் தொழிலாளியின் வாழ்க்கைத் தரத்துக்கும் அமெரிக்கத் தொழிலாளியின் வாழ்க்கைத் தரத்துக்கும் அதிக வித்தியாசம் இல்லை. ஆயினும் 1950-ல் 15 கோடியே 10 லட்சம் மக்கள் வாழும் அமெரிக்காவின் மொத்த உற்பத்தி 27,500 கோடி டாலராயிற்று. அதே வருஷம், மார்ஷல் திட்டம் உதவச் சென்ற ஐரோப்பிய நாடுகளில் 20 கோடியே 40 லட்சம் மக்கள் இருந்தபோதிலும் மொத்த உற்பத்தி 17,000 கோடி டாலர்தான். நம்முடைய தொழிலாளி ஒருவன் இன்று எவ்வளவு உற்பத்தி செய்கிறானோ அதே அளவுக்கு ஐரோப்பிய தொழிலாளியும் உற்பத்தி செய்ய முடிந்திருந்தால் அவர்களுடைய மொத்த உற்பத்தி சுமார் 50,000 கோடி டாலராக இருந்திருக்கும். இவ்வளவு தூரம் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய கச்சாப் பொருள்களும் இயந்திரங்களை ஓட்டக் கூடிய சக்தியும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இல்லை தான். இயந்திரத் தொழிலில் அந் நாடுகள் அமெரிக்காவைக் காட்டிலும் எந் நாளும் பிந்தியே இருக்கும் என்பது உண்மையே. ஆயினும், ஐரோப்பாவின் சுங்க வரிகளும் கட்டுப்பாடுகளும் இன்றி வியாபாரம் தாராளமாக நடைபெற இடம் இருந்தால், இன்றைய உற்பத்தியைவிட இன்னும் 10,000 கோடி டாலர் அதிகமாக வரும். அப்படி வந்தால், மார்ஷல் திட்ட நாடுகள் இன்னும் அதிகமாகச் செழிப்படைய இடமிருக்கும்; படை வலிமையும் இன்னும் வேகமாக வளர்ந்திருக்கும்.

ஐரோப்பாவில் வியாபாரத் தடைகள் விலக வேண்டுமென்று உழைத்ததன் நோக்கம் என்ன? ஆரம்ப முதலே நமது நோக்கம்

வெறும் பொருளாதார நோக்கம் அன்று. மார்ஷல் திட்டம் சமாதானத்தை அடைய ஒரு திட்டம் என்பதை நாங்கள் ஒரு நாளும் மறந்ததில்லே. தன் நாடுதான் பொருளாதாரம் என்று தனித்துப், பிறர் பொருள் ஒதுக்கி வாழத் துணிவதும் முயல்வதும் போர் மூள்வதற்கு அடிக்கடி காரணமாக இருந்திருக்கிறது என்பதையும் நாங்கள் மறந்துவிடவில்லே. இதை விளக்கிக்காட்ட வேண்டுமென்ருல், ஹிட்லர் இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடங்கியதைக் குறிப்பிடலாம். ஜெர்மனி தன் தேவைகளேத் தானே நிரப்பிக்கொள்ளவேண்டும் என்ற முறையில் ஹிட்லர் ஜெர்மனியின் பொருளாதாரக் கொள்கையை வகுத்தார். அந்த முயற்சி இல்லாவிட்டால், யுத்தத்தைத் தொடங்கவும் ஹிட்ல ருக்குத் துணிவு இருந்திருக்காது. சண்டை தொடங்க வேண் டும் என்ற ஒரே கருத்தோடு, செயற்கை ரப்பர், செயற்கை எண்ணெய், புதிய எஃகுச் சாலேகள் என்றெல்லாம் மிகவும் ஏராளமாகச் செலவு செய்து தொழிற்சாலேகளே ஹிட்லர் உண்டு பண்ணிஞர். பிற நாடுகளுடன் ஜெர்மனி தாராளமாக வியா பாரம் செய்யும்படி இருந்தால் இந்தத் தொழில்கள் எல்லாம் சிறிதும் தலே காட்டியிருக்க முடியாது.

ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் சிதறிக் கிடக்காமல் இணேந்து சென்ருல்தான் அங்கு செழிப்பு நிலே நிற்கும். இவ்வழியில் ஐரோப்பாவுக்குப் பொருளாதாரக் கூட்டுறவு நிர் வாகம் பெரியதோர் உதவி செய்துள்ளது. எனினும் அக் காரியம் முழுதும் நிறைவேறிவிட்டதென்று சொல்ல முடியாது. இங்கே அமெரிக்காவில் வியாபாரத்துக்குத் தடையில்லாதிருப் பதுபோல, ஐரோப்பாவிலும் எங்கும் தடையின்றி வியாபாரம் நடைபெற வழி பிறந்துவிட்டது என இன்னும் சொல்வதற் கில்லே. சுங்க வரிகள் ஐரோப்பாவை விட்டு இன்னும் நீங்க வில்லே. நாடு விட்டு நாடு பண்டங்கள் செல்வதற்கு இச் சுங்க வரிகள் தடையாகும். ஆயினும் முன்னேற்றம் முகிழ்த்துள்ளது உண்மை. முன்போல ஒவ்வொரு நாடும் பொருளாதாரத்துறை யில் தனித்து நிற்க இனி எண்ணவே எண்ணுது என்பது உறுதி.

ஐரோப்பிய நாடுகளுக்குள்ளே வியாபாரம் இனி நடைபெருது என்ற நிலைமை எற்பட்டிருந்த சமயம், பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் ஒரு புது வழியைக் கண்டுபிடித்து நிலைமையைத் திருத்தியது. ஐரோப்பிய நாடு ஒன்று இன்னேர் ஐரோப்பிய நாட்டுடன் வியாபாரம் செய்கிறது என்று வைத்துக் கொள்வோம். விற்கும் பொருளுக்கு விலையாகிய பணத்தை ஓர் ஐரோப்பிய நாணயத்தில் பெறுவதற்குப் பதிலாக டாலரிலேயே பெற்றுக் கொள்ளும்படி ஏற்பாடு செய்தது பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம். இந்த ஒரே வழிதான் ஐரோப்பிய நாடுகளுள் வியாபாரம் தாராளமாக நடைபெறுவதற்கு உதவியாயிற்று. ஏனெனில், ஐரோப்பிய நாடுகளின் செலாவணிகள் ஓர் ஒழுங்கின்றி உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்தன. வியாபாரம் இந் நாடுகளிடையே தடையின்றி நடந்திருக்குமாளுல் இவற்றின் செலாவணிகளுள் இவ்வாறு ஏற்றத் தாழ்வு இருந்திருக்காது. எனவே டாலர் விலைக்கே விற்பனை நடக்கும்படி ஏற்பாடு செய்து முடங்கிக் கிடந்த வியாபாரத்தைத் தலைதூக்கச் செய்ய வேண்டியதாயிற்று. இது நடந்தது மார்ஷல் திட்டம் ஆரம்பமான முதல் வருஷம். அதே காலத்தில் ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாட்டுக்குள் வரும் அயல்நாட்டுப் பொருள்களுக்குக் கட்டுப்பாடுகள் விதித்திருந்ததைத் தளர்த்தி, அவ்வாறு தடைப்பட்டிருந்த பொருள்களில் நூற்றுக்கு ஐம்பது பொருள்களைக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கி வியாபாரத்தைப் பெருக்க இணங்கின.

பிரிட்டன் தனது பவுனின் மதிப்பைக் குறைத்துக்கொண்டதுதான், ஐரோப்பிய நாடுகளிடையே வியாபாரம் பெருக நாம் ஒரு புது வழியை வகுக்க இடங்கொடுத்தது. பிரிட்டனின் பவுன் மதிப்புக் குறைந்ததால், அநேகமாக ஐரோப்பிய நாடுகளின் செலாவணிகளின் மதிப்புகளும் மாற வேண்டியதாயிற்று. இவ்வாறு மாற்ற வேண்டிய வாய்ப்புத்தான் நாம் நெடுநாளாக எண்ணியிருந்த புது வழியை உண்டு பண்ணத் தருந்த வாய்ப்பாயிற்று. அதாவது, ஐரோப்பிய கொடுக்கல் வாங்கல் சங்கம் (European Payments Union) உருவாக

வாய்ப்பு ஏற்பட்டது. இச்சங்கம் பிரெஞ்சு நாணயங்களையும், பிரிட்டிஷ் நாணயங்களையும், மற்ற ஐரோப்பிய நாடுகளின் நாணயங்களையும் ஒன்றுக் கொன்று தாராளமாக மாற்றிக் கொள்ள வகை செய்தது. இதனால் என்ன ஏற்படுகிறது என்றால், பிரிட்டனுக்கு பிரான்ஸ் ஒரு சாமான் விற்று அதனால் கிடைக்கும் பவுனை ஜெர்மன் நாணயமாக மாற்றி ஜெர்மனியிடமிருந்து வேறொரு சாமான் வாங்கிக் கொள்ள வசதி கிடைக்கிறது. இச் சங்கம் இல்லாவிட்டால், இது போல இவ்வளவு தாராளமாக ஐரோப்பிய நாடுகளிடையே வியாபாரம் நடக்க வழியே இருக்காது. மேலும் இச் சங்கம் ஏற்படுவதற்கு உடன்பாடு செய்துகொண்ட நாடுகள் நூற்றுக்கு இன்னுமொரு பத்துப் பண்டங்கள் வீதம் தங்கள் தங்கள் இறக்குமதிக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கிவிட இணங்கின. ஆகவே ஐரோப்பிய நாடுகளிடையே விற்க, வாங்க இருந்த பொருள்களில் நூற்றுக்கு அறுபது வீதம் தடையின்றித் தாராளமாக நாடு விட்டு நாடு செல்ல முடிந்தது. இவற்றில் உணவுப் பொருள்களும், கச்சாப் பொருள்களும், பண்படுத்திய பொருள்களும் சேர்ந்தவை. இப்பொழுது இவற்றில் நூற்றுக்கு அறுபது வீதம் தாராளமாகத் தடையின்றி நாடு விட்டு நாடு செல்ல இடமிருக்கிறது ; இனிமேல் கூடிய சீக்கிரமே இவற்றில் நூற்றுக்கு எழுபத்தைந்து பொருள்களுக்குத் தடை நீங்கும்.

இவ்வாறு வியாபாரத்தை வளர்த்த அந்தக் கொடுக்கல் வாங்கல் சங்கம், அரசியல் துறைக்கும் பொருளாதாரத் துறைக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பதை நன்கு விளக்கும். பொக்கிஷக் காரியாலயமும், சட்ட சபைகளும், இயந்திரத் தொழிலும், விவசாயமும் யாவும் சேர்ந்துதான் அச் சங்கம் அமைய வகை செய்தன. இச் சங்கத்தால் **27** கோடியே **40** லட்சம் மக்களின் வாழ்க்கையே திருந்துகிறது.

இச் சங்கத்தை நிறுவுவதற்குத்தான் என்னென்ன செய்ய வேண்டியிருந்தது ? பேச்சு வார்த்தைகள் மிக நுண்ணறிவுடன் நடந்தன. ஒரு நாடு தனக்கு இன்றைக்கு நன்மை என்று

தோன்றுகின்ற ஒரு கொள்கையை, எல்லா நாடுகளுக்கும் இனி மேல் நன்மை விளையும் என்பதற்காகக், கைவிட்டுவிட வேண்டியிருந்தது. இவ்வாறெல்லாம் அந் நாடுகள் அடுத்து முயன்று தளராது பெருந் தன்மையுடன் நடந்துகொண்டதனால் தான் அச் சங்கம் உறுப்பெற்றது. இந்த வரலாறு முழுவதையும் எடுத்து இயம்ப எனக்கு நாவும் போதாது, இங்கு இடமும் போதாது. ஆகவே அச் சங்கத்தைப்பற்றிச் சுருக்கமாக மட்டும் சில சொல்லுவேன். பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் கீழ் அச் சங்கம் வேலை செய்கிறது. தங்கத்தின் மதிப்பை வைத்துச் செலாவணியை நிர்ணயிக்கும் பழைய முறை, கடனைச் செலுத்திவிட வழி செய்யும் முறை, ஐரோப்பிய நாடுகள் ஒன்றுக் கொன்று நல்லெண்ணம் வைத்திருக்கின்றன என்பதை இடைவிடாமல் உணர்த்திவரும் வகை, ஆகிய இவை யாவும் சேர்ந்து விளங்குவதே அந்தச் சங்கம்; நடைபெறக்கூடிய, நடைபெறுகின்ற ஓர் ஏற்பாடு.

தனித்து நில்லாமல் பிறரோடு சேர்ந்து வாழும் வகையை உணர்த்தும் இத்தகைய வழியில்தான் ஷூமன் திட்டமும் உருவாயிற்று. மேற்கு ஐரோப்பாவின் நிலக்கரி, இரும்புக் கனிவளங்களை ஒன்றுகச் சேர்த்து விருத்திபண்ண வேண்டுமென்ற நோக்கத்துடன் வந்த ஷூமன் திட்டமும் அரசியலுக்கும் பொருளாதாரத்துக்கும் உள்ள தொடர்பை வலியுறுத்தும். இத்திட்டத்தைக் கொண்டு வந்த போது ஷூமன் பின்வருமாறு கூறினர் :—“ நினைத்த பொழுதில் ஐரோப்பாவை நன்னிலைப்படுத்தி விடமுடியாது ; அதன் முழுப் பிரச்சினையையும் ஒரேயடியாகத் தீர்த்துவிட முடியாது. உண்மையாகவே படிப்படியாக ஒவ்வொரு துறையிலும் வெற்றி கண்டால்தான் ஒற்றுமை என்பது உருப்படியாக நிலை நிற்கும்... பல நூற்றுண்டுகளாக ஜெர்மனிக்கும், பிரான்சுக்குமிடையே வளர்ந்து வந்த பகைமை உணர்ச்சி நீங்கினுலொழிய, ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒன்றுபடுவது இயலாது. கச்சாப் பொருள்களைப் பொதுப்பட ஒன்று சேர்த்து வைக்க வேண்டும் ; அதை நிர்வாகம் செய்ய

ஓர் உயர் அதிகாரமுடைய சங்கம் நிறுவ வேண்டும். இச் சங்கம் செய்யும் முடிவுகளுக்குப் பிரான்சும், ஜெர்மனியும், அங்கம் வகிக்கும் மற்ற நாடுகளும் கட்டுப்பட வேண்டும். இதுவே நான் சொல்லும் யோசனை. ஐரோப்பிய நாடுகள் ஒன்ருகச் சேர்ந்து கூட்டு அரசு அமைத்து ஆட்சி புரியும் காலம் உதிப்பதற்கு எனது இந்த யோசனை முதல் படியாகும். அத்தகைய கூட்டு அரசாங்கம் இல்லையேல் சமாதானம் நிலைத்திராது." இதனுல் ஷூமன் திட்டத்தின் அரசியல் நோக்கம் ஈடேறப் பொருளாதாரக் குறிக்கோள்களை அடைவது எவ்வளவு முக்கியம் என்பது விளங்கும். ஷூமன் திட்டத்தின் பொருளாதாரக் குறிக்கோள்கள் பின் வருபவை: திட்டத்தில் சேரும் நாடுகளுக்கெல்லாம் இரும்பையும் நிலக்கரியையும், வித்தியாசம் பாராட்டாமல் எல்லா நாடுகளுக்கும் ஒன்றுபோல வழங்குவது; நவீன முறையில் உற்பத்தி செய்வது; பொருள்களின் தரத்தை உயர்த்துவது; தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தையும், முதலாளிகளின் லாபத்தையும் கூட உயர்த்துவது.

ஷூமன் திட்டத்தை ஒரு தலைமுறைக்கு முன்னுல் எவராயினும் கனவிலும் கருதியிருப்பார்களா என்று நினைத்துப் பாருங்கள். ஆயினும் இன்று இப் புத்தகம் அச்சேரும் சமயமே, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, பெல்ஜியம், லக்ஸெம்பர்க் ஆகியவற்றின் அரசாங்கப் பிரதிநிதிகள் ஷூமன் திட்டத்தில் கையெழுத்திட ஆயத்தமாகின்றனர். இத் திட்டத்தின் அரசியல் நோக்கங்கள் துணிவும், ஊக்கமும் நிரம்பியவை; ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைத்து ஆட்சி புரிவதற்கு இந்நோக்கங்கள் வழிகாட்டிகளாக அமையக்கூடியவை. ஐரோப்பாவின் அரசியல் வளர்ச்சியில் அத்தகைய கூட்டு அரசாங்கம் ஏற்படுவதே அடுத்த படியாக நிகழக் கூடியது எனப் பலர் நம்புகின்றனர். ஷூமன் திட்டம் வேலை செய்யப் பல அதிகாரிகள் அமர்த்தப்பெறுவர். இவர்களுடைய அதிகாரம் பற்பல நாடுகளையும் கட்டுப்படுத்தும். தேசியத்துக்கு மேற்பட்ட ஒரு அதிகாரம் இது. இதன் அதி

காரிகள் வியாபாரத்துக்கு ஒவ்வொரு நாடும் விதித்திருந்த தடைகளைப் போக்குவதன்றியும், தனித்தனி வியாபாரக் கழகங்கள் வியாபாரத்தை குறுக்கும் வகையில் தங்களுக்குள் செய்து வந்த ஒப்பந்தங்களையும் தகர்த்தெறிவர். 1920-க்குப் பிறகு ஐரோப்பாவில் எஃகுத் தொழில் செய்வோரும் விற்பனையாளர்களுமாகச் சேர்ந்து விற்பனை செய்யக்கூடிய இடங்களைப் பங்கு போட்டுக்கொண்டு, விலைகளைக்கூடக் குறைக்க முடியாதபடி செய்து, உற்பத்தியை உயரவிடாமல் தடுத்தனர். அந்த நாளைய இச்செய்தியையும், இன்று ஷூமன் திட்டம் எண்ணியிருக்கும் நடைமுறைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அன்று எஃகுத் தொழில் செய்வோரும் விற்பனையாளர்களும் செய்துகொண்ட வியாபார ஒப்பந்தம் தொழில் திறமையை வளர்க்கவில்லை; உற்பத்தியை உயர்த்தவில்லை; வியாபாரத் தடைகளைத் தளர்த்தவில்லை; மேற்கு ஐரோப்பாவின் எஃகுத் தொழில் கட்டுக்கிடையாக நிற்கும்படியாயிற்று; இதனால்தான் மார்ஷல் திட்டம் வரும் வரைக்கும் அது எவ்வித வளர்ச்சியுமில்லாமல் கிடந்தது. மார்ஷல் திட்டம் செல்வாக்கடைந்த பிறகுதான், ஐரோப்பிய எஃகுத் தொழிலுலகில் தொழில் நுட்ப முறைகளும் திருந்தின; ஒரே இடத்தில் பலரும் விற்பதற்குரிய வழி துறைகள் திறக்கலாயின; விலைகள் வளைந்து கொடுக்கக்கூடிய நிலைமைக்கு வந்தன. தொழிலாளர்களுக்கு கூலி உயர்ந்தது; வேலை நிலைமைகளும் திருந்தின. முன்னால், உற்பத்தி செய்வோரும் விற்பனை செய்வோரும், மேற்கு ஐரோப்பாவின் எஃகு வளங்களைப் பிரித்து வைத்து அவற்றின் பயனைச் சிறுக்கச் செய்தனர். இன்று ஷூமன் திட்டம் அதற்கு நேர்மாறாகக் கிளம்பி அவ்வளங்களை ஒன்று தொகுக்கவும் அவற்றின் பயனைப் பெருக்கவும் முனைகின்றது. இவ்வாறு பொருளாதாரத் துறையில் மேற்கு ஐரோப்பியர்கள் ஒன்றுபட்டு ஒத்துழைப்பதுபோலவே அரசியல் துறையிலும், தற்காப்பு விஷயத்திலும் ஒன்றுபட்டு நின்று ஒருவரோடொருவர் ஒத்துழைக்க வேண்டுமென்பதற்கு ஷூமன் திட்டம் போன்ற பொருளாதார முன்னேற்றத் திட்டங்

கள் ஊக்கமும் வீறும் அளிக்கின்றன: இப்பொருளாதாரத் திட்டங்களின் நன்மைகளில் மிக முக்கியமானவையும் நீடித்து நிற்கக்கூடியவையும் இவையே என்பதனை ஷூமன் திட்டம் எடுத்துக் காட்டுகிறது.

சிறிய நாடுகள் தங்கள் சுயாட்சி உரிமையை எவ்விதத்திலும் இழந்து விடாமல் அமெரிக்காவைப் போன்ற ஒரு வல்லரசோடு பங்காளியாக இருந்து ஒத்துழைப்பது எப்படி என்ற கேள்விக்கும் நம் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் தக்க விடையளித்து விட்டது. இதுவே அரசியல் துறையில் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் செய்துள்ள சிறந்த பணி எனக் கருதுகிறேன். ஒரு வல்லரசு சிறிய நாடுகளின் உள் நாட்டு விவகாரங்களில் தானும் கலந்து கொள்ளுகிறதைக் காண்கிறோம்; ஆனால் அச் சிறிய நாடுகளின் விருப்பத்தை எவ்வகையிலும் கெடுப்பதில்லை: அதற்கு மாறாக, அவற்றின் தன்னுரிமைக்கு எவ்விதத்திலும் பங்கம் வரக் கூடாது என இவ் வல்லரசு முயல்கிறது. இந்த விதத்தில் ஒரு வல்லரசு பிற சிறிய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் கலந்துகொள்வதை இதற்கு முன் கண்டதில்லை. இத் துறையில் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் பெரியதோர் வகையில் புதியது புனைந்துள்ளது. பிலிப்பைன், இந்தோனேஷியா, பர்மா ஆகிய நாடுகளில் இம்முறை சிறந்த பலனளிக்க உதவுகிறது. ஏனெனில், புதிதாகச் சுயஆட்சி பெற்ற இந் நாடுகள் வெளி ஆதிக்கம், கட்டுப்பாடு என்று யாரும் இலேசாகச் சுட்டிக் காட்டுவதையும் பொறுக்காதவை.

வேலையில் திறமை குறைந்தால் அது அமெரிக்கனுக்கு இயல்பாகவே பிடிக்காது. ஆயினும் திறமை வேண்டுமா அல்லது சுதந்திரம் வேண்டுமா என்று கேள்வி எழுந்த இடத்து, பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தார் எப்போதும் சுதந்தரத்தையே ஆதரித்தனர். **லண்டன் எக்கனமிஸ்ட் (London Economist)** பத்திரிகை இதைக் கவனமாகக் குறிப்பிட்டுள்ளது. வுட்ரோ வில்சன் **(Woodrow Wilson)** சுய நிர்ணய உரிமையை மிகவும் பாராட்டிக் கூறுவதுண்டு. ஐரோப்

பிய நாடுகளின் நிலைமை சீர்பட்டதற்கு அந் நாடுகளின் சுய நிர்ணய உரிமையே முற்றிலும் காரணமாகும்.

ஜனநாயகம் பலனளிக்கவேண்டுமானால், அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு ; ஜனநாயக வழி பிறழாமல் உழைப்பதே அவ்வழி. இதனை இடைவிடாமல் நிரூபித்துக் காட்டிய பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தில் வேலை செய்ததற்காக நான் மிகவும் பெருமிதமடைகிறேன். ஜனநாயக வழி என்றால் என்ன? ஓரம் போகாமல் நடுநிலைமையோடு நடக்க வேண்டும்; பலருடைய எண்ணமும் வெவ்வேறு திசையில் நோக்குமானால், எல்லோரும் ஒத்துப்போக வகை செய்ய வேண்டும் ; இவற்றைச் செய்வதற்குப் படை வலிமையைப் பயன்படுத்துவதாகப் பயமுறுத்தக்கூடாது ; கட்டளையிடக்கூடாது. அதற்கு மாறாக, கூடி விவாதித்தும், ஒருவர் கட்சியை இன்னொருவர் உணரும்படி எடுத்துப் பேசியும் நடு நிலைமையை நாட்ட வேண்டும். ஒத்துப்போகவேண்டும். விவாத அரங்கமே ஜனநாயகத்தின் ஆயுதங்களில் சரியாகப் புரிந்து போற்றப்படாத ஓர் ஆயுதம் என்பதே என் கருத்தும் வருத்தமும். இதனைப் போற்றிப் பயன்படுத்தும் பழக்கமே ஒருவர் அரசியல் அறிவு முதிரப் பெற்றவர் என்பதற்கு அடையாளம். பிறருடைய சிறப்பையும், கருத்துக்களையும், கவலையையும் மதித்து நடப்பதுதான் முதிர்ந்த அரசியல் அறிவுடைமை. வெளி நாடுகளிலே வேலை செய்த நம் பொருளாதார கூட்டுறவு நிர்வாகத்தார் இந்த அரசியல் அறிவின் முதிர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர் என்பதனை நினைக்குந்தோறும் என் மனம் உருகுகிறது. உணவும் இயந்திரங்களுமாக நாம் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தோமே, அதன் உண்மையான கருத்து என்ன என்பதனை பிறர் அறிந்துகொள்வதற்கு முக்கிய காரணம் இந் நிர்வாகத்தார் ஆரவாரமின்றியே முதிர்ந்த தங்கள் அரசியல் அறிவுடைமையைத் திறம்பட உணர்த்திய நடத்தைதான் என்று கூறுவேன். உள் நாட்டு அரசியலில் நமக்குள் இருக்கும் முரண்பாடுகளை முனை மழுங்கச் செய்து பழக்கப்பட்டிருக்கிறோம்;

விட்டுக்கொடுக்கப் படித்திருக்கிறேம் ; இந்த மன நிலேயே நம் உள் நாட்டு அரசியலின் உயிர்நாடி. இவ்வாறு நாம் நம் நாட்டில் பெற்ற அனுபவம் வெளியுலகில் புதிய பொறுப்புகளே மேற்கொள்ளும் இத் தருணத்தில் பெரிதும் துணையாகவுள்ளது.

ஆசியாவில் என்ன செய்ய வேண்டும் என்பதை ஐரோப்பாவில் கற்றறிந்து கொண்டோம். உலக அரசியல் அரங்கில் வெற்றிதரக் கூடிய ஒரு கொள்கைக்கு வேண்டிய கருத்துக்கள் என்ன என்பதை மார்ஷல் திட்டம் வகுத்துக் காட்டியுள்ளது. ஐரோப்பாவுக்கு "டர்பைன்" இயந்திரங்களும் இயந்திரக் கலப்பைகளும் முக்கியமானவை என அவற்றைக் கொடுத்து உதவுவதில் கண்ணுங் கருத்துமாயிருந்தோம். ஆசியாவுக்கு வேண்டியவை தொற்று நோய்த் தடுப்பு மருந்துகளும் விளேச்சலேப் பெருக்கும் உரங்களுமாகும். அவ்வளவுதான் வேறுபாடு ; அரசியல் அரங்கில் இந்த இரண்டு இடங்களிலும் நாம் கடைப்பிடிக்கவேண்டிய கொள்கையோ ஒன்றுதான். ஆசிய நாடுகளே ஒரு புறம் எதேச்சாதிகாரம், வஞ்சக வாக்குறுதிகள் கூறி அழைக்கின்றது. இவற்றைக் கேட்டு அவை மயங்குமா? அல்லது சுதந்தர வாழ்வைக் கடைப்பிடிக்குமா? ஜனநாயகத்தின் செயல்களே அந்நாடுகள் நேர்மையுடன் இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ள வழி செய்யும்.

அரசியல் துறையில் சமாதானத்துக்காக என்னென்ன விதத்திலெல்லாம் விடாது உழைத்து முன்னேற வேண்டும் என்பதை நாம் முற்றிலும் உணர்ந்து விட்டோம் என எண்ணிக்கொள்ள வேண்டாம். அந்தக் கருத்தோடு நான் இவ்வளவும் எழுதவில்லே. முன்னணியில் நின்று முயல்வோர் என்னென்ன விதத்தில் உழைக்க வேண்டும் என்று நாம் இவ்வளவு சீக்கிரம் அறிந்துகொள்ள முடியாது. சிறிது காலமாகத்தானே நாம் தெளிவான ஒரு வெளி நாட்டுக் கொள்கையை கடைப்பிடித்து வருகின்றேம் ? எந்தக் கொள்கையை ஏற்று நடத்திஞல் பலன் கிட்டும் என்பதுதான் நமக்குச் சில இடங்களில் இப்பொழுது விளங்குவதெல்லாம். வேறு சில இடங்க

ளில் சரியான கேள்விகளைக் கேட்டு விஷயத்தை புரிந்துகொள்ள முயல்கிறோம்: இவ்வளவே நாம் இன்று செய்ய இயல்வது. நமது வெளிநாட்டுக் கொள்கை இன்னும் முடிவாக வடித்தெடுத்த தொன்று அன்று; அது இன்னும் வளரும் பருவத்திலேயே இருக்கிறது. உலகில் முன்னின்று நடத்தும் பொறுப்பு நமக்கு இன்னும் புதிதே. சமாதானத்துக்கான சரியான வெளிநாட்டுக் கொள்கை இன்னதுதான், இதுதான் என்றும் அக் கொள்கை யை எந்த எந்த காரியங்களால் நிறைவேற்றி வைப்பது என் றும் இன்னும் நாம் முடிவாகக் கூறிவிடுவதற்கில்லை. ஏனெ னில் இன்னும் யோசித்து முடிவு செய்யும் பருவத்தில்தான் இருக்கிறோம். இந்த வேலையை முழு முயற்சியுடன் முடித்து வைக்க வேண்டும். இதில் இம்மியும் காலந் தாழ்த்தக்கூடாது என்பதை நம் காங்கிரசாரும் நிர்வாகத்தாரும் பொதுவாக மக்களும் மென்மேலும் உணர்கிறார்கள் என நம்புகிறேன். இந்த வேலையில் தவறினால் வந்தது மோசம் என்பதையும் அவர்கள் நாளுக்கு நாள் அதிக மதிகமாக உணர்கிறார்கள் என நம்புகிறேன். செய்யலாமா வேண்டாமா என்று எண்ணுவ தற்கே இடமில்லை. செய்ய வேண்டும், திறம்படச் செய்யவேண் டும். இல்லையேல் அழிந்தோம். ஏனெனில் வரும் கேடு இன்னதெனத் தெளிவாகத் தெரிந்து விட்டது. அது அடுத்தே நெருங்கி நிற்கின்றது. இனி நாளும் அதிகமில்லை.

# செய்தியை அறிவித்துச் சமாதானம் எய்துவோம்

## அத்தியாயம் 8

**நா**ன் வியாபாரத் துறையில் பெரிதும் பழக்கமுடையவன். எனது கம்பெனி எப்படி எப்படிப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும், வியாபார நிலை என்ன, கம்பெனியின் பொருள்களை வாங்குவதற்கு எப்படி எப்படி மக்களைத் தூண்டலாம் என்றெல்லாம் எண்ணி உழைத்தவன். சாமான்கள் நல்லவையாக இருந்தால்தான் அவை விலைப்போகும் என்ற அடிப்படைமீதே என் தொழில் நடந்தது. இந்தக் கொள்கையாலேயே நான் பல ஆண்டுகளாகக் கம்யூனிஸத்தைப்பற்றிக் கவலைப்படாமலே யிருந்தேன். ஏன் ? அரசியல் துறையில் பார்த்தால், கம்யூனிஸம் ஒரு முன்னேற்றக் கொள்கையாகத் தோன்றவில்லை ; ஒரு கிளர்ச்சிக் கொள்கையாகவே இருந்தது. கொள்கைதான் அப்படி, நடத்தை எப்படி எனில், கிரெம்லின் அதைக் கையாண்டு ரஷ்யாவில் பழைய கொடுங்கோன்மையை வீழ்த்திவிட்டு ரஷ்ய மக்களை ஒரு புதிய கொடுங்கோன்மையில் அடக்கி ஒடுக்கி அச்சுறுத்தி ஆள்கிறது. இத்தகைய கம்யூனிஸம் தன் நாட்டிலேயே எத்தனை நாளைக்கு இருக்கப்போகிறது என இருமாந்திருந்தேன். சாமான் நன்றாக இருந்தால்தானே அது விலையாகும் ; கம்யூனிஸம் இவ்வளவு ஊழலாக உள்ள போது யார் அதைத் தீண்டுவார்கள் என்ற எண்ணத்திலிருந்து என்னால் மீள முடியவில்லை.

**1946**-ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் ஐரோப்பாவுக்குச் சென்றபோதுதான் என் இறுமாப்பு கலைந்தது. அங்கு நான் கண்டதும் கேட்டதும் என்னை என் தூக்கத்திலிருந்து திடீ

ரென்று தட்டி யெழுப்பின. இத்தாலியிலும், பிரான்சிலும், மேற்கு ஜெர்மனியிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஜன நாயகத்தைவிட மேன்மையான வாழ்வு கம்யூனிஸத்தில்தான் கிடைக்கும் என மனமார நம்பியிருந்ததை நான் நேரில் அறிய லானேன். இவ்வாறு அவர்கள் மனப்பால் குடிப்பதற்குப் பெரும்பாலும் அவர்கள் இரண்டாவது உலக யுத்தத்தால் குலை வுற்றுக்கிடந்த வறிய நிலைமையே என்பதை நான் அறியாம லில்லை. நாடு கம்யூனிஸ்டு நாடானால்தான் வறுமை போம், வளம் கொழிக்கும் என்று கம்யூனிஸ்டுகள் தொண்டை கிழிய பொய் உறுதி மொழிகள் கூறத் தவறவே இல்லை. இது ஏழை எளியவர்களை ஏமாற்றியது. ஆயினும் கம்யூனிஸத்தின் வலை யில் சிக்கியவர்கள் வறியவர்கள் மட்டும் அல்லர். ஆகவே வறுமையே கம்யூனிஸ வளர்ச்சிக்குக் காரணம் எனக் கூறிவிட முடியாது. அறிஞர்கள் எனப்படுபவர்களிலும் அறிவுத் துறைக ளில் தொழில் செய்து வாழ்பவர்களிலும் பலர், ஏன் செல்வம் சிறந்த சிலரும்கூட கம்யூனிஸத்தைத் தழுவியிருக்கக் கண்டேன். மேற்கு ஐரோப்பாவில் சோவியத் யூனியன் சூழ்ச்சி செல்வாக் கடைவதற்குக் காரணம் என்ன என நுணுகி ஆராய ஆராய உண்மை துலங்கிற்று. பெரும்பாலும் கம்யூனிஸ்டுப் பிரசாரமே காரணம் என்பது தெரிந்தது. சூழ்ச்சி நிறைந்த பிரசாரம், இடைவிடாத பிரசாரம், வாழ்க்கையின் ஒவ்வொரு துறையி லும் உள்ளவர்களின் உணர்ச்சி வேகத்துக்கும் மனப் போக் குக்கும் ஏற்றபடியெல்லாம் இசைத்துப் பேசும் பிரசாரம், இத் தகைய கம்யூனிஸ்டுப் பிரசாரமே மேற்கு ஐரோப்பாவில் சோவி யத்துக்கு எய்திருந்த செல்வாக்குக்குப் பெரும்பாலும் காரணம் என்பதை அறிந்தேன்.

ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து வாழ வேண்டும்; சுதந் தரமாக இருக்க வேண்டும் என்ற ஆசை மனித இதயத்தில் ஆழமாகப் பதிந்து கிடக்கும் ஆசை. இதனைக் கம்யூனிஸ்டுப் பிரசாரம் தன் சொந்தக் கருத்துக்கு ஒத்தபடி வளைத்துக்கொள் கிறது. இதில்தான் அப் பிரசாரத்தின் நஞ்சு பதுங்கியிருக்

கிறது. கம்யூனிஸம் தன்னுடைய காட்டு மிராண்டிச் செயல்களை யும், நய வஞ்சகத்தையும், தான் செய்த போர்களையும் இரத்தக் களரிகளையும் மறைத்து மூடுவதற்காக, சகோதரத்துவம் சமாதா னம் என்னும் கிறிஸ்தவ அற நெறியின் சொற்களையே தானும் எடுத்தாண்டு, ஆட்டுத் தோல் போர்த்த ஓநாய் போல, உலவு கிறது. மாயம் புரிந்து மக்கள் மனத்தையே குழப்பித் திருப் பும் கம்யூனிஸ்டுப் பிரசாரகர்களோடு ஒப்பிட்டால், கோயபெல்ஸ் (Goebbels) அறியாப்பிள்ளை போலவும், மக்கியவல்லி (Machia-velli) ஏதோ தெரிந்தும் தெரியாமலும் ஆசையால் நடிப்பவன் போலவும் சிறுத்துத் தோன்றுவார்கள். இந்த உண்மையை நான் உணர்ந்ததும் திடுக்கிட்டேன். அஞ்சினேன். சுதந்தர உலகம் கம்யூனிஸ்டு வலைக்குள் விழாமல், அதை முறியடிக்க வேண்டுமானால், ஏழை எளியவர்களாயிருப்பவர்களின் வாழ்க் கைத் தரத்தை உயர்த்தினால் மட்டும் போதாது ; பொய்ப் பிரசாரம் செய்யும் கம்யூனிஸத்தை உண்மை பிரசாரம் செய்து தடுத்தால்தான் முடியும் என்பது தெளிவாயிற்று.

பிரசாரம் என்றால் அது ஏதோ சூழ்ச்சி என்றும் தீமை பயப்பது என்றும் அமெரிக்கர்களில் பலரும் எண்ணுகின்றனர். பிரசாரம் என்ற வார்த்தையே அவர்களுக்குப் பொல்லாதது. பிரசாரம் என்று நினைக்கும்போதெல்லாம், ஏமாற்றலும் தந்தி ரமுமே நினைவுக்கு வருகின்றன ; ஜனநாயக நெறிமுறைகள் நினைவுக்கு வருவதில்லை ; எதேச்சாதிகார முறைகளே கண் முன் தோன்றுகின்றன. ஹிட்லரும் ஸ்டாலினும் கையாண்ட தன் பயனாக, பிரசாரம் என்றால் சுத்தப் பொய், தந்திரப் பொய், முழுப் பொய் என்று பொருள் படும்படி ஆகிவிட்டது. ஆனால் பிரசாரம் என்பது உண்மையாகவே இப்படிக் கசடாகத் தானா இருக்கவேண்டும்? இல்லை. முதலில் பிரசாரம் என்பதற்கு ஒரு கருத்தை அல்லது ஒரு வேதத்தைப் பரப்புதல் என்றுதான் பொருள். இதிலிருந்து ஆக்கும் கருத்தையும் அழிக்கும் கருத் தையும், நீதியானவற்றையும் அநீதியானவற்றையும் பரப்புவ தெற்கெல்லாம் பிரசாரம் என்ற சொல் பொதுவாயிற்று.

பிரசாரத்தைப் பற்றி இனி நாம் எவ்வாறு எண்ண வேண்டும்? பிரசாரம் செய்வதற்கும் செய்தி அறிவிப்பதற்கும் என்ன வேற்றுமை என்பது நமது காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கும் பொது மக்களுக்கும் பொதுவாகத் தெரிவதில்லை; அதனுல் மனத்தில் குழப்பமே குடிகொள்ளுகிறது. நியூயார்க் டைம்ஸ் (Times) ஞாயிறு ஆசிரியர் ஸ்ரீ லெஸ்டர் மார்க்கெல் (Lester Markel) "பிரசாரம்" "செய்தி அறிவிப்பு" இவ்விரண்டையும் வேறுபடுத்தி தெளிவாக்கிய வரையறைகளை நினைவூட்டுகிறேன். பிரசாரமும், செய்தி அறிவிப்பும் ஒன்றுக்கொன்று எதிர்பதம் என்று பலர் நினைப்பது தவறு எனவும் அவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெளிவுற வரையறுப்பது எளிதன்று எனவும் அவர் சொல்லுகிறுர். இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கீழே குறிப்பிட்டுள்ள முறையில் பொதுப்படையாகத் தெரிவிக்கலாம் என்பது அவர் கருத்து:

"பிறருக்கு அறிவூட்டுவதற்காகச் செய்திகளையும் ஒருவர் தம் கருத்துக்களையும் சொல்வது செய்தி அறிவிப்பதாகும்.

"பிறரை வசப்படுத்துவதற்காகச் செய்திகளையோ செய்திகள் அல்லாதவற்றையோ ஒருவர் தம் கருத்துக்களையோ சொல்வது பிரசாரமாகும்.

"எனவே செய்தி அறிவிப்பது என்பது அமைதியாக நடைபெறுவது; பகுத்தறிவு வழியே செல்வது; உணர்ச்சியற்றது. பிரசாரம் கொதித்தெழுவது, குதிப்பது, உணர்ச்சி வேகத்தில் பிறரை ஒன்று செய்யத் தூண்டுவது, உணர்ச்சிகள் ததும்பி நிறைவது. ஆனுல் செய்தி அறிவிப்பதையும் பிரசாரத்தையும் அவ்வளவு திட்டவட்டமாக எளிதாக வரையறுத்துவிட முடியாது. பிரசாரம் அலுங்காத நிறைகுடம்போல அவ்வளவும் பொய்யே நிறைந்த பேச்சாகவும் அமைந்து இருக்கலாம். உணர்ச்சி வேகமின்றி கண்கூடாகக் காணும் வகையாக உண்மைச் செய்திகளை எடுத்து உரைப்பது கொதித்தெழும் உண்மையற்ற வார்த்

தைகளைக் காட்டிலும், மக்களை வசப்படுத்தும் ஆற்றல் வாய்ந்து விளங்குவதையும் அடிக்கடி காண்கிறோம்."

ஆகவே பிரசாரம் இன்னது, செய்தி அறிவிப்பது இன்னது எனக் கோடு கிழித்தாற்போல வேறு படுத்திக் கூறுவது முடியா விட்டாலும், இன்று மக்களின் அறிவையும் உள்ளத்தையும் வசப்படுத்த நடக்கும் போராட்டத்தில் அமெரிக்கர்களுக்கு இரு முக்கிய கடமைகள் இருக்கின்றன என்பதைக் கண்டுகொள்வது நலம் என ஸ்ரீ மார்க்கெல் சொல்லுகிறார்.

1. அயல் நாட்டுக் கொள்கை என்ற துறையில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் காரணம் என்ன, நடப்பு என்ன என்று நம் நாட்டு மக்களுக்கு அறிவிப்பது கடமையாகும். அப்போதுதான் நமது அயல் நாட்டுக் கொள்கையின் நோக்கங்களை விளங்க அறிந்துகொள்ள இயலும். இது பிறருக்கு அறிவூட்டுவதாகையால், ஒரு செய்தி அறிவிப்புக் காரியமே யாகும்.

2. நம்மைப் பிற நாட்டினர் தவருகக் கருதாது சரியாக அறிந்துகொள்கிறார்களா என்று மிகக் கவனமாகக் காண வேண்டும். நமது வழக்கும் நாம் எடுத்த காரியமும் வெற்றி யாகும் வண்ணம் நமது நோக்கங்கள் பிறருக்குத் தெளிவாக வும் ஒளிப்பு மறைப்பில்லாமலும் எடுத்துச் சொல்லப்படுகிறதா என்றும் மிகக் கவனமாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். இது ஒரு பிரசார வேலையாகும் ; ஏனெனில் இது பிறரை வசப் படுத்த முனைவது, பிறரை உணர்ந்து ஒப்புக்கொள்ளச் செய்வது.

பிறரை வசப்படுத்தவும், அவர்கள் உணர்ந்து ஒப்புக்கொள் ளச் செய்யவும் நமக்கின்னும் இல்லாத ஒரு பெருந் துணை கிரெம்லின் ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது ; அதுதான் அவர் கள் விளம்பி விற்கும் பண்டம் : ஒரு கொள்கைக் கோவை.

மார்க்ஸும் (Marx), எஞ்செல்ஸும் (Engels) எழுதி வைத்ததிலிருந்து எழுந்தது அவர்களுடைய இந்தக் கொள்கைத்



5759

தொகை. இவர்கள், பொருளாதாரப் பாகுபாடற்ற சமூகம் ஏற்பட்டு, அரசு தேய்ந்து மறைந்துபோம் என்றும், அப்போது மக்கள் சமாதானமாக ஒருவர்க் கொருவர் சகோதரர்கள்போல் வாழ்வார்கள் என்றும் கனவு கண்டனர். மார்க்ஸும் எஞ்செல்ஸும் வகுத்த கொள்கைகள் லெனின், ஸ்டாலின் இவர்களால் கையாளப்பட்டு ஒரு சர்வாதிகார ஆட்சி நடக்கிறது; சமூகத்தில் உயர்ந்தோர் சிலர் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள்; மிருகத் தன்மையும் இரக்கமின்மையும் சேர்ந்தாலொத்த ஆட்சி நடத்துகிறார்கள்; இருப்பினும், பிரசாரத்துக்காக மார்க்ஸிய வாதத்தை எடுத்தாள்வதற்கு அது ஒரு தடையாக இருப்பதில்லை.

இந்த மார்க்ஸிய வாதத்தைப் பரப்புவதற்குக் கிரெம்லின் ஆட்சியாளர்கள் ஒரு பெரும் சாதனத்தை உருவாக்கியுள்ளனர். திறமையோடு இச் சாதனத்தைப் பயன்படுத்தப் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள்; அது நடைபெற ஏராளமாகப் பணம் செலவிடப் படுகிறது. சோவியத் நாட்டிலும் அதன் அடிமை நாடுகளிலும் மக்கள் மனம் ஒரு திசை நோக்கிய வண்ணம் கட்டுப்பட்டு அங்கிங்கு திரும்பாமல் இருக்கும்படி செய்வதற்கும், வெளி நாடுகளிலுள்ள சுதந்தர மக்கள் மனத்தை மாற்றித் திரிப்பதற்கும் இந்தப் பெரும் சாதனம் பயன்படுகிறது. கிரெம்லினின் வழிமுறைக் கொள்கையில் இது ஒரு முக்கிய சாதனமாகும். இதை இயக்குவது கம்யூனிஸ்டு கட்சிப் பிரசாரம் கிளர்ச்சி ஆகியவற்றுக்குரிய இலாகா (Department of Agitation and Propaganda of the Communist Party)வின் தலைவர்களுமே யாவர். இதன் வேலைத் திட்டத்தையும் அதற்கான வழி முறைகளையும் லெனினும் ஸ்டாலினும் நுணு நுணுக்கமாகக் கவனித்து வகுத்திருக்கிறார்கள்.

இந்தச் சாதனம் எப்படி வேலை செய்கிறது என்பதை ஒரே ஒரு நாட்டை மட்டும் கவனித்து அறிந்துகொள்வோம். பிரான்சில் உள் நாட்டு ஆக்கிரமிப்பு மூலம் ஆட்சியைக் கைப்பற்றக் கிரெம்லின் தன்னால் இயன்ற அளவு முயன்றது. அந்த

நாட்டில்தான் கிரெம்லின் சூழ்ச்சி எவ்விதம் வேலே செய்தது என்பதைக் கவனிக்க விரும்புகிறேன்.

பிரான்சின் ஜனத்தொகை அமெரிக்க ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பாகத்துக்கும் குறைவு; ஆனல் அமெரிக்கக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அளவைவிடப் பத்து மடங்கு பெரிது பிரான்சின் கம்யூனிஸ்டுக் கட்சி. பிரான்சில் கம்யூனிஸ்டுக் கட்சி அங்கத்தவர்களாகச் சேர்ந்து கட்சிச் சீட்டுடன் உலாவுபவர்கள் சுமார் 6 லட்சம் முதல் 7 லட்சம்வரை உள்ளனர் என்றும் இவர்களில் உரம் ஏறிய கடுமையான கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை 2½ லட்சம் என்றும் நிலைமை அறிந்தோர் மதிக்கின்றனர். இவர்கள் இரவு பகல் ஓயாமல் எந்நாளும் கிரெம்லின் வாதத்தையே பிரசாரம் செய்பவர்கள். மற்ற எல்லா நாடுகளிலும் இருப்பதுபோலவே பிரான்சிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சியும் கிரெம்லினின் பிடியிலிருந்து இம்மியும் பிறழ முடியாத கட்சி; முக்கியமாக சோவியத்தின் அயல் நாட்டுக் கொள்கைக்கு ஓர் ஆயுதம்.

கிரெம்லின் கவனமாக ஒரு சூழ்ச்சி வரைந்துள்ளது. பிரெஞ்சு சமூகத்தில் ஒவ்வொரு வகுப்பாரிடையும் உள்ள குறைபாடுகளைக் கம்யூனிஸ்டுகள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றனர்; வகுப்புக்கு வகுப்பு பிளவு உண்டாக்கிவிட முனைகின்றனர். பெண்கள் சங்கங்கள், முன்னுள் போர் வீரர்கள் சங்கங்கள், போரினுல் கணவரையிழந்த கைம் பெண்கள் சங்கங்கள், குண்டுக்கிரையான குடும்பங்கள் சங்கங்கள், முன்பு யுத்தக் கைதிகளாக இருந்தவர்கள் சங்கங்கள் எனப் பற்பல சங்கங்களையும் கம்யூனிஸ்டுகள் தொடங்கி வைக்கின்றனர். ஏற்கனவே ஏற்பட்டிருந்த குடியானவர் சங்கங்கள், குடும்பச் சங்கங்கள், விளையாட்டுச் சங்கங்கள்—ஏன் பந்து வீச்சுக் கூட்டங்கள், மீன் பிடிப்போர் சங்கங்கள் இவற்றையும் கம்யூனிஸ்டுகள் விட்டு வைப்பாராக இல்லை. அவற்றின் உள் புகுந்து வேலே செய்கின்றனர். அவற்றை ஆட்டிவைக்கவும் ஆகின்றனர். காலஞ்சென்ற ஜார்ஜ் ஆர்வெல் " 1984 " (Nineteen Eighty-four) என்று

ஒரு புத்தகம் எழுதியிருப்பது நினைவிருக்கும்; கொடுங்கோன்மை யாட்சியை அஞ்சத்தக்க விதத்தில் வர்ணிக்கிறது அப் புத்தகம். அதில் சொல்லப்படும் பயங்கர ஆட்சிக்கு மிகவும் ஒத்தாற் போன்று நடுக்கந்தரும் ஒரு கொடிய நிலைமை இன்று பிரான்ஸைக் கவ்வியிருக்கிறது. வீட்டைக் கவனித்து, வருபவர்களுக்கு வழிகாட்டி, கதவண்டை காவல் புரிவதற்காக அமர்த்தப்படும் பெண்கள் கோள் சொல்லுவதும், ஊர் வம்பு பேசுவதும் வரும் போகும் தபால்களைக் கள்ளத்தனமாகப் படிப்பதுமாகத் தொழில் நடத்துகிறார்கள். வீட்டுச் சாவியோடு நடமாடும் இவர்கள் வீட்டின் அந்தரங்கம் வெளிப் போகாமல் காப்பாற்றும் பொறுப்புடையவர்கள் ; நடப்பதோ முற்றிலும் வேறு. இத்தகைய வீட்டுக் காவலாளிகள் பலரைக் கம்யூனிஸ்டுகள் சங்கமமைத்து ஒன்று சேர்த்து விஷமேற்றிக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு உளவு சொல்லிக்கொடுக்கும் ஒற்றர்களாக்கியுள்ளனர். கம்யூனிஸ்டுக் கட்சியை எதிர்ப்பவர்களைச் சந்தி சிரிக்கும்படி செய்ய இந்த உளவாளிகளுடைய சேவையைக் கம்யூனிஸ்டுகள் பயன் படுத்துகிறார்கள். ஒற்றர் புரளியும், தொல்லை கொடுக்கும் கேள்வியும், சோதனையும் உலகில் இவ்வாறு ஒரு பெரும் சதியாக நடைபெறுகின்றது. முன்னணிச் சங்கங்கள் பல கம்யூனிஸ்டு மனப்போக்கை வெளியில் காட்டிக்கொள்ளாமல் வேலை செய்கின்றன. இன்றைய பிரெஞ்சு சமூகத்தில் இவையெல்லாம் ஒழுங்கான வாழ்க்கையை அமுக்கிக் கிளம்பும் களைகளாக வளர்ந்து விட்டன.

பிரான்சிலுள்ள தொழிற் சங்கங்களில் மாபெரும் தொழிற் சங்கமாகிய பொதுவான தொழிற் சங்க சம்மேளனத்தில் (General Confederation of Labour) கம்யூனிஸ்டுகள் ஆதிக்கம் பெற்றுள்ளனர். இந்த ஆதிக்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சற்று குறைந்துவிட்டது. எனினும் அதில் இன்னும் 22,50,000 கம்யூனிஸ்டு அங்கத்தினர் உளர். இவர்களில் பெரும்பான்மையோர் பொருளாதாரத் துறையிலும், இராணுவத் துறையிலும் மிக முக்கியமான தொழிற்சாலைகளில்

வேலை செய்பவர்கள். இந்த தொழிற் சங்கத்தைக் கம்யூ னிஸ்டுகளே ஆட்டிவைத்து நடத்தினாலும், அதில் சாதாரண மாகச் சேர்ந்திருக்கும் அங்கத்தினர் முற்றிலும் கம்யூனிஸ்டுகள் அல்லர். கணக்காக இத்தனைபேர்தான் கம்யூனிஸ்டுக் கட்சியி னர் என்பது தெரியவில்லை; ஆனால், தொழிற்கட்சிப் பத்திரி கைகள் களிகூர்ந்து ஓலமிடும் இரைச்சல் மட்டும் நன்றாக யாவ ருக்கும் தெரிந்ததே.

பிரான்சில் கம்யூனிஸ்டுகளின் இரைச்சல் முக்கியமாகப் பத்திரிகை வாயிலாகவே கேட்கின்றது. நாள் இதழ்களும், வார இதழ்களும், மாத இதழ்களுமாகப் பல கம்யூனிஸ்டுப் பத்திரிகைகள் அங்கு வெளிவருகின்றன. நாட்டில் செல்வாக் குப்படைத்த ஒவ்வொரு வகுப்பாருக்கும், சிறப்பாக ஒவ்வொரு வெளியீடுகள் உள. குடியானவர்களுக்கென்றும், அறிஞர் களுக்கென்றும், கப்பல்களிலும் துறைமுகங்களிலும் வேலை செய் பவர்களுக்கென்றும், மந்திரிகளுக்கென்றும், சிறுவர் சிறுமியர் களுக்கென்றும், பெண்களுக்கென்றும், பாரிஸ்வாசிகளுக்கென் றும் தனித்தனியாக பற்பல கம்யூனிஸ்டு வெளியீடுகள் உலாவு கின்றன. நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் கம்யூனிஸ்டுகள் தனித் தனியாகப் பல பத்திரிகைகளை அச்சிடுகின்றனர். ஏன் ஒவ்வொரு சிறு நகருக்கும் ஒன்றாகக்கூட அவர்கள் தனிப் பத்திரிகைகள் வெளியிடுகின்றனர். அல்சாஸ்—லொரேனுக்கு ஜெர்மன் மொழியில் கம்யூனிஸ்டுப் பத்திரிகைகள் வெளியாகின்றன. மத்தியதரைக் கடற்கரையோரப் பகுதிகளுக்குத் தனியாக வேறு பதிப்புகள் உள. பெரிய கம்யூனிஸ்டுத் தினசரிப் பத்திரிகை களும், படம் நிறைந்த சஞ்சிகைகளும், அரசியல் கட்டுரைகள் வரைந்த சிறு சிறு புத்தகங்களும், அவதூறு செய்யும் காகி தங்களும் உள. எல்லாவற்றையும்விட இப்போது உண்டாகி யிருக்கும் கம்யூனிஸ்டுப் பத்திரிகைச் சங்கமே மிக முக்கியமான அவர்கள் ஆயுதம் எனச் சொல்லலாம். கம்யூனிஸ்டுப் பத்திரி கைகள் யாவற்றையும் இணைத்து வேலை செய்வது இது. இதனால் நினைத்த மாத்திரத்தில் ஏதாவது ஒரு கம்யூனிஸ்டுக்

கதையை அவிழ்த்துவிட்டு நாடு முழுவதும் ஒரே சமயத்தில் பரப்பிவிடலாம்.

கம்யூனிஸ்டு வெளியீடுகளில் பலவற்றை அடையாளம் கண்டு பிடிப்பது கடினம். ஆகவே அவற்றை வரிசைப்படுத்தி வகுத்துச் சொல்வது கடினமான காரியம். அவை ஆடை தைத்தல் முதல் கால் பந்தாட்ட வெற்றி தோல்விகள் வரை பற்பல செய்திகளையும் வெளியிடுகின்றன, விரும்புவார் பலர் வேண்டும் என்பதற்காக. இத்தகைய கம்யூனிஸ்டுப் பத்திரிகைகள் நூற்றுக்குமேல் இருக்கின்றன. பாரிஸில் மட்டும் குறைந்தது நாற்பது உள. அவை யாவும் கம்யூனிஸ்டுச் சார்பாகப் பேசுபவை ; அமெரிக்காவை இழிவு செய்பவை ; மார்ஷல் திட்டத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்பவை. இவை மட்டுமல்ல. கூட்டங்கள் கூட்டி கம்யூனிஸ்டுகள் சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறார்கள் ; நேரில் தனித்தனி மக்களையும் தங்கள் பேச்சு வன்மையால் மயக்குகிறார்கள். சமாதான முன்னணிகள் என்று மக்களைத் திரண்டுவரச் செய்கிறார்கள் ; பிறந்த நாள் கொண்டாட்டங்கள் பல நடத்துகிறார்கள் ; தொழிற்சங்க வன விருந்துகள் நடத்துகிறார்கள். சுவரில் காலியிடம் இருக்கக் காண்பது அரிது ; அங்கு கம்யூனிஸ்டு சுவரொட்டிப் பிரசாரம் பிரெஞ்சு மக்களைப் பார்த்துக் கனைத்துக்கொண்டே இருக்கும். நிலவறை ரயில்வே ஸ்டேஷன்கள், ஏன் சிற்றுண்டிச் சாலைகளிலுங்கூட அவற்றைக் காணலாம். கம்யூனிஸ்டுப் புத்தகங்கள், கம்யூனிஸ்டுத் திரைப்படங்கள், கம்யூனிஸ்டு சொற்பொழிவுகள் முதலியன நாடு முழுவதும் பரவுகின்றன. கம்யூனிஸ்டுகள் கையாளும் வழிகளுக்கு ஒரு முடிவில்லை என்னலாம்.

•

பிரெஞ்சு கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வரும்படி எங்கிருந்து வருகிறது ? சில இடங்கள் தெரிகின்றன. ஆனால் பெரும்பான்மையும் எங்கிருந்து வருகிறது என யாரும் அறிந்து கொள்வதற்கில்லை. இவ்வாறு வகை தெரியாமல் வரும் தொகை கிரெம்லினிடமிருந்துதான் வருகின்றது என்பதைச் சந்தேகிக்க இடமில்லை. பிரான்சின் கம்யூனிஸ்டுக் கட்சி வருஷத்

துக்கு 500 முதல் 600 கோடி பிராங் வரை செலவிடுகிறது என்பது மிகத் தாழ்வான ஒரு மதிப்பு. அதாவது 150 லட்சம் முதல் 170 லட்சம் டாலர் வரையில் செலவிடுகிறது.

எல்லாத் துறையிலும் எல்லா வகையிலும் எங்கும் நிரம்பியதும், மிகக் கவனமாக உருவாவதும், கருத்துக்கு ஒத்தபடி முழு ஈடுபாட்டுடன் நிறைவேற்றப்படுவதும், காலத்துக்கேற்றபடி கோலமமைத்து வருவதில் சற்றும் பிறழாததுமான இத்தகைய கம்யூனிஸ்டுப் பிரசாரமே இன்று சுதந்தர உலகினை நசுக்க முனைந்துள்ள சூது.

இவ்வாறு மக்களை ஆசை வார்த்தை சொல்லி அடிமைப் படுத்தியுள்ள கம்யூனிஸ்டுப் பிரசாரத்தின் பொய்ப் பேச்சுகளை எவ்வாறு எடுத்துக் காட்டுவது ? மயங்கிய மக்கள் எப்படி மனந் தெளிவு பெறச் செய்வது ?

முதலாவதாக, சுதந்தர உலகுக்கென ஒரு கொள்கைக் கோவையைத் தொகுத்தெடுக்க வேண்டும். இது உலகில் எல்லாப் பாகங்களிலுமுள்ள சுதந்தர மக்களின் குறிக்கோள்களையும் அவர்கள் எவற்றுக்காகப் பாடுபடுகிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். பின்பு, இந்தக் கொள்கையை எடுத்துரைக்கும் சொற்களைக் கண்டு பிடிக்க வேண்டும்; கிப்ளிங் சொன்னதுபோல “ மக்கள் உள்ளத்திலே அங்கும் இங்குமாக நடமாட”க் கூடிய சொற்களாக அவை இருத்தல் வேண்டும்.

இத்தகைய சுதந்தர உலகக் கொள்கைக் கோவையை வரைந்தால் சுதந்தரம் என்றால் எல்லாம் தமக்குத் தெரிந்தது தான் என்றிருப்பவர்களுக்குத் தெளிவு உண்டாக்கலாம்; பின்னும் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கலாம். அடிமையாகிக் கிடக்கும் பிறரையும் தட்டி எழுப்பி நம் பக்கம் சேர்க்கவும் இயலும். இதில் எனக்கு ஐயம் இல்லை.

முன்னோர்களிடமிருந்து நாம் பெற்ற செல்வம் இதுதான் என மொழிவதே சுதந்தர உலகக் கோவை வரைவதாகும். நாம் (இங்கிலாந்தில்) அன்று ' மாபெரும் சாசனம்' (Magna Carta) பெற்ற மக்களின் வழி வந்தவர்கள் அல்லரோ? (அமெரிக்கச்) சுதந்தரப் பிரகடனம் நமது மூதாதையர் நமக்கு விட்டுச் சென்ற சொத்தன்றோ ? இப் பிரகடனத்தில் கண்ட கருத்துக்கள் (சீனாவின் ஞானி) கன்பூஷியஸ் (Confucius), (கிரேக்க ஞானி) பிளேட்டோ ஆகியவர்கள் வரைந்து வைத்தவை யும், எல்லாவற்றையும் விட மிக முக்கியமாக கிறிஸ்து பெருமான் அன்று மலைமீதமர்ந்து அருளிச் செய்த போதகமுமேயாம். நம்முடைய சுதந்தர உலகக் கொள்கைக் கோவை நான்கு முக்கிய துறைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

முதலாவது, **மதம் :** தன் மனச் சாட்சிப்படி கடவுளை வழி பட ஒவ்வொருவருக்கும் சுதந்தரம் ; மனிதன் ஒருவனுக்கு உள்ள உயர்வு; மக்கள் அனைவரும் சகோதரர்கள் ; இவை நம் கொள்கைக் கோவையில் இடம் பெற வேண்டும்.

இரண்டாவது, **அரசியல் :** இன்ன முறையான அரசாங்கந் தான் இருக்க வேண்டும் என்பதன்று. பொது மக்களுக்குள்ள உரிமைகளும் அவற்றை அரசாங்கம் பாதுகாக்க உறுதியளிப் பதும் பற்றிய சாசனம் ஒன்று வேண்டும். இச் சாசனத்தை, மேற்கத்திய உலகின் அனுபவங்களிலிருந்து பிழிந்தெடுத்து வைத்துள்ளனர் அமெரிக்க அரசியல் திட்டம் வரைந்த முன்னோர்.

மூன்றாவது, **பொருளாதாரம் :** சமூகத்தில் பிறரும் வாழ வேண்டும் என்னும் உணர்ச்சியுடைய புதிய முதலாளித்துவம் ; இது அமெரிக்காவில் எவ்வளவு தூரம் முன்னிலையடைந்து பலன் தருகிறது என்பதை உலகம் பொதுவாக உணர்வதே யில்லை. சொத்து உடைமை சிலர் கையில் இல்லாமல் விரிவாகப் பலர் கையில் இருப்பது ; முன்னின்று செயலாற்றுவது, முடிவு செய்வது, ஊக்கமாக முயற்சி செய்வது இவை சிலர் கையில்

இல்லாமல் பலர் கையில் பரவி இருப்பது; வர வர அதிக மதிகமான மக்களுக்கு இம்முறையினுல் பலன் கிடைக்கப் பெறுவது—இவையே இந்தப் புதிய முதலாளித்துவத்தின் ஆதாரம்.

நான்காவது, **சமூகம்** : பொருளாதாரம், கல்வி, பண்பாடு ஆகிய துறைகளில் எல்லோருக்கும் முன்னேற வாய்ப்பு சமமாக ஆகவும், இத்தகைய வாய்ப்புகள் பலவாருகப் பெருகவும், தனிப்பட்ட நிலையிலும் சமூகம் என்ற பொதுப்பட்ட நிலையிலும் என்னென்ன செய்ய முடியும் என நுணுகி ஆராயும்படி நம்மைத் தூண்டுவது எது? அந்த அன்பு உணர்ச்சிக்கு இட மிருக்க வேண்டும். சர்வ தேசச் செஞ்சிலுவை சங்கம் என்ருே, சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் என்ருே, தொழிற் சாலைகளின் "பென்ஷன்" திட்டங்கள் என்ருே, தனித் தனி மக்களின் வாழ்க்கையில் நோய் நொடிகள் ஏற்படும்போது உதவி செய்யப் பலவகையான வழிகளை ஆராய்வதற்கு இந்த அன்பு உணர்ச்சி அவசியம்.

**நமது சுதந்தர உலகக் கொள்கைக் கோவையை வரையறுத் திட்டதும் செய்ய வேண்டியது என்ன? உடனே அதை எவ்வ ளவு தூரம் பரப்ப முடியுமோ அவ்வளவு தூரம் பரப்பவேண் டும். அதற்கு என்னென்ன வழிகள் உண்டோ அத்தனையும் கையாள வேண்டும்.**

மற்ற நாட்டு மக்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள அமெரிக்கா துணை செய்ய முடியும் என்பதை மீண் டும் இங்கு நினைவுறுத்துகிறேன். ஆனுல் இதில் செய்யவேண் டிய காரியத்தை அமெரிக்கா தானே ஏற்று நடத்தவும் முடி யாது; நடத்தவும் கூடாது, சுதந்தர உலகக் கொள்கைக் கோவையை ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டு மக்களே எடுத்து உரைப்பார்களானுல் அதனை மக்கள் மிகவும் விரும்பிக் கேட் பார்கள்; இது எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரத் துக்கு அது கைகூட முயல வேண்டும். இரும்புத் திரைக்குப்

பின்னுள்ள நாடுகளுக்குத்தான் இந்த உண்மை பொருந்தும் என்பதில்லை ; இது சுதந்தர நாடுகள் ஒவ்வொன்றுக்குமே பொருத்தமான உண்மை. சுதந்தர உலகக் கொள்கையை தழுவும்படி பிரான்சில், கொடிய இடதுசாரி மக்களையும் கொடிய வலதுசாரி மக்களையும் வசப் படுத்த அமெரிக்கர்களைவிடப் பிரெஞ்சுக்காரர்களுக்கே திறமை அதிக மிருக்கும். போலந்து மக்களிடையே சுதந்தர உணர்ச்சி தணியாமல் விளங்கும்படி செய்வதற்கு அந்த நாட்டின் உள்ளும் புறமும் இருக்கும் போலந்து மக்களே மற்ற எந்த நாட்டினரையும்விட அதிகத் திறமையுள்ளவர்கள்.

ஆயினும் அமெரிக்கா தனது எல்லைக்குள் மட்டுமின்றி வெளியுலகிலும் பிரசாரம் செய்யவே வேண்டும். அதன் பொறுப்பு மிகப் பெரிது. மக்கள் எல்லோரும் சுதந்தரமாகவும் சமாதானமாகவும் பெருகிய வாழ்வு வாழ வேண்டும் என்பதே நமது கண்ணும் கருத்தும் என்பதைச் செயலாலும் சொல்லாலும் அனைவருக்கும் தெளிவுபடுத்த வேண்டியது சுதந்தர உலகத் தலைமை தாங்கும் அமெரிக்காவின் கடமை.

கண்ணாரக் காணக்கூடிய செயல்கள், உண்மை நிகழ்ச்சிகள் இவற்றை எடுத்து விளம்புவதே நமது புதிய பிரசாரம். ஐரோப்பாவில் மார்ஷல் திட்டத்தின்படியும் தென் கிழக்கு ஆசியாவில் நாம் இன்று நடத்தும் திட்டத்தின்படியும், நாலாம் அம்சத் திட்டத்தின்படியும் நாம் செய்யும் செயல்களே நமது பலம் ; பிறரை உணர்ந்து கொள்ளச் செய்யும் ஆயுதம். இவற்றை விடச் சிறந்த பலம் நமக்கில்லை. ஆனால் இச் செயல்கள் மட்டும் போதா. இவற்றை நிரல்பட எடுத்து விளக்கும் பிரசாரமும் தேவை ; இந்தப் பிரசாரம் பலதிறப்பட்டதாகச் சிறந்து விளங்க வேண்டும் ; சொல்வது குறிப்பாக பதிய வேண்டும்.

மார்ஷல் திட்டத்தை எதிர்த்துக் கம்யூனிஸ்டுகளின் “அகிலம்” தடை செய்து நின்றபோது, நம்மைச் சூழ்ந்து மடக்க நின்ற சில விஷயங்களைப் பற்றி இதற்குமுன் ஓர் அத்தியாயத்

தில் குறிப்பிட்டேன். அப்போது, மார்ஷல் திட்டத்தில் நமது கொள்கைகள் தெளிவாக்கப் பட்டிருந்தன. ஐரோப்பா மீண்டும் ஆற்றல் வாய்ந்து, தன் வாழ்வுக்குப் பிறரை எதிர்ப்பார்க்கும் நிலைமையினின்று நீங்க வேண்டும் என்பதே மார்ஷல் திட்டத்தின் கொள்கை; இது எளிதில் உண்மையென்று யாவருக்கும் விளங்கக்கூடியது. எப்படி நோக்கினாலும் இதைக் குறை சொல்வது இயலாது. ஆயினும் நமது கருத்தை எடுத்து உரைக்க நமக்கு ஒரு வழியில்லாமல் போயிற்று.

பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தை நிறுவியபோதும் நமது செயல்களை அறிவிப்பதற்கென்று பெரிய பெரிய ஏற்பாடுகள் வேண்டியிருக்குமென நாம் நினைக்கவில்லை. இந்த நிர்வாகம் வேலை செய்யும் இடங்களில் ஒருவர் இருவர் இருந்தால் போதும் என்றும், இவர்கள் பத்திரிகைகளுக்கு வேண்டிய நமது செய்திகளைத் தயாரித்து வெளியிடுவார்கள், பத்திரிகையாசிரியர்களைப் போய்க் கண்டு கொள்வார்கள், எல்லாம் சரியாய் போகுமென்றும் எண்ணினோம். ஆனால் உண்மையை எளிதில் உணரலானோம். இத்துறையில் நம்மில் ஒருவர் இருந்தால் எதிராகக் கம்யூனிஸ்டுகள் ஐம்பதுபேர் இருக்கக் கண்டோம். சில சில இடங்களுக்கு—பத்திரிகைகளுக்கு—நாம் நமது செய்தியை அனுப்பி வைத்தால் போதும் என்று எண்ணியிருந்தது பயனில்லை என்பதையும் சீக்கிரமே உணர்ந்து கொண்டோம்.

ஆகவே அமெரிக்கச் செய்தித் தாள்களிலும் மற்ற இதழ்களிலும், வானொலி நிலையங்களிலும், திரைப்படக் கழகங்களிலும் தலைசிறந்து விளங்குபவர்களிடையே எங்களுக்குத் தேவையானவர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டோம். இம்முறையில் வாஷிங்டனில் எமது காரியாலயம் பாப் முல்லென் (Bob. Mullen) என்பவரின் கீழ் பெருகியது; இவர் மிக்க திறமையும் சுறுசுறுப்பும் ஊக்கமும் உள்ளவர். இதேபோல் பாரிஸ் நகரிலும், இடையூறுகளை எளிதில் கடக்கக் கூடிய ஆற்றல் நிறைந்த ராஸ்கோ ட்ரம்மண்ட் (Roscoe Drummond) என்பவரின் கீழ் எங்கள் காரியாலயம் வளர்ந்தது. எனவே இந்த வேலைக்காக எங்கள்

நிதித் திட்டத்தை விரிவு படுத்தினோம். பணம் அதிகம் வேண்டியிருந்தது ; காங்கிரஸின் பேராதரவு பெற்றோம் ; 20 லட்சம் டாலரிலிருந்து ஏறக்குறைய 170 லட்சம் டாலராக நிதியைக் கூட்டினோம்.

மார்ஷல் திட்டத்தைப் பற்றி ஐரோப்பியர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஊர் ஊராய்ச் சென்று படங்கள் காட்டக் கூடிய திரைப்படப் பொருட் காட்சி ஏற்பாடு ஒன்றை நிறுவினோம். இதேபோலத்தான் இனி நாம் ஒவ்வோரிடத்திலும் நமது பிரசாரத்தை நடத்த வேண்டும். இந்தத் திரைப்படக் காட்சி ஏற்பாடு " ஐரோப்பா எழுகிறது " என்று அழைக்கப்படுவது ; இது இன்று மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மொத்தம் 6,000 மைல் சுற்றிவரும் ; இதற்கெனக் கூடாரங்களும், திரைப்படங்களும் இருக்கின்றன ; இது தானே தன் படங்களைத் திரையிட்டுக் காட்டுகிறது ; படங்களை விளக்கும் வசனங்கள் அந்த அந்த இடத்தின் மொழிகளிலேயே உரைக்கப்படுகின்றன. ஏற்கனவே பிரான்சிலும், பெல்ஜியத்திலும், டென்மார்கிலும், ஜெர்மனியிலும், ஸ்வீடனிலும் படங்களைக் காட்டியிருக்கிறோம். மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றோடொன்று இணைந்து ஒன்றுபடுவதற்காக என்னென்ன ஆகியிருக்கிறது என்பதை இப் படங்கள் விளக்குகின்றன. 27,40,00,000 ஐரோப்பியர்கள் ஒருவர் ஒருவர்க்கு வேண்டிய பொருள்களைக் கட்டுப்பாடின்றி உற்பத்தி செய்து அவற்றைத் தாராளமாக ஒருவர்க்கொருவர் விற்றுக் கொள்ளக் கூடிய காலம் வரும்போது, வாழ்க்கைத் தரம் ஒவ்வொரு நாட்டிலும் எப்படி உயரும் என்பதையும், சமாதானம் எப்படி இன்னும் உறுதியாகும் என்பதையும் இப் படங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

" ஐரோப்பா எழுகிறது ". ஆம். இந்த ஏற்பாட்டின் ஒரு சிறந்த பலன் வானத்தில் நீந்திச் சென்ற ஐந்து லட்சம் பலூன்கள் மூலமாய் விளங்கும். ஒவ்வொரு பலூனும் கண்ணைக் கவரும் நிறம் பொருந்தியது ; " ஹைட்ரஜன் " வாயு நிறைந்தது ; ஓர் அடிக் குறுக்களவு உடையது; ஒவ்வொன்றும்

ஒரு தபால் ' கார்டு ' சுமந்து செல்வது ; அதை அனுப்புகிறவர் பெயரும் விலாசமும் கையெழுத்தும் அந்த அட்டையில் விளக்க மாக இருக்கும். ஐரோப்பியர் ஒருவர் ஐரோப்பியர் இன்னொரு வருக்கு நட்பும் நல்லெண்ணமும் கூறும் வாழ்த்துக் கடிதமே அது. ஊர் ஊராய்ச் செல்லும் மார்ஷல் திட்டப் படக்காட்சி டென்மார்க்கிலிருந்தபோது, இத்தகைய பலூன்கள் ஓர் எழுபது ஆயிரம் வானில் அவிழ்த்து விடப் பட்டன. ஒவ்வொன்றிலு மிருந்த கடிதத்தில் எழுதியிருந்தவற்றுள் கீழே கண்ட செய்தி யும் இருந்தது :

**இந்த பலூனேடு வருகிறது ஒரு நற் செய்தி : கோப் பன்ஹேகன் நகரில் " ஐரோப்பா எழுகிறது", என்ற மார் ஷல் திட்டப் படக் காட்சியைக் கண்ட சமாதானம் விரும் பும் நண்பன் ஒருவன் டென்மார்க்கிலிருந்து உண்மையான வாழ்த்துச் செய்தி விடுக்கின்ருன்.**

**மார்ஷல் திட்ட நாடுகள் பதினெட்டிலும் உள்ள சுதந்தர, ஜனநாயக மக்கள் உள்ளத்தில் குடிகொண் டுள்ள சமாதானம், செழிப்பு என்னும் ஆவலெல்லாம் இந்த பலூனிலே, விளங்கும். நாங்கள் அனைவரும் வியா பாரத் துறையிலும் அறிவுத் துறையிலும் தடையின்றிப் பண்டங்களும் கருத்துக்களும் இடம் பெயர்ந்து சென்று உலவ வேண்டுமென விரும்புகிறேம் என்பதற்கும் இந்த பலூன் ஓர் அறிகுறி. நிலமென்றும் கடலென்றும் வேறு பாடின்றி எங்கும் செல்கின்ற இந்த பலூன்போல, மக்க ளும் வியாபாரப் பண்டங்களும் தடையின்றி எல்லைகளைக் கடந்து ஏகும் நாள் வரும் என்பதே எங்கள் நம்பிக்கை.**

**மார்ஷல் திட்டம்—ஜனநாயக சமாதரனத்துக்குரிய ஒரு திட்டம்.**

சில பலூன்கள் இறுநூறு, முந்நூறு, ஐந்நூறு மைல்கள் மிதந்து சென்று, அப்பால் கிழக்கு ஜெர்மனியில், போலந்தில்,

ஹங்கேரியில், ஆஸ்திரியாவில், செக்கோஸ்லோவாக்யாவில், லிது வேனியாவில் மெல்லக் கீழேயிறங்கின.

உண்மைத் திவலைகள் சில இரும்புத் திரையைத் தாவி அப்பக்கம் தெறித்து விட்டன. அதனால் கம்யூனிஸ்டுகள் எப்படி ஆத்திரமடைந்தனர் என்பதைக் கவனியுங்கள் :

1. பலூன்களையும் அவற்றில் வரும் செய்திகளையும் தொட்டால் ஆபத்து, அவை வெடிகளாக இருக்கலாம் என்று அரசாங்க அதிகாரிகள் எச்சரிப்பாராயினர்.

2. அவற்றை எடுத்துப் போலீஸாரிடம் ஒப்படைத்த வர்களை நாடறியப் புகழ்வாராயினர்.

3. கம்யூனிஸ்டுப் பத்திரிகைகளும், வானொலிகளும் அமெரிக்கா மீது வசைமாரி பெய்ய மிகவும் முனைந்தன ; அச்சடித்த செய்திகளிலே அபாயந் தரும் நுண்கிருமிகளை ஒட்டி அனுப்புகிறார்கள் மேற்கத்திய ஏகாதிபத்தியப் பித்தர்கள் என்று கூறலாயின ; “ஐரோப்பாவின் மீது நுண்கிருமிகளை அவிழ்த்து விட்டுப் பாழ் செய்வதற்காக, கிருமிப் போர் புரிவதற்காகக், காற்று வீசும் திசைகளைக் கண்டறியும் பொருட்டு” இந்த பலூன்கள் அவிழ்த்து விடப்படுகின்றன என்று அவை உரைக்கலாயின.

ஆயினும் நமது செய்திக்கு இரும்புத் திரைக்குப் பின்னி ருந்தவர்களிடமிருந்து வேறு விதமான பதில்களும் கிடைத்தன. ஹங்கேரியர்களிடமிருந்தும் போலந்துவாசிகளிடமிருந்தும், இன்னோரன்ன பிறரிடமிருந்தும் இரும்புத் திரைக்கு வெளியேயுள்ள நண்பர்களுக்குக் கடிதங்கள் எப்படியோ வந்து சேர்ந்தன. இவற்றைப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்துக்கு இந் நண்பர்கள் தெரியப்படுத்தினார்கள்.

“இதை இரகசியமாகத் தங்களுக்கு அனுப்ப விரும்புகி றேன்” என்று ஒருவர் எழுதியிருக்கிறார். பின்வரும் கடி தத்தைப் பார்த்தால், மற்றவை எவ்வாறு எழுதப்பட்டிருந்தன என்பதை உணர்ந்துகொள்ளலாம் ; “உங்கள் பலூன் வெகு

தூரம் பறந்து வந்திருக்கிறது. நீங்கள் எந்தக் கருத்துக்களை ஆதரிக்கிறீர்களோ எவற்றுக்காக உழைக்கிறீர்களோ அக் கருத்துக்களைப் பற்றி ஐரோப்பாவின் இப்பகுதியில் மக்கள் பேசுவதில்லை—இல்லை. பேசத் துணிவதில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் நாங்கள் ஐரோப்பியர்களாக வாழும் நாள் என்று வரும் என்று வரும் என்று எதிர்ப்பார்த்தவண்ணமாக இருக்கிறோம். இரும்புத் திரையோடு ஐரோப்பா முடிந்துவிடுகிறது என்று எண்ண வேண்டாம்" என்பது அக் கடிதம். மற்றக் கடிதங்களும் இதைப் போலவே, அவலமும் அச்சமும் நிறைந்ததும் ஆனால் நம்பிக்கை ஒளி மினுமினுப்பதுமாய கதையையே எடுத்து மொழிந்தன.

இதனால் ஐரோப்பியருள் பெரும்பான்மையோர் ஆர்வத்துடன் நமது பக்கமே இருக்கிறார்கள் என்பதும் ரஷ்யாவின் அடிமை நாடுகளிலுள்ளவர்கள் சுதந்தர உலகில் என்ன நடக்கிறதென்று அறிய ஆவலுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதும் நன்கு விளங்கும். மார்ஷல் திட்டத்தைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துரைக்க நாம் செய்த இன்னும் பல முயற்சிகளின் பலனும் இந்த என் நம்பிக்கையையே உறுதிப்படுத்துகின்றது. மார்ஷல் திட்டத்தைப்பற்றிப் பொது மக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று கண்டுபிடிக்க மற்றவர்களைக் கொண்டு நாம் நடத்திய கணக்கெடுப்புகளும் இந்த உண்மையையே தெரியப்படுத்துகின்றன. இஃதில் எனக்கு ஐயம் எதும் இல்லை.

மூன்றாவதாக, இப் பிரசாரத் துறையில் அமெரிக்கா தனது பெருங் கடமைகளை நிறைவேற்றுவதற்குச் செய்ய வேண்டிய காரியம் இன்னொன்றும் உண்டு. நமது தற்காப்பு முயற்சிகளை எவ்வாறு ஒன்றுபடுத்தியிருக்கிறோமோ, அதே போல் நமது அரசாங்கத்தின் செய்தி அறிவிப்பு முயற்சிகளையும் குறைபாடின்றி முற்றிலும் ஒன்றுபடுத்த வேண்டும்—கட்டாக இருக்க வேண்டும்; முயற்சி சிதறக் கூடாது. வெளிநாட்டுச் செய்தி அறிவிப்பு இலாகா என்று ஒரு தனி இலாகாவை எற்படுத்தி அதற்கெனத் தனி அதிகாரம் கொடுக்க வேண்டும். இதற்குத்

தலைவராக இருப்பவருக்கு மந்திரிப் பதவி மதிப்பு இருக்க வேண்டும். செய்தி அறிவிப்பு வேலை, ஏனோ தானோ என்று செய்வதற்கான வேலையன்று. மற்றக் காரியங்களில் ஈடுபட்டிருக்கும் வேறு பொறுப்புடைய இலாக்காக்கள் இதனையும் சேர்த்து வைத்துக்கொண்டு எப்படியோ முறையைக் கழிக்கக் கூடாது. உதவிக் காரியதரிசி என்று ஒருவரை நியமித்து இதை அவர் கையில் ஒப்புவித்தாலும் காரியம் சரியாக நிறைவேருது.

நமது எதிரிகள் பிரசாரத்தை நாட்டுக் கொள்கையின் ஒரு முக்கிய கருவியாக ஆக்கி விட்டனர் என்பதை உணர்ந்தால், நான் குறிப்பிடுவதை உணர்ந்தால், இந்தப் பிரசார வேலை எவ்வளவு முக்கியம் என்பதை நாம் கவனித்து ஒப்புக்கொண்டு அதற்கு வேண்டிய ஆதரவு அளிக்க முற்பட வேண்டும். முதலாவதாக நாம் செய்ய வேண்டியது, இத் துறையில் ஒரே ஒரு ஸ்தாபனத்துக்குப் பதில் இரண்டு மூன்று ஸ்தாபனங்கள் வேலை செய்வதை நீக்க வேண்டும் ; எடுத்துக் காட்டினல், இப்போது மார்ஷல் திட்டத் தகவல் அறிவிப்பு நிகழ்ச்சியும் வெளிநாட்டு இலாகாவின் கீழ் அமெரிக்கத் தகவல் அறிவிப்பு நிலையமும் இருக்கின்றன ; ஒரே துறையில் ஒரே வேலையைச் செய்வதற்கு இரு வேறு திட்டங்கள் எதற்கு ?

செய்தி அறிவிப்புக்கென நிபுணர்களை அமர்த்துகிருேம். ஆனல் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை நிர்ணயிப்பதற்கு அவர்களுக்கு வகை கிடைப்பதில்லை. இதனுல் அவர்கள் கையிழந்தவர் போலாகின்றனர். வேறு பொறுப்புக்களுடன் திணறும் மற்ற அதிகாரிகள், செய்தி அறிவிப்பு நுணுக்கமும் இன்ன நேரத்தில் இன்ன சொல்ல வேண்டும் என்பதும் தெரியாதவர்கள் ; இவர்கள் ஒரு விஷயத்தை முடிவு செய்து அனுப்புவதற்கு செய்தி அறிவிப்புத் துறையில் வேலை செய்வோரின் பணி வீணுய்விடுகிறது. இத்தகைய கட்டுப்பாடுகள் செய்தி அறிவிப்புப் பணி புரிவோருக்கு இல்லாதிருக்கச் செய்வதும் நம் கடமை. அவற்றை அழித்தொழிக்க வேண்டும்.

எல்லாவற்றையும் விட மிக முக்கியமாகக் கவனிக்கவேண்டியது இன்னென்று உண்டு. சமாதானத்துக்காகப் பாடுபடும் பொருட்டுச் செய்தி அறிவிப்பு வேலையை மேற் கொள்பவர்கள் தாங்கள் எவ்வெவ் வழியில் செயலாற்ற வேண்டும் என்று தாங்களே முடிவு செய்து கொள்வதற்கு அவர்களுக்கு இடமளிப்போமானல், மிக உயர்ந்த திறமையும் ஊக்கமும் உள்ளவர்களே இத் துறையில் உழைக்கும்படி செய்ய முடியும். நமக்கு வேண்டியவர்களோ, பிரசார வித்தைகளெல்லாம் தெரிந்த சித்தர்களாக இருக்க வேண்டும்; கற்பனைத் திறனுடன் அவற்றைக் கையாளக் கூடியவர்களாகவும், துணிவாகவும் நுட்பமாகவும் வேலை செய்யக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்; கற்பனைத் திறனும், துணிவும், நுண்ணறிவும் கண்டபடி செல்லாமல் இருக்க, அவர்கள் உலகக் கொந்தளிப்புக் குரிய சக்திகள் குமுறியவண்ணம் இருப்பதை நன்கு உணர்ந்தறிந்து பக்குவமுடையவர்களாக இருக்க வேண்டும்.

பிரசாரம் என்றும் நிருபர்த் தொழில் என்றும் ஒலிப் பரப்புதல் என்றும் செய்தி அறிவிப்பு என்றும் வெளியிடல் என்றும் விளம்பரம் செய்தல் என்றும் இன்னும் விளம்புவதற்குரிய மற்ற வழிகள் என்றும் பற்பல சொல்லுகின்றோம். இவ்விவற்றின் இடையேயுள்ள வேறுபாடுகள் என்னென்ன என நாம் நுணிகியறிய வேண்டும். அதே போல் சமாதான முனையில் செய்தி அறிவிப்பு வேலையில் ஈடுபடுவதற்குத் தகுந்த திறமையும் பண்பும் உள்ளவர்கள் எவர் எவர் என்பதையும் நாம் நன்கு கூர்ந்து உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாகிறோம்.

பிரசாரத்துக்கே பிறந்தவன் இவன்தான் என்று வெளிப் படையாக எடுத்துக் காட்டுவதற்குரிய துணைக் கருவி எதுவும் இல்லை. உதாரணமாக பத்திரிகைத் தொழில் தெரிந்தவன் தான் பிரசாரம் செய்யத் தெரிந்தவன் என்று சொல்லமுடியாது. ஆனல் அவ்விரு தொழிலும் பொருந்தி இருக்க முடியாது என்பதும் இல்லை; காலஞ்சென்ற சார்ல்ஸ் மிக்கல்சன் (Charles Michelson) அப்படிப்பட்டவரே.

ஒருவர் இருவர்க்கென்று இல்லாமல் பெருந்திரளான மக்களுக்கு ஒரு காரியத்தை மனதில் பதிக்கும்படி சொல்லும் முறைகள் எவை எவை உண்டோ, வழிகள் என்னென்ன உண்டோ அவையனைத்தையும் பற்றிச் சற்றேனும் உணர்ந்தறிந்து அவற்றையெல்லாம் பொறுத்தம் முறியாமல் இணைத்துப் பயன்படுத்தத் தெரிந்தவனே பிரசார வித்தைக்குப் பிறந்த தகுதியாளன் என்று சொல்வது பெரும்பாலும் பொருந்தும். ஆயினும் அது மட்டும் போதாது. பேச்சிலன்று, செய்கையிலேயே பிரசாரம் அடங்கி இருக்கிறது. ஒரு செய்கை, அதைப் பற்றி அதிகம் பேசாமலே தன் புகழைப் பரப்பலாம். பிரசாரம் செய்பவன் அச் செய்கைகள் எவை எவை என உணர்ந்தறியக் கூடியவனுக்கவும், அவற்றை எவ்வாறு நிகழச் செய்வதென்றறிந்தவனுகவும் இருக்க வேண்டும். முறைப்படி பிரசாரம் செய்யலாம். ஆனால் ஒரு விஷயத்தை ஒருவர் மற்றொருவர்க்கு வாயால் எடுத்துச் சொல்வது எவ்வளவு தூரம் பிரசாரத்துக்குத் துணைபுரியும் என்பதைப் பிர்சாரம் செய்பவன் உணர்ந்திருக்க வேண்டும். பிரசாரம் செய்பவனின் வேலை செய்திகளை அறிவிப்பதால் மட்டும் தீர்ந்துவிடாது. கேட்பவர்களைப் பிணிக்கும் ஆற்றலும் அவனுக்கு வேண்டும். வழக்கறிஞர் ஆற்றல் அவனுக்கு வேண்டும். பொது மக்களே நீதிபதிகள். அவர்கள் கேட்டு வழக்கறிஞன் கூறுவது நியாயமே என உணறும்படி முயல வேண்டும்: இத்தகைய வேலைதான் பிரசாரம் செய்ய வேண்டியவ்னின் வேலை என்பதை உணர்ந்து கொண்டால் அயல் நாட்டுத் துறை பற்றிய கொள்கையும் செய்கையும் எப்படியெல்லாம் பிறரைத் தம் வயப்படுத்தும் என முடிவு செய்து உழைக்க வழி கிடைக்கும்.

கம்யூனிஸ்டுப் பிரசார பீரங்கியை ஓயவைக்கவா ? அது நமது அரசியல் முறையில் இயங்கும் ஓர் அரசாங்க ஸ்தாபனத்தால் முடியாத காரியம் என்று தடை போடுவோரும் உளர். பேச்சுச் சுதந்தரம் நமக்கு உயிர். இதனுல் நமது அரசாங்க ஸ்தாபனம் செய்யப் புறப்படும் வேலைக்குச் சில இடை

யூறுகள் ஏற்படும் என்பது உண்மையே. அரசாங்கச் சார்பற்ற ஸ்தாபனங்களுக்கோ சர்வாதிகாரி ஒருவன் ஏற்படுத்தும் ஸ்தாபனத்துக்கோ அத்தகைய இடையூறுகள் இருப்பதில்லை என்பதும் உண்மையே.

ஆயினும் இந்த வேலைக்கு வேண்டிய பணம் முக்கியமாகக் காங்கிரஸிடமிருந்துதான் வரவேண்டும். ஆதலால், எந்த ஸ்தாபனம் அப்பணத்தைச் செலவு செய்தாலும் கடைசியில் அது காங்கிரஸுக்கே கணக்குக் கொடுக்க வேண்டும்.

பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் அரசாங்கத்தின் நிர்வாகம்தான். அரசாங்கத்திடம் பணம் பெற்று அதன் வேலையை நடத்தும் கார்ப்பரேஷன் முதலிய மற்றக் கழகங்கள் மூலமாய் வேலை செய்வதற்கும் நேரே அரசாங்க ஸ்தாபனமாக இருந்து வேலை செய்வதற்கும் திறமையில் வேறுபாடு இல்லை என்பதைப் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் நிர்வாகியாக இருந்த போது அறிந்தேன்.

நான்காவதாக, பிரசாரம் செய்யும் தொழிலில் புதியது புனையும் ஆற்றல் நமக்கு வேண்டும். நாமும் மக்கள். வேறுபட்ட பழக்க வழக்கங்களால் நம்மிலும் வேறுபட்ட மக்கள் இருக்கின்றனர். இத்தகைய மக்கள் ஒருவர் ஒருவருக்குச் செய்திகளை அறிவித்துக் கேட்கச் செய்வது எளிய காரியமன்று; இந்தக் கலையில் நாம் கற்றது கைம்மண் அளவே என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆகவே பிரசாரத்தைத் தொடங்கிவிட்டோம், எல்லாம் சரியாக நடக்கும் என்று இராமல் இடைவிடாமல் பிரசாரத்தைப் பலனளிக்கும்படி செய்வதற்குரிய ஆராய்ச்சி செய்த வண்ணமாகவும் ஆராய்ச்சி முடிவுகளைச் சோதித்தறிந்த வண்ணமாகவும் இருக்க வேண்டும். இதே முறைதானே இராணுவத் துறையிலும் கையாளப்படுகிறது. பிரசாரத்துக்குரிய சாதனங்களில் நம் கையில் இருப்பவற்றை நாம் இன்னும் முற்றிலும் பயன்படுத்துவதில்லை. இனி இவற்றைக் கையாளுவது மட்டு

மின்றி அவற்றை இன்னும் செம்மையாக்கவும் புதிய **சாதனங்களைக்** கண்டுபிடிக்கவும் வேண்டும்.

ஐந்தாவதாக, நமது பொறுப்புகளைத் தெள்ளத் தெளிய வரையறுத்துக் கொண்டு, செய்யவேண்டிய காரியம் ஒன்று உண்டு. அதுதான், நாம் பிரசாரத்தைச் சிறிய அளவில் இல்லாமல் இன்னும் பெரிய அளவில் செய்யவேண்டுவதாகும். அதற்கு இன்று நாம் செலவழிக்கும் பணம் போதாது; இன்னும் எவ்வளவோ அதிகம் வேண்டும்.

இத்துறையில் நமது அரசாங்கம், பெரு முயற்சி செய்வதற்காக நம் வெளி நாட்டு இலாகாவுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தொகை 12 கோடி டாலர்தான். இதுவும் எளிதில் கிடைக்கவில்லை. (ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரும், கனெக்டிக்கட் ராஜ்யத்தவருமான) செனட்டர் வில்லியம் பெண்டன் போன்றவர்கள் அரிய பெரிய முயற்சி செய்து அசைத்தாலேயே இந்தத் தொகையும் கிடைத்தது. இதற்கு முந்திய ஆண்டுகளில் இத்துறையில் செலவிட அளிக்கப்பட்ட தொகைகளோ இதைவிட எவ்வளவோ குறைவு. ஆனால் கம்யூனிஸ்டுகள் நமக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்குச் செலவிடும் பணம் எவ்வளவு என்பதைக் கவனித்தால், நாம் செலவு செய்வது அற்பம், மிக அற்பம் என்பது தெளிவாகும்.

மேற்கு ஐரோப்பாவுக்கு மட்டும் மார்ஷல் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல எவ்வளவு நல்ல முறையில் பணம் செலவழிக்கலாம் என்பது எனக்கு அனுபவம். ஆகவே இந்தப் பன்னிரண்டு கோடி டாலர் நாம் உலகில் செய்ய வேண்டிய பிரசார வேலைக்குச் சிறிதும் பற்றாது என்பது என் துணிவு. தொகையை, அது நல்ல பலனளிக்கிறது என்று காணக் காண, இன்னும் மிகுதியாக்க வேண்டும்; 30 கோடியாகக் கூட்ட வேண்டும்; ஒரு வேளை அதற்கு மேலும் செலவழிக்க வேண்டி வரும். ஏன் இச் செலவு என்று கேட்பீர்களோ? கிரெம்லின் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளக்கிக் காட்டியிருக்கும் ஓர்

உண்மையைக் கவனியுங்கள் ; ஒரு நாட்டை வெல்வதற்கு அதன் மீது படையெடுக்கலாம் ; அல்லது பிரசாரம் செய்து, அந்நாட்டு மக்களுடைய மனத்தையும், உள்ளத்தையும் விசுவாசத்தையும் தன் வயப்படுத்தி அந்நாட்டை வெல்லலாம் ; முதலாவது வழியில் செலவிட வேண்டிய பணமோ மிகப் பெரிது ; இரண்டாவது வகையில் செலவிட வேண்டியதோ மிக மிகச் சொற்பம். கிரெம்லின் இதை எண்பித்துக் காட்டவில்லையோ ?

மேலே குறிப்பிட்ட 30 கோடி டாலர்த் தொகையில் குறைந்தது நூற்றுக்குப் பதினைந்து டாலர் வீதமாவது இரகசியமாகச் செலவிடக் கூடியதாக இருக்க வேண்டும். இந்தச் சிறு தொகையை, நிர்வாகம் செய்பவர் தாம் முடிவு செய்தவண்ணம் செலவிட வகை செய்யவேண்டும். இது எவ்வாறு செலவிடப் பட்டது என்பதைப் பொது மக்களிடம் தெரிவிக்கவேண்டிடிய கட்டாயம் இருக்கக் கூடாது. பிரசாரம் தப்பாமல் தன் பலனை எய்துவதற்குப் பயன்படும் வழிகள் எப்போதும் வழக்கமாக ஒப்புக்கொள்ளப்பட்ட வழிகளாக இருப்பதில்லை ; எப்போதும் முன்னதாகவே எதிர்பார்த்த வாய்ப்புகளாக இருப்பதில்லை ; பொது மக்கள் அனைவருக்கும் வெளிப்படுத்தக் கூடிய வழிகளாக இருப்பதில்லை. இவ்வாறு பொது மக்களுக்குத் தெரிவிக்கும் கட்டாயமின்றிச் செலவு செய்வதற்குரிய பணம் நமது பிரசார நிர்வாகிக்கு இல்லாவிட்டால் அது அவர் வேலைக்கு மிகவும் முடையாகும். இப்படி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணம் வீணாகாமல் காக்க வழி எது என்று கேட்கலாம். வழி இருக்கிறது. பொதுப்பட்ட கணக்கு வழக்குப் பரிசீலனைக் காரியாலயம் இத்தகைய பணத்தைப் பற்றிக் கணக்காராய்ந்து உண்மையைக் கண்டுகொள்ளலாம். மேலும் காங்கிரஸ் கமிட்டிகளுக்கு நேரில் தனியாகக் கணக்குக் கொடுக்க வேண்டும் என்றும் வழி செய்யலாம்.

ஆறுவதாக, தனிப்பட்ட முறையில் பிரசாரம் செய்வதற்கொரு கழகம் அமையவும் வேண்டும். அரசாங்கம் செய்யும் பிரசாரத்தின் குறைகளை நிரப்புவதற்கும், அரசாங்கம் செய்ய

இயலாத பிரசாரத்தைச் செய்வதற்கும் இத்தகைய தனிப்பட்ட அறப் போர்க்கழகம் ஒன்று அவசியம். அது உருவாகி வேலே செய்ய ஊக்கமும் உறுதியும், தேவையானுல் பணமும் கொடுத்து உதவ வேண்டும்.

அரசாங்கச் சார்பற்ற இத்தகைய கழகம் உலகம் முழு வதற்குமாக வேலே செய்ய வேண்டும். இதற்கு ஒத்தாற்போல உழைப்பதற்குப் பல சங்கங்கள் எத்தனே நாடுகளில் முடியுமோ அத்தனே நாடுகளிலும் அமைந்து துணே புரிய வேண்டும். இக் கழகம் தனக்கு வேண்டிய பணத்துக்கும், சுதந்தர உலகக் கொள்கைக் கோவைக்காகத் தான் புரியும் அறப்போருக்கும் பேராதரவாக இருக்கும்படி பொது மக்கள் பல்லாயிரக் கணக் கானவர்களைத் தன் பக்கம் ஒத்துழைக்கச் செய்ய வேண்டும். "நான் என்ன செய்ய முடியும் ?" என்றுதானே இன்று சுதந்தரமுடைய ஆயிரமாயிரம் மக்களும் கேட்கின்றனர் ; அவர்களுக்கு இத்தகைய அறப்போர்க் கழகத்தில் ஈடுபாடு ஒரு விடையளிக்கும் ; அனைவரும் ஒத்துழைக்கலாம்.

அரசாங்கச் சார்பற்ற இந்தக் கழகம் செய்யவேண்டிய இரு பெரும் வேலேகளாவன : ஒன்று, ஒவ்வோர் ஊருக்கும், ஒவ் வொரு சிறு தெருவுக்கும், ஒவ்வொரு கடைக்கும், ஒவ்வொரு விவசாயப் பண்ணைச் சமுதாயத்துக்கும், ஒவ்வொரு தொழிற் சங்கக் கூட்டத்துக்கும், மற்ற எவ்வகைக் கூட்டங்களாயினும் அவை ஒவ்வொன்றுக்கும் சுதந்தர உலகக் கொள்கைக் கோவையை எடுத்துச் சென்று வாயால் விளம்பிப் பரப்பக் கூடிய தூதர்கள் சிலரைப் பயிற்றுவித்து இயக்க வேண்டும்.

இது எளிதில் செய்யக் கூடிய காரியம் அன்று ; மிகப் பெரிய வேலேயும்கூட ; ஆபத்து நிறைந்ததுமாகும். பெரும் பாலும் நாம் வலிந்து கேட்காமல் தாமாக வந்து சேரும், உண்மையான பற்றுடைய மக்களேயே நாம் இக் காரியத்துக்கு உழைக்கும்படி செய்ய வேண்டும். இவ்வளவு கஷ்டமான வேலேயை எவ்வாறு செய்வதெனக் கையோய்ந்து இருந்தால்,

பெருங் கேடு விளையும். இதனை, கிரெம்லின் தனது பிரசாரத்துக்கு எப்படியெல்லாம் வேலை செய்கிறது என்பதையும் அதன் வழி முறைகள் தப்பாமல் பலன் தருகின்றன என்பதையும் ஆராய்ந்தறிந்தவர்கள் உணர்வார்கள். நமக்காகவும், நம்முடன் சேர்ந்தும் சுதந்தரத்தின் பொருட்டு இவ்வாறு பாடுபடும் சுதந்தர உலக இயக்கம் ஒன்று இல்லையானால், நமது அறப்போர்க் கழகத்தின் வேலை வீணாகும் ; விற்பனையாளர்கள் இன்றி விளம்பரம் செய்ததுபோலாகும ; வீடு வீடாய்ச் சென்று ஆதரவு தேடுவதற்கு ஆள்கள் இல்லாமல் அரசியல் துறையில் தேர்தல் நாடுவாரின் அவலம் போலாகும்.

அரசாங்கச் சார்பற்ற நமது அறப்போர்க் கழகம் செய்ய வேண்டிய அடுத்த பெரிய வேலை, பிரசாரப் போரில் கம்யூனிஸ்டுகளை விடாமல் தாக்குவதாகும். கம்யூனிஸ்டுக் கொள்கை நம்பத்தக்கதன்று என்பதைக் காட்ட வேண்டும். அது கிடைக்கும், இது கிடைக்கும் என்று கம்யூனிஸ்டுக் கொள்கையால் பேசிய வாய்மொழி எல்லாம் வீண் மொழியாகவே போயிருக்கின்றன என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக் காட்டவேண்டும்.

அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு புளுகுவதே கிரெம்லின் முறையில் ஒரு பெரும் சக்தியாக உபயோகிக்கப்படுகிறது. இதுவே கிரெம்லினைத் தாக்க நமக்கு மிக வாய்ப்பான இடம் ; அதன் உயிர் நாடியை ஒடுக்குவதற்கு இதுவே தக்க இடம். கிரெம்லினின் கொள்கைக்கு ஆதாரம் எது ? சரித்திரம் அன்று; சரித்திரத்தைப் பிழைபட விளக்கிக் கொண்ட காரணமே அதற்கு ஆணிவேர். ஆட்சி புரிவோர் விவசாயியும் தொழிலாளியுமே என்று கூறுகின்றது அதன் கொடி ; அதுவே ஒரு பொய். "வகுப்பற்ற சமூகம்" என்பது கொள்கை, ஆனால் சற்றும் மயக்கத்திற்கு இடமின்றி தெளிவாகப் பிரித்தெறியக்கூடிய பல வகுப்புகளை உண்டு பண்ணியிருக்கிறது அக்கொள்கை. அரசியல் துறையில் கிரெம்லின் பல்வேறு வழியில் திரித்தும் குறைத்தும் மாற்றியும் பேசி வருகிறது ; முரண்பாடின்றி நடப்பதில்லை. இது எதனால் ? 'புனித'மான ஒரு காரியத்தை

நிறைவேற்றப் பாவமான வழிகளைக் கையாளலாம் என்பது தானே அதன் கொள்கை. இத்தகைய சித்தாந்தத்தில் எத்தனை எத்தனை முரண்பாடுகள் எழுமோ அத்தனையையும் கிரெம்லினின் அரசியல் தந்திர வித்தைகளிலே காணலாம். "சுதந்தரம்" என்று பேசும்; இந்தச் "சுதந்தரம்" தருவதோ சுதந்தரத்துக்கு வழியற்றக் கட்டுத் திட்டம்; "சமாதானம்" என்று பேசும்; இந்தச் "சமாதானம்" தருவதோ போர்.

இவ்வாறு, அவர்களுடைய பேச்சைக் கொண்டே அவர்கள் சொல்வது முழுப் பொய் என்று எண்பிக்க எவ்வளவோ இடமிருக்கிறது. மீண்டும் மீண்டும் பல தடவை எண்பிப்பதனால், நாம் விவசாயி முதல் அறிவுத் துறையில் உழைப்பவர்கள்வரை எல்லா மக்களுடைய மனத்திலும் அது பதியும்படிச் செய்யலாம். உலகமே எள்ளி நகையாடும்போது ஒருவன் எவ்வளவு தூரம் துணிந்து பொய் பேச முடியும்? இதனை இன்னும் கண்டுகொள்ளவில்லை; இவ்வாறு கிரெம்லின் கொள்கையை உலகம் நையாண்டி செய்விக்கவும் நாம் முயலவேண்டும். ஸ்டாலின் மாமாவுக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் நமது நகைச் சுவை நையாண்டி உறைக்க வேண்டும்; கிரெம்லின் பொய்களை அப்படியே கேட்டுத் தலையாட்டும் ஐயோ பாவம் அப்பாவி என்பவனைப் பற்றிய பேச்சு ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு மொழியிலும் திண்ணைப் பேச்சாக இருக்க வேண்டும்.

இவ்வாறு வேலை செய்தோமானால் கம்யூனிஸ்டுகளைத் தலைதூக்கவிடாமல் முறியடிக்கலாம் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. அவர்கள் எளிதில் பொய் சொல்லி ஏமாற்ற முடியாமல் போகும்; நாம் சொல்லும் உண்மைகளுக்குப் பதில் சொல்லவே அவர்களுக்குச் சரியாக இருக்கும்; நாம் பரப்பும் உண்மைகள் தமது மக்கள் செவிகளிலே புகுந்துவிடாமல் பாதுகாக்கவே அவர்கள் நேரம் பெரும்பாலும் செலவாகும்; மற்ற இடங்களில் தொந்தரவு செய்வதற்கு அவர்களுக்கு நேரமும் வசதியும் அதிகமில்லாமல் ஒழியும்.

பெரும்பாலும் மார்ஷல் திட்டத்திஞல் மேற்கு ஐரோப்பாவில் எவ்வளவு செழிப்பு உண்டாகி யிருக்கிறது என்பதை அத்திட்டத்தில் சேரவிடாமல் தடுக்கப்பட்ட கிழக்கு ஐரோப்பியர்கள் இன்று உணரத் தொடங்கி விட்டனர்; செழிப்பு மட்டும் அன்று சுதந்தரமும் மேற்கே அதிகமாக நிலவுகிறது என்பதையும் அவர்கள் உணருகின்றனர். மார்ஷல் திட்டம் செயல் முறைக்கு வந்த பிறகு நடந்த ஒவ்வொரு தேர்தலிலுமே அநேகமாகக் கம்யூனிஸ்டுகள் தோல்வியடைந்தனர் என்பதையும் கிழக்கு ஐரோப்பியர்கள் கேட்டறிந்துள்ளனர்.

கிரெம்லினின் உண்மையான நோக்கம் பிற்போக்கடைந்துள்ள மக்களுக்கு உதவி செய்வதுமன்று. (காலனி) குடியேற்ற ஆட்சியில் இருக்கும் மக்களுக்கு விடுதலே பெற்றுக் கொடுப்பதுமன்று; இவர்களேயும் இன்னும் எல்லோரையும் சோவியத் ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமைப்படுத்துவதே குறி என்பதை ஆசிய மக்கள் முக்கியமாக, சுதந்தரமுடைய ஆசிய மக்கள் மென்மேலும் அதிக மதிகமாக உணர்ந்து வருகின்றனர். மாஸ்கோவின் கட்டளேப்படி நடக்கும் வட கொரியர்கள் ஒளிப்பு மறைப்பில்லாத ஆக்கிரமிப்பில் இறங்கியதும், அவர்களேப்போலவே மாஸ்கோவின் கட்டளேகளுக்கும் கீழ்ப்படியும் செஞ்சீனப் படை காரணமின்றிப் படையெடுத்தும் கிரெம்லினின் உள்ளத்தை தெற்றெனக் காண்பித்துவிட்டன.

ஐரோப்பாவில் இரும்புத்திரை; ஆசியாவில் ஒரு மூங்கில் திரை. இரண்டையும் சுதந்தர உலக மக்களின் சுதந்தர நற் செய்தி எப்பாடு பட்டேனும் தாண்டிச் சென்று அப்பால் சேர வேண்டும்.

செய்தி அறிவிப்பு முயற்சிகள் வீண் போகவில்லே, மக்கள் செவி சாய்க்கின்றனர் என்பதை மார்ஷல் திட்டத்தில் உழைத்த நாங்கள் அறிவோம். ஒரு நொடியும் ஓயாமல் முழு உலகுக்குமாகத் திட்டம் வகுத்து சுதந்தர உலகக் கொள்கையைப் பரப்புவதை அறப்போராகக் கருதிச் செயலாற்றுவோமாஞல்,

என்னென்ன பலன் கிட்டும் என்பதை எடுத்து விளக்குவது இயலாது. சுதந்தரம் வேண்டும் என்பவர்களுக்கு நம்பிக்கையும் உறுதியும் வரும்; சுதந்தரத்தைப் பகைப்பவர்களுக்குப் புதிய தோல்விகளும் வரும்—என்று மட்டும் கூற நியாயம் உண்டு.

சுதந்தர உலகம் எடுத்த காரியம் வெற்றியாக வேண்டும்; அது நம்பும் கொள்கைகளும் தோல்வி என்பது என்ன என்று அறியாமல் இருக்க வேண்டுமானுல், மேலே குறிப்பிட்ட சுதந்தர உலகப் பிரசாரம் இன்றே தொடங்க வேண்டும்; புதியதும் வேகமுமான இந்தப் பிரசாரம் இன்றே தொடங்க வேண்டும்.

# சமாதானம் புரிவதற்கு ஆகும் செலவு

## அத்தியாயம் 9

**1950**-ம் ஆண்டு மே மாதம் 8-ம் தேதி புளோரிடா ராஜ்யத்திலுள்ள மியாமி நகரில் கிவானிஸ் இன்டர்நேஷனல் என்ற மகாநாட்டில் நான் பேசுவதாக இருந்தது. அம்மகாநாட்டிற்கு வரப்போகும் மக்களுக்கு நான் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் கதையை எடுத்துச் சொல்லலாமென மிக ஆவலாக இருந்தேன்; அதுமட்டுமன்று, என் அருமை நண்பர் கேப்டன் எட்டி ரிக்கன்பேக்கருடன் (Captain Eddie Ricken Backer) மீண்டும் அளவளாவும் வாய்ப்பு கிடைக்கும் எனவும் மிக்க ஆவல்கொண்டிருந்தேன். ஏனெனில் அவரும் மகா நாட்டில் பேசுவதாக இருந்தது. அவருடன் எனக்கு நெடு நாளாகப் பழக்கம். முதலாவது உலக யுத்தத்துக்கு முன்பு நான் லாஸ் ஏஞ்செல்ஸில் ஸ்டுடிபேக்கர் கார்களை விற்று வருகையில் அவர் மெர்ஸெர் ஏஜென்சியில் (Mercer Agency) வேலை பார்த்தார். அந்த நாளில் மெர்ஸெர் ஸ்போர்ட் ரோட்ஸ்டெர் (Mercer Sport Roadster) என்றால் பிரமாதம்; அத்தகைய காரில் ஏறிக்கொண்டு யாவருக்கும் அதன் பெருமையை விளக்கிக் காட்ட இங்குமங்கும் திரிந்த ரிக்கன்பேக்கரைப் பற்றி, கார் விற்பனை செய்த எங்கள் எல்லோருக்கும் சிறிது பொறாமைதான்!

ஆயினும் நான் மியாமிக்குப் போக முடியவில்லை. ஏனெனில், செனட்டின் நிதி ஒதுக்கும் கமிட்டி பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகம் பற்றி விசாரித்தறிவதற்கு மே மாதத்தைக் குறிப்பிட்டிருந்தது; அதனால் நான் வாஷிங்டனிலேயே இருக்க வேண்டியதாயிற்று. மே மாதம் 9-ந் தேதி காலையில் பத்தி

ரிகையை எடுத்துப் பார்த்ததும், அதில் வெளியாயிருந்த கேப்டன் ரிக்கன்பேக்கரின் உரை எனக்குத் திகில் உண்டாக்கியது. உலகமெல்லாம் மார்ஷல் திட்டம் உதவியளிக்க வேண்டுமானல் அதற்கு 20,000 கோடி டாலர் வேண்டியதிருக்கும் என்று கேப்டன் ரிக்கன்பேக்கர் மொழிந்ததாக அதில் கண்டேன். அவ்வளவு குறிப்பாக அவர் பேசியிருக்கவில்லைதான் : ஏனெனில் அவர் கணக்கில் அமெரிக்காவின் படைகளை வளர்க்கும் செலவினமும் அடங்கியிருந்தது. மேலும் சமாதானம் கிட்டுமாயின் அதற்கு 20,000 கோடி டாலர் செலவு செய்வது அதிகம் அன்று எனவும் அவர் பேசியிருந்தார். ஆயினும், பிற நாடுகளுக்கு உதவிசெய்ய வேண்டிய தொகையைப் பற்றிக் கேட்பவர்கள் மனம் குழப்பம் எய்தியதே அவருடைய வார்த்தைக்கு இறுதிப் பயனாக இருந்தது.

சமாதானம் புரிவதற்கு இவ்வளவுதான் ஆகும் என்று குறிப்பாகச் சொல்லிவிட ஒருவராலும் முடியாது. ஆயினும் ஒரு மதிப்பாகக் கணக்கிட்டுக் குறித்துவைக்க நான் எண்ணுகிறேன். உலகம் முழுவதற்குமாக ஒரு மார்ஷல் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று, நிதான புத்தியுள்ள ஒருவரும் நினைக்கமாட்டார்கள் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன். நல்லறிவுள்ள பலபேர், சுதந்தர உலகம் தீங்கின்றி வாழ்வதற்கு எங்கெங்கு அவசியமோ அங்கெல்லாம் உறுதியான நிலைமை உண்டாக்க வேண்டுமென எண்ணுகிறேன். ஓர் ஆண்டுக்கு எவ்வளவு செலவாகும் என்பதற்குறிய எனது மதிப்பு வருமாறு :—

| | |
|---|---|
| அமெரிக்காவுக்கும் சுதந்தர உலகத்துக்கும் ஆபத்து வராமலிருப்பதற்கு முக்கியமாக விளங்கும் நாடுகளுக்குப் பொருளாதார உதவி | 2,00,00,00,000 டாலர். |
| அரசியல் முயற்சிகளுக்கு | 35,00,00,000 டாலர். |
| செய்தி அறிவிப்பு, பிரசாரம் ஆகிய வேலைகளுக்கு | 30,00,00,000 டாலர். |
| எதிர்ப்பாராத பொருளாதார முயற்சிகளுக்கு | 30,00,00,000 டாலர். |
| ஆக மொத்தம்... | 2,95,00,00,000 டாலர். |

இந்த மதிப்பில் ஒரு 30,00,00,000 டாலர் கூடுதலாகவே சேர்த்திருக்கிறேன். இப்போது நமது அரசியல் ராஜ தந்திர முயற்சிகளுக்கு ஓர் ஆண்டுக்கு 15,00,00,000 டாலருக்கும் குறைவாகவே செலவிடப்படுகிறது; செய்தி அறிவிப்பு முயற்சிக ளுக்கு 20,00,00,000 டாலருக்கும் குறைவு. இவ்விரு துறைகளி லும் இன்னும் பெரு முயற்சி செய்வதற்காக 30,00,00,000 டாலர் அதிகமாகக் கிடைக்க வேண்டுமென மதிப்பிட்டிருக்கி றேன். இன்னும் ஒரு 30,00,00,000 டாலர் அதிகமாக சேர்த் திருப்பது, நமது பொருளாதார முயற்சிகளே விரிவுபடுத்துவதற் காகும்; எவ்வெவ் வழிகளில் விரிவுபடுத்த வேண்டும் என்பதை இன்று எதிர்ப்பார்ப்பதற்கில்லே. எனது இம்மதிப்பைப்பார்த்த தும், பொருளாதாரத் துறையில் செய்யவேண்டிய காரியங் களுக்கு இவ்வளவுதானு என்று தோன்றலாம். மார்ஷல் திட்டத் திற்காக மட்டும், முதல் பதினேந்து மாதங்களில் 6,10,00,00,000 டாலரும், இரண்டாவது ஆண்டில் 3,80,00,00,000 டாலரும் செலவிட்டிருக்கிருேமே; 1951-ம் நிதி ஆண்டுக்கு 2,25,00,00,000 டாலர் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளதே என்று கேட்கலாம். ஆனல் இதற்கு எளிதில் விடை கண்டு கொள்ளலாம். எப்படி யெனில் மார்ஷல் திட்டம் நடைபெற வேண்டிய நான்கு ஆண்டு கள் முழுவதற்குமாகச் செலவிடப்படும்—உத்தேசமாகச் சொல்லு கிறேன்—1,300 கோடி டாலரில் 900 கோடி டாலர் அவசரத் தேவைகளே நிரப்புவதற்காகவே செலவாகும். ஐரோப்பாவின் பொருளாதாரத்துக்கு உயிர் கொடுத்து இயங்கச் செய்வதற் காகச் செலவழிக்கப்படும் மொத்தத் தொகையில் 900 கோடி டாலர் போரினல் விளேந்த சேதத்தைப் போக்கும்பொருட்டு நிவாரண உதவிக்கும் புது வாழ்வு அளிக்க வேண்டிய உதவிக்கு மாகச் செலவழிந்து போகும்; உணவுக்கும் மருந்துக்குமாக அது செலவிடப்படும்; ரயில் பாதைகள், துறைமுகங்கள், தொழிற்சாலேகள் ஆகியவை சண்டைக் காலத்தில் குண்டுகளுக் கிரையாகிப் பாழடைந்தனவே. அவற்றைப் புதுப்பிக்கவும் அது செலவிடப்படும். இவ்வாறு செலவான 900 கோடி டாலரை மீண்டும் மீண்டும் செலவிட வேண்டியதிராது. ஆகவே, மார்

ஷல் திட்ட நாடுகளின் பொருளாதாரத்துக்கு வேண்டிய சக்தி அளிக்க 400 கோடி டாலர்தான் ஆண்டுதோறும் செலவழிக்க வேண்டியதிருக்கும். அதாவது போர்க்காலத்திற்குப் பிற்பட்ட ஐரோப்பாவின் பொதுவான பொருளாதாரத் தேவைகளை நிரப்புவதற்கு மார்ஷல் திட்டத்தின் மொத்தச் செலவில் மூன்றில் ஒரு பாகமே போதும்.

பொருளாதாரத் துறையில் செலவிட வேண்டிய தொகை நான் குறிப்பிட்ட அளவுக்கு மேற்போகாமல் செய்ய முடியும் என்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தின் முயற்சிகள் இன்று தென் கிழக்கு ஆசியாவில் மட்டும்தான் விரிவுபடுத்தப்படுகின்றன. இந்தோனேஷியா, இந்தோ-சீனு, பர்மா, தாய்லந்து ஆகிய நாடுகளுக்குப் பொருளாதார உதவி அளிக்க வேண்டுமென்று முதன் முதல் திட்டமிட்டபோது, அமெரிக்கா தனித்து நிற்பதே தருமம் என்று கூக்குரலிடும் நமது நண்பர்கள் மீண்டும் ஒரு முறை கண்ணீர் வடித்துத் தீர்த்தனர். இன்னும் பல கோடி கோடி செலவிட வேண்டுமா எனக் குறைகூறினர். ஆனுல் உண்மையில் திட்டப்படி இந்நாடுகளில் முதல் ஆண்டு செலவிட வேண்டிய தொகையெல்லாம் 8,40,00,000 டாலர்தான்; அதிலும் பெரும்பாகம் முன்பு சீனுவுக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட 27,50,00,000 டாலர் நிதியிலிருந்தே வருவதாகும் 8,40,00,000 டாலரோடு பிலிப்பைனுக்காக ஒதுக்கிவைக்கவேண்டிய தொகையையும் சேர்க்க வேண்டும்.

மற்றத் தொகைகளோடு ஒப்பிட்டால் இது ஒரு சிறிய தொகையாகத் தோன்றும். தென் கிழக்கு ஆசியாவுக்கென முதல் ஆண்டில் செலவிட திட்டமிட்டுள்ள இச்சிறு தொகை எப்படிப் போதும் என்பதற்குத் தக்க காரணங்கள் காட்டலாம். ரப்பர், தகரம் இவற்றை விற்று முன்னேயினும் நல்ல ஊதியம் பெறுவதற்குத் தென் கிழக்கு ஆசியாவுக்கு வழி திறக்கிறது என்பது மட்டுமன்று. தென் கிழக்கு ஆசியச் சமுதாயம் பெரும்பாலும் வேளாண்மைச் சமுதாயம்; இன்னும் பல ஆண்டு

களுக்கும் அது அவ்வாறே இருக்கும். எனவே வேளாண்மையை விருத்தி செய்வதுதான் முக்கியப்படுத்தப்படும்; மரத்தால் செய்த கலப்பைகளை விட்டு இரும்பால் செய்த கலப்பைகளையும், முன்னைய ரக விதைகளை விட்டு நல்ல ரக விதைகளையும் பயன்படுத்தவும், நீர்ப்பாசனம், மண்வளம் ஆகியவற்றைக் கண்காணித்துக் காத்து வருவதுமே முக்கியமாகும். சில இடங்களுக்கு நாம் சீனாவில் நாட்டுப்புறச் சீரமைப்புக்காக நடத்திய திட்டங்களில் பெற்ற அனுபவம் பயன்படும்; சீனாவில் தப்பாமல் பலனளித்த முறைகள் நமக்கு உதவும். மற்றும் சில இடங்களில் வேளாண்மையைச் சீர்திருத்துவதற்கு முன்பு அங்குள்ள கொடிய நோய்களைத் தீர்க்க வேண்டும். (இந்தோ-சீனாவில் கூட்டு அமைப்பாக இருக்கும் மூன்று நாடுகளில் ஒன்றான) வியட்நாம் என்ற இடத்தை ஒரு உதாரணமாகக் கொள்ளலாம். அங்கு ஒரு பெரிய தொல்லையாக இருப்பது மலேரியாக் காய்ச்சல், இதை முதலில் வேரறுக்க வேண்டும்; வேளாண்மை உற்பத்தி பெருக வேண்டுமானால், முதலாவதாக, உழைக்கும் மக்களின் உடல் நலம் குன்றாமல் இருக்க வேண்டும் அன்றோ? எனவே அங்கு நமது திட்டத்தின் முதலாவது வேலை உடல் நலம், துப்புரவு இவைபற்றியதாகும். இன்றைய ஆசியாவை மட்டுமன்று, நாளைய ஆசியாவையும் நாம் நோக்க வேண்டும்; அப்படி நோக்கினால் நமது உதவி இந்தியாவுக்கு மட்டுமன்று, நாளை வரப்போகும் கம்யூனிஸ்டு அல்லாத சீனாவுக்கும் செல்ல வேண்டும்.

உதவி செய்ய வேண்டுவதும் பிறநாடுகள் மேன்மையுற நாம் முதல் போட வேண்டுவதும் சமாதான அறம் புரிந்து வெற்றி யெய்துவதற்கே, இது எவ்வளவு சீரிய நோக்கம் என்பதை உணர்கிறேன். அதனால்தான் கீழ் வரும் வாக்கியங்களை எழுதவும் என் கை ஓடவில்லை. சுதந்தர உலகத்தை வலுப்படுத்துவது நமக்கு வியாபாரத் துறையிலும் அரசியல் துறையிலும் நலமாகும் என்று சொல்லக் கூசுகின்றேன். ஊரார் நன்றாக வாழாமல் அவ்வூரில் வியாபாரம் செய்பவன்

மட்டும் ஊதியம் பெறுவது முடியுமோ! முடியாது என்பதை ஒவ்வொரு வியாபாரியும் அறிவான். மென்மேலும் செழிப்பில் வளரும் சுதந்தர உலகம், வியாபாரம் செய்வதற்குச் சிறந்த இடமாகும் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இன்று விற்கும் இடங்கள் மட்டுமல்ல, இன்னும் அதிக இடங்களில் தம் பண்டங்கள் விற்பனையாக வேண்டுமென்பதற்காக அதற்குரிய துறையில் செலவிடுவதற்கென்று ஆண்டுதோறும் கடையின் வருவாயில் ஒரு பகுதியை எடுத்து ஒதுக்கி வைக்க வேண்டுமென்பதும் பலன் பெறும் ஒவ்வொரு வியாபாரிக்கும் தெரிந்ததே. எவ்வளவு எடுத்து ஒதுக்கிவைக்க வேண்டுமென்பது நாளைய வியாபாரத்தை வளர்க்கும் பொருட்டுச் செய்யப்படும் விளம்பரத்தைப் பொறுத்தது; பொதுவாக வருவாயில் நூற்றுக்கு இரண்டு முதல் ஐந்து வீதம் வரை ஒதுக்கிவைக்கப் பெறும். சாமதான அறம் புரிவதற்காகப் பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் செய்தியறிவிப்புத் துறையிலும் செலவிடவேண்டுமென மேலே குறிப்பிட்ட தொகை 2,95,00,00,000 டாலரும் நமது தேசத்து மொத்த வருவாயில் ஏறக்குறைய நூற்றுக்கு ஒன்றுகும். செழிப்புள்ள அமெரிக்க நாடு உலகம் செழிப்பதற்காக இந்தத் தொகையைச் செலவிடுவது வியாபாரக் கண்ணுடனே பார்த்தாலும் கூட, அவ்வளவு ஒன்றும் அதிகமில்லை என்னலாம். கிரெம்லின் பிறநாடுகளில் அவற்றின் உள்ளிருந்தே சதி செய்து அவற்றைத் தனக்கு அடிப்படுத்த முனைகின்றது. இந்தவிதமான ஆக்கிரமிப்பு தலை தூக்க முடியாமல் செய்ய நாம் செலவிடும் இந்தப் பணமெல்லாம் உதவுமானுல் அது பெரும் பயன்பெற்றதாகும்; எந்த நாட்டினரும், எக் காலத்திலும், எந்த இடத்திலும் இவ்வாறு முதலீடு செய்து இத்தகைய பெரும் பயன் அடைந்ததில்லை என்றுதான் நோக்கவேண்டும்.

இராணுவத் துறை நீங்கலாக மற்ற மூன்று துறைகளிலும் செலவிட வேண்டிய தொகை 2,95,00,00,000 டாலர் என்று குறிப்பிட்டேன். இதனேடு ஒப்பிட்டுப்பார்த்தால் இராணுவத்

துறையில் செலவிட வேண்டிய 50,00,00,00,000 டாலர் எவ்வளவோ பெரிதாகத் தோன்றும். இவ்வாறு ஆண்டுதோறும் செலவிட்டால் நமது பொருளாதாரம் தாங்காது; அதாவது, நாம் பல அசௌகரியங்களேயும் கஷ்டங்களேயும் தாங்கிக் கொள்ள வேண்டியதிருக்கும். ஆயினும் கிரெம்லின் படையெடுப்பின் மூலம் ஆக்கிரமிப்பு நடத்தத் துணிவதை இந்த நம் செலவுத் தொகை தடுத்து நிறுத்திவிடுமானுல், நாம் செலவு செய்தது அவ்வளவும் நியாயமேயாகும்; நாம் பட்ட கஷ்டங்களும் அசௌகரியங்களும் வீணுகா. ஏனெனில் மூன்ருவது உலக யுத்தம் வருமானுல், உண்மையாகவே பல அசௌகரியங்களேயும் கஷ்டங்களேயும் அனுபவிக்க வேண்டுவதேயன்றி தனித்தனி மக்கள் வாழ்க்கையிலும் பெரும் துயரங்கள் ஏற்படும்; ஒரு வேளே தேசத்துக்கே பெருங் கேடு நிகழலாம்.

மூன்ருவது உலக யுத்தத்திஞல் எவ்வளவு கேடு வரும் என்பதைச் சென்ற இரு பெரும் உலகப் போர்களே எண்ணிப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். முதலாவது உலக யுத்தத்திஞல் அமெரிக்காவுக்கு மட்டும் விளேந்த சேதம் 19,000 பேர் உயிர் துறந்தும், 1,94,000 பேர் காய மடைந்ததுமாகும். இரண்டாவது உலக யுத்தத்திலோ 3,06,000 பேரை இழந்தோம்; 5,72,000 பேர் காயமுற்று வந்து சேர்ந்தனர். வெறும் எண்ணிக்கையைக் கொண்டு துயரத்தை அளவிட முடியாது; அளவற்ற பெருந்துயரம் எத்தனே எத்தனே பேர்களுக்கு ஏற்பட்டது என்பதை எண்ணியறிந்துகொள்க. யுத்தத்தால் சமூகம் கெடுகிறது; மக்கள் அறநெறிப்பாண்மை சிதைவுறுகிறது; ஆன்ம நெறிக்கும் அழிவு உண்டாகிறது. இவற்றையும் அளவிட்டு உரைக்க இயலாது.

ஆனுல் யுத்தத்திற்கு ஆகும் செலவு இத்தனே டாலர் என்று கணக்கிட்டுச் சொல்லமுடியும். போர் முனேயில் சுட்டுத் தள்ளும் காரியங்களுக்காக மட்டும் முதலாவது உலக யுத்தத்தில் ஆன செலவு 22,00,00,00,000 டாலர்; இரண்டாவது உலக யுத்தத்தில் ஏறக்குறைய 3,50,00,00,00,000 டாலர்.

கடைசியாக முதலாம் உலக யுத்தத்துக்கு மொத்தம் எவ்வளவு செலவாயிற்று என்று சொல்ல என்னிடம் கணக்கில்லை. இரண்டாவது உலக யுத்தத்தினுல் ஏற்பட்ட செலவு, கடைசிப் "பென்ஷன்" வரை கொடுத்து முடிந்ததும், ஆக மொத்தம் 1,30,000 கோடி டாலராகுமென்று முன்னுள் இராணுவக் காரியதரிசி கார்டன் கிரே சொல்லுகிருர். இந்தத் தொகை எவ்வளவு பெரிது! முதலாம் உலக யுத்தத்தில் செலவழிந்ததைவிட இரண்டாம் உலக யுத்தத்தில் செலவு எவ்வளவு மிகுதி! இப்போது அணுக்குண்டுகளும் ஆள் செல்லாமல் எய்யக்கூடிய கணைகளும் நுண்கிருமிகளையும் ஆகாத வாயுக்களையும் அவிழ்த்து விட்டு நடத்தும் போர்த் தந்திரங்களும் உள்ளன. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது மூன்ருவது உலக யுத்தம் நமக்கும் மற்ற எல்லோருக்கும் என்னதான் செய்யாது என்று நினைத்துத் துயர் கூர்கிறேன்; வேறு எந்த எண்ணமும் நம்மைத் தூண்டாவிட்டாலும், இத்தகைய பெருந் தீமை நேர்ந்து விடுமே என்ற எண்ணமர்வது நம்மை சமாதான அறம் புரிந்து அது நமக்கு எய்தும்வரை விடாமல் பாடுபடத் தூண்டவேண்டும்.

கிரெம்லினேடு நேர்ந்த போராட்டம் எளிதில் தீர்ந்துவிடாமல் நீடிக்கலாம். இதுவே எனக்குப் பெருங் கவலை உண்டு பண்ணுவது. நமக்குப் பொதுவாகப் பொறுமை கிடையாது; நீண்ட நேரம் உழைக்க வேண்டிய இடத்திலும், சடுதியில் முடித்துத் தீர்த்துவைக்க உதவும் முறைகளையே நாம் கையாள விரும்புவோம். ஆனல் இது பெருந் தீங்கு விளைக்கும். ஏனெனில், இன்று அதிகம் செலவழிக்க வேண்டுமேயென்று அரைகுறையாக ஏதாவது செய்தால் நாளை வேறு விதமான நஷ்டம் நமக்கு வந்து சேரும்; அந்த நஷ்டத்தை டாலரால் மட்டும் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. தேசத்தவரின் கட்டுத் திட்டமும் உறுதியும் குலையும்; நமக்குள்ள அறநெறி உறுதியும் அழியும்.

நாட்டின் ஆற்றல் எது? நாட்டின் ஒவ்வொருவருடைய ஆற்றலும் சேர்ந்துதான் நாட்டின் ஆற்றல். இது மிகவும்

உண்மை. நம்முடைய அரசியல் நெறிகளும் பொருளாதார முறையும் நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பொருள் வளத்திலும் ஆன்ம நெறியிலும் வளர்ந்து முதிர்வதற்குரிய வாய்ப்பு அளித்தன—எங்கும் பொதுவாகக் கிடைத்தற்கரிய பெருவாய்ப்பு அளித்தன.

அமெரிக்க சுதந்தரத்திற்கு அதன் தனி மதிப்பும் அழகும் வந்ததற்குக் காரணம் தனி மனிதன் வளர்ச்சியடைவதற்கு அளிக்கப்பட்ட இந்த வாய்ப்புத்தான். ஒரு நாட்டு மக்கள் என்ற முறையில், நமக்குப் பேச்சு உரிமையும், வழிபாட்டு உரிமையும், குறைவற்ற வாழ்வும், அச்சம் நீங்கிய நிலைமையும் மிகவும் நிரம்பக் கிடைத்திருக்கின்றன.

இன்னும் ஒரு சுதந்தரம் நமக்கு உண்டு. ஒருவன் இன்னதுதான் செய்யவேண்டுமென்ற கட்டாயம் இல்லாமல் பற்பல வகையான வழிகளில் ஒன்றைத் தெரிந்தெடுத்துக்கொள்ளவும், துணிந்து முற்பட்டுச் செயல் புரியவும், ஆற்றல் கொண்டு உழைக்கவும் இவ்வாறு முயன்று தனது திறமைகளை வளர்த்துக்கொள்ளவும் வாய்ப்பு அமைந்திருக்கிறது. நமது ஆற்றலுக்கு ஊற்றாக உள்ள இடம் இதுவே.

இத்தகைய விரிவான பொருளில் சுதந்தரம் இருக்கப் பெறுவது—அதை எய்துவது—எளிய காரியமன்று. ஏனெனில் மனிதன் தன் சமூகத்தோடும் நாட்டுடனும், உலகத்தோடும் சேர்ந்தே வாழ்கின்றான். இவ்வாறு மற்றவர்களோடு சேர்ந்து உழைத்து வாழ்வதை விட்டுவிட்டு சுதந்தரமென்பதைத் தனித்திருந்து தேட முடியாது. பிறரோடு பழகாமல் அவனவன் தன்னந் தனியாக வாழ்ந்த காலம் மலையேறிவிட்டது. ஒவ்வொருவனும் மற்றவர்களோடு ஒத்துழைக்கும் காலம் இது. அக் காலத்தில் காடுகளை அழித்து கழனிகளாக்கிப் பண்ணையின் நடுவே வீடு கட்டி வாழ்ந்தனர் முன்னோர். அவர்கள் தன்னந் தனியே இருக்க முடிந்தது. ஆனால் அவர்கள் வழிவந்த இக்

காலத்தவர் ஏர்த் தொழிலோ, நெசவுத் தொழிலோ, எழுத்துத் தொழிலோ எத்தொழிலாயினும் சரி, நகரமாயினும் நாட்டுப்புறமாயினும் ஒருவரை ஒருவர் சார்ந்தே வாழ்கின்றனர். காடு அழித்துக் குடியாக்கிய முன்னோர் தம்தம் சொந்த முயற்சியால் ஒரு சுதந்தர உலகினை அமைத்துக் கொண்டனர் ; அவர்கள் வழிவழிவந்த மக்களோ மற்ற எல்லா நாட்டினருடனும் சேர்ந்து ஒரு சுதந்தர உலகினை அடையவேண்டும்.

மக்கள் சாதாரண அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடொருவரும் சமூகத்தோடும் இன்பமாய் ஒத்துப் போவதற்கு வழியிருந்தால்தான் சுதந்தரம் என்பதற்குப் பொருள் இருக்க முடியும். சுதந்தரம் இருப்பதற்கு உரிய சமூக நிலைமைகளையும் பொருளாதார நிலைமைகளையும் ஏற்படுத்தி வைக்க இன்றைய உலகில் சிக்கல் நிறைந்த மாபெரும் ஏற்பாடுகள் நமக்கு அவசியமாகின்றன. தொழிலாளர்கள் கூட்டாகச் சேர்ந்து பேரம் பேசுவதும், லாபத்தில் பங்கு கருதி முதல் போடுவதும், இத்தகைய ஏற்பாடுகளுக்கு உதாரணங்களாகும். அரசாங்கத்தினுடைய வேலையும் விரிவடைந்துவிட்டது. சிக்கல் நிறைந்த பெரிய ஒரு வேலையாகி விட்டது. தேசியத் தொழில் உறவுக் கழகம், ஈடுகள் நாணய மாற்றுக் கமிஷன் எனப் பலவும் இன்று பொருளாதார நிலைப்படுத்தும் கழகம் எனவும் பல ஏற்பாடுகள் அரசாங்கத்தால் அமைந்துள்ளன. சாதாரணமான காலத்திலும் சரி, யுத்தம் வராமல் தடுக்கப் பாதுகாப்பு ஆயுதங்கள் செய்யும் காலத்திலும் சரி, அரசாங்கத்தின் நோக்கமாக இருக்க வேண்டுவது ஒன்றே. சுதந்தரத்துக்கு கேடு இல்லை என்று உறுதிப்படுத்தக்கூடிய சமூக நிலைமைகளையும் பொருளாதார நிலைமைகளையும் வளர்ப்பதே அந் நோக்கமாகும். ஆனால் அந் நிலைமைகளை வளர்க்கும் முறை நாட்டுக் குடிகளின் முயற்சியை ஒடுக்குவதாக இருக்கக் கூடாது ; மக்களின் ஆற்றலையும் ஊக்கத்தையும் கெடுப்பதாக இருத்தல் ஆகாது ; ஒன்றை விட்டு ஒன்றைத் தெரிந்துகொள்ள ஒருவனுக்குள்ள வழியை அடைப்பதாக இருக்கக்கூடாது.

அன்றுமுதல் இன்றுவரை அமெரிக்க வாழ்க்கைக்கு உயிர் போன்ற சக்தியாக இருந்து வருவது தனி ஒருவனுக்கு இங்கு கிடைக்கும் வாய்ப்பேயாகும். இந்த நூற்றாண்டு தொடங்கிய தும் அந்த வாய்ப்பு கிடைப்பது தடைப்பட்டு விட்டதென எண்ணு வாரும் உளர். இது எனக்கு உடன்பாடன்று. சந்தர்ப்பம், வாய்ப்பு என்பதற்கு காலம் மாறமாறப் பொருளும் மாறிவிட்டது. என்றாலும்கூட இருபதாம் நூற்றாண்டின் முதல் ஐம்பது ஆண்டுகளில் நமது குடியரசு மிகவும் ஓங்கிய நிலையில் வாழ் வெய்தியுள்ளது என எடுத்து நிலைநாட்ட முடியும் என்பது திண்ணம்.

**1951**-ம் ஆண்டு அமெரிக்கனுக்கும் அவனது பாட்டனுக்கும் எந்த இடத்தில் வேறுபாடு அதிகம் என்றால் லௌகிகத் துறை யில்தான் என்பது வெளிப்படை. இதை நமது தேசத்தில் மொத்த உற்பத்தி எவ்வளவு விரைவாக மேலோங்கி வளர்ந் துள்ளது என்பதைக் கொண்டு உணரலாம். **1950**-ம் ஆண்டின் டாலர் மதிப்புப்படி நோக்கினால், **1900**-ம் ஆண்டில் கிடைத்த தேசிய உற்பத்தி மொத்தம் **5,000** கோடி டாலர். இன்றைக்கோ இது ஐந்து மடங்குக்கும் பெரிது—குறித்துச் சொன்னால் **27,900** கோடி டாலர். இந்த ஐம்பது ஆண்டுகளில் மக்கள் தொகை யோ இரு மடங்காகத்தான் பெருகியுள்ளது. இனி வியாபாரத் துறையிலும் உத்தியோகத் துறையிலும் அமெரிக்கனுக்குக் கிடைக்கும் வாய்ப்பு முன்பிருந்ததைக் காட்டிலும் எவ்வளவு விரைவில் பெருகியுள்ளது என்பதைக் காண்போம். சொந்தத் தில் தொழில் நடத்தும் ஸ்தாபனங்கள் **1900**-ல் **18,00,000**. இன்று அவை **40,00,000**. இவ்வுண்மையை எப்படித்தான் மதிப்பிட்டாலும் சரி, இத்தகைய நாடு முன்னேற்றமடைகிறது என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்? இந் நாட்டில் **1920**-ம் வருஷத்திலெல்லாம் இயந்திர தொழில் துறைக்கு வேண்டிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுழைத்த ஆராய்ச்சிக் கூடங்கள் முந்நூறே. அவற்றில் **9,000** பேர் வேலை செய்தனர். **1940**-ம் வருஷத்தில் ஆராய்ச்சிக்கூடங்களின் தொகை **2,200**;

அவற்றில் வேலை செய்வோர் எண்ணிக்கை 70,000. தேசத்து மக்களுடைய வருவாயைக் கணக்கெடுத்துப் பார்த்தால் இன்றைய அமெரிக்கர்கள் 13,600 கோடி டாலருக்குமேல் சேமிப்பிலும், பாங்குகளில் 9,710 கோடி டாலரும், உயிர் இன்சூரன்ஸ் பாலிசிகளில் 6,000 கோடி டாலரும் வைத்துள்ளனர். இன்னும் வேறு பல அடுக்குவானேன் ? இன்று அமெரிக்கர்களுக்கு 4 கோடி மோட்டார்க் கார்களும், 8 கோடி ரேடியோ செட்டுகளும் சொந்தமாக உள்ளன என்பதை மட்டும் சொல்லி நிறுத்திக்கொள்ளுகிறேன்.

டாலர்களும், பொருள்களும் தொழில்களும்தான் இவ்விதமாக அதிகம் கிடைக்கின்றன என்று எண்ண வேண்டாம். வேறு பல நன்மைகளும் எய்தியுள்ளோம். பெரும்பான்மையான தொழில்களில் ஒரு வாரத்துக்கு வேலை செய்யவேண்டிய நேரம் 40 மணி நேரமே என்று 1951-ல் ஏற்பட்டுவிட்டது. வேலை செய்யும்போது தொழிலாளிக்கு விபத்து ஏற்பட்டால், அவனுக்கு அதற்கு ஈடு செய்ய வேண்டுமென்ற சட்டம் ஏற்பட்டுள்ளது. வயது முதிர்ந்து வேலையை விட்டுவிலகுவோருக்கும், இறந்த தொழிலாளர்களின் குடும்பத்தாருக்கும் நிதி உதவிச் செய்ய சமூகப் பாதுகாப்புச் சட்டப்படி மத்திய அரசாங்கம் பணம் கொடுத்து ஒரு திட்டம் நடைபெறுகிறது. மேலும் தொழிற்சாலைகளில் வேலை இல்லாமையால் சிலர் ஊதியமின்றிச் சில நாட்களுக்கு வெளியே அனுப்பப்படும் கஷ்டத்தைப் போக்க ராஜ்ய சர்க்கார்களும் மத்திய சர்க்காரும் சேர்ந்து நடத்தும் வேலையின்மை இன்ஷ்யூரன்ஸ் திட்டமும் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின்படி நடை பெறுகிறது. இன்னும், பிறரை நம்பி வாழும் பிள்ளைகளுக்கும், அந்தகருக்கும், வேலை செய்ய முடியாதபடி முற்றும் ஊனமடைந்தவர்க்கும், இன்ஷூரன்ஸ் செய்து கொள்ளாத வயது முதிர்ந்தவருக்கும் அரசாங்க உதவி கிடைக்கிறது. பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தக்கூடாது எனத் தடை செய்யும் சட்டங்கள் இருக்கின்றன. இதற்கும் குறைவாக கூலி கொடுக்கக் கூடாது என வரையறை செய்யும் சட்டங்கள்

உள்ளன. கூட்டுப்•பேரம் பேசுவதென்பதை 1900-ல் கேட்பது அரிது ; இன்று அதனை யார்தான் அறியார் ?

இவ்வாறு லௌகிகத் துறையில் நம் நாட்டவருக்கு வாய்ப்பு எவ்வளவு விரைவில் பெருகியதோ அநேகமாக அவ்வளவு விரைவிலேயே அவர்கள் அறிவிலும் பண்பாட்டிலும் வளர்ச்சியடையவும் வாய்ப்புப் பெருகியது. கல்வி கற்பதற்குப் பொருளாதார நிலைமை ஒரு இடையூராக இருப்பதை உலக வரலாற்றில் பரக்கக் காணலாம். அவ்வாறு பொருளாதார நிலைமை ஒரு தடையாக இல்லாமல் போகும்படி உலக வரலாற்றிலேயே எந்தக் காலத்திலும் இவ்வளவு விரைவினில் முன்னேற்றம் ஏற்பட்டதில்லையென ஹார்வர்ட் பல்கலைக் கழகத்து டாக்டர் சம்னர் ஸ்லிக்டெர் (Dr. Sumner Slichter) கூறியுள்ளார். 1890-ம் வருஷத்தில் எல்லாம், உயர்நிலைப் பள்ளியில் படிக்கத்தக்க வயது வந்த பதினைங்கு பிள்ளைகளில் ஒருவனே பள்ளிக்கூடத்தில் படித்துவந்தான். 1945-ம் ஆண்டில் அவ்வாறு பள்ளி செல்பவர்கள் ஐந்தில் நால்வராக எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. இச்செய்தியை டாக்டர் ஸ்லிக்டெர் சுட்டிக் காட்டுகிறார். 1890-ம் ஆண்டிலிருந்ததைவிட ஜனத்தொகை எவ்வளவு விரைவில் அதிகமாகியுள்ளதோ அதைக் காட்டிலும் பதின்மூன்று மடங்கு அதிக விரைவாக உயர்நிலைப் பள்ளியில் படித்துப் பட்டம் பெற்றோர் தொகை அதிகமாகியுள்ளது ; அதே காலத்தில் ஜனத்தொகைப் பெருக்கத்தின் விரைவைக் காட்டிலும் 6 மடங்கு விரைவாகப் பெருகியுள்ளது கல்லூரிப் பட்டதாரிகளுடைய எண்ணிக்கை. 1900-ம் வருஷத்தில் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் 7,272 பேராசிரியர்கள் இருந்தார்கள் ; இன்று 75,007 பேராசிரியர்கள் உளர்.

சிந்தனை யுலகிலே புதியன புனைந்துள்ளோம் ; அரசியல் பொருளில் ஒரு ஜேம்ஸ் மாடிசன் ; மன நூல் என்பதில் ஒரு வில்லியம் ஜேம்ஸ். சித்தாந்தத்தில் ஒரு ஜான் டூயி. வெறும் கலாச்சாரத் துறையை மட்டும் கவனித்தால் ஐரோப்பாவில் தலைமுறை தலைமுறையாக வந்த பழக்க வழக்கங்களை அப்

படியே தழுவிக் கொண்டதோடு நாம் அமையவில்லை. லூயி கலாந்தியர் (Lewis Galantiere) சுட்டிக் காட்டும் உண்மையைக் கவனியுங்கள் ; "இங்கிலாந்தில் நிலவும் பண்பாட்டில் ஒரு புறம் அமெரிக்கப் படிப்பாளிகளின் நூல்கள் மீண்டும் மீண்டும் கற்றோரால் புகழப்படுவதையும் மற்றொரு புறம் ஆங்கிலப் பேச்சு வழக்கில் அமெரிக்க மரபுகள் அதிகமதிகமாகவும் வன்மையாகவும் எடுத்தாளப்படுவதையும் காண்கிறோம். . இங்கிலாந்திலுள்ள மாகாணப் பத்திரிகைகளும் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை (Profiles) என்று வழங்குகின்றன ; தொழிற்கட்சிப் பொதுக் கூட்டத்தில் (The Sidewalks of New York) என்பது போன்ற அமெரிக்கப் பாட்டுக்களைப் பாடக் கேட்கின்றோம். (The New Yorker) "தி நியூ யார்க்கர்" என்ற அமெரிக்கப் பத்திரிகையைப் பின்பற்றி பஞ்ச் (Punch) ஒரு வரித் தலைப்புக்களை எழுதுகின்றது ; அதன் நையாண்டிப் பொருள்களும் சில "தி நியூ யார்க்கர்" என்பதிலிருந்து எடுத்தாளப் படுகின்றன....... அழகு பற்றி ரசித்து மதிப்புரை வெளியிடுவதில் முதன்மை வாய்ந்தது எது என்றால் கிளிவ்லண்டு கலைப் பொருட் காட்சிச் சாலை (Cleveland Museum of Art) வெளியிட்ட மதிப்புரையே என ஐரோப்பியப் பேராசிரியர் வல்லுநர் ஒருவர் கூறுகிறார். இவற்றையெல்லாம் நோக்கும்போது சுவைக்கும் மிட்டாய் (Chewing gum) வேடிக்கைகள், கொக்க-கோலா (Coca-Cola) உன்னதம்போலப் பகட்டாக வெளிவரும் ஹாலிவுட் உற்பத்தி இவையே அமெரிக்க வாழ்க்கை முறையால் உலகத்துக்குக் கிடைத்த பொருள்கள் என ஒருநாளும் நினைக்க மாட்டோம்." என்று எழுதுகிறார் லூயி கலாந்தியர் (Lewis Galantiere); அண்மையில் வில்லியம் பாக்னருக்கு (William Faulkner) இலக்கிய நோபல் பரிசு கிடைத்ததென்று அமெரிக்கன் என்ற முறையில் நானும் சற்றுப் பெருமை பேசிக் கொள்வேனாக.

ஆன்ம நெறியில் வளர்ச்சி அடைந்து நாம் எல்லாவற்றையும்விட அதிக நன்மையடைந்திருக்கலாம் ; அல்லது மிகத்

தாழ்ந்த முன்னேற்றமே அடைந்திருக்கலாம். உண்மை எது என்று கண்டறிவது கடினம். ஆன்ம நெறியில் முன்னேற்றத்தை அளந்தறிவதைப் போல வேறு எத்துறையிலும் அது அவ்வளவு கடினமன்று. எனினும் பிறர் எப்படிப் போனால் என்ன என்று கவனியாமல் வாழ்ந்த நிலைமையை விடுத்து, மற்றவர்களுக்கும் பொதுநல உரிமைகள் உண்டு என்ற ஆழ்ந்த உணர்வுடன் நடக்கக் கற்றுக் கொண்டோம். இது ஒரு முன்னேற்றமே. எல்லோருக்கும் வாழ்க்கையில் முன்னிலையடைய வாய்ப்பு சமமாக இருக்க வேண்டும் என்ற கொள்கையைப் பல காலமாக மறந்து வாழ்ந்த நிலைமை மாறி, அன்று நம் குடியரசை நிறுவிய மூதாதையர் கொண்ட அவா நிறைவேறும் வண்ணம் அக்கொள்கைக்கு இன்று மதிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. நான் இளைஞனாய் இருந்த காலத்தில் அக்கொள்கையை வாய்ச் சொல்லால் போற்றுபவர்கள்தான் இருந்தனர்; அதை மதித்து நடப்பவர்கள் இல்லை. ஆனால் இன்று என்னுடைய பிள்ளைகளைக் கேட்டுப் பாருங்கள்; ஏன், பொதுநல உரிமைகள் எல்லோருக்குமே பிறப்புரிமை அல்லவோ என்றுதான் அவர்கள் உரைப்பார்கள். மற்றும் இன்றைய இளைஞர்களுள் பெரும்பாலோரும் அவ்வாறே உணர்கின்றனர். மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற நம்பிக்கை வாழ்க்கையில் வடிவெடுத்து உலவுகிறது எனச் சொல்லத்தக்க காலத்தை நோக்கி நாம் ஒரு தலைமுறையிலேயே இவ்வளவு முன்னேற்றம் எய்தி உள்ளோம். பேசுவதை இன்று நாம் மென்மேலும் அதிகமாகச் செய்கையிலும் காட்டுகின்றோம்.

சுருங்கச் சொன்ன இதுதான், நாம் லௌகீகத் துறையிலும், பண்பாட்டிலும், ஆன்ம நெறியிலும் வளர்வதற்குரிய வாய்ப்பு கடந்த ஐம்பது ஆண்டுகளில் எவ்வாறு பெருகியுள்ளது என்பதை எடுத்துக் கூறும் கதையாகும். முயன்று அடைந்தவற்றை எண்ணிப் பெருமிதம் கொள்ள நமக்கு உரிமை உண்டு; ஆனால் இன்னும் வளர்ச்சியடையாமல் தடைப்பட்டு நிற்பதற்கு நமக்கு உரிமை கிடையாது. அமெரிக்காவைப்பற்றி

எண்ணும்போது மிகவும் உணர்வூட்டும் உண்மை என்னவென்ருல் அது எப்போதும் முற்றுப் பெருத ஒரு பொருளாக இருப்பதுதான்.

அதை நாமும் ஒரு முற்றுப் பெருத பொருளாகவே வைத்திருக்க வேண்டும். முடிந்துவிட்டது என்று நினைப்பது கூடாது.

மிக முக்கியமாக கவனிக்கவேண்டியது யாதெனில் இனி வரப்போகும் பத்து ஆண்டுகளுக்கு உலகில் நாடுகளிடையே புகைதல் இருந்து கொண்டேயிருக்கும் என்பதே; அக்காலத்தில் நமக்குள்ள வாய்ப்பு குறுகாமல் முடங்காமல் விரிவடைந்து கொண்டேயிருக்க வேண்டும். இது நம் கடமை. ஆனல் எளிது அன்று. கிரெம்லின் புகைதலேயும் அச்சத்தையும் உண்டு பண்ணி வருகிறது; நாம் அயர்ந்தாற்போல் ஏதாவது செய்தோமாளுல் தீமை விளையும்; வேண்டாத உணர்ச்சி வந்து மனதைக் குழப்பும் செயல்களும் புரிய நேரிடும்—யோசனையற்ற இத்தகைய செயல்கள் நாம் மேலும் வளர்ச்சியடைவதற்கு இன்றியமையாத சுதந்தரத்தை சுருக்கிவிடும். பொது நல உரிமைகளையோ, வியாபார முயற்சி செய்வதற்குள்ள சுதந்தரத்தையோ குறைப்பதற்கு யாராவது யோசனை சொல்வார்களாஞல் அந்த யோசனையை உடனே ஏற்றுக்கொள்ளுதல் கூடாது; அந்த யோசனையைக் கடைப் பிடித்தால் இன்று மட்டுமன்று நாளை என்ன விளையும் என்ற எட்டிய நோக்குடன் அவ்வித யோசனை ஒவ்வொன்றினுடைய குணங்குற்றங்களை ஆராய்ந்து காணவேண்டும்.

நம் பொருளாதாரத் துறையில் தற்காப்பு முயற்சிகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமாஞல் சில பொருளாதாரக் கட்டுப்பாடுகள் அவசியந்தான். இதை மறுப்பவர் ஒருவரும் இல்லை. ஆனல், தொழில் நிர்வாகிகள் தாமே முடிவு செய்து தொழில் திட்டங்களை வகுத்து நடத்த வழியிருக்கும் சமயத்தில் மிக அதிகமாக உற்பத்தி செய்கிருர்கள் என்பதையும், தொழி

லாளர்கள் தாமே தெரிந்தெடுத்துக்கொண்ட வேலையில் மிகச் சிறப்பாக உழைத்து உற்பத்தி செய்கிறார்கள் என்பதையும் நாம் ஒருநாளும் மறத்தல் கூடாது. கட்டுப்பாடு விதிப்பதற்கு முன் அது கட்டாயம் அவசியமா என்று தெளிந்து அறிதல் வேண்டும். அவசர அடியில் அவ்விதக் கட்டுப்பாடு அவசியமாயிற்று ; ஆதலால் அத்தகைய நெருக்கடிக் காலம் நீங்கியதும், கட்டுப்பாட்டையும் தீர்த்துவிட வேண்டும் என்ற கருத்துத் தெளிவு வேண்டும். கட்டுப்பாடு ஒன்றை விதிக்குமுன் நாம் இவ்வாறு தெளிந்த நோக்குடன் அதை ஆராய்தல் இன்றியமையாதது.

பொருளாதாரத் துறையில் கூடியவரை சுதந்தரத்தை கட்டுப்படுத்தாமல் விட்டுவைப்பதைவிட அதிக முக்கியமானது நம் பொதுநல உரிமைகளைக் காப்பதாகும். உரிமையை இழப்பது கொடிது. கிழக்கு பெர்லின் மக்களுக்கும், மேற்கு பெர்லின் மக்களுக்கும் உள்ள வேறுபாடு இன்னும் என் மனக்கண்ணில் தெற்றெனத் தோன்றுகிறது. மேற்கு பெர்லினில் கஷ்டங்கள் இருந்தாலும் அங்கு ஆடவரும் பெண்டிரும் பிள்ளைகளும் தலை நிமிர்ந்து நடக்கிறார்கள். அவர்கள் முகத்தில் நம்பிக்கைக் களை விளங்குகிறது. கிழக்கு பெர்லினில் மக்கள் யார் முகத்தையும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை ; மற்றவர்களை அவர்கள் நோக்கினால் அது அவர்களிடம் ஏதாவது இரந்து கேட்பதற்காகவே இருக்கும் ; அவர்கள் பார்வை கவிந்த பார்வை. புகைதல் உள்ள இந்தப் பத்து ஆண்டுகளை அமெரிக்காவில் நாம் கடந்து வாழ முடியும். விரும்பத்தகாதவர்கள் எவர் எவர் என்று வேட்டையாடும் இழிதொழில் புரியாமல், நிலை நிற்போமானால், நமது உரிமைச் சட்டத்தை இன்று இருப்பது போல நடைமுறையிலுள்ள ஒரு மெய்மையாகவும் என்றும் புதிதாகவும் வைத்திருப்போமானால், நமக்கு மட்டுமன்று உலகத்துக்கே வளர்ச்சியடைவதற்குரிய வாய்ப்புகளை இன்னும் பெருக்கலாம்.

சுதந்தரம் நம் சொந்த நாட்டில் மங்காமல் நிலைநிற்கச் செய்வதும், நமக்குள் ஒழுங்கு நிலை பிறழாதிருக்கச் செய்வதும்

சுதந்தர உலகினுக்குத் தலைமை தாங்கி நடத்துவதற்குரிய அடிப்படையை ஆழமாகவும், உறுதியாகவும் அமைப்பதாகும். அன்று அமெரிக்கா வளர்ச்சியடைவதற்கு எவ்வளவு ஆவலாக இருந்ததோ, இன்று அது ஓங்கி வளர்வதற்கு அவ்வளவு ஆவலாக இருக்கவேண்டும்.

வரும் பத்து ஆண்டுகளில் செய்யப்போகும் தீர்மானங்கள் நமக்கும் மாந்தர் அனைவருக்கும் மாபெரும் மாறுதல்கள் ஏற்படுத்தும் தீர்மானங்களாக இருக்கும். எது ஒன்றை நீக்கி எது ஒன்றை நாம் தெரிந்துகொள்கிறோம், என்னென்னவற்றைப் பொருட்படுத்தாமல் துணிந்து செயலாற்றுகிறோம் என்பதைப் பொறுத்தே நமது உலகத்தின் வருங்காலம் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு அமையும். எவ்வளவோ சிக்கல்களைக் கடக்கவேண்டியதிருக்குமே, பெரிய பாரமான வேலையாயிற்றே என்று எண்ணி மலைப்பதும் தவறு. முன்பும் நமது நாட்டுக்கு கஷ்டங்கள் வந்துள்ளன. அவற்றால் நாம் பண்பட்டிருக்கிறோம். இன்று நம்மீது சுமந்துள்ள கடமைகளை நிறைவேற்றுவதால் ஆற்றல் வற்றிப்போகாது ; அவற்றை நிறைவேற்ற ஆற்றல் கொண்டு வேலை செய்யவேண்டும் ; அதனால் ஆற்றல் வளருமே அல்லாமல் வற்றாது என்பது திண்ணம்.

# சமாதானம் நமக்குக் கைகூடுமா?

## அத்தியாயம் 10

**ஊ**க்கம் குன்றுமனும், எட்டிய யோசனையோடும், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற ஈடுபாட்டுடனும் எல்லாத் துறையிலும் நாம் சமாதான அறப்போர் புரிகின்றேம் என வைத்துக்கொள்வோம்; நமது பொருளாதாரம் ஆற்றல் குறையாமல் நிலைத்திருக்கச் செய்கின்றேம் என்று வைத்துக் கொள்வோம், சுதந்தர உலகுக்குத் தலைமை தாங்கும் நமது பொறுப்பினை ஏற்று அதன்படி நடக்க உறுதிகொள்கிறேம் என வைத்துக்கொள்வோம். அதனுல் நமக்கு என்ன பலன் கிட்டும் எனக் கேட்கலாம். இப்பொழுது இருக்கும் நிலைமை முற்றி யுத்தத்தில் போய் முடியாது என்றுதான் சொல்ல முடியுமா? சோவியத் யூனியன் உலகம் முழுவதிலும் மயக்கமும், குழப்பமும் பரவுவதற்கான தனது முயற்சிகளை இன்னும் பெருக்கி, தனது அடிமை நாடுகளையும் பொம்மை சர்க்கார்களையும் மற்ற நாடுகளின்மீது ஏவிவிட்டு, தான் மட்டும் படையெடுப்பதற்கு எப்போதும் ஆயத்தமாக இருக்கும் செஞ் சேனையுடன் இனிது இருக்கும் என எண்ணுவதுதான் நாம் கொள்ளக்கூடிய இணையற்ற நம்பிக்கையா? அல்லது நமக்கு ஆற்றல் வளர்ந்ததும் உலகில் ஒரு சமநிலை உண்டாகும். அதனுல் மற்ற நாடுகளோடு சமாதானமாக வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை என்று கிரெம்லின் அடங்கும் என இவ்வாறு நாம் எண்ணுவதற்கு இடமுண்டோ? அல்லது கிரெம்லின் மன்றத்து சர்வாதிகார ஆற்றலெல்லாம் ஒரு நாள் நொறுங்கிவீழும் என்று எண்ணுவதற்கு இடமுண்டோ?

இவ்வாறு மீண்டும் மீண்டும் ஆழ்ந்து எண்ணமிட்டேன். இவற்றிற்கு விடை என்ன என்று அமெரிக்காவிலும் உலகில் மற்ற இடங்கள் பலவற்றிலும் உள்ள அரசியல் பெரியார்களையும், தலைவர்களையும் கேட்டறிய முயன்றேன். நாம் என்னதான் எதிர்பார்க்கலாம் என்பதுபற்றி எல்லோரும் ஒருமனப்பட்டு ஒரு விடை சொல்லமாட்டார்களா என்பது என் அவா; ஆனால் அது வீண்; ஏனெனில் அவர்களுடைய கருத்துக்கள் மிகவும் வேறுபட்டுள்ளன. ஆயினும் ஒன்று மட்டும் எல்லோருக்கும் உடன்பாடு: அதாவது நாம் "தற்காப்பு நிலை" எய்தியதும் நமது நிலைமை எவ்வளவோ திருந்திவிடும் என்ற கருத்தாகும். உதாரணமாக, நாம் சொல்லும் வார்த்தைகளைக் கிரெம்லின் மதித்து நடக்கும்படி செய்யலாம் என்று வின்ஸ்ட்டன் சர்ச்சில் கூறுகிறார்; மேலும் "நமது பலம் குன்றாமலும் பார்த்துக் கொள்வோமானால்" கிரெம்லின் நம்முடன் பேசிய பேச்சுக்களை தட்டாமலும் நடக்கும் என்று முகத்தைக் சுழித்துக் கொண்டு சொன்னார் சர்ச்சில்; அவர் சொன்னதிலிருந்து நான் ஒரு விஷயத்தைக் கிரகித்துக் கொண்டேன்: அதாவது, மற்ற நாடுகளுடன் நடந்துகொள்ளும் நடத்தையில் கிரெம்லினுக்கு ஈரடியான கொள்கை ஒன்று உண்டு என உணர்ந்தேன்: கிரெம்லின் தான் மதிக்கும் படை வலிமை உடைய நாடுகளோடு செய்து கொள்ளும் உடன்படிக்கைகளை வேண்டா வெறுப்பாக இருந்தாலும் மதித்து நடக்கிறது; அவ்வாறு ஆற்றலில்லாத நாடுகளுடன் செய்யும் உடன்படிக்கைகளையும் தன் அடிமை நாடுகளுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களையும் அது குப்பைக் காகிதம் போலவே மதிக்கிறது.

நாம் கிரெம்லினோடு என்னென்ன பேசி உடன்பாடு செய்து கொள்ள முடியும் என்று சர்ச்சில் குறிப்பிட்டுக் கூற வில்லை. கிரெம்லின் இன்று உலகம் முழுவதிலும் அங்கங்கே சிறு சிறு போர்களை மூட்டிவிட்டுக் கொண்டிருக்கிறது அன்றோ? அவ்வித நடத்தையை இனி அது கைவிட்டு விடும் என்பதுதான் அவருடைய நினைவாக இருக்கும் போலும்.

இன்றைக்கு சோவியத் யூனியனில் ஆட்சி செலுத்துவோர் உண்மையாகவே மனம் மாறுவர் என்று நான் கண்டு கேட்ட ஒருவரும் நம்பவில்லை. உலகம் அனைத்தையும் அடிமைப்படுத்த வேண்டும் என்பதே கிரெம்லின் ஆட்சியாளரின் நோக்கமெல்லாம்; அவர்கள் "நாமும் வாழ்வோம், பிறரையும் வாழ விடுவோம்" என்று எண்ணத் தலைப்படுவார்கள் என நம்ப முடியாது என்றே எல்லோரும் சொல்லுகிறார்கள். எனவே ஆட்சி மாறும் என எண்ணுவதற்கு இடமில்லை என்றாகிறது.

மாபெரும் புரட்சியின்றி வேறொரு கட்சி பதவிக்கு வர இன்றைய ஆட்சி இடங்கொடுக்கும் என நம்பியிருப்பார் ஒருவரும் இல்லை. ஆகவே அவ்வாட்சி தொலையும் வழி ஏதாவது உண்டா என்ற கேள்வி எழுகிறது. இது மிகவும் முக்கியமான கேள்வி; ஒட்டியும், வெட்டியும் மிகக் கடுமையாக விவாதிக்கப்படத் தக்கது. தலைமையில் உள்ள ஆட்சிக் குழுவின் பிடி தளர்வதே இல்லை; நவீன காலத்து சர்வாதிகார முறையை உள்ளிருந்து கொல்வது இயலாது; ஆகவே வெளியார் தாக்குதல் இல்லாமல் அது ஒரு நாளும் மடியாது என்று உறுதியாக நம்பும் நண்பர்கள் எனக்கு உண்டு; என்னுடன் நெருங்கிப் பழகியவர்கள் பலர் அவ்வாறே நம்புகின்றனர். ஹிட்லரும், முஸோலினியும் கோடிக் கணக்கான மக்களையும் பல வளங்களையும் ஆட்டிவைத்து நடத்தவில்லையோ? அவர்கள் தம் படைகள் தோல்வியுற்று நாடு பிறர் படை கண்டபோதன்றோ அவர்கள் பிடியும் தளர்ந்தது என்று என்னுடைய இந் நண்பர்கள் எடுத்துரைக்கின்றனர். ஹிட்லரும், முஸோலினியும் கட்டிய சாம்ராஜ்யங்களைக் காட்டிலும் சோவியத் ஏகாதிபத்தியம் எவ்வளவோ பெரியதும் ஆற்றல் பெற்றதும் ஆயிற்றே; அதன் வளமான பறந்த பூமியில் அதற்கு வேண்டிய உணவும், போருக்கு இன்றியமையாத பொருட்களும் இருப்பதனால் அது வேறு நாடுகளை நம்பியிருக்க வேண்டுவதும் இல்லையே என அந் நண்பர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். பல நாட்டு மக்க

யேயும் அடிப்படுத்துவதற்காக அவர்களை நடுக்குறச் செய்யும் ஆட்சி நடத்துகின்றனர் கிரெம்லின் கூட்டத்தார்; இதில் பழக்கப்பட்டுப்போனவர்கள் அவர்கள்; இத்துறையில் இவர்களை வென்றவர் ஒருவரும் இல்லை; நவீன சர்வாதிகாரி ஒருவனும் இவர்களைப் போல இத்தனை நாட்கள் நிலைக்கவுமில்லை; இதில் இவர்கள் ஹிட்லரையும், முஸோலினியையும் மிஞ்சிவிட்டார்கள் என்றும் என் நண்பர்கள் சொல்லுகிறார்கள்.

ஆயினும் இன்றைய ஆட்சிமுறை நிச்சயம் சாயும்; அதன் அமைப்பே அதன் வீழ்ச்சிக்கு வித்து என்பது என் கருத்து. இதில் எனக்கு ஐயம் இல்லை. உலக நிலைமையை மிகவும் கூர்ந்து ஆராய்வோர் பலரும் எனது நம்பிக்கைக்கு ஊக்கமூட்டுகின்றனர்.

இவர்களில் ஜான் பாஸ்ற்றர் டல்லெஸ் **(John Foster Dulles)**, தளபதி டக்ளஸ் மெக்ஆர்தர், ஜார்ஜ் கென்னன் என்பவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடல் வேண்டும்; இன்னும் பல அயல் நாடுகளின் மந்திரிகளும் உளர். அவர்கள் பெயரை நான் வெளியிடக்கூடாது.

ஆனால் சோவியத் கொடுங்கோன்மை எப்படித் தொலையும் என்பது மட்டும் யாரும் சொல்வதற்கில்லை. யூகமாகப் பல உரைக்கலாம்; அதற்கு மேல் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. எப்படியென்பது மட்டுமன்று எந்நேரம் என்பதும் அப்படியே. ஆனால் கொடுங்கோன்மை தொலைவதற்குரிய அறிகுறிகளை எளிதில் இன்றே காணலாம்; இது வெறும் பேச்சன்று. உண்மை; கொடுங்கோன்மையை அழித்தொழிக்கும் உட்பகை உணர்ச்சிகள் தோன்றிவிட்டன.

சோவியத் யூனியனிலுள்ள தொழிலாளர்கள் பலர் நிலை கொள்ளாது குமுறிக் கொண்டிருக்கின்றனர்; அங்குள்ள நிலைமை அவர்களுக்குப் பிடிக்கவில்லை; திருப்தி சற்றும் இல்லை. இரண்டாவது உலக யுத்தத்திற்குப்பின், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாக வாக்குறுதி கொடுத்திருந்த சோவியத் அரசாங்கம், தன் வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியது.

நாட்டு வாழ்க்கையின் நிலைமையை மேம்படுத்தக்கூடிய பொரு ளாதார ஆற்றலெல்லாம் மாபெரும் படை வலிமைத் திட் டத்தை நிறைவேற்றுவதற்கே போயிற்று. கொடுத்த வாக் குறுதியை மறப்பது தவறு. ஒருவருக்கு மிகவும் அடிப்படை யான தேவையாக உள்ளவற்றைத் தருவதாக உறுதி கூறி விட்டுப் பொய்ப்பதோ என்றென்றைக்கும் பெருந் தீங்காகும். அன்று இரண்டாவது உலகப் போரில் இரும்புத் திரைக்கு வெளியேயுள்ள அயல் இடங்களில் போரிட்ட செஞ்சேனை வீரர்கள் தாங்கள் கண்ட உண்மையை மறக்கவும் இயலார்; இரும்புத் திறைக்கு மேற்கேயுள்ள ஐரோப்பியர்கள் தங்களைக் காட்டிலும் எவ்வளவோ நன்றாக வாழ்கிறார்கள் என்பதை அந்தச் செஞ் சேனை வீரர்கள் அன்று கண்டனர் அல்லரோ?

சோவியத் யூனியனில் நூற்றுக்கு ஏறக்குறைய எண்பது பேர் விவசாயிகளே. கூட்டுப் பண்ணை முறையின்கீழ் இப்பெருந் தொகையினர் இன்னும் மனம் புழுங்கியே பாடுபடுகின்றனர். "சோழ மண்டலம் சோறுடைத்து" என்பது போல, ஐரோப் பாவின் "ரொட்டிக் கூடை" எனப்படுவது சோவியத் யூனியனி லுள்ள யுக்ரேன் என்னும் மண்டலம். அன்று நாஜி வீரர்கள் படையெடுத்து வந்தபோது யுக்ரேன் மக்கள் அவர்களை மன முவந்து வரவேற்றனர். இவ்வுண்மை இன்னும் பலருக்குத் தெரிந்ததில்லை (நாஜிகளிடம் அகப்பட்ட திரைப் படங்களால் இப்பொழுது அவ்வுண்மைச் செய்தி திரையிடப்படுகிறது.) உண் மையாகவே, யுக்ரேனில்மட்டுமன்று நாஜிகள் கைப்பற்றிய மற்ற இடங்கள் அனைத்திலுமே மக்கள் அவர்களை மகிழ்வோடு வர வேற்றனர். இவ்வாறு கிடைத்த அரிய ஒரு வரவேற்பை நாஜி கள் மதித்து நடந்திருப்பார்களானால், என்ன நிகழ்ந்திருக்கும் என்பது யாராலும் சொல்ல முடியாது. ஆனால், அவர்கள் செய் ததோ வேறு; மனமுவந்தளித்த வரவேற்பைத் தக்க விதத் தில் பயன்படுத்திக் கொள்ளாமல் நாஜிகள் கிரெம்லினைப் போன்றே தாங்களும் கொடுமைகள் செய்யத் துணிந்தனர்; அதனால் நண்பர்களாக இருக்க விரும்பியவர்கள், மனங் கசிந்து அவர்களுக்குப் பகைவர்களாக மாறினர்.

ரஷ்யர்கள் பலர் தங்கள் மனக் கொதிப்பால் கிரெம்லின் ஆட்சியைப் பகைக்கின்றனர். இவர்கள் எண்ணிக்கை அநந்தம். ரஷ்யர்களில் ஒரு கோடி முதல் ஒன்றரைக் கோடிவரை ஆண்களும் பெண்களும் அடிமைத் தொழில் கோட்டங்களில் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றனர்.

சர்வாதிகார ஆட்சிதான் ஆனாலும், நாட்டில் உள்ளவர்களில் குறைந்தது நூற்றுக்கு ஐந்துபேர் இவ்வாறு அடிமைத் தொழில் செய்யச் சிறைப்பட்டுக் கிடப்பார்களேயானால், அந்த நாட்டு ஆட்சி எத்துணையும் நல்ல நிலையில் இல்லையென்பது தெளிவு. உங்கள் வீட்டில் உள்ளவர் ஒருவரை அல்லது உங்களுக்கு மிக நெருங்கிய ஒருவரை இரகசியப் போலீஸார் வந்து இழுத்துச் சென்று, என்றென்றும் யாருக்கும் தெரியாத ஓரிடத்துக்குக் கொண்டுபோய்த் தள்ளிவிடுகிறார்கள் என்றால், அந்த ஆட்சியைப் பற்றி உங்கள் மனம் எவ்வாறு கொதிக்கும் ; எண்ணிப் பாருங்கள்.

சோவியத் மக்கள் அனைவருமே அடிமைகளாக வாழ்கின்றனர் என்று சொன்னால் தவறாகாது. சோவியத் யூனியனில் சாதாரணமான மக்கள் தங்கள் வேலையை விட்டு வேறு நினைப்பது இயலாது ; தளையிடப்பட்டவர்போலத் தம் தொழிலோடு அடங்கியிருக்க வேண்டும் ; இடம்விட்டு இடம் பெயர்ந்து செல்வது ஆகாது ; என்றைக்கொருநாள் தம்மேல் இரகசியப் போலீஸின் சந்தேகக் கண்பட்டுவிடுமோ என்று நடுங்கிய வண்ணமாக அக்கம்பக்கம் நாடாமல் நடக்கின்றனர் அவர்கள். இவ்வித அச்சம் அறிவாளிகளையும் விஞ்ஞானிகளையும் பற்றுகிறது ; அதனால் புதியது புனையும் அவர்களுடைய ஆற்றல் மழுங்குகிறது ; முனைந்து செல்லும் ஊக்கம் ஒடுங்குகிறது. தொழிற்சாலைகளை நிர்வாகிகளாக இருந்து நடத்துவோர் புதிய வழிமுறை எதனையும் கடைப்பிடித்துப் பார்க்க அஞ்சுகின்றனர் ; ஏனெனில் புதிய முறை வெற்றி தராது தவறுமானால், தொலைந்தது அவர்கள் வாழ்வு ; சைபீரியா செல்ல வேண்டியதுதான் ; திரும்பி வரும் நினைப்பு வேண்டாம். இந்த

அச்சம் சோவியத் ஆட்சி முறையில் மேலாக இருப்பவர்களையும் விட்டுவைப்பதில்லை ; 1936-38-ல் நாற்பதினாயிரம் பேர்கள் ஒழித்துக் கட்டப்பட்டதை இன்னும் அவர்கள் மறக்கவில்லை ; அப்போது செஞ்சேனையில் உயர் பதவியில் இருந்தவர்களிலும் பலர் இவ்வாறு அழித்து ஒழிக்கப்பட்டனர் ; அவர்கள் எண்ணிக்கையும் அற்ப சொற்பமன்று ; ஏன், ஸ்டாலினோடுகூட வீற்றிருந்தவர் பலருமே மறைந்தனரே.

சர்வாதிகாரி ஒருவனுக்குப் பின் இன்னொருவன் பதவியேற்க வேண்டியது எவ்வாறு என்பதற்கு ஒரு முறையில்லாத போது, சர்வாதிகாரி தன் அதிகாரத்தைத் தனக்குப் பின்வரும் இன்னொருவனுக்கு வழங்குவது மிகக் கடினம். பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவனைக் கூடவிருந்த மற்றவர்களுக்குப் பிடிக்காது என்பது உறுதி. இது ரஷ்யா விஷயத்தில் மிகவும் பொருத்தமாகும். அங்கு ஸ்டாலின் முதலில் பதவியைக் கைப்பற்றினார். பின்னர் அதிகாரத்தையெல்லாம் தாமே மேற்கொண்டார் ; கடைசியில் ஸ்டாலின் வைத்ததே சட்டம் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. ஸ்டாலின் இவ்வளவு தூரம் அதிகாரம் கொள்வதற்கு சோவியத் யூனியன் அரசியல் திட்டத்திலோ கம்யூனிஸ்டுக் கட்சியின் சட்டத்திலோ, மார்க்ஸின் கோட்பாட்டிலோ இடங்கிடையாது. கூட்டாகச் சேர்ந்து ஆட்சி புரிவது என்பது கம்யூனிஸத்தின் முக்கிய கொள்கைகளில் ஒன்று ; அதனை மீறிவிட்டார் ஸ்டாலின் ; மீறித்தான், இந்த அதிகாரக் கொடுமுடியில் வீற்றிருக்கிறார். கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய கமிட்டியை வெறும் பதராக ஒதுக்கித் தள்ளி வைத்திருக்கிறார் ஸ்டாலின். தம்மை மிகவும் புகழ்படுத்தித் தம்மைத் தெய்வமாக மதித்துக்கொண்டார் ; ஸ்டாலினுக்குப்பின் ஒருவரா ? அவ்வாறு நினைப்பதும் பாவமாயிற்றே என்று மக்கள் கருத வேண்டும் என்னும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இஃதையெல்லாம் நன்குணர்ந்துதான் போலும், இப்போது ஸ்டாலின் பதவி அதிகாரம் தமது காலத்துக்குப்பின் தம் துணைவர்களிடையே எல்லோருக்குமாகப் பகிர்ந்து கொள்



5759

ளப்பட வேண்டுமென்று அரசியல் திட்டத்தைப் பின்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆனால் ஸ்டாலினுடைய அதிகாரம் பிரித்துப் பாகுபாடு செய்ய முடியாததொன்று. சர்வாதிகாரத்தை மூன்றிலொரு பங்காகத் துண்டுபோட்டு மூன்று பேருக்குக் கொடுக்க முடியாது ; அதிகாரத்தில் ஆளுக்கு மூன்றிலொரு பங்கென்று வைத்து ஒருவரோடொருவர் ஒத்துப்போவது முடியாத காரியம். பாட்டாளி மக்களின் நலனைக் காக்க வல்லவர்தாமே தாமே என்று அம்மூன்றுபேரில் ஒருவர், இருவர் அல்லது மூவருமே சிறிது காலத்திற்குள்ளேயே நினைக்கத் தலைப்படுவர். சுட்டுக் கொளுத்துவது அப்பொழுதே தொடங்கும். அப்போது ஒருபுறம் இராணுவம் சேர்ந்திருக்கும், எதிர்க் கட்சியில் இரகசியப் போலீஸ் சேர்ந்திருக்கும் எனத் துணிந்து கூறலாம்.

குழப்பம், பதவிச் சண்டை, பொது மக்கட் புரட்சி முதலிய பல கொந்தளிப்புகள் சோவியத் யூனியனுக்குள்ளே ஏற்படுவதற்குத் தூண்டுகோலாக வாய்க்கக் கூடியவைகள் ஸ்டாலின் மரணம் தவிர இன்னும் வேறு பலவும் உள.

சர்வதேசக் கம்யூனிஸத்துக்கும் சோவியத் ஆட்சியின் கீழ் இருக்கும் பெருந் திரளான மக்களின் எண்ணங்களுக்கும் அடிப்படையான முரண்பாடு உள்ளதென்று பாஸ்ற்றர் டல்லஸ் கருதுகிறார். மக்கள் தேசிய உணர்ச்சி உள்ளவர்கள் ; சர்வதேசக் கம்யூனிஸமோ உலகத்தையே கட்டியாள ஆசைப்படுவது: ஆகவே உள்ளடங்கியிருக்கும் இந்த முரண்பாடு தக்க காலத்தில் வெளிப்பட்டுத், தேசிய உணர்ச்சிகளுக்கு வெற்றி தேடிக் கொடுக்கும் என டல்லஸ் உறுதியாகக் கருதுகிறார். ரஷ்யர்களுக்கு ரஷ்யா, போலந்தாருக்குப் போலந்து, ஹங்கேரியர்களுக்கு ஹங்கேரி என்றிவ்வாறு முரண்பாடு தீர்ந்துவிடும் என்று அவர் சொல்லுகிறார். இன்று மறைந்திருக்கும் உண்மையான அம்முரண்பாடு, ஸ்டாலின் காலமான தருணத்தில் வெளிப்படத் தோன்றிவிடும் என்பது தளபதி மெக்ஆர்தர் கருத்து ; தளபதி மெக்ஆர்தர் கிழக்கத்திய மக்கள் மனப்போக்கு

எப்படிப்பட்டதென்பதை உய்த்துணர்வதில் சிறந்து விளங்கிய ஒருவர்.

யூகோஸ்லாவியாவைப் போன்று இன்னொரு சிஷ்ய நாடும் பிரிந்து செல்லுமானால் அப்போதும் மேற்சொன்ன குழப்பங்கள் ஏற்பட வழி திறக்கலாம். கிரெம்லின் தன்னை எதிர்ப்பாரைப் பொறுக்காது ; தன் வார்த்தையைக் கண்மூடித்தனமாகத் தலையிலேற்று நடப்பவர்கள் இருந்தாலொழிய அது நிலைக்க இயலாதது ; எனவே, இயல்பாகவே எதிர்ச் சார்பான முதலாளித்துவ முறையுடைய அமெரிக்காவைப் போன்ற ஒரு நாட்டைக் கண்டு அஞ்சுவதுபோலவே, கிரெம்லின் யூகோஸ்லாவியாவைப் போன்ற இன்னொரு கம்யூனிஸ்டு நாடு பிரிந்து எதிர்த்து இருப்பது கண்டும் அஞ்சுகிறது. இது அறுதியிட்டுக் கூறத்தக்க உண்மையாகும். அமெரிக்கா, "வால் ஸ்டிரீட்" சூதாட்டத்தால் ஏமாற்றப்பட்ட யுத்த வெறியர் கூட்டமாளும் நாடென்று பறை சாற்றுவதிலே சோவியத் பிரசாரம் மிக்க வெற்றியடைந்துவிட்டது எல்லாம் சரிதான் ; ஆனால், ஒரு காலத்தில் சர்வதேச கம்யூனிஸத்தின் வீரன் என்றும் அதற்கு ஓர் நம்பிக்கை நாயகமென்றும் போற்றிப் புகழ்சாற்றப்பட்ட டிட்டோ என்னும் ஒருவனைத் திடீரென்று துரோகி என்றும் பாஸிஸத்தின் உளவாளி என்றும் இழித்து இகழ்வதாக ஆகும்போது என்ன காரணம் சொல்லிக் காட்டுவது ? யுக்ரேன் முதலிய இடங்களில் கிளர்ச்சிகள் பொங்குமானாலும் சோவியத் மாளிகை இடிந்துவீழும். கிரெம்லின் மிக மிக நம்பியிருந்த இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து பலர் இன்று விலகியதும் மற்ற இடங்களிலும் இவ்வாறு பலர் விலகுவதுபோலிருப்பதும் ஸ்டாலினுக்குப் பெருந் தொந்தரவாக இருக்கிறது என்பது திண்ணம்.

என்னுடைய சொந்த நம்பிக்கை என்னவென்றால், மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள உறுதியுடையவர்கள் ஆதலால் இந்த உறுதியே கிரெம்லினைத் தொலைத்துவிடும் என்பதாகும். தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள மக்களுக்கிருக்கும் மன வலியை வரலாறு முழுவதிலும் பரக்கக் காண

லாம். உள்ளிருந்தே விளையும் இந்த சக்தி எப்படியும் வெளிப் படும். உதாரணமாக, பிரிட்டனும் நெதர்லாந்தும் மற்ற நாடுக ளேக் காட்டிலும் மேன்மையாகவும் நன்மையாகவுந்தான் இந்தி யாவையும், இந்தோனேஷியாவையும் ஆண்டு வந்தன; ஆயி னும் மக்களின் மனவுறுதி இவ்விரு நாடுகளிலும் சுதந்தர அரசு வீற்றிருக்கச் செய்து விட்டதன்றோ? கொரியாவை ஜப் பான் ஐம்பது ஆண்டுகளாக முற்றிலும் அடிமைப்படுத்தி அரசு வீற்றிருந்தபோதும், கொரிய மக்கள் தம் சொந்த ஆட்சி உரிமைத் தாகத்தைத் தீர்த்தாரில்லை; அவர்களுடைய இந்தச் சுதந்தர தாகத்தை நான் நேரில் கண்டேன். முதலாம் உலக யுத்தம் முடிந்த பின்னர், போலந்து நாட்டார் சுதந்தரம் எய்தினர்; எதனால்? 146 ஆண்டுகளாக வேற்று நாட்டாருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தபோதும், அவர்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள எண்ணிப் பேரவா தணிந்தார்களில்லை. இனி யும் அவர்கள் இவ்வாறே தங்கள் சுதந்தரத்தை மீண்டும் பெறுவார்கள் என எண்ணுகின்றேன். செக்கோஸ்லோவாக்கிய நாட்டினரும் இழந்த தங்கள் சுதந்தரத்தை அவ்வாறே திரும் பப் பெருவார்கள் என எண்ணுகின்றேன். மக்களுடைய இந்த ஒரு மனவுறுதியே கிரெம்லினை அச்சுறுத்தும் பொல்லாத சக்தி. சோவியத்தில் இனிப் புதிதாய்ப் பதவிக்கு வரப்போகும் ஆட்சிக் குழு இந்தப் பொல்லாத பகையை மனத்தில் வைத்து சோவி யத்தின் வெளிநாட்டுக் கொள்கையை முற்றிலுமே மாற்றி யமைத்துக் கொள்ளலாம்; அப்போது அதன் இன்றையப் போக்கு மாறும்.

- மேற்சொன்ன இவற்றில் ஏதாவது ஒன்று நிகழுமானாலும், நிலைமை திருந்தும் என்று நம்ப இடமுண்டு; கிரெம்லினை ஆளுங் குழுவினர் நிலையுணர்ந்து, வேறு வழியின்றி, முரட்டு வழிகளை விடுவர். உள் நாட்டில் கொடுங்கோன்மை தளரும், அவர்கள் ஆக்கிரமிப்புத் திட்டங்களைத் துறப்பர், மற்ற நாட்டின ரோடு சற்றேனும் ஒழுங்காக நடந்துகொள்வர் என எண்ண அப்போது இடமேற்படலாம். அத்தகைய நிலை ஏற்பட்டால்

சோவியத் யூனியனைப் பற்றி அவ்வளவாக அஞ்ச வேண்டிய தில்லை என்று மற்ற நாடுகள் தைரியங்கொள்ள வழியுண்டாகும். சற்றேனும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் போகவேண்டுமானால், சோவியத் யூனியனை ஜனநாயக மாக்கக் கூடிய உள்நாட்டுப் புரட்சி ஒன்று அங்கு நடப்பது அவசியம்; அங்கு ஜனநாயக முறை அமையுமானால் சமாதானம் நிலைபெற உறுதியான வாய்ப்புக் கிடைத்ததாகும்.

இவ்வாறெல்லாம் சோவியத் யூனியனுக்குள்ளே மாறுதல் கள் நிகழக் கூடும் என்பதால், நாம் எல்லாத் துறையிலும் புரியும் சமாதான அறப் போரின் இருமுகமான நோக்கம் நம் மனத்தில் தெளிவாகப் பதிய வேண்டும். முதலாவது படையி லும் மற்ற நாட்டினரோடு நட்பிலும் எட்டிய யோசனையிலும் நாம் பலம் பெறுகிறோம். இரண்டாவது சோவியத் யூனியன் ஆட்சிக் குழு பெட்டிப் பாம்புபோல் இரும்புத் திரைக்குள்ளேயே அடங்கவும் அல்லது ஒரு வேளை வேறொரு முறைமைக்கு வழிவிட்டு வீழவும் நமது சமாதான அறப்போர் முயற்சிகள் பெரிதும் உதவு கின்றன; அத்தகைய மாறுதல் உண்டாகக்கூடிய காலத்தை நமது சமாதான அறமுயற்சிகள் கிட்டவே கொணருகின்றன.

இந்த சமாதான அறப்போர்த் திட்டத்தை ஏற்றுக்கொள் ளும்படி கூறுகிறேன்; இதனால், நாம் கொடுக்கும் வரிகள் உடனே குறையும், அரசாங்க வரவு செலவு திட்டங்களும் உடனே சமநிலைப்படும் என்றெல்லாம் நான் எண்ணவில்லை. வியா பாரத் துறையில் பழக்கப்பட்ட எனக்கு அத்தகைய எண்ணம் வீணென்று நன்கு தெரியும். ஆயினும் நிலையான சமாதா னம் ஏற்பட்டாலொழிய நமது தற்காப்புச் செலவுகள் மிகுதி யாய்க் குறைய மாட்டா; இன்றுபோல் உட்பகை நிலைமை நீடித் தாலும் உலக யுத்தமே வந்தாலும், நமது தற்காப்புச் செலவு நமது வரிச் சுமையைக் குறைக்கும் அளவுக்குக் குறையாது. நிலையான சமாதானம் தோன்றுமானால், நமது வரிச் சுமை யும் குறைந்து அரசாங்க வரவுச் செலவுத் திட்டமும் சரிப்பட்டு வர வழியுண்டாகும்.

வரிச் சுமை குறைவதால் வரும் நன்மை அனைவருக்கும் விளங்கும் ; அரசாங்க வரவுச் செலவுத் திட்டம் சமநிலைப்பட்டு அமைவதென்றாலோ அதனால் என்ன நன்மை என்பது பல ருக்குத் தெளிவாகத் தெரியாது. ஓர் அரசாங்கம் நெடுங் காலத்துக்கு வரவுக்கு மிஞ்சி செலவுசெய்துகொண்டேபோகு மானால், மக்கள் எப்போதும் துன்பப்படுவார்கள் ; அதனால் சில சமயங்களில் நாடே கெடுவதும் உண்டு. இந்த உண்மையை உலக முழுவதிலும் அரசாங்கப் போக்குகளை ஆராய்ந்த ஒருவன் என்ற முறையில் நான் மீட்டும் மீட்டும் வலியுறுத்திக் கூறு வேன். நாட்டில் உறுதியுள்ள பொருளாதாரம் குறுகாமல் விரிவடைந்து பெருக வேண்டுமானால், நாட்டுப் பண நிலைமை ஒரு நிலையாக இருக்க வேண்டும் ; பண நிலைமை நிலையாக இருக்க வேண்டுமானால், அரசாங்கம் வரவுக்கு மிஞ்சிய செலவு செய்தல் ஆகாது.

ஆனால் இஃதெல்லாம் அரசாங்கப் பண நிலைமை, பொருட் செல்வம் என்ற பொதுவான பேச்சு. நமது அறச் செல்வம் என்ன, அச் செல்வத்தின் உறுதி நிலை எப்படி என்று காண்போ மானால், இந்த இருபதாம் நூற்றாண்டில் நிகழக்கூடிய பெரிய தொரு நல்நிகழ்ச்சி நிலையான சமாதானம் தோன்றுவதே யாகும் என்று நன்கு விளங்கும். நிலையான சமாதானம் தோன்றுமானால், மக்களுக்கோர் புத்துயிர் பிறக்கும் ; முப்பத் தேழு ஆண்டுகளில் முதல் தடவையாக, உலக யுத்தம் வரா தென்ற உணர்ச்சி ஏற்படும் ; இதோ யுத்தம் வந்தது என்ற அச்சம் நீங்கும். போர்முறை வித்தைகளுக்கும், தற்காப்புக்கும் வீணில் வாரி இறைக்கும் கோடானு கோடி பணமெல்லாம் ஆக்கமான வேலைகளுக்குப் பயன்பட உதவும். குண்டுகளுக் காகக் கட்டாயம் ஐயாயிரம் கோடி செலவிடவேண்டியிருக்குமே, அதில் ஒரு நூறு கோடி இருந்தால், நமது சிறந்த கல்லூரிகளி லும், பல்கலைக் கழகங்களிலும் இருநூறாயிரம் ஓராண்டு உபகாரச் சம்பளங்கள் கொடுத்துதவலாம் ; பின்னும் நாற்பது கோடி டாலரைக் கொண்டு நியூயார்க்கிலும், சிக்காகோவிலும், மெம்பி

ஸிலும், லாஸ் ஏஞ்செல்ஸிலும் சேரிகளை ஒழித்து நல்வசதி செய்யலாம் ; பின்னும் மீதமுள்ள பத்துக் கோடி டாலரால் சமாதானக் கலைகளை வளர்க்க அணுவின் சக்தியை ஆராய்ச்சியால் பயன்படுத்தி உதவலாம்.

திணறுகின்றோம், கவலைப்படுகின்றோம் ; உண்மைதான். ஆயினும் நாம் வாழும் இக்காலம் உலக வரலாற்றிலேயே முதன்மையான ஒரு காலமாகும். சமாதான அறம் புரிந்து வெல்வோமானால், இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியை வரலாறு முன்பு என்றுங்காணாத புதியதொரு வழி யில் திரும்பும் நற்பகுதியாக்கிவிடலாம். இவ்வாறு காலம் மாறுவதில்தான், மனிதன் அமைத்த சமாதானங்களிலெல் லாம் நிலையான சமாதானம் உருவாகும் வாய்ப்பு அடங்கி யுள்ளது.

# முடிவுரை

இன்னும் பத்து ஆண்டுகளுக்கு மிகவும் திறமையாய்ப் பத ருத ஈடுபாட்டு உள்ளத்தவர்களாய் சமாதான அறம் புரிவதற்கு இயன்றதெல்லாம் செய்ய வேண்டும்; கடுமையாய் உழைக்க வேண்டும்; தியாகங்கள் புரியவேண்டும். இதற்கு நமக்கு மனம் வேண்டும். நமது நோக்கம், நம்முடைய பிள்ளைகளுக்கும் நம் பிள்ளைகள் பிள்ளைகளுக்கும் மட்டுமல்லாமல் சோவியத் யூனியனுல் தலையிடப்பட்ட மக்களுக்கும் சுதந்தரம் கைகூடுமாறு செய்வதாக இருக்க வேண்டும். முடியுமா? முடியும் என முடித்துக் காட்டுவதே நாம் பெறும் பரிசு. சமாதான யாத்திரையில் நாம் கடக்க வேண்டிய பெருந் தடங்கல்கள் எல்லாம் கடந்து அடையும் பரிசு அனைவருக்கும் சுதந்தரத்தை அழிவுறாது காக்கும் தருமமே. இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியை வரலாறு என்றுங் காணாத புதியதொரு நல்வழியில் திருப்பி விடும் வாய்ப்பு இன்றே நம் கையில் இருக்கிறது. மனந் தளராமல், தன்னம்பிக்கை கெடாமல், இந்த அரியதொரு வாய்ப்பை விடாமல் பற்றிக் கொண்டாலொழிய, மக்கள் குலம் நம்பிக்கை கொள்ள வழியில்லை. முடிவு செய்யவேண்டிய காலம் இது: இந்தப் பத்தாண்டுக் காலம் முடிந்ததும், மனிதன் அமைத்த சமாதானங்களிலெல்லாம் நிலையான சமாதானம் தோன்ற வழியாயிற்று என்று சொல்ல வேண்டுமானுல் அதற்கு இன்றே நமக்குக் கிடைத்த அரிதான இந்த நல்ல சமயத்தைப் பயன் படுத்துவதே வழி.

5759



பால் ஜி. ஹாப்மன், வியாபாரத் துறையிலும், அரசியல் துறையிலும் அசாதாரண வெற்றியடைந்துள்ளார். அவர் ஸ்டுடிபேக்கர் கார்ப்பொரேஷனுக்கு முன்னர் தலைவராக இருந்தார்; மேலும் இரண்டு ஆண்டுகட்குமேல் பொருளாதாரக் கூட்டுறவு நிர்வாகத்தில் நிர்வாகியாகவும் இருந்திருக்கின்றார். தற்சமயம், ஹாப்மன் "சமாதானத்தை நிலை நாட்ட" 23,80,00,000 டாலர் செலுத்தக்கூடிய போர்டு தர்ம ஸ்தாபனத்திற்கு (Ford Foundation) டைரக்டராக இருக்கிறார்.

"தமது செயல்கள் மூலம், பால் ஹாப்மன் அமெரிக்காவிற்கு நன்கு உழைத்துள்ளார்; அதன் மூலம் உலகம் முழுதும் சுதந்தரம் ஏற்பட உழைத்துள்ளார். இப்பொழுது, "பாடுபட்டால் சமாதானம் கிட்டுவது உறுதி" என்பதில் தம்முடைய அனுபவம் மூலமும் அறிவின் மூலமும் அவர் சாதாரண மனிதனும், நிபுணரும் அறிந்துகொள்ளும்படியான சுலபமான, தெளிவான, நேரான பாஷையில் ஒரு ஊக்கமுள்ள சமாசாரத்தை வெளிப்படுத்தியுள்ளார்" என்று ஐஸன்ஹுவர் இவரைப் புகழ்ந்து கூறுகிறார்.